# ஹரிதாலினி ஹௌவனகட்டெ கிரியம்மா அவர்களின் தீர்க்க க்ருதிகள் பாகம் 1

வெளியிடுவோர்
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
பெங்களூரு

# ஹரிதாஸினி ஹொளவனகட்டெ கிரியம்மா அவர்களின் தீர்க்க க்ருதிகள் - பாகம் 1

**வெளியிடுவோர்**

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
380, 2A Main, 16th Cross,
JP Nagar 4th Phase, Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

# ஹரிதாஸினி ஹொளவனகட்டெ கிரியம்மா அவர்களின் தீர்க்க க்ருதிகள் - பாகம் 1

ஸ்ரீஹரிவாயுகுருகளின் ஆசியுடன், புஷ்ய பகுள ஸப்தமி - ஸ்ரீ நரஹரி தீர்த்தரின் ஆராதனை நாளான 21/1/2025 அன்று இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது

**வெளியிடுவோர்**

ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
380, 2A Main, 16th Cross, JP Nagar 4th Phase
Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

**இந்தப் புத்தகத்தை வெளியிட பொருளுதவி செய்த அனைத்து ஹரிபக்தர்களுக்கும் நன்றி!!**

**|| ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||**

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| 1 | ஹரிதாஸினி ஹொளவனகட்டெ கிரியம்மா - வாழ்க்கை சரிதம் | 3 |
| 2 | சங்கர கண்டன ஹாடு | 11 |
| 3 | பிரம்ஹ கொரவஞ்ஜி | 32 |
| 4 | ஸீதா கல்யாண | 61 |
| 5 | உத்தாளிக கதெ | 89 |

## ஹரிதாஸினி ஹொளவனகட்டே கிரியம்மா (1712 - 1790)

ரங்கனாத பதாஸக்தம் ரங்கனாதஸ்ய கிங்கரீ ।
கிரியம்மாபிதம் வந்தே ஞான வைராக்யஸித்தயே ।।

ரங்கனாத தேவன கிங்கரி ரங்கனாத பாதாஸக்தே ।
அங்கனெ தன்ன ஹ்ருதாயாங்கனதி ரங்கன காணுவ பக்தெ ।
அங்களதி சித்ரிஸுவ ரங்கோலியலி அனுரக்தெ ।
ஹிங்கதெ பக்தர பங்ககள நிவாரிஸுவ ஸஷக்தெ ।
பங்கார ஷ்ருங்கார ஸம்ஸார போகதலி விரக்தெ ।
மங்களாங்க ஹரிவிட்டலன பக்தர ஸங்க ஸம்யுக்தெ ।
துங்கெ உத்துங்கெ ஸாத்வி கிரியம்ம ஜீவன்முக்தெ ।।

ஹொளவன கட்டெ கிரியம்ம, பீஷ்மப்ப ஜோயிஸரின் மகள். அவளின் தாயைப் பற்றியும், அவரின் பிறந்த தேதி மற்றும் வாழ்க்கை ஆகிய எந்த விஷயத்தைப் பற்றியும் விஷயங்கள் சரியாக கிடைக்கவில்லை என்றாலும், அவரின் பாடல்கள் மூலமாகவே ஆராய்ச்சியாளர்கள் அவரின் வாழ்க்கை சம்பவங்களை தொகுத்திருக்கிறார்கள்.

கிரியம்மா பிறந்த ஊர் ராணே பென்னூர். சிறிய வயதிலேயே அவரின் பெற்றோர் இறந்துவிட, அவர் தன் சித்தப்பா-சித்தியிடம் வளர்ந்தார். ஆனால், அவரின் தந்தை இறப்பதற்கு முன்னரே, கிரியம்மா அவரிடமிருந்து தேவையான வித்யை கற்றிருந்தார். அப்போதே அவரிடம் கவிதாசக்தி வெளிப்பட்டிருந்தது. அந்த கால வழக்கப்படி, 10-12 வயதிலேயே திருமணம் நடைபெறுவதால், மலெபென்னூரின் திப்பரஸனுடன் கிரியம்மாவுக்கு திருமணம் நடைபெற்றது. ஆனால், இவருக்கு சம்சாரத்தில் விருப்பமே இருந்திருக்கவில்லை.

அவர்களின் முதல் இரவில், திப்பரஸனுக்கு கிரியம்மாவின் இடத்தில் அவருக்கு பதிலாக ஒரு பெரிய சர்ப்பம் தெரிந்தது என்றும், அன்றிலிருந்து அவர் மேல் மிகப்பெரிய கௌரவம் வந்தது என்றும் சொல்கின்றனர். வைராக்கியம் வந்துவிட்டது என்று

கிரியம்மா சம்சாரத்தை விடவில்லை. அத்தை, மாமா, கணவன் என அனைவரின் சேவையை செய்து கொண்டே இருந்தார். அத்தை மாமாவிடம் கூறி, தன் கணவனுக்கு இரண்டாம் திருமணத்தை செய்து வைத்தார். தான் விராகிணியாகவே (வைராக்கியசாலி) இருந்தார்.

வீட்டு வேலைகளை செய்தவாறு, அத்தை மாமாவிற்கு சேவை செய்தவாறு காலத்தை கழித்தார். அக்கம் பக்கத்து வீட்டு குழந்தைகள், சிறுவர் சிறுமிகளின் காய்ச்சல், சளி, இருமல்களுக்கு மருந்து கொடுத்து, அவற்றை தீர்த்து, சமூகத்திற்கு பயனாக இருந்தார். துக்க கஷ்டங்களுக்காக கஷ்டப்படுபவர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருந்து, அனைவராலும் 'அம்மனவரு' என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

நீர் கொண்டு வரவும், துணி துவைக்கவும் கிரியம்மா ஏரிக்கரைக்கு வரும் வழக்கம் கொண்டிருந்தார். அங்கு அருகில் ரங்கநாதனின் ஆலயம் ஒன்று இருந்தது. அங்கு ஒரு மாற்றுத் திறனாளி (ஹொளவ) வசித்துக் கொண்டிருந்தானாம். அவனே அந்த ஏரியைக் கட்டி, ரங்கநாதனின் ஆலயத்தையும் நிர்மாணம் செய்தானாம். ஆகவே அது 'ஹொளவன கட்டெ ரங்கநாத' என்றே பெயர் பெற்றது. ரங்கநாதனின் தரிசனத்திற்கு வந்தபோது, ஆலயத்தின் அக்கம்பக்கத்தில் சுத்தம் செய்வது, பெருக்கி பற்பல அழகான கோலங்களைப் போடுவது ஆகியவற்றை தன் வழக்கமாக ஆக்கிக்கொண்டார் கிரியம்மா.

அங்கேயே பூ கட்டுவது, பூஜிப்பது, பஜனை செய்வது ஆகியவற்றிலேயே கிரியம்மா மெய்மறந்தார். அதே 'ஹொளவன கட்டே ரங்கநாதனின்' அங்கிதத்தால் பல்வேறு கீர்த்தனைகளை இயற்றி பாடிக்கொண்டிருந்தார். இவளை 'தென்னிந்திய மீரா' 'ராதிகெ' என்றெல்லாம் மக்கள் புகழ்ந்தனர். தெய்வாம்சம் கொண்டவள் என்று அனைவரும் மரியாதை செலுத்தி வந்தனர். பால் கறக்கும்போது, தயிர் கடையும்போதெல்லாம் கிரியம்மாவிற்கு பாலகிருஷ்ணன் தரிசனம் கொடுத்து வந்தானாம். அவளுடன் விளையாடி வந்தானாம்.

ಗಿರಿಯಮ್ಮಾ ತೊಟ್ಟು ಆಸಿರ್ವದಿತ್ತ ಕುಳಂತೈಕಳ್, ತೀರ್ಕ ಆಯುಳೈಪ್ ಪೆರುಗಿರಾರ್ಕಳ್ ಎನ್ನುಂ ನಂಪಿಕ್ಕೈ ಅಂಗು ಸುರ್ರುಮುರ್ರುಂ ಇರುಂತ ಮಕ್ಕಳುಕ್ಕು ಇರುಂತತು. ರಾಣಿ ಸೆನ್ನೂರಿಲ್ ಗಿರಿಯಮ್ಮಾ ಕುಳಂತೈಕಳೈ, ಪಡುಕ್ಕ ವೈತ್ತು ಕುಳಿಪ್ಪಾಟ್ಟಿಯ ಕುಳಿಯಲಱೈ ಇನ್ರೈಕ್ಕುಂಕೂಡ ಅಪ್ಪಡಿಯೇ ಪಾದುಕಾಕ್ಕಪ್ಪಟ್ಟು ವರುಗಿರತು. ತಂ ಕುಳಂತೈಕಳೈ ಅಂತ ಅಱೈಯಿಲ್ ಕುಳಿಪ್ಪಾಟ್ಟಿನಾಲ್ ಅವರ್ಕಳಿನ್ ಪೀಡೈ ಪರಿಕಾರಂ ಆಗಿರತು ಎನ್ನುಂ ನಂಪಿಕ್ಕೈ ಇನ್ರೈಕ್ಕುಂಕೂಡ ಅಂತ ಊರ್ ಮಕ್ಕಳಿಡೈಯೇ ಇರುಕ್ಕಿರತಾಂ.

ಮಂಗಳೂರಿನ್ ಅರಸಕುಮಾರನುಕ್ಕು ಕಣ್ ತೆರಿಯಾಮಲ್ ಇರುಂತತು. ರಂಗನಾತ ಸ್ವಾಮಿಕ್ಕು ಸೆಯ್ತ ಆರತ್ತಿಯಿನ್ ಮೈ ಎಡುತ್ತು, ಅಂತ ಅರಸಕುಮಾರನಿನ್ ಕಣ್ಣಿಱ್ಕು ಗಿರಿಯಮ್ಮಾ ತಿನಮುಂ ತಡವಿಕ್ಕೊಂಡು ಇರುಂತಾರಾಂ. ಉಡನ್ ಇವ್ವಾಱು ಪಿರಾರ್ತ್ತನೈಯುಂ ಸೆಯ್ತಾರಾಂ.

ತೋರಪಾ³ರತೆ³ ನಿಂಮ ಸರಿತೆಯನು
ನರರೊಳು ನಕೆ³ಕೆ³ಡು³ ಮಾಡ³ತ³ ಹಾಕೆ³
ನೀನೆಕ³ತಿಯೆಂತ್ತು³ ಪ³ಂತ³ ಪ⁴ಕ್ತ ಕಣ್ಣುಕ³ಳ ತಿತ್ತಿ ನಿಜವ ತೋರಿಸಯ್ಯಾ |
ತೀ³ನತ³ಯಾಳು ಹೊಳವನ ಕಟ್ಟೆ ರಂಗ³ಯ್ಯಾ
ತಾ³ನಿ ಎನ್ನೊಟೆ³ಯ ತೊ³ಟ್ಟವನೆಂತ್ತು³ ಹೊಕ³ಳುವೆ ||

ಇವ್ವಾಱು ಸುಮಾರ್ 15 ನಾಟ್ಕಳ್ ಸೆಯ್ತ ಪಿಱಗು, ಅಂತ ಅರಸಕುಮಾರನಿನ್ ಕಣ್ ಕೋಳಾಱು ಸರಿಯಾಗಿ, ಕಣ್ ಸರಿಯಾಗ ತೆರಿಯ ವಂತತು.

ಇನ್ನೊರು ಇಡತ್ತಿಲ್, ಮೞೈಯೇ ಇಲ್ಲಾಮಲ್ ವಱಟ್ಚಿ ನಿಲವಿಕ್ ಕೊಂಡಿರುಂತತು. ಅಪ್ಪೋತು ಊರ್ ಪೆರಿಯವರ್ಕಳ್ ಅನೈವರುಂ ಗಿರಿಯಮ್ಮಾವಿಡಂ ಮುಱೈಯಿಟ್ಟನರ್. ಅವರುಂ ಅತ್ಯಂತ ಪಕ್ತಿಯುಡನ್ ಇವ್ವಾಱು ಪಿರಾರ್ತ್ತನೈ ಸೆಯ್ತಾರ್.

ಮಳೆಯ ತ³ಯ ಮಾಡೋ ರಂಗ³ಯ್ಯ ನಿಂಮ
ಕರುಣ ತಪ್ಪಿತ³ರೆ ಉಳಿಯತೀ³ ಲೋಕ ||

ಪಱ ಜಾತಿ ಹೞಲ್ಲೆ ಸಾರಂಗ³ ಮ್ರುಗ³ಕ³ಳು ಪ³ಹಳ
ಹಸಿತು ಪಾ³ಯಾರಿ ಪತ್ತಿತ³ ಕೆರೆಕೆ³ ಪ³ಂತ್ತು³

த்[3]ருமெயட[3]க[3]தெ[3] தல்லணிஸி மூர்ச்செகொண்டு[3]
தெ[3]ஸெதெ[3]ஸெகெ[3] பா[3]யி பி[3]டுதிஹவய்ய ஹரியெ ||

த[4]ரெயாகி[3] த்ரவகுந்தி[3] இருவ பா[4]விய நீர
மொகெ[3] மொகெ[3]து[3] பாத்ரெயலி நாரியரு
ஹக[3]லெல்ல தருதிஹரு யோசனெய மாடு[3]த்த
பேக[3]தி[3]ந்த[3]லி தரிஸு வ்ருஷ்டியனு ஹரிய ||

ஸந்து[3]ஹோத[3]வு ஜ்யேஷ்ட, ஆஷாட, ஸ்ராவண
ப[3]ந்தி[3]தெ[3] பா[4]த்ரபத[3] மாஸவீக[3] இந்து[3]
புரந்த[3]ரகெ[3] ஹோளி வ்ருஷ்டிய தரிஸோ
ஸந்தே[3]ஹவ்யாகெ[3] ஹொளவன கட்டெ ரங்க[3] ||

பிறகு, மழை பொழிந்து, ஏரி, கண்மாய்கள் அனைத்தும் நிரம்பி வழிந்தன என்பது வரலாறு.

இன்னொரு முறை, ஸ்வாமி ரங்கநாதனின், தங்க மோதிரம் தொலைந்து போயிற்று. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் கவலையுடன் இருக்க, கிரியம்மா 'ஹொன்னுதா குப்பி ஹொன்னுதா' என்று பிரார்த்தித்து அனன்ய பக்தியுடன் தசாவதாரங்களை வணங்கினார். இறுதியில் ஒரு குப்பி (குருவி), அந்த மோதிரத்தை கடித்துக்கொண்டு வந்து அனைவரின் முன்னிலையிலும் கீழே போட்டதாம். 'குப்பி' என்றால் பிராணதேவர் என்றும் அர்த்தம் இருக்கிறது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறாக கிரியம்மாவின் மகிமைகளைக் கேட்ட ஆங்கிலேய சர்தார் ஒருவர் வந்து அவரின் தரிசனம் செய்து, அவரின் வீட்டிற்கு (மனெதன) 'ஷ்யானபோக' என்னும் பட்டத்தைக் கொடுத்தார். பல காணிக்கைகளை / பரிசுகளைக் கொடுத்தார்.

தனது கடைசி நாட்களில், கிரியம்மா, குக்னூரு, பிள்ளங்கேரி, மைலார, கோகர்ண ஆகிய க்ஷேத்திரங்களுக்கு சென்றிருந்தார். ஒரு நாள் 'கும்பளூரு வழியாக ஹொன்னாளி அருகில் இருக்கும் கம்மாரகட்டெக்கு செல்' என்று அவருக்கு கனவு வந்தது.

அதன்படி, கம்மாரகட்டெக்குச் சென்று மாருதிக்கு ஒரு கோயிலும், துங்கபத்ரா நதிக்கரையில் குளிப்பதற்கு படிக்கட்டுகளையும் கட்டினார். அதே இடத்தில் சிராவண சுத்த பஞ்சமி (நாக பஞ்சமி) அன்று, துங்கபத்ரா நதியில் நீந்திச் சென்றுவிட்டார் என்று நம்பிக்கை. ஆகவே, அன்றைய நாளே கிரியம்மாவின் ஆராதனை நடைபெறுகிறது.

அவரின் இஷ்ட தெய்வமான ரங்கநாத ஸ்வாமியின் கோயிலின் பகுதியிலேயே கிரியம்மாவிற்கும் ஒரு கோயில் கட்டி, அவரின் மூர்த்தியை வைத்து பூஜித்து வருவது, அவரின் மகிமையை காட்டுகிறது. மற்றும் மக்கள் அவர் மேல் வைத்திருக்கும் மதிப்பின் சாட்சியாக அந்தக் கோயில் இன்றைக்கும் இருக்கிறது.

கிரியம்மா தேவ-தேவியரின் மேல் பற்பல தேவர நாமாக்களை இயற்றியிருக்கிறார். எவ்வளவோ பாடல்கள், வாய்மொழியாகவே பரவி புகழ் பெற்றிருக்கின்றன. ஆனால் இன்று அவருடையது என்று சொல்லப்படும் [41] சிறிய பாடல்கள், ஐந்தாறு தீர்க்க க்ருதிகள் மட்டுமே கிடைக்கின்றன.

ஹொளவன கட்டெ ரங்கநாதனைக் கண்டு முதன்முதலில் இயற்றப்பட்ட பாடல் 'கண்டெனீக ரங்கநாதன காருண்யநிதிய' என்று சொல்வதுண்டு. இதில் 'உரகஷயன உதாரி நின்ன மொரெய ஹொக்கெ காயோ' என்று பிரார்த்தனை செய்திருக்கிறார். அந்தரங்க நிவேதனையைக் கூறும் இவரது அனேக தேவர நாமாக்கள் இருக்கின்றன. சில தேவர நாமாக்களில் ரங்கநாத ஸ்வாமியின் மகிமைகளை வர்ணித்திருக்கிறார். தசாவதாரம், ராமாயணம், மகாபாரதம் ஆகிய புராண கதைகளை பாடல்களாக இயற்றியிருக்கிறார் கிரியம்மா.

இவரின் கிருதிகளில் பஞ்சபாவங்களைக் காணலாம்.

கடெ³கண்ணலி நீ நோட³தி³ரென்னய்ய பி³ட³பே³ட³வோ கைய
தந்தெ³ அடி³ய ஹொந்தி³தெ³னோ இந்து³ ஹொளவன கட்டெ ரங்க³
ஆனந்த³ப³டி³ஸோ ராமலிங்க³ ஹொந்தி³தே³னு நின்ன சரண

ஆகிய கீர்த்தனைகளில் ஆத்ம நிவேதனையுடன் ஷாந்த பாவமும் கூடி வந்திருக்கிறது.

கரெத³ளு தன்ன மக³ன யஶோதெ³ - என்னும் கிருதி வாத்ஸல்ய பாவத்தைக் கொண்டிருக்கிறது.

தோரபா³ரதெ³ நின்ன சரிதெயனு
நரரொளு நகெ³கீ³டு³ மாட³த³ ஹாகெ³
கல்லொளு காந்தெய மாடி³த³வனெம்ப³ரு
அல்லி மாடி³த³ ஹாகெ³ இல்லி ஸாரித³ரெ
ப³ல்லியத³னென்னொடெ³ய தொ³ட்³ட³வனெந்து³ ஸாருவெ

என்று ஸக்ய பாவத்தில் பாடியிருக்கிறார்.

வெங்கடேஶ என்ன ஸலஹல்யாகெ ப³ளுவி
க³ஜேந்தி³ர த்³ருவரன்னு ஸலஹித³ந்தெ நன்னன்னு ஸலஹு

என்று ஸக்ய பாவத்தினால் கேட்டுக் கொள்கிறார்.

சந்த³தி³ கொளலூதி³ பாடு³வ நம்ம
கந்த³ர்ப்ப ஜலக்³ரீடெ³யாடு³த நந்த³னந்த³ன
கோ³விந்த³ன காணதெ³ ஒந்து³ நிமிஶ
யுக³வாகி³ தோருத்தலிதெ³
தாரம்ம ஶ்ரீரங்க³தா⁴மன தந்து³ தோரம்மா
கரெ தாரே, ஸைரிஸலாரே
என்று இனிமையுடன் பாடுகிறார்.

பா³ரன்யாதகெ நீரே நீ கரெதாரெ
ஸூகு³ண க³ம்பீ⁴ரன - என்னும் கிருதியில் விரகத்தைக் காட்டிப் பாடுகிறார்.

பது³மனாப⁴னே நின்ன பாத³ கிங்கர நானு - என்று நீ தலைவன். நான் தாஸி என்று தாஸ்ய பாவத்தைக் காட்டுகிறார்.

தம் பிறந்த வீட்டு தெய்வமான மைலார லிங்கனை வணங்கியிருக்கிறார். 'ஈத ரங்கனாத ஹரியு ஆத லிங்கனாத ஹரியு' . ஈக லிங்க தேவ சிவனு, ஆத ரங்கதாம விஷ்ணு - என்று ஹரிஹரனைக் கொண்டாடியிருக்கிறார். அப்படியே, நீலகிரி லிங்கனையும் வணங்கியிருக்கிறார்.

மலெபென்னூரின் ஏகனாதேஷ்வரனையும், பார்வதிதேவி என்று சிந்தித்து வணங்கியிருக்கிறார்.

கிரியம்மா அவர்கள் தாம் தரிசித்த க்ஷேத்திரங்களையும் அந்த க்ஷேத்திர மூர்த்திகளையும் வணங்கியிருக்கிறார். குக்கனூரின் ஹனுமந்த, பில்லங்கேரியின் ரங்கனாத, குப்தகாமியான கிருஷ்ணவேணி நதி தேவதையையும், ராணெபென்னூரில் பயலாஞ்சனேயரையும், முத்தேனஹள்ளியின் ஹனுமனையும் போற்றியிருக்கிறார்.

யாதகெ மருளாதி ஹிங்கே ஏலே மானவ காகு புத்திய பிடு பிடு ஆஸெயெம்புது பிடது ஈ புவனதொள் - என்று உலக மக்களை எச்சரிக்கிறார்.

பாகவதத்தில் வரும் அஜாமிளனின் கதையை 15 நுடிகளிலும், பாரிஜாத மரத்தைக் கொண்டு வந்த கதையை $^{1}8$ நுடிகளிலும் கிரியம்மா பாடியிருக்கிறார்.

இந்த இரு பாடல்களும் தீர்க்ககிருதிகள் எனப்பட்டாலும், இவற்றை விடவும் தீர்க்கமான 448 நுடிகளில் உத்தாளிகனின் கதை, 62 நுடிகளில் ஷங்கர கண்டன ஹாடு, 87 நுடிகளில் ஸீதா கல்யாண மற்றும் நான்கு சந்திகளில் சந்திரஹாஸனின் கதை ஆகியவற்றை இயற்றியிருக்கிறார் கிரியம்மா. இந்த சந்திரஹாஸனின் கிருதி ஒரு கண்ட காவ்ய (சிறு காவியம்). பாரிஜாத காவ்ய என்பது ஸ்லோக மற்றும் பதங்களில் இயற்றப்பட்ட வ்ருத்த நாமா வகையைச் சேர்ந்ததாகும். ஆனால் இதற்கு பல்லவி இல்லை.

வசன மற்றும் பாடல்களைக் கொண்டிருக்கும் பிரம்ம கொரவஞ்சி பாடலும் ஒரு தீர்க்க கிருதி எனப்படுகிறது. கிருஷ்ண கொரவஞ்சி மற்றும் லவ-குஷரின் பாடல் முழுமையடையாமல் இருக்கிறது.

கிரியம்மாவிற்கு மக்கள் மேல் இருந்த பாசம், ஞான பக்தி, வைராக்யத்தைக் கண்டு பொறாமை கொண்டவர்களும் இருந்தார்களாம். இந்த பெண்மணிக்கு என்ன அபரோக்ஷ ஞானம் என்று கேலி பேசினார்களாம். கிரியம்மாவின் சொந்த ஓர்ப்படிகளே (கணவரின் சகோதரர்களின் மனைவிகளே) இவரை வெறுப்புடன் பார்த்து வந்தனராம். தேவையில்லாத பொல்லாப்புகளை இவர் மேல் சுமத்தினார்களாம். இதன் காரணங்களால், ஒரு சமயம், ஊர் பெரியவர்கள் எனப்பட்டவர்கள் இவருக்கு பஹிஷ்காரம் (ஊரிலிருந்து விலக்கி வைத்தல்) கூட செய்தார்களாம்.

ஸ்ரீராகவேந்திர மடத்தின் அன்றைய பீடாதிபதிகளாக இருந்த ஸ்ரீசுமதீந்திர தீர்த்தர், மனெபென்னூருக்கு வந்தபோது, பூஜை முடிந்தாலும், கிரியம்மாவைக் காணாத ஸ்ரீபாதங்களவர், அவரை தாமே அழைத்தார். கிரியம்மாவிற்கு தீர்த்தம் கொடுக்கும்போது அவரின் உள்ளங்கையைப் பார்த்து, 'இது ஸ்ரீகிருஷ்ணன் தாங்கிப் பிடித்த யசோதாதேவியின் கை' என்று புகழ்ந்தார்.

இதே ஊருக்கு ஒரு முறை ஸ்ரீகோபால்தாசர் தம் சஞ்சாரத்தில் வந்தபோது, கிரியம்மா பக்தியுடன் வரைந்திருந்த ரங்கோலியின் மேல் தன் தேவர பெட்டியை வைத்து பூஜித்தார். அவரின் பக்திக்கு மெச்சி, கோபாலகிருஷ்ணனின் விக்ரகத்தை அவளுக்கு பரிசாக அளித்தார் என்றும் தெரிய வருகிறது.

அன்யர குணதோஷவ எணிஸதலெ நின்னிரவ நோடு கண்ட்ய மனவெ
பண்ணகாரிகெயு பரிதெ ஒளதம்ப்ர கண்ணினந்தீ காயவு மனவெ

***

# ஶங்கர க³ண்ட³ன ஹாடு³

* 62 பத்யங்களைக் கொண்ட பாடல்.
* ஷங்கர = ருத்ரதேவர் என்னும்; கண்டன = பொதுவாக கன்னடத்தில் 'கண்ட' என்றால் கணவர் என்று அர்த்தம். ஆனால், அதற்கு இன்னொரு அர்த்தமும் உண்டு. 'உத்தமர் / சிறந்தவர்' . நம் ஸித்தாந்தத்திற்கேற்ப இதனை 'வைஷ்ணவோத்தமர்' என்று வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, இந்த கிருதி, வைஷ்ணவோத்தமரான ருத்ரதேவரைப் பற்றிய க்ருதி என்று படிக்க வேண்டும்.

**இந்தப் பாடலின் கதைச் சுருக்கம் இவ்வாறு:**

* பகவந்தன் நாராயணனின் & ருக்மிணிதேவியின் மகனான மன்மதன், த்வாரகையின் எல்லையில் ஒரு பட்டணத்தில் வசித்து வந்தான்.
* தக்ஷ ப்ரஜாபதியின் மகளாக ரதிதேவி பிறந்து வளர்ந்து வந்தார்.
* (இந்த க்ருதியில் ரதிதேவியை, ருத்ரதேவரின் அனுஜை (தங்கை) என்று குறிப்பிடப்பட்டுள்ளது).
* இந்த ரதிதேவி திருமண வயதை அடைந்து, தன் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருக்கிறாள்.
* இவளுக்கான சிறந்த வரன் மன்மதனே என்று ருத்ரதேவர் நிச்சயிக்கிறார்.
* தூதுவர்களை அனுப்பி, மன்மதமனை வரவழைக்கிறார்.
* ரதிதேவியை உங்களுக்கு திருமணம் செய்து கொடுக்க விரும்புகிறேன் என்கிறார்.
* மன்மதனுடன் அதற்கு ஒப்புக் கொண்டு, உடனடியாக திருமணத்தை நடத்த வேண்டும் என்கிறான்.
* ருத்ரரோ அதற்கு சிறிது தயங்க, அங்கு சிறிது வாக்குவாதம் நடக்கிறது.
* இருவரின் ஜாதகப் பொருத்தம் பார்க்கப்பட்டு, அது சரியாகவே இருக்கிறது என தெரிய வருகிறது.

* அதன்படியே, திருமணம் நிச்சயிக்கப்பட்டு, விமரிசையாக நடத்தப்படுகிறது.
* அனைவரும் அவர்களுக்கு பரிசுகளை வழங்கி ஆசிர்வதிக்கின்றனர்.
* ரதி மன்மதன் - தங்களின் பட்டணத்திற்கு திரும்பி, அங்கு வசிக்கின்றனர்.
* அவர்களை பார்க்க வேண்டும் என்று ருத்ரதேவர் மாறுவேடம் பூண்டு அங்கு வருகிறார்.
* சிறிது நாட்கள் ரதிதேவியை பிறந்த வீட்டிற்கு அனுப்பு என்கிறார்.
* அதற்கு மன்மதன் முடியாது என்று சொல்ல, மறுபடி இன்னொரு வாக்குவாதம் நடக்கிறது.
* ருத்ரதேவர், மன்மதனின் செல்வங்களை அழித்துவிட, ரதி மன்மதன் இருவரும் வெளியேறி நடக்கின்றனர்.
* மறுபடி ருத்ரதேவர் அவர்களை வழிமறித்து வம்பு செய்கிறார்.
* அங்கிருந்த மக்களிடம் அவர்களின் உணவினை வாங்கி ரதி மன்மதன் உண்கின்றனர்.
* மன்மதன் ருத்ரதேவரின் பசுக்களை மேய்த்து, வயலில் வேலை செய்கிறார்.
* மன்மதனின் கர்வம் அடங்கியது.
* பின், ரதிதேவி ருத்ரதேவரிடம் முறையிட, மன்மதன் மேலான கோபம் அவருக்கு அடங்கியது
* மன்மதனின் பழைய நிலையை அவனுக்கு அளிக்கிறார்.
* இருவரும் ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்துகின்றனர்.
* மன்மதன் தன் ஊருக்கு திரும்பி வருகிறார்.
* மீண்டும் ரதி மன்மதன் இருவரும் தங்கள் பட்டணத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்.

***

**கி³ரிஜெய வரஸுத கரிமுககொ³ந்தி³ஸி**
**ஸரஸ்வதிக³பி⁴ வந்தி³ஸுவெ**
**பரமத³யாளு ஹொளவனகட்டெ ரங்க³ய்ய**
**ஒடெ³யனு என்ன மனதொ³டெ³ய ||1**

பார்வதியின் மகனான கரிமுகனான கணபதியை வணங்கி பின், சரஸ்வதியை வணங்குவேன். பரம தயாளுவான ஹொளவனகட்டெ ரங்கய்யனை, என் தலைவனை, என் மனதின் நாயகனை வணங்குகிறேன்.

**தானாகி³ ஶிவ ஶங்கரக³ண்ட³**
**தங்கி³கெ³ விவாஹமாடோ³ ஸம்ப்³ரம(தா³)**
**பா⁴வ மைது³னர கதெ²ய நாபேளுவெ நீவெல்ல**
**கேளி ஸஜ்ஜனரு ||2**

ருத்ரதேவர் தனது தங்கையான ரதிதேவிக்கு திருமணம் செய்விக்கும் ஸம்ப்ரமத்தை; பாவ மைத்துனர் இந்த இருவரின் கதையை நான் விளக்குகிறேன். ஸஜ்ஜனர்களான நீங்கள் அனைவரும் இதனை கேளுங்கள்.

**த்³வாராவதிய ஸீமெயல்லி ரஞ்ஜிஸுவோ**
**விஶால விலாஸ பட்டணதி³**
**நாராயண குமார ஒப்பித³னொந்து³ சாருமணி**
**க²சித மந்தி³ரதி³ ||3**

த்வாரகையின் எல்லையில் இருப்பதான விஷாலமான ஒரு பட்டணத்தில், நாராயணனின் மகன் (மன்மதன்) ஒரு அழகான ரத்னங்களால் இழைக்கப்பட்ட ஒரு அரண்மனையில் வசித்தான்.

**சந்த்³ரஸூர்யரு எட³ப³லதி³ ஒப்பிரலு**
**மந்த³மாருத தம்பெஸெயெ**
**க³ந்த⁴ கஸ்தூரி கத³ம்பவனேரிஸி**
**ஆனந்த³வாகி³த்³த³ மன்மத²னு ||4**

சந்த்ர சூரியர்கள் இடது, வலது பக்கங்களில் வீற்றிருக்க, தென்றலானது வீசிக் கொண்டிருக்க, சந்தன கஸ்தூரி ஆகியவற்றை பூசிக்கொண்டு, மன்மதன், மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான்.

**கி³ளிவிண்டு³ நவிலு ஹம்ஸவு ரஞ்ஜிஸுவந்த²**
**நவில மயூர பக்ஷிக³ளு**
**அளிக³ளு ஜேங்கரிஸுதலி ஹாடு³தலிரெ**
**நளின நாப⁴ன ஓலக³வு ||5**

கிளி, மயில், அன்னம் ஆகிய பறவைகள் இருப்பதான, அந்த பறவைகள் இனிமையாக பாடிக் கொண்டிருக்க, பகவந்தனின் இருப்பிடம் அற்புதமாக இருந்தது.

**கைலாஸபுரத³ ராஜ்யதொ³ளகொ³ப்புவ**
**நிர்ப⁴ய த³லினல்காவதியு**
**த்ரைலோக்யவந்த்³ய ஶங்கரக³ண்ட³னிஹ**
**ஒம்மனதி³ந்த³னுஜெய பாலிஸுத்த ||6**

கைலாய புரத்தில், அந்த ராஜ்யத்தில் இருந்ததான, பயம் என்பதே அற்றதான, ஸ்வர்க்கத்தைப் போன்றதான புரத்தில், மூன்று உலகங்களாலும் வணங்கப்படுபவனான ருத்ரதேவர் இருந்தார். தன் தங்கையை மிகவும் கவனத்துடன் பாதுகாத்து வந்தார்.

**அரகி³ளியாடி³ஸுவளு கெந்தூ³ளியலி**
**மரிஹாவுக³ள நெரெஹுவளு**
**தரளாக்ஷிதன்ன ஸம்பத்துக³ளெல்லவ பி³ட்டு**
**கொ³ம்பெ³யாடவனெ ஆடு³வளு ||7**

அவள் விடியற்காலைகளில், கிளிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். பாம்புக் குட்டிகளை வளர்த்து, காத்து வந்தாள். படபடக்கும் கண்களைக் கொண்ட அவள், தம் செல்வங்கள் அனைத்தையும் விட்டு, பொம்மலாட்டத்தையே விளையாடுவாள்.

**ஆடோ³ளு பஞ்ச பக³டி³ சின்னத³மணெயொளு**
**கூடி³த்³த³ கெ³ளதியர ஒட³னெ**
**பா¹டோ³ளு மரிகோகி³லெயந்தெ தங்கி³ய**
**நோடி³த³ நவயெளவனெயனு ||8**

பஞ்ச பகடி (தாயகட்டம்) ஆடுவாள், தங்க மணிகளை பயன்படுத்தி. தன்னுடைய தோழிகளுடன். குயில் பறவைகளைப் போல பாடுவாள். இவ்வாறு இருந்த ரதியை, அவளது யௌவன வயதினை, ருத்ரதேவர் பார்க்கிறார்.

**நித்ய நித்யதி³ யெளவனவு ஹொக்³க³ளிஸலு ப³ட்ட**
**குசவு தோரித³வு**
**மித்ரெ தங்கி³கெ³ வரவதா³வுதெ³னுதலி**
**சித்ததொ³ளகெ³ சிந்திஸுத்தித்³த³ ||9**

தினம் தினமும் அவளது யௌவனம் வளர்ந்து வந்ததை, அவளது தோற்றம் காட்டிக் கொடுத்தது. இப்படியான தங்கைக்கு யார் வரன் என்று நினைத்தவாறு, ருத்ரதேவர் தன் மனதில் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

**புஷ்பபா³ணனு தங்கி³கெ³ தக்க வரனெந்து³ சதுர**
**சென்னிக³னு மன்மத²னு**
**தவகதி³ பு³த்³தி⁴வந்தர களுஹிஸி நாளெ**
**உத³யக்கெ கரெதன்னிரெந்த³ ||10**

பூக்களால் பாணம் விடுபவனே, புத்திசாலியான, அழகானவனான, மன்மதனே இவளுக்கு தக்க வரன் என்று நினைத்து, உடனடியாக சிறந்த அறிவாளிகளை அனுப்பி, நாளை காலையில் மன்மதனை இங்கு அழைத்து வாருங்கள் என்றார்.

**ப³ந்து³ விலாஸ பட்டணதொ³ளு மத³னகெ³ ப்ரீதிலி**
**நிந்து³ கை முகி³த³ரு ஹோ**
**க்³யெந்து³ ஶங்கரக³ண்ட³ களுஹித³ நிம்மனெ³**
**கெ³ய்தந்தெ³வெனலு ||11**

அப்படி ருத்ரரால் அனுப்பப்பட்டவர்கள், மன்மதன் இருக்கும் பட்டணத்திற்கு வந்து, அன்புடன் நின்று, கை குவித்தனர். உங்களை அழைத்து வருவதற்காக, ருத்ரதேவர் எங்களை அனுப்பினார் என்றார்கள்.

**ப³ந்த³ பி³டா³ரவ தண்ட³ தண்ட³த³³லிளிஸி வந்தி³ஸி**
**மாதாடி³ நகு³த பூ⁴**
**மண்ட³லதொ³ளு க்ஷேமவெ எனுத ஶங்கரக³ண்ட³**
**கேளித³ மன்மத²ன ||12**

(ருத்ரதேவரை பார்க்க வந்தார் மன்மதன்). வந்த குழுவினரை, அந்த கூட்டத்தினரை வரவேற்று, பேசி, உபசரித்து, புன்னகைத்தவாறு, பூமியில் அனைவரும் நலமா? என்று ருத்ரதேவர் மன்மதனிடம் கேட்டார்.

**நிம்ம காருண்ய க்ருபெயிந்த³ (ஸ்துத்ய)வு நம்ம**
**ராஜ்யவு க்ஷேமவென்னலு**
**ஸன்மானதி³ந்த³ உபாசார(மா)டு³த்த**
**ப்³ரம்ஹானந்த³த³³லித்³த³ ஶங்கரக³ண்ட³னு ||13**

உங்கள் கருணையால், அனைத்தும் நலமே, நம் ராஜ்ஜியமும் நலமே என்று மன்மதன் கூற, மரியாதையுடன் அவர்களுக்கு உபசாரங்களை செய்தவாறு, மிகவும் அபாரமான மகிழ்ச்சியில் இருந்தார் ருத்ரதேவர்.

**ருக்மிணி தனுஜகெ³ எம்மனுஜெய கொட்டு**
**விவாஹ மாட³லிச்சிஸுவெ**
**லக்ஷணவந்தெயு கைபிடி³யெ நிம்மனபேக்ஷிஸித³ளு**
**சந்த்ரமுகி²யு ||14**

ருக்மிணியின் மகனான மன்மதனுக்கு, என் தங்கையை கொடுத்து திருமணம் செய்ய விரும்புகிறேன். லக்ஷணளான ரதிதேவியும், உங்களையே கரம்பிடிக்க விரும்புகிறாள். உங்களையே விரும்புகிறாள், சந்த்ரமுகி.

**தந்து³ க³த்³து³கெ³ய சாவடி³யல்லி ஹா(கலு)**
**ஸம்ப்³ரமதி³ந்த³ குளிதரு**
**ஹொம்ப³ண்ணத்³ஹரிவாணதொ³ளகெ³ தாம்பூ³லவ**
**தந்தி³டு³வரு மன்மத²கெ³ ||15**

சபையில், ஒரு பெரிய ஆசனத்தை கொண்டு வந்து போட, அனைவரும் அதில் மிகவும் ஸம்ப்ரமத்துடன் அமர்ந்தனர். தங்கமயமான ஒரு பெரிய தட்டில், மன்மதனுக்கு தாம்பூலங்களை கொண்டு வந்து கொடுத்தனர்.

**அங்க³ஜ அதி தை³ன்ய உக்தியிந்த³லி ப³ஹு**
**மங்க³ள ம்ருது³ வாக்யவன்னு ப்ர**
**ஸங்க³ மாடு³வனு ஶங்கரக³ண்ட³ நிம்ம**
**தங்கி³யனெனகி³ஹுதெ³ந்த³ ||16**

மன்மதன், மிகவும் மரியாதையுடன், பணிவுடன், மங்களங்களை தரும் வாக்கியங்களை பேசுகிறான். ருத்ரதேவரே, உங்களின் தங்கையை எனக்குக் கொடுங்கள் - என்றான்.

**ப³ல்லித³ரு நீவு ப³ஹு பராக்ரமிக³ளு**
**மல்லிகி³ஸர கப்³பு³ பி³ல்லு**
**ஸல்லது³ நிம்மொளு ஸலிகி³ நமகெ³ந்து³ ப³ல்ல**
**ஹிரியரு ஹேளுவரு ||17**

அனைத்தும் அறிந்தவர் நீங்கள். மிகவும் பராக்ரமி. மல்லிகை சரம், கரும்பு, வில் ஆகியவை உங்கள் முன் எதுவுமில்லை. உங்களுக்கு ஈடு இணையில்லை என்று அறிந்தவர்கள், மூத்தவர்கள் கூறுகின்றனர்.

**ஸர்வ லக்ஷணவுள்ள ஸரஸிஜனேத்ரியு**
**ஒப்³ப³ளெ ரதி நம்ம தங்கி³**
**ஹப்³ப³ ஹுண்ணிமெகெ³ களிஸதெ³**
**நம்மனெகெ³ நிர்ப³ந்த⁴ மாடு³விரெந்த³ ||18**

அனைத்து லக்ஷணங்களையும் கொண்டவள்; தாமரைக் கண்களைக் கொண்டவள்; அப்படிப்பட்டவள் ரதி ஒருவளே. அவள் என் தங்கை. இந்த பௌர்ணமிக்கு தவறாமல் அவளை எங்கள் வீட்டிற்கு கட்டாயம் அனுப்பிவிடவும் (திருமணம் செய்து கொடுக்கவும்) என்றான்.

**நடெ³த³ரெ ப³ட³வாஹளு நம்ம தங்கி³யு**
**கடுமோஹதி³ந்த³ ஸாகிதெ³னு**
**ப³டி³வார நிம்மொளு ப⁴ரவஸெ நமகே³னு**
**கொட³லாரெ தங்கி³யனெந்த³ ||19**

நடந்தால் சோர்வு அடைவாள் என் தங்கை. மிகவும் பாசத்துடன் அவளை நான் வளர்த்திருக்கிறேன். ஆனால் நீங்களோ மிகவும் ஆடம்பரமாக இருக்கிறீர்கள். அப்படியிருக்கையில் நான் எந்த நம்பிக்கையில் அவளை கொடுப்பது?. நான் என் தங்கையை உங்களுக்கு கொடுக்க மாட்டேன் என்றார்.

**அனுமான மாடு³வுதே³கோ நீ இஷ்டொந்து³**
**அவளிகெ³ ஸ்வதந்த்ரவில்லேனு**
**நெனெதா³க³ (களுஹுவெ நிம்ம மனெகெ³ந்து³) மனஸிஜ**
**நுடி³த³ தை³ன்யத³லி || 20**

மன்மதன்: ஏன் என்னை இவ்வளவு அவமானம் செய்கிறீர்கள்? அவளுக்கு (முடிவெடுக்க) சிறிதும் ஸ்வதந்த்ரம் இல்லையா என்ன?. ருத்ரர்: நான் நினைக்கும்போது, அவளை உங்களின் வீட்டிற்கு அனுப்புவேன் என்று மனதின் அதிபதியான ருத்ரர் கூறினார்.

**ஹாகா³த³ராக³லி எனுத ராஜிகூட**
**பா⁴க்³யதி³ந்த³லி நோடி³த³ரு**
**பா⁴கீ³ரதி² மத³ன ரதிதே³விகெ³ ஆக³லெ**
**நேமவனெ மாடி³த³ரு ||21**

எப்படியோ இருக்கட்டும் என்று இருவரின் ஜாதகங்களை பார்த்தனர். மன்மதனே, ரதிதேவிக்கு மிகவும் பொருத்தமானவன் என்று உடனடியாக தீர்மானம் செய்தனர்.

**நல்காவதிய ஶ்ருங்கா³ர மாடி³த³³ரு தி³னகர**
**ப்ரதிபி³ம்ப³(த³³ந்த³³)த³³லி**
**கனக தோரணக³³ளன்னு கட்டி தா கரெஸித³³**
**எணிகெயில்லத³³ ப³³ந்து³³ ஜனர ||22**

(திருமணம் நடக்கும் இடத்தை) ஸ்வர்க்கலோகம் போல அலங்கரித்தனர். சூரியனின் ப்ரதிபிம்பத்தைப் போல ஒளி வீசுவதாக அது இருந்தது. தங்கமயமான தோரணங்களை கட்டி, எண்ணற்ற உற்றார், உறவினர்களை அவர்கள் நிகழ்ச்சிக்கு அழைத்தனர்.

**ப³³ல்லித³³ ஶுப⁴லக்³னவ நோடி³³ பு³³த⁴ஜனரு**
**எல்லரு நெரெது³³ ஸம்ப்⁴ரமதி³³**
**மல்லிகெ³³ ஸரதி³³ மத³³னரதிதே³³விகெ³³**
**கல்யாணவனெ மாடி³³த³³ரு ||23**

நல்லதான சுப லக்னம் ஒன்றை பார்த்து, அறிஞர்கள் அனைவரும் சேர்ந்து, மிகவும் சம்ப்ரமத்துடன், மல்லிகை சரம் சூடியவனான மன்மதனுக்கும், ரதிதேவிக்கும், திருமணம் செய்து வைத்தனர்.

**ஸெளமஞ்ச ஸுப்பத்திகெ³³ ஸுவர்ணத³³ தளிகெ³³**
**ப³³ட்டலு கி³³ண்டி³³க³³ளன்னு**
**ப³³ளுவளி மாடி³³த³³ ஸ்துதிஸுவோ எளெதே³³ர**
**ப³³ளுவளி தங்கி³³கெ³³ இத்த ||24**

அழகான கட்டில், படுக்கை, ஒரு பெரிய தங்கத் தட்டு, அதில் கிண்ணங்கள், கிண்டி ஆகியவற்றை அவர்களுக்கு பரிசு அளித்தார் - அனைவராலும் புகழப்படும் ருத்ரதேவர், இந்த பரிசுகளை தன் தங்கைக்கு அளித்தார்.

**ஸாஸிர கோ³வு க³ஜவு துரக³வு**
**ப்³யாஸரியதெ³ தங்கி³கி³த்த**
**லேஸாத³ ஊரு உம்ப³ளிய கொட்டுரதிய**
**நிவாஸபட்டணகெ களிஸித³ ||25**

ஆயிரக்கணக்கான பசுக்கள், யானை, குதிரைகள் ஆகியவற்றை தன் தங்கைக்குக் கொடுத்தார். அழகான ஊர், கிராமங்களை பரிசாக ரதிதேவிக்குக் கொடுத்து, அவர்களை மன்மதனின் பட்டணத்திற்கு அனுப்பி வைத்தார்.

**மன்மத² ரதிதே³வி விலாஸ பட்டணதொ³ளு உன்னந்த**
**தி³ன பா³ளுதிரலு**
**இன்னொம்மெ நோட³பே³கெனுத ஶங்கர க³ண்ட³**
**தன்னொளு தானே யோசிஸித³ ||26**

இவ்வாறாக திருமணம் செய்து கொண்ட, ரதி மன்மதர்கள் தங்களின் பட்டணத்தில், பற்பல நாட்கள் வாழ்ந்து கொண்டிருக்க, அவர்களை ஒரு முறை பார்க்கவேண்டும் என்று ருத்ரதேவர் தனக்குள் நினைத்தார்.

**பி³கி³து³ ஸுத்தித தொ³ட்³ட³(சென்)டி³ய பெ³ன்னிகெ³**
**பி³கி³த³ நாட³க³ம்ப³ளிய**
**ஹொக³ல மேலின பா³ரிகோலு மன்மத²ராய**
**நகு³வந்தெ மாடி³ ரூபவனு ||27**

நன்றாக இறுக்கிக் கட்டிய ஒரு மூட்டையை முதுகில் கட்டிக்கொண்டு, ஒரு பெரிய கம்பளியை தோளின் மேல் போட்டுக்கொண்டு, ஒரு பலமான கோலினை பிடித்துக் கொண்டு, பார்த்தாலே மன்மதன் சிரிக்குமாறு தன் ரூபத்தை மாற்றிக் கொண்டார் (ருத்ரதேவர்).

**ஹொக்³கா³லு மரெய மெட்டித்³த³ கையல்லி தொ³ட்³ட³**
**கு¹ட³கோ³லு கவணெய பிடி³து³**
**ஶீக்⁴ரதி³ தெரளி அங்க³ஜனஹங்காரவ நிக்³ரஹ**

**மாடு³வெனெனுத ||28**

முழங்கால் மறையுமாறு ஒரு பெரிய உறை (பாதுகை). கையில் பெரிய கடகோலு பிடித்துக் கொண்டு, வேகமாக புறப்பட்டு, மன்மதனின் கர்வத்தை அடக்குவேன் என்று சொல்லியவாறு ருத்ரதேவர் புறப்பட்டு வந்தார்.

**நோடெ³லெ ரதி நின்ன ஒடஹுட்டித³ண்ணனு**
**ரூடி³யொளகெ³ அதிசெலுவ**
**கண்டு³ கெரவ மெட்டி க³மகதி³ப³ரதான நோடெ³ந்து³**
**ஸதிகெ³ தோரித³னு ||29**

ஹே ரதிதேவியே பார் உன்னுடன் பிறந்த அண்ணனை. பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறான். இவன் ஏதோ ஒரு பாதுகையை அணிந்தவாறு, வேகமாக வந்து கொண்டிருக்கிறான் பார் என்று ருத்ரதேவரை, தன் மனைவிக்கு காட்டுகிறான், மன்மதன்.

**ப³ட³வனல்லவோ ஆத ப³ஹு பராக்ரமி**
**ஒட³ஹுட்டித³ண்ண தா முனியெ**
**கெடு³வுதோ³ நம்ம ஐஶ்வர்ய ஆதனகொ³ட³வெ**
**நமகெ³ பே³ட³வெந்த³லு||30**

இவன் மிகவும் ஏழையாக இருக்கிறானே?. அவரோ (ருத்ரரோ) மிகவும் வீரர். என் உடன் பிறந்த அண்ணனானவன் ஒரு முனிவர். இவனை நம்முடன் சேர்த்தால், நம் செல்வமும் அழிந்துவிடுமோ?. ஆகவே, இவனுடைய சம்பந்தமே நமக்கு வேண்டாம் - என்றாள் ரதிதேவி.

**காந்தெய மாதனு கேளி அங்க³ஜனு தா³வ**
**காரணவ ஹேளத³ந்தெ தி³னகர**
**நந்தெ ஹொளெயுத ஸபெ⁴யலி தவக**
**தி³ந்த³லி ப³ந்து³ குளிது ||31**

இப்படியான மனைவியின் பேச்சினை கேட்டு, மன்மதன், எந்தவொரு காரணத்தையும் சொல்லாமல், ஒரு சூரியனைப் போல ஒளிர்ந்தவாறு, தன் சபையில் வந்து அமர்ந்தான்.

**தலெயெத்தி நோட[3]லில்லவு ஆதன கூடெ[3]**
**கெ[3]லுவெனிந்த[3] மாதாட[3]லில்ல**
**எலெ காமதே[3]வ என்னனுஜெய க[1]ளிஸெந்து[3]**
**ஜுல்மிந்த[3] தானே கேளித[3]னு ||32**

(மன்மதன்) ருத்ரரை தலையெடுத்து பார்க்கவில்லை. அவருடன் மகிழ்ச்சியுடன் (கவனம் கொடுத்து) பேசவில்லை. (ருத்ரர் கூறுகிறார்). ஹே காமதேவனே, என்னுடைய தங்கையை அனுப்பு என்று தானே வலுக்கட்டாயமாக கேட்டார்.

**ஹூவின மஞ்ச பஞ்சப[4]க்ஷ்ய பரமான்னவுதா[3]வாக[3]**
**நம்மனெயலி**
**உண்ணலாரளு ஜோளவன்னவ நம்மாகெ**
**நாவீக[3] க[1]ளிஸுவோரல்ல ||33**

(மன்மதன்:) பூ போன்ற மிருதுவான படுக்கை, பஞ்சபக்ஷ பரமான்னங்கள் இவற்றையே இவள் நம் வீட்டில் உண்கிறாள். (உன்னுடன் வந்தால்) சோளத்தினால் செய்த அன்னத்தை, என் மனைவி உண்ண மாட்டாள். ஆகவே அவளை நான் உன்னுடன் அனுப்புவதில்லை.

**லக்ஷ்மிதே[3]வி பா[4]ரதிதே[3]வி கெள[3]ரியரு**
**தெள[1]ருமனெய ஹாரைஸுவரு**
**நம்ம மனெயல்லித்[3]த[3] அம்ப[3]லியன்னே**
**உண்டு[3] ஸம்ப்[3]ரமதி[3]ந்த[3] பா[3]ஹோளெந்த[3] ||34**

லட்சுமிதேவி, பாரதிதேவி, கௌரி ஆகியோர் தங்கள் பிறந்த வீட்டினையே விரும்புகிறார்கள். நம் வீட்டில் இருந்த கஞ்சியையே (இந்த ரதிதேவியும்) உண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பாள் என்றார் ருத்ரர்.

**ஸிரி முடி³ய மேலெ ஹூல்லு ஹோரிஸுவெனு**
**கருவ காயி நம்ம மனெய**
**அரிவெ உடி³ஸி மூரு பொ³க³ஸெ அம்ப³லியன்னு**
**மரெயதெ³ ஹொய்ஸுவெனெந்த³ ||35**

அவளின் அழகான தலைமுடியின் மேல் புல் சூட்டுவேன். அவளை நன்றாக பாதுகாத்து, நம் வீட்டில் இருக்கும் ஆடைகளை அணிவித்து, மூன்று குவளை கஞ்சியையே அவளுக்கு மறக்காமல் குடிக்கச் செய்வேன் என்றார் ருத்ரர்.

**ப³ஹள மாதாடோ³து³ யாகோ நீ இஷ்டொந்து³**
**சோளவ கொண்டு³ ஹோகெ³னலு**
**பே³டெ³லவோ காம நின்ன ஐஶ்வர்யவ ஹாளு**
**மாடு³வெனொந்து³ க³ளிகெ³யலி ||36**

(மன்மதன்) ஏன் இவ்வளவு அதிகமாக பேசுகிறாய்?. உன்னுடைய மூட்டையை தூக்கிக் கொண்டு போ என்று கூற, (ருத்ரர்) ஹே காமனே, வேண்டாம். (உன்னுடைய இந்தப் பேச்சு). உன்னுடைய மொத்த செல்வத்தையும் ஒரே நொடியில் நான் அழித்துவிடுவேன் - என்றார்.

**ஸமர்த்த² நீ ஹெளது³ ஸலஹுவ சோளவ**
**க³மகதி³ந்த³லி பெ³ளெவெனெந்து³**
**அம்ருதத³ கலஶவ தங்கி³ கையொளகி³ட்டு**
**சமத்காரதி³ந்த³ மாயவாத³ ||37**

(ருத்ரதேவர்:) ஹே மன்மதனே, ஆம். நீ அனைத்திலும் ஸமர்த்தன்தான். நாம் உண்பதான சோளத்தை நான் வேகமாக வளர்த்துவிடுவேன் (என்று சொல்லி), தன்னுடைய கலசத்தை, தங்கையான ரதிதேவியின் கையில் கொடுத்துவிட்டு, உடனடியாக அங்கிருந்து மறைந்தார் ருத்ரதேவர்.

**ஹொட்டெ ஹஸிதி³து போ⁴ஜன மாடு³வெனெந்த³ரெ**
**அட்ட அடி³கெ³ மனெயொளில்ல**
**குட்டித³ ப³த்த மனெயொளகி³ல்ல பி³ட்டு**
**ஹோயிது மார்ப³லவு ||38**

(மன்மதனுக்கு:) வயிறு பசித்தது. சரி சாப்பிடலாம் என்று சொல்லி, உள்ளே சென்று பார்த்தால், அங்கு சமையலே இல்லை. குட்டிய நெல், அரிசி வீட்டில் இல்லை. படையே விட்டுப் போனது (வீட்டில் ஒன்றுமே இல்லை).

**ஸண்ண ஶால்யக்கெ பே³ளெ பெ³ல்லவு எல்ல**
**மண்ணுகூ³டி³து ஆக்ஷணதி³**
**எண்ணெ துப்பத³ கூட³ மண்ணாகி³ உருளித³வு**
**இன்னேனெனுத சிந்திஸுத ||39**

அதே நொடியில், சிறிய அரிசி. பருப்பு. வெல்லம். எல்லாம் மண்ணிற்குள் புதைந்து போனது. எண்ணெய், நெய் ஆகியவை நிரம்பிய குடங்கள் மண்ணில் புதைந்து / உருண்டு போயின. அடுத்து என்ன செய்வது என்று மன்மதன் கவலைப்பட்டான்.

**உட்டது³கூல வஸ்த்ரக³ளெல்லவு**
**புடி³புடி³யாகி³ ஹரித³வு**
**எட³கெ³ய்யிந்த³லி மட³தி³ய கரகொண்டு³**
**நடெ³த³னு பரதே³ஶியந்தெ ||40**

உடுத்திய ஆடைகள் அனைத்தும் பொடிப்பொடியாக கிழிந்து போயின. இடது கையில் தன் மனைவியை (ரதிதேவியை) அழைத்துக் கொண்டு, உடனடியாக வெளியில் புறப்பட்டான் மன்மதன், ஒரு பரதேசியைப் போல.

**மந்த³க³மனெ மெல்லடி³ய நெடு³வளந்து³**
**கந்தி³து வரநகெ³ முக²வு**
**கந்த³ர்ப்ப பா³ஹ தா³ரியலி ஶங்கர க³ண்ட³**
**ஒந்து³ ஹோலவ நிர்மிஸித³ ||41**

மனைவியான ரதிதேவி மெதுவாக நடந்து வருவாள் என்று எண்ணி, மன்மதனின் நகைமுகம் குன்றிப் போனது. இவ்வாறு மன்மதன் நடந்து வந்துகொண்டிருக்கையில், அங்கு வழியில், ருத்ரதேவர் ஒரு வயல் நிர்மாணம் செய்திருந்தார்.

**ப³ல்லவிஸித³ பை¹ரனெ கண்டு³ மன்மத² மெல்லனெ**
**கைய (து)டு³கித³னு**
**நில்லெலோ நம்ஹொல ஹோக³தி³ரோ எனுத**
**அல்லிந்த³ க³த்³த³(ரிஸி) பெ³ய்த³ ||42**

வளர்ந்திருந்த பயிர்களைக் கண்டு, மன்மதன் மெதுவாக அங்கு சென்று, தன் கைகளை அதில் வைக்கச் சென்றான். ஹேய், நில். அது என்னுடைய வயல். அதில் செல்லாதே என்றவாறு அங்கிருந்து வந்தவன் மன்மதனை திட்டினான்.

**தப்பதெ³ கவணிய கல்லிட்டு மத³னகெ³ நிம்மப்பன**
**ஹொலவோ ஹேளெனுத**
**த³ர்ப்பதி³ந்த³லி ஶங்கரக³ண்ட³ நிக்³ரஹிஸெ ஸொப்பிய**
**மரெயல்லட³கி³த³னு ||43**

(விவசாயி) விடாமல் தன் நிலத்தில் வேலி போட்டு, மன்மதனிடம், இது என்ன உன் தந்தையின் வயலா, சொல் என்றவாறு வர; ருத்ரதேவர் மிகவும் வீரத்துடன் மன்மதனை வெல்வதற்காக, அங்கு ஓரிடத்தில் மறைந்திருந்தார்.

**மொஸரு மாலக்கி ஶுண்டி²யனிக்கி பு³த்திய**
**ஹஸனாகி³ கட்டி நாரியரு**
**ஹொஸ கி³ண்டி³யனெ தும்பி³ ப³ருதிரெ**
**பரிமள எஸெவோத³ கண்ட³ அங்க³ஜனு ||44**

ஏலக்காய், இஞ்சி ஆகியவை கலந்த தயிரினை தயாரித்து, சிரித்த முகம் கொண்ட பெண்கள், அதை புதிய பாத்திரத்தில் நிரப்பியவாறு அங்கு வந்து கொண்டிருக்க, அதன் நறுமணம் அனைத்து இடங்களிலும் பரவுவதைக் கண்ட மன்மதன்.

**தரளெ ரன்னளெ போகி³ தவகதி³ பு³த்திய**
**திரிது³ தா எ(ன)லு ஹோகி³**
**தரவெ நனகெ³ சிக்க ப்ராய லஜ்ஜெதொரெது³ திரிது³**
**தா எனுத ஹேளுவுத³ ||45**

பெண்ணான ரதிதேவி சென்று, ஆர்வத்துடன் அந்த பாத்திரத்தை இறக்கி, அதை எனக்குக் கொடு என்று கேட்க, அவர்கள் கொடுக்காமல் போக, எனக்கு சிறிய வயது, வெட்கம் இல்லை என்று அறிந்து, மறுபடி அவர்களிடம் எனக்கு அதை தா என்று கேட்டாள்.

**ரமணனாடி³த³ மாது மீரலாக³து³ எந்து³**
**அவரும்போ³ ஸமயக்கெ ஹோகி³**
**நனகி³ஷ்டு பு³த்திய கொடு³ தாயெ எனுதலி**
**கமலாக்ஷி கேளித³ளவர ||46**

தன் கணவன் கூறிய பேச்சினை தட்டக்கூடாது என்று, அந்தப் பெண்கள் உண்ணும் சமயத்தில் அங்கு சென்று, எனக்கு சிறிது உணவு கொடுங்கள் தாயே என்று கேட்க, அந்தப் பெண் ரதிதேவியிடம் இவ்வாறு கேட்டாள்.

**உம்போ³ ஸமயக்கெ ப³ந்தி³ரெந்து³ கொட்டரவரு**
**நிம்பெ³ஹோளு பு³த்தியன்னு**
**ஶங்கராரிகெ அது³ ஸவிது³ண்டு³ ஸாலது³**
**ஹம்ப³ல ஸுத்த ப³ருதிஹனு ||47**

நாங்கள் உண்ணும் சமயத்திற்கு சரியாக வந்தீர்கள் என்று சொல்லி அவர்கள் கொடுத்தனர், எலுமிச்சை சாதத்தினை. மன்மதனுக்கு அது போதாது. ஆனாலும் அவன் விருப்பப்பட்டு அங்கு சாப்பிட வந்துகொண்டிருந்தான்.

**பா³ரெலோ எந்து³ கரெஸி தா ஹொய்ஸித³**
**ஆக³ அம்ப³லி மூரு போ³க³ஸெ**
**தா³ர மக³னோ நின்ன ஹெஸரேனெனுத**

**விசாரிஸித³னு ஶங்கரனு ||48**

மன்மதனையும் அவர்கள் அழைத்து, தான் கொண்டு வந்திருந்த கஞ்சியினை மூன்று கரண்டிகள் எடுத்துக் கொடுத்து, யாருடைய மகனோ நீ? உன் பெயர் என்ன என்றவாறு, ருத்ரதேவர் கேட்டார்.

**நெரெ ஹொரெயவர மன்மதனெந்து³ கரெவோரு**
**பரதே³ஶி தானெந்து³ நுடி³த³**
**கருக³ள காயி மூரு பொ³க³ஸெ அம்ப³லியன்னு**
**மரெயதெ³ ஹோய்ஸுவெனெந்த³ ||49**

(மன்மதன்) எனக்கு தெரிந்தவர்கள் அனைவரும் என்னை மன்மதன் என்று அழைப்பார்கள். தான் ஒரு பரதேசி என்று கூறினான். பசுக்களை காப்பவளே, முன்று கரண்டி கஞ்சியினை மறக்காமல் எனக்கு தருவாயாக என்றான்.

**தந்தெ³ நீனிட்ட உளிக³தொ³ளிப்பேனு ஹாகெந்து³**
**கைமுகி³த³ மன்மத²னு**
**கந்த³ர்ப்பன க³ர்வ அட³கி³து கருக³ள ஹிண்டு³**
**காயலு ஒப்பித³னு ||50**

ஹே தந்தையே. நீ கொடுக்கும் வேலையினை நான் செய்வேன். எனக்கு அந்த கஞ்சியை கொடு என்று கை குவித்தான் மன்மதன். அப்போது அவனின் கர்வம் அடங்கியது. பசுக்கள், கன்றுகள் கூட்டத்தினை நான் மேய்ப்பேன் என்று கூறினான்.

**நால்குவார கருக³ள ஹிண்ட³னெ காய்து³**
**ஜோகெயலி தந்தொ³ப்பிஸித³**
**ஏகேலோ கருக³ளு ப³ட³வாத³வெனுதலி**
**தி⁴க்கரிஸித³னு ஶங்கரனு ||51**

அப்படியே அடுத்த நான்கு வாரங்கள், அந்த மன்மதன், அந்த பசுக்களை கன்றுகளை மேய்த்து பாதுகாத்து, மாலையில் கொட்டகையில் கொண்டு வந்து பத்திரமாக ஒப்படைத்தான்.

அப்போது ருத்ரதேவர், மன்மதனிடம் - ஏன் இந்த கன்றுகள் மெலிந்துவிட்டன என்று கேட்டான்.

**கடி³மெ மாடி³த³ ஒந்து³ பொ³க³ஸெ அம்ப³லியன்னு**
**ஒட³லிகெ³ ஸாலத³ங்க³ஜகெ³**
**எரடு³ கையிந்த³லி கொய்த³னு ஹுல்லனு**
**என்னொடெ³ய மெச்சுவனெனுத ||52**

அவர்கள் கொடுத்த குறைச்சலான ஒரு பாத்திர கஞ்சி மன்மதனுக்கு போதாததாக ஆனது. ஆகவே அவன் இரு கைகளாலும் புல்லினை பறித்து தின்றான். தலைவனே. இதை தெரிந்து கொள்ளுங்கள்.

**பெ³ரளு ஒடெ³து³ ரக்ததா⁴ரெ ஸுரியெ ஹுல்லு**
**ஹொரெய தாஹொத்த மஸ்தகதி³**
**கருக³ள ஹிண்டு³ முந்தொ³த்தி மன்மத²ராய**
**ப³ருவுத³ கண்டு³ பா⁴மினியு ||53**

விரல் உடைந்து ரத்த தாரை பொழிய, புல்கட்டினை தான் தலையில் தாங்கியவாறு, பசுக்களின் குழுவினை மேய்த்தவாறு, மன்மதன் வருவதை பார்க்கிறாள், ரதிதேவி.

**தன்ன வல்லப⁴ன ப்ரம கண்டு³ ரதிதே³வி**
**கண்ணலி உத³கவ தும்பி³**
**இன்னாத³ரு பி³டி³ஸெனுத அண்ணகெ³ பே³டி³கொண்டு³**
**பி³ன்னயிஸித³ளாகெ ||54**

தன்னுடைய கணவனின் கஷ்டத்தைக் கண்ட ரதிதேவி, கண்களில் நீர் நிரப்பி, இனியாவது இவரை விடுவிப்பாயாக என்று தன் அண்ணனை வேண்டிக் கொள்கிறாள்.

**அங்க³ஜன ம்ருது³பாணி மத்⁴யதி³ பா⁴ள**
**கா³யவ கண்ட³ ஶங்கரனு**
**ஹொயிது கோபவு அந்த:கரணவு**
**ஆயிது பஞ்சபா³ணனலி ||55**

மன்மதனின் ம்ருதுவான தேகத்தில், மிகவும் அதிகமான காயங்களைக் கண்ட ருத்ரதேவரின் கோபம் அடங்கியது. அந்த பஞ்சபாணனான மன்மதனில் பாசம் பொங்கியது.

**கப்[3]பு[3] பி[3]ல்லன க்ருபெயிந்த[3] ஶங்கரக[3]ண்ட[3]**
**அப்[4]யங்க[3]னவ மாடி[3]ஸித[3]**
**ஶுப்[4]ரவஸ்த்ரவ உடி[3]ஸி பஞ்ச பா[3]ணன**
**நிர்ப[4]ந்த[4]வனெ பி[3]டி[3]ஸித[3]னு ||56**

கரும்பு, வில் ஆகியவற்றை மன்மதனுக்கு கொடுத்து, ருத்ரதேவர் அவருக்கு எண்ணெய் ஸ்னானம் செய்வித்தார். தூய்மையான வஸ்திரத்தை உடுத்தி, மன்மதனின் கட்டுப்பாடுகளை விடுவித்தார்.

**தட[3]வ மாட[3]தெ[3] ஜோடு[3] ஸமெக[3]ளனெ ஹச்சி**
**எடெ[3]மாடி[3] அரமனெயொளகெ[3]**
**ஒட[3]னெ பாயஸ பஞ்சப[4]க்ஷ்ய போ[4]ஜனவிக்கி**
**பிடி[3]தி[3]த்[3]த[3] வீள்ய மைது[3]னகெ[3] ||57**

தடை செய்யாமல் உடனடியாக ஜோடி குத்துவிளக்குகளை ஏற்றி, அவர்களை அரண்மனைக்குள் வரவழைத்து, பாயச, பஞ்ச பக்ஷங்களுடன் கூடியதான போஜனம் அளித்து, தன் மைத்துனனுக்கு (மன்மதனுக்கு) வெற்றிலையை கொடுத்தார் ருத்ரதேவர்.

**பா[4]வமைது[3]னதனத[3]ல்லெ நோடி[3]த[3]ரு**
**விரோத[4]வில்லவெந்தெ[3]னுத**
**காம தே[3]வகெ[3] உடு[3]கோ[3]ரெ வீள்யவனித்து மன்னிஸித[3]**
**ஶங்கரனு ப்ரேமத[3]லி ||58**

பாவா - மைத்துனர் இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். தமக்குள் விரோதம் இல்லை என்று கூறிக்கொண்டனர். மன்மதனுக்கு ருத்ரதேவர், தாம்பூலங்களை அளித்து, அவரை உபசாரம் செய்தார் ருத்ரதேவர்.

**உத்தமவஸ்த்ரவ தங்கி³கு³டி³ஸி ஹொஸமுத்தனெ**
**ஸோகி³லு தும்பி³**
**சித்தஜ ஸஹிதாகி³ வஜ்ரத³ந்த³ணவேரி**
**ரதிதே³வி தா ஹருஷத³ல்லி ||59**

தன் தங்கைக்கு உத்தமமான வஸ்திரங்களை கொடுத்து, உடுக்கச் செய்து, முத்துக்களை பாத்திரங்களில் நிரப்பி, மன்மதனுடன் சேர்ந்து வஜ்ரமான பல்லக்கில் ஏற்றி, ரதிதேவி தான் மகிழ்ச்சியுடன் புறப்பட்டாள்.

**புஷ்பஶரனு தன்ன புரகாகி³ ப³ருதிரெ எது³ரிகெ³**
**ப³ந்து³ மார்ப³லவு**
**மொத³லினந்த³த³லி ஐஶ்வர்ய ஹெக்³க³ளிஸுத**
**ஸத³னத³ல்லித்³த³ மன்மத²னு ||60**

மன்மதன் தன் ஊருக்கு திரும்பி வருகையில், எதிரில் வந்தது எதிரிப்படை. முதலில் இருந்ததைப் போலவே செல்வங்களை திரும்பப் பெற்றவாறு தன் அரண்மனையில் வீற்றிருந்தான் மன்மதன்.

**ப³ரடா³க¹ளீயலி ப³ஞ்ஜெகெ³ மக்களாக³லி**
**குருட³கெ³ கங்க³ளு ப³ரலி**
**ருண ஹரியலி தா³ரித்³ர்யவு ஹிங்க³லி ஹரி**
**எம்ம ஹ்ருத³யதொ³ளிரலி ||61**

கன்று ஈனாத பசு, கன்று பெறட்டும். குழந்தை இல்லாதவளுக்கு குழந்தை பிறக்கட்டும். கண் இல்லாதவனுக்கு கண்பார்வை கிடைக்கட்டும். கடன் குறையட்டும். ஏழ்மை ஒழியட்டும். ஸ்ரீஹரி நம் இதயத்தில் இருக்கட்டும்.

**ஶங்கரக³ண்ட³ன கதெ²யனு பேளித³**
**பன்னங்க³தல்பன த³யதி³**
**நிர்மல மூர்த்தி ஹொளவனகட்டெ ரங்க³ய்ய**
**என்னனு ஸலஹுவ த³யதி³ ||62**

ருத்ரதேவரின் கதையை கூறிய, பன்னங்க ஷாயியின் கருணையால், நிர்மல மூர்த்தியான ஹொளவனகட்டெ ரங்கய்ய, என்னை (நம்மை) கருணையுடன் காப்பான்.

***

# பிரம்ஹ கொரவஞ்ஜி

* இது 'வ்ருத்த நாமா' வகையில் உள்ள பாடல். பத்யங்கள், வசனம் என மாறி மாறி, மொத்தம் 68 பத்யங்களைக் கொண்டது.
* கம்ஸனின் சிறையில் அடைபட்டிருக்கும் தேவகிதேவிக்கு, குறத்தி வேடம் பூண்ட ப்ரஹ்மதேவர், கிருஷ்ணாவதாரம் நடக்கவிருப்பதையும், கிருஷ்ணனின் லீலைகளையும் விவரிப்பதாக இருக்கிறது இந்த க்ருதி.

**இந்தப் பாடலின் கதைச் சுருக்கம் இவ்வாறு**:

* ஹொளவனகட்டெ ரங்கநாதனின் திவ்ய ரூப சிந்தனையை செய்கிறார்
* தேவகி, கம்சனின் சிறையில் கஷ்டப்படுகிறாள்.
* அப்போது, ப்ரஹ்ம தேவர் குறத்தி வேடத்தை தரித்து, நற்செய்தியைக் கூற வருகிறார்.
* அந்த குறத்தி வேடத்தின் வர்ணனை செய்யப்படுகிறது.
* மதுரா பட்டணத்தை அடைந்து, இனிமையாக பாடியவாறு, நகர்வலம் வருகிறாள் குறத்தி.
* குறி சொல்வதாக கூவிக் கொண்டே சென்ற குறத்தியை, தேவகி அழைக்கிறார்.
* குறத்தியும் தேவகிதேவியிடம் வந்து, அவரைப் புகழ்ந்து, சிறிது உணவளிக்குமாறு கேட்கிறார்.
* தேவகியும், குறத்திக்கு தக்க பரிசுகளை கொடுக்கிறார்.
* சிறையில் அடைபட்டிருக்கும் தங்கள் நிலையை நினைத்து வருத்தப்படுகிறார் தேவகி.
* குறத்தி, தேவகிக்கு குறி சொல்லத் துவங்குகிறாள்.
* உனக்கு கிருஷ்ணன் பிறப்பான்; அவன் கம்சனைக் கொல்வான்; உங்களை சிறையிலிருந்து விடுவிப்பான்.
* சிராவண கிருஷ்ண அஷ்டமியில் ரோகிணி நட்சத்திரத்தில் கிருஷ்ணன் பிறப்பான்.
* அவனே ஆதிமூருதி. ப்ரஹ்மனின் தந்தை. பூமியின் பாரத்தை இறக்குபவன்.

* உன்னுடைய 7 குழந்தைகளை கம்சன் கொல்வான்.
* பிறகு பிறக்கும் கிருஷ்ணனை, வசுதேவர் கோகுலத்திற்கு கொண்டுச் செல்வார்.
* கம்சனை எச்சரிக்கும் துர்க்கை, பின் அங்கிருந்து மறைவாள்.
* பிறகு கம்சன், கிருஷ்ணனைக் கொல்ல பல அசுரர்களை அனுப்புவான்.
* பூதனி, ஷகடாசுரன், வத்ஸாஸுரன் ஆகியோரை கிருஷ்ணன் கொல்வான்.
* தாய்க்கு தன் வாயில் ப்ரஹ்மாண்டத்தை கிருஷ்ணன் காட்டுவான்.
* பற்பல பால லீலைகளை கிருஷ்ணன் செய்வான்; ஜலக்ரீடை, ராஸக்ரீடை செய்வான்.
* அவன் ருக்மிணியை திருமணம் செய்வான்; பக்தர்களை காப்பான்.
* பின், கம்சன், கிருஷ்ணனை வில் விழாவிற்கு வரவழைப்பான்.
* அக்ரூரர் சென்று அவர்களை அழைத்து வருவார்.
* வண்ணான், குப்ஜை ஆகியோருக்கு அருளி; சாணூர மல்லர்கள், குவாலயபீட யானை ஆகியோரை கொன்று கிருஷ்ணன், கம்சனின் அரண்மனையில் நுழைவான்.
* கம்சனைக் கொன்று, உக்ரசேனரை பட்டம் கட்டி, உங்களை சிறையிலிருந்து விடுவிப்பான்.
* மேலும், கிருஷ்ணன் கௌரவர்களைக் கொன்று, பாண்டவர்களை காக்கிறான்.
* மறுபடி, தேவகி குறத்தியிடம், உண்மையை சொல்லுமாறு கேட்கிறார்.
* குறத்தியோ, நான் இதுவரை சொன்னதெல்லாம் உண்மையே என்கிறாள்.
* இவ்வாறு, குறத்தி வேடத்தில் இருந்த ப்ரஹ்மதேவர், தேவகிக்கு நற்செய்தியைக் கூறிவிட்டு, பின் தன் இருப்பிடமான ஸத்யலோகத்திற்கு திரும்பிச் சென்றார்.

***

**ஸுரரு கின்னரரு ஸ்மரணெ மாடு³வ பாத³**
**கு¹ருபதிய க³ர்வவனு பரிஹரிஸுவ பாத³**
**பரம யோகி³க³ள ஹ்ருத்கமலத³ல்லிஹ பாத³**
**ஸிரி வெங்கடேஶ்வரன பாத³ பத்³மவனு நெனெவெ நானு ||1**

தேவர்கள், கின்னரர்கள் என அனைவரும் ஸ்மரணை செய்யும் பாதம்; குரு பதியான துரியோதனனின் கர்வத்தை பரிஹரித்த பாதம்; பரம யோகிகள் இதய கமலத்தில் இருப்பதான பாதம்; ஸ்ரீவெங்கடேஸ்வரனின் பாத பத்மத்தை நான் நினைத்து வணங்குகிறேன்.

**தா³னவாரிய செல்வ ஜானு ஜங்கெ⁴க³ளெஸெவ**
**மீன க²ண்ட³க³ள பெர்தொ³டெ³ய ஸொப³கி³ன**
**பா⁴னுகோடி ப்ரகாஶத³ந்தெ வரகாந்தியலி**
**ஆனந்த³தி³ந்த³லி மெரெவ மூருதிய நெனெவெ நானு ||2**

அசுரர்களின் எதிரிகளுக்கு (ஸஜ்ஜனர்களுக்கு) பிடித்தமானவன்; கால்கள், பாதங்களில், பற்பல சின்னங்களை தரித்த அழகான பாதம்; கோடி சூரியர்களின் ஒளியினால் ஒளிர்கிறான். அந்த ஒளியில், மிகவும் மகிழ்ச்சியுடன் ஸஞ்சரிக்கும் மூர்த்தியை நான் நினைக்கிறேன்.

**மிஸுனி ஒட்³யாண காஞ்சியதா³ம தெள்வஸுர**
**பி³ஸஜனாப⁴ன பா³ஹுபுரிய ஸொப³கி³ன**
**எஸெவ க³தெ³ ஶங்கசக்ரவு பத்³மகரதி³ ஶோ**
**பி⁴ஸுதிருவ கம்பு³கந்த⁴ரத³ மூருதிய நெனெவெ நானு ||3**

தங்கமயமான ஒட்டியாணம்; பளபளக்கும் ஆபரணங்கள் ஆகியவற்றுடன் இருப்பவனான பத்மனாபனின் தோள்களின் அழகினை; ஒளிரும் கதை, சங்கு, சக்ர, பத்ம ஆகியவற்றை கைகளில் கொண்டு, ஒளிர்வதான சங்கு போன்ற கழுத்தினைக் கொண்ட மூர்த்தியை நான் நினைக்கிறேன்.

**கன்னடி³ய பளித³ளிப கத³பு கங்க³ளு எளெயெ**
**கர்ணகுண்ட³லத³ ஸம்பிகெ³ய நாஸிகத³**
**ரன்ன துடி ஜக³ஜகிஸெ³ குடி³ஹுப³பு³க³ளு எளெய**
**மன்மத²ன சாபத³ந்தெஸெவ மூருதிய நெனெவெ நானு ||4**

கண்ணாடியைப் போல பளபளக்கும் கன்னங்கள்; அதில் ஆடும் கர்ண குண்டலங்கள்; ஸம்பிகை போன்றதான மூக்கு; சிவந்த உதடுகள் பளபளப்பாக இருக்க; வளைந்த புருவங்கள், மன்மதனின் வில் போல வளைந்திருக்க; இத்தகைய மூர்த்தியை நான் நினைக்கிறேன்.

**அரெதி³ங்க³ளந்தெ³ஸெவ நொஸல கஸ்தூரிதிலக**
**ஹொளெவ கிரீட மஸ்தகதி³ ட³ளிஸுவ**
**அலஸதீ³ரேள்ஜக³வ கருணத³லி ரக்ஷிஸுவ**
**ஹொளவனகட்டெ ஸ்ரீ வெங்கடேஶ்வரன நெனெவெ நானு ||5**

அரை நிலவைப் போன்ற வளைந்த மூக்கு; கஸ்தூரி திலகம்; ஒளிரும் கிரீடம்; இவ்வாறு, ஈரேழு உலகங்களுக்கும் கருணையுடன் காக்கும் ஹொளவனகட்டெ ஸ்ரீ வெங்கடேஸ்வரனை நான் நினைக்கிறேன்.

**கம்ஸாஸுரனிட்ட ஸெரெய மனெயொளு கஷ்டபடு³தலி தே³வகி நி**
**மிஷ² யுக³வாகி³ களெயுதித்³த³ளு நித்யானந்த³ன நெனெயுதா**
**கம்ஸரிபு நாராயணனு ஜனிஸுவனெந்து³ அருஹுவெனெனுதலி**
**ஹம்ஸவாஹன கொரவிவேஷவ ஹருஷதி³ந்த³லி த³ரிஸித³**
**ஆதனே கொரவி ||6**

கம்ஸ அசுரன் வைத்த சிறைச்சாலையில் கஷ்டப்பட்டவாறு இருக்கும் தேவகி, நிமிடங்களையே யுகமாக கழித்தவாறு இருந்தாள். நித்யானந்தனான பகவந்தனை நினைத்தவாறு, கம்ஸனின் எதிரியான நாராயணன் பிறப்பான் என்று சொல்வேன் என்றவாறு, ஹம்ஸ வாகனனான பிரம்மதேவர்,

கொரவி வேடத்தை மிகவும் மகிழ்ச்சியுடன் தரித்தான். அவனே குறத்தி.

**மிந்து³ மண்டெ³ய பா³சி துருபி³கெ³ மல்லிகெ³ய வனமாலெய**
**சந்த்³ரகா³வியனுட்டு ப¹ணெயொளு தித்³தி³திலகவனிட்டனு**
**க³ந்த⁴ கஸ்தூரி பரிமளவனு லேபிஸி ஸர்வாங்க³தி³**
**இந்த்³ரமாணிகதோ³லெ ஹொளெயலு இதி³ரு பா⁴ஸ்கரனந்த³தி³**
**ஆதனெ கொரவி ||7**

தலையை நன்றாக வாரி, கூந்தலில் மல்லிகை சூடி, வனமாலை சூடி, நல்ல சிகப்புப் புடவை கட்டி, நெற்றியில் நன்றாக திருத்திய திலகத்தை வைத்து, அனைத்து உடலிலும் சந்தனம், நறுமணம் மிக்க கஸ்தூரிகளை இட்டு, காதுகளில் மாணிக்க ஓலைகளை அணிந்து, உதய சூரியனைப் போல ஒளிர்பவனாக இருந்தான் அந்த குறத்தி.

**கு³ஞ்ஜெய த³ண்டெ³யு தோளபா⁴புரி க³ல்லகொத்தித³ வீர்யவு**
**மஞ்ஜாடி³யஸர ஹவள ஸர ஹத்தெஸரவா கொரளலி**
**ஹொளெயலு**
**அஞ்ஜனவனிட்டு அலரக³ண்ணிகெ³ அதிஹருஷதி³ந்த³ பே³க³தி³**
**கஞ்ஜோத்³ப⁴வ ஶ்ருங்க³ரிஸி பெ³ள³கு³வ கன்னடி³யனீக்**
**ஷிஸித³னு ஆதனெ கொரவி ||8**

தோளில் சிவப்பு கருப்பிலான ஆபரணங்கள், கன்னத்தில் சிவந்த வெற்றிலை, செம்மரத்து பட்டை போல ஒளிரும் சரம் கழுத்தில் அணிந்திருக்க, மலர்ந்த கண்ணில் மை தடவி, மிகவும் மகிழ்ச்சியுடன் வேகமாக பிரம்மனானவன் தன்னை அலங்கரித்துக் கொண்டு, ஒளிரும் கண்ணாடியை பார்க்கிறான், அவனே குறத்தி.

**முத்து மாணிக ஹொன்னகொ³டெ³ய பிடி³து³**
**உத்தம ஶிஶுவ பெ³ன்னலி கட்டி**
**சித்ததொ³ளகெ³ நரஹரி ஶரணெனுத**
**ஸத்யலோகதி³ந்தி³ளித³ளெ கொரவி ||9**

முத்து மாணிக்கங்கள் பொன் ஆகியவை நிரம்பிய கூடையை பிடித்துக்கொண்டு, உத்தமமான ஒரு குழந்தையை முதுகில் கட்டிக் கொண்டு, மனதில் நரஹரியை வணங்கியவாறு, ஸத்யலோகத்திலிருந்து இறங்கி வந்தாள் குறத்தி.

**மது⁴ரா பட்டணகாகி³ ப³ந்த³ளெ கொரவி**
**ஹதி³னாரு பா³கி³ல தா³டி நடெ³த³³லு**
**மத³க³ஜத³³ந்தெ மெல்லடி³க³ளனிடு³த**
**பெ³த³³ரதெ³ கேரிகேரியலி ஸ்வரகெ³ய்து³ ||10**

குறத்தி, மதுரா பட்டணத்தை நோக்கி வந்தாள். 16 வாயில்களை (ப்ரகாரங்களை) தாண்டி உள்ளே நடந்தாள். மதயானையைப் போல கம்பீரமாக மெதுவாக அடியெடுத்து வைத்தவாறு, நல்ல ஸுஸ்வரத்தில் பாடியவாறு, அனைத்து தெருக்களிலும் மெதுவாக நடந்து சென்றாள்.

**மனெமனெ பா³கி³லக³ள முந்தெ³ நிந்து**
**வனத³ கோகிலெயந்தெ யவ்வா யவ்வா எனுத**
**வினயதி³ ஸ்வரகெ³ய்வ கொரவிய கண்டு³**
**வனிதெ தே³வகி ஸன்னெமாடி³ கரெத³³லு ||11**

ஒவ்வொரு வீட்டின் வாயிற்கதவின் முன்னேயும் நின்று, காட்டுக் குயில் போல, அம்மா அம்மா என்று கூவியவாறு, மிகவும் மரியாதையுடன் கூப்பிடும் குறத்தியைக் கண்டு, தேவகியானவர், குரல் கொடுத்து குறத்தியை அழைத்தார்.

**ஸன்னெமாடி கரத³³ரெ சென்னகொரவஞ்சி பந்து³**
**என்னவ்வ என்னக்க என்ன தந்தெ³ய ஹெத்தவ்வ**
**நின்ன மனதா³யத¹வ ஹேளேனு பா³ரவ்வ**
**என்ன கூஸிகெ³ ப³ந்தி³ஷ்டன்னவனிக்கவ்வ**
**ஸொல்லகேளெ ஸொல்லகேளே ஸிரிவந்தெ பா³ரெ ||12**

குரல் கொடுத்து கூப்பிட்ட குரலுக்கு அந்த குறத்தி வந்து, என் அம்மா, என் அக்கா, என் தந்தையை பெற்ற அம்மா, உன்

மனதில் இருப்பதை நான் சொல்வேன் வருவாயாக அம்மா. என் குழந்தைக்கு சிறிது அன்னம் கொடுப்பாயாக. என் பேச்சை கேட்பாயாக, செல்வச் செழிப்புடன் இருப்பவளே, வருவாயாக – என்றாள் குறத்தி.

**மலெயாள கொங்கணதேஶ மஹாராஷ்ட்ர கு³ஜ்ஜரதேஶ**
**செலுவ காஷ்மீர களிங்க³ கர்னாடகதேஶ**
**துளுவ திலுக³ தே³ஶவன்னு திருகி³ ஸொல்ல ஹோளி பந்தெ³**
**ஒலுமெய கொரவஞ்சி நானல்லவெயம்ம**
**ஸொல்ல கேளெ ஸொல்ல கேளெ ஸிரிவந்தெ பா³ரெ ||13**

மலையாள, கொங்கண தேச, மகாராஷ்டிர, குஜ்ஜர தேச, காஷ்மீர, களிங்க, கர்னாடக தேச, துளு, தெலுங்கு நாடு என அனைத்து இடங்களிலும் சுற்றி என் வாக்கினை கூறியவாறு இங்கு வந்துள்ளேன். யாரையும் மயக்கும் குறத்தி நான் இல்லையம்மா. என் பேச்சை கேட்பாயாக, செல்வச் செழிப்புடன் இருப்பவளே, வருவாயாக – என்றாள் குறத்தி.

**ச²ப்பன்ன தே³ஶவனெல்ல ஸுத்தி ஸொல்ல ஹோளிப³ந்தெ³**
**தப்ப ஹோளுவ கொரவி நானல்லவெயம்ம**
**கர்பூர வீள்யவ தாரெ காந்தெ நின்ன கைய தோரெ**
**ஒப்பாத³ரெ கேளுபா³ரெ கொப்பின கிவியவ்வ**
**ஸொல்லகேளெ ஸொல்லகேளெ ஸிரிவந்தெ பா³ரெ ||14**

56 நாடுகளை இவ்வாறு சுற்றி, என் வாக்கினை நான் அங்கெல்லாம் சொல்லி வந்தேன். எதையும் தவறாக சொல்லும் குறத்தி நான் அல்ல அம்மா. கற்பூர வெற்றிலையை கொண்டு வருவாயாக. உன் கையை காட்டுவாயாக. மனதிற்கு பிடித்தால் கேட்பாயாக. அலங்காரம் செய்யப்பட்ட காதுகளை கொண்டவளே. என் பேச்சை கேட்பாயாக, செல்வச் செழிப்புடன் இருப்பவளே, வருவாயாக – என்றாள் குறத்தி.

**வசன:**

**இத்தித்த பா³ரவ்வ விவரிஸி ஹேளேனு முத்தின முடியவ்வ**
**முத்³து³முக²வ தோரெ மத்தக³ஜக³மனெ மந்த³ஹாஸத³னெ**
**ரத்னத³ ஸெளெகோ³ல பிடி³யெ ராஜீவனேத்ரெ நின்ன**
**சித்ததொ³ளக³ண**
**மாத ச²ந்த³வாகி³ ஹேள்வேனு கேளெ அம்மய்ய**

இங்கு வருவாயாக. விவரித்து சொல்வேன். முத்து போல முடி கொண்டவளே. உன் அழகான முகத்தை காட்டுவாயாக. மதயானை போல நடப்பவளே. புன்னகை கூடிய முகத்தை கொண்டவளே. இந்த ரத்ன கோலை பிடிப்பாயாக. தாமரை போன்ற கண்களை கொண்டவளே. உன் சித்தத்தில் இருக்கும் சிந்தனையை நான் நன்றாக சொல்வேன், கேட்பாயாக.

**பரிய ட³ம்ப³கத³ கொரவி நானல்ல**
**அருஹுவெனு முந்த³ண கதா²ந்த்ரவெல்லவ**
**மொரத³ தும்ப³ முத்து¹ தாரெ மானினிரன்னளெ**
**குருஹ ஹேளேனு இல்லி குள்ளிரு பா³ரெயவ்வ ||15**

வெறும் டாம்பீகமாக குறத்தி நான் அல்ல. அடுத்து நடக்கப்போகும் கதைகளை முழுக்க நான் சொல்வேன்; முறம் முழுக்க முத்தினை கொண்டு வருவாயாக; பெண்களில் சிறந்தவளே. உன் கதையை சொல்வேன், இங்கு அமர்வாயாக. வருவாயாக.

**எந்த³ மாத கேளி ஹருஷதி³ந்த³ தே³வகி**
**மிந்து³ மடி³யனுட்டு காந்தெ ப³ந்து³ குளிதளு**
**இந்து³முகி²யு மொரன தும்ப முத்தனிட்டளு**
**தந்து³ கையதும்ப³ ஹொன்ன காணிகிட்டளு ||16**

குறத்தி கூறிய பேச்சினைக் கேட்டு, தேவகி மிகவும் மகிழ்ச்சியுடன், மெல்லடிகளை வைத்து வந்து அவள் அருகில் அமர்ந்தாள். சந்த்ரமுகியான தேவகி, ஒரு முறம் முழுக்க

முத்துக்களை கொண்டு வந்து, குறத்தியின் கை நிறைய பொன் காணிக்கையாகக் கொடுத்தாள்.

**குணிஸி முத்தின அக்ஷதெயிட்டு குபிததி³ந்த³லி**
**நெனெத³ளு மனத³பீ⁴ஷ்டவீவ க்ருஷ்ணன**
**ஜனிஸிதெ³னு மது⁴ராபுரத³ அரஸனுத³ரதி³**
**என்ன ஸோத³ரனெம்ப³ பாபி ஸெரெயொளிட்டனு ||17**

முத்து அக்ஷதையை கொடுத்து, மிகவும் ரகசியமாக, மனதின் விருப்பங்களை நிறைவேற்றுபவனான கிருஷ்ணனை நினைத்தாள். கிருஷ்ணன் மதுரா பட்டணத்தின் அரசனின் வயிற்றில் பிறந்தான்; என் சகோதரன் என்னும் பாவி என்னை (எங்களை) சிறைச்சாலையில் வைத்தான் - என்று நினைத்தாள்.

**என்ன ஸுதனு தன்ன கொலுவனெம்ப³ மாதிகெ³**
**என்ன அக்³ரஜ என்ன மேலெ க²ட்³க³வெத்தலு**
**என்ன பதியு என்ன மேலண மமதெயிந்த³லி**
**தன்ன ஸுதர கொடு³வெனெந்து³ கொலெயனுளுஹித³ ||18**

என் மகன் தன்னை கொல்வான் என்று யாரோ கூறிய பேச்சினைக் கேட்டு, என் அண்ணன் என்னை கொல்ல வாளினை தூக்க, என் கணவர் என் மேல் இருந்த அன்பினால், தனக்கு பிறக்கப் போகும் குழந்தைகளை கொண்டு வந்து கொடுப்பேன் என்று சொல்லி, என்னை கொல்லப்படாமல் காப்பாற்றினான்.

**ஒட³னெ ஹுட்டித³ அண்ண எனகெ³ வைரியாத³னு**
**படெ³த³ படெ³த³ ஸுதரனரெயலப்பளிஸித³னு**
**ஒடெ³ய க்ருஷ்ண ஸலஹோ எந்து³ ஸ்துதிஸி தே³வகி**
**க³ட³ணதி³ந்த³ கொரவி தானு ஹொளி குளிதளு ||19**

உடனே, என் அண்ணன் எனக்கு எதிரி ஆனான்; அதன் பிறகு எனக்குப் பிறந்த குழந்தைகள் அனைவரையும் கொன்றான்.

தலைவனே, கிருஷ்ணனே எனை காப்பாற்று என்று வணங்கிய தேவகி, அந்த குறத்தியின் முன் வந்து அமர்ந்தாள்.

**வசன:**
**திருபதி திம்மப்ப சள்ளபில்லெராய**
**ஸுரபுரவாஸ லக்ஷீவர கருணவாகு[3]**
**வந்த[3]னெ ஸொல்ல சந்தா[3]கி[3] ஹேளேனு கேளெயம்மய்யா**

திருப்பதி திம்மப்பா, மலை மேல் வசிப்பவனே, தேவலோகத்தில் வசிப்பவனே, லட்சுமிதேவியின் தலைவனே, உன் கருணையை காட்டுவாயாக. என் வந்தனைகளை ஏற்றுக் கொள்வாயாக. உன்னை வாழ்த்திப் பாடுகிறேன். நன்றாக கேட்பாயாக.

**உர்பியொளதி திட்டனம்ம நிம்ம மக[3]னு**
**க[3]ர்ப்ப[4]தொ[3]ளிஹனு காணம்ம**
**கொப்[3]பி[3]த[3] கம்ஸன ஹம்ம முரிது[3] நிம்ம**
**நிர்ப[3]ந்த[4] பி[3]டி[3]ஸுவனம்ம ||20**

இந்த பூமியில் உன் மகன் சிறந்த வீரனம்மா. அவனே உன் கர்ப்பத்தில் வருவானம்மா. கொடூரமான கம்சனின் கர்வத்தை அடக்கி, உங்களை சிறையிலிருந்து விடுவிப்பானம்மா.

**எண்டனெ க[3]ர்ப்ப[4]வித[3]ம்ம நிம்முத[3]ரதி[3]**
**அண்டிஹ மக[3]னு காணம்ம**
**கண்டக கம்ஸன அம்மா இவனு பட்டி**
**க[3]ண்டல முரிவ காணம்ம ||21**

அவன் உங்கள் வயிற்றில் எட்டாவது கர்ப்பமாக, வந்து தங்குவான் அம்மா. அசுரனான கம்சனின் எதிரி இவனே அம்மா; பிறந்து வந்து அவனின் கழுத்தை முறிப்பான் பாரம்மா.

**நிஷ்கருணி நிம்மண்ணனம்ம நீ படெத³ந்த²**
**மக்கள கொல்லுவ காணம்ம**
**சக்ரத⁴ரன கையொளம்ம ஈ கம்ஸனு**
**ஸிக்குவுது³ தட³வில்லவம்ம ||22**

உன் அண்ணனான கம்சன், கருணையற்றவன் அம்மா. நீ பெற்றதான குழந்தைகளை அவனே கொல்வான் பாரம்மா. சக்ரதரனான ஸ்ரீகிருஷ்ணனின் கையில், இந்த கம்சன் சிக்குவதில் எந்த தடையும் இல்லையம்மா.

**வசன:**
**ஈ மாது புஸியல்ல ஸ்வாமிய கருண உண்டு**
**ரமாபதிய கருண உண்டு காமிதார்த்த²வெல்ல**
**கைகூடி³து³ கேளெயம்மய்யா**

இந்த என் பேச்சு, பொய் அல்ல. ஸ்வாமியின் கருணை உனக்கு இருக்கிறது. ரமாபதியின் கருணை உனக்கு இருக்கிறது. உன் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறுகிறது கேளம்மா.

**கைய தோரெ கைய தோரெ கைய தோரெ அம்மய்ய**
**கைய தோரெ நின்ன மனத³ குருஹ ஹேளுவெ**
**ஸையெனிஸிகொம்பெ³ நினகெ³ ஸுக²வாக்யவனு ஹேளி**
**ப⁴ய பே³ட³வே அம்மய்ய நினகெ³ பா⁴ஷெய கொடு³வெ ||23**

கையை காட்டு, கையை காட்டு, கையை காட்டுவாயம்மா. கையை காட்டு, உன் மனதின் சந்தேகங்களை நான் சொல்வேன். அது சரி என்றே நீ சொல்வாய். உனக்கு சுகமான வாக்கியங்களை சொல்லி, நல்லதையே சொல்வேன். பயப்படாதே. அம்மா. உனக்கு நல்வாக்குகளையே சொல்வேன்.

**ஸடெய மாதுக³ளாடி³ ஸெளெது³கொண்டு³ ஹோகி³**
**ஹொட்டெய ஹொரெவ கொரவி நானல்லவம்ம**
**நெட்டனெ ஸதாஶிவன தட்டி ப³ந்த³ கொரவிய மாத**

**தி³ட்டவெந்து³ ஸொரக³ க³ண்டிக்கிகொள்ளம்ம ||24**

தவறான வார்த்தைகளை பேசி, உன்னை கவர்ந்து கொண்டு சென்று, வயிறு வளர்க்கும் குறத்தி நான் அல்ல அம்மா; தொடர்ந்து சதாஸிவனை வணங்கி, அவன் அருள் பெற்று வந்த குறத்தியின் பேச்சு உண்மை என்று நம்பி, உன் புடவைத் தலைப்பை இழுத்து அணிந்து கொள் அம்மா (பேச்சினை கேட்பதற்கு தயார் ஆவாயாக).

**அங்க³னெ நின்ன மனத³ ஆயிதவ ஹேளேனு**
**மங்க³ள வாக்யவ கேளே மானினி ரன்னெ**
**பங்கா³ரத³ கைய தோரெ போ³க³ஸெக³ங்க³ள நீரெ**
**ஹிங்கு³வது³ நின்ன கஷ்ட ஹுʼஸியல்லவம்ம ||25**

பெண்ணே, உன் மனதின் விருப்பங்களை (சந்தேகங்களை) கேட்பாயாக. மங்களமான வாக்கியங்களை கேட்பாயாக பெண்ணே. உன் தங்கமயமான கைகளை காட்டுவாயாக. பெரிய பாத்திரத்தின் தண்ணீரே குறைவு என தெரியும் (உன் உள்ளங்கையின் அளவை ஒப்பிட்டால்); உன் கஷ்டம் நிரந்தரமல்ல, அழியும் ஒன்றே ஆகுமம்மா.

**வசன:**
**சந்த்³ரவத³னெய செல்வ வாமஹஸ்தவ**
**சந்த³ தி³ந்த³லி கொரவி விவரிஸி ஹேளித³ளு**
**ஹிந்த³ண கஷ்டவெல்ல பரிஹாரவாயிது**
**முந்தெ³ ஊʼப⁴ உண்டு கேளெயம்ம**

சந்த்ரமுகியான தேவகியின் அழகான இடது கையை மிகவும் மகிழ்ச்சியுடன் குறத்தி விவரித்து கூறினாள். இது வரை வந்த உன் கஷ்டங்கள் அனைத்தும் பரிகாரம் ஆனது; அடுத்து உனக்கு அனைத்து நலன்களும் உண்டு கேட்பாயாக அம்மா

**ஸ்ராவண ப³ஹுளாஷ்டமி ராத்ரெய நடுவிருளு**
**ரோஹிணி நக்ஷத்ரத³ல்லி நிம்முத³ரதி³ க்ருஷ்ண**
**ஜனிஸுவனு காணெ கேளம்மய்ய ||26**

ஸ்ராவண பகுள அஷ்டமி இரவில், நடுநிசியில், ரோஹிணி நட்சத்திரத்தில், உங்களின் வயிற்றில் கிருஷ்ணன் பிறக்கிறான் பார்ப்பாயாக. கேட்பாயாக.

**ஶங்கசக்ரவு க³தெ³ பங்கஜ பீதாம்ப³ர அ**
**லங்கார மூருதியாகி³ புட்டுவ க்ருஷ்ண**
**ஶங்கெயகொ³ளதி³ரெ கேளம்மய்ய ||27**

சங்கு, சக்ர, கதை, தாமரை, பீதாம்பர ஆகியவற்றுடன் அலங்காரம் செய்யப்பட்டுள்ள மூர்த்தியாகி கிருஷ்ணன் பிறப்பான். சந்தேகத்தை விடு அம்மா. நான் சொல்வதைக் கேள்.

**அம்மா நிம்முத³ரதி³ ப்³ரம்ஹனபித ப³ந்து³**
**நிம்ம நிர்ப³ந்த⁴வ பி³டி³ஸுவனு காணெ**
**உம்மயகொ³ளபே³ட³வெ கேளம்மய்ய ||28**

அம்மா, உன் வயிற்றில் ப்ரம்ஹனின் தந்தை வந்து பிறப்பான். உன் நிர்ப்பந்தத்தை (சிறைவாசத்தை) விடுவிப்பான் பார்ப்பாயாக. ஆகவே, வீணாக கவலைப்படாதே. நான் சொல்வதைக் கேள்.

**ஆதி³மூருதி நிம்முத³ரதொ³ளவதரிஸி**
**மேதி³னி பா⁴ரவனிளுஹலு கம்ஸன**
**பே⁴தி³ஸுவனு காணெ கேளும்மய்ய ||29**

ஆதிமூருதியான பகவந்தன், உன் வயிற்றில் அவதரித்து, இந்த பூமியின் பாரத்தை இறக்குவதற்கு, கம்சனை கொல்வான் பாரம்மா. நான் சொல்வதைக் கேள்.

**ஏளு மக்கள கம்ஸ அரெயலப்பளிஸித³னெ**
**சள்ளெ பீ³ஜத³ந்தெ நுணிசி தப்பிஸீகொம்ப³**
**கள்ளமக³னு புட்டுவ கேளம்மய்ய ||30**

உன்னுடைய ஏழு குழந்தைகளை கம்சன் பாறையில் அடித்துக் கொல்வான். காற்றில் பறந்து செல்லும் சள்ளே என்பதான ஒரு பழத்தின் விதையைப் போல, இவன் கம்சனிடமிருந்து தப்பித்துக் கொள்வான். அப்படிப்பட்ட ஒரு குறும்புப் பையன் உனக்கு பிறப்பான் கேளம்மா.

**வசன:**
**இந்தா² மக³னு நிம்முத³ரதி³ ஜனிஸலு**
**காந்த வஸுதே³வரு கோ³குலகெ ஒய்யலு**
**நிந்தித்³த³ யமுனெயு மார்க³வம் பி³ட³லு**
**ஸந்தோஷதி³ந்த³ல்லி பெ³ளெவனெ க்ருஷ்ண கேளம்மய்ய**

இத்தகைய மகன் உன்னுடைய வயிற்றில் பிறப்பதற்கு; அவனை வசுதேவர் கோகுலத்திற்கு கொண்டு வந்து சேர்க்க; பாயும் யமுனை நதியானது அவருக்கு வழியை விட; கோகுலம் வந்து சேரும் கிருஷ்ணன் மகிழ்ச்சியுடன் வளர்வான்.

**கோகு³லதொளகெ³ ஸ்ரீ க்ருஷ்ணனனிட்டு துர்கெ³ய**
**ஈ கடெ³கெ³ கொண்டு³ப³ஹ நிம்ம பதியு**
**காகு கம்ஸாஸுரனு ஆகெய பிடி³யெ க³க³**
**நாகெ ஹாரி ஹோகு³வளு மாயாகாரியு ||31**

கோகுலத்தில் ஸ்ரீகிருஷ்ணனை வைத்து, அங்கு ஸ்ரீதுர்க்கையை கொண்டு செல்லும் உன் கணவன், அங்கு காத்திருந்த கெட்டவனான கம்சாசுரன், அவளை பிடித்து அடிக்க, அவளே வானில் பறந்து சென்றுவிடுவாள். அவள் பெரிய மாயாகாரி அம்மா.

**க்ரூர ரக்கஸ என கொல்லுவதே³தகோ நின்ன**
**வைரி க்ருஷ்ண ஹோகி³ கோ³குலதொ³ளகெ³**
**தீ⁴ரனாகி³ பெ³ளது³ ஸம்ஹாரவ மாடு³வனெந்து³**
**ஸாரி ஹாரி ஹோகு³வளம்ப³ரகெ து³ர்கி³ ||32**

அந்த துர்க்கை சொல்கிறாள். ஹே க்ரூர அசுரனே. நீ என்னை கொல்லத் துணிந்தாயா? உன்னுடைய எதிரியான கிருஷ்ணன் கோகுலத்திற்கு சென்றிருக்கிறான். அவன் மிகப்பெரிய வீரனாக வளர்ந்து, உன்னை கொல்வான் என்று தீர்க்கமாக சொல்லி, அவள் வானில் பறந்து மறைந்து சென்று விடுவாள்.

**நந்த³ன கோ³குலதி³ ஆனந்த³தி³ பெ³ளதா³னு க்ருஷ்ண**
**ஸந்தே³ஹ பே³ட³வவ்வ நிம்ம மனதொ³ளகெ³**
**ப³ந்து³ மது⁴ரேலி நிம்ம ப³ந்த⁴னவ பி³டி³ஸித³**
**ரெந்தி³கா³த³ரொம்மெ நம்ம நெனெவிரம்ம ||33**

நந்தகோபனின் கோகுலத்தில் கிருஷ்ணன் மிகவும் மகிழ்ச்சியுடன் வளர்கிறான். இதில் உன் மனதில் இதைப்பற்றியதான எவ்வித சந்தேகமும் இல்லையம்மா. ஒரு நாள் அவன் மதுரைக்கு வந்து உங்களை சிறைச்சாலையிலிருந்து விடுவிப்பான். இதை நினைத்துக் கொள்ளுங்கள் அம்மா.

**கோ³குலதொ³ளகெ³ க்ருஷ்ண பெ³ளெவ ஸுத்³தி³ய கேளி**
**வ்யாகுலகொ¹ளகா³தா³னு கம்ஸாஸுரனு அ**
**நேக ரக்கஸரனு களுஹலு தன்னனு**
**ஸோகி¹ஸதெ³ மடு³ஹுவனு நின்ன மக³னு ||34**

கோகுலத்தில் கிருஷ்ணன் வளரும் செய்தியைக் கேட்டு, கம்சம் மிகவும் கவலைப்படத் துவங்கினான். அங்கு தன்னுடைய பற்பல அசுரர்களை அனுப்பினான். அவனை கொல்லாமல் விடமாட்டான் உன்னுடைய மகன் – என்பதை கம்சன் அறிந்திருந்தான்.

**மயாபூ[1]தனெய மொலெயனுண்டு[3] ஆகெய**
**காயவ கெட[3]ஹுவனு நின்ன மகனு உ**
**பாயதி[3] ஶகடனெம்ப[3]ஸுரன ப[3]ண்டி[3]ய**
**நோயதெ[3] முரியல்தெ[3]யுவ நின்ன மக[3]னு ||35**

மாயா அசுரளான பூதனியின் விஷம் தடவிய முலைப்பால் குடித்து, அவளை கொல்வான் உன் மகன். மிகவும் தந்திரத்துடன், ஷகடாசரனின் வண்டியை அடித்து முறித்து எறிவான் உன் மகன்.

**வத்ஸனெம்ப[3]ஸுரன கெ[3]லிது[3] கோ[3]பிகெ[3] முத்[3]து[3]**
**ஆஶ்சர்யவன்னு தோருவ நின்ன மக[3]னு**
**முச்சித்[3]த[3] வத[3]னவ தெரெயெ ப்[3]ரம்ஹாண்ட[3]வ**
**குக்ஷியொளகெ[3] தோருவ நின்ன மக[3]னு ||36**

வத்ஸ என்னும் அசுரனை வென்று கோபிக்கு மிகச்சிறந்த வியப்பினை தருவான் உன் மகன். மூடியிருந்த வாயினை திறந்து, அதில் பிரம்ஹாண்டத்தை தன் வயிற்றில் காட்டுவான் உன் மகன்.

**வசன:**
**மகு[3]வாகி[3] கோ[3]பிகெ[3] முத்[3]து[3]க[3]ள தோருவ**
**க[3]க[3]னத[3]ல்லி இஹ சந்த்[3]ரமன அங்கெ[3]யிலி பிடி[3]வ**
**ஜக[3]ஜகி[3]ஸுவ கிச்ச நுங்கு[3]வ தை[3]த்ய குடா[2]ரி த[3]யாபர மூர்த்தி**
**மக[3]னல்லவெ க்ருஷ்ண மாயாவதாரி கேளம்மய்யா**

குழந்தையாக கோபிக்கு தன் குறும்புத்தனங்களை காட்டுவான். வானில் இருக்கும் சந்திரனை தன் உள்ளங்கையில் பிடிப்பான். ஒளிர்வதான காட்டுத்தீயினை விழுங்குவான். தைத்யர்களின் எதிரி அவன். கருணைக்கடல். உன் மகன் அல்லவா அவன் கிருஷ்ணன். மாயாவதாரி. கேளம்மா.

**பட்டணதொ³ளகெ³ல்ல நின்ன மக³னட்டுளி க⁴னவாதீ³து**
**கட்டித³ காலலி மத்தி மரவ முரிது³ முக்தி**
**கொட்டு யமளார்ஜுனரிகெ³ கோ³வர்த்த⁴னகி³ரிய கிரி**
**பெ³ட்டலி நெக³ஹுவனு நின்ன மக³னு ||37**

பட்டணத்தில் உன் மகனின் இந்த வீரதீரச் செயல்கள் பரவின. உரல் கட்டிய காலில், இரு மரங்களை முறித்து, அவர்களுக்கு (யமளார்ஜுனருக்கு) முக்தியை கொடுப்பான். கோவர்த்தனகிரியை தன் சிறிய விரலில் தூக்குவான் உன் மகன்.

**மட³தி³யர வஸ்த்ரக³ள ஸெளெது³கொண்டு³ கட³ஹுத³ மரனேருவ**
**மடு³வ து⁴ம்மிக்கி காளிங்க³ன ஹெடெ³ய துளிது³**
**தடி³கெ³ ப³ந்து³ கோ³வளரொட³னெ முத்தின செண்ட³**
**பிடி³து³ ஆடு³தலிப்பனு நின்ன மக³னு ||38**

பெண்களின் வஸ்திரங்களை கவர்ந்து, அருகில் இருக்கும் மரத்தின் மேல் ஏறுவான். மடுவில் குதித்து, காளிங்கனின் தலைமேல் மிதித்து, பின் கரைக்கு வந்து பிற இடையர்களுடன் பந்து ஆடிக் கொண்டிருப்பான் அம்மா உன் மகன்.

**வ்ருந்தா³வனதொ³ளகெ³ பொங்கொ³ளலனூடி³ சந்த³தி³**
**ஸ்வரகெ³ய்வனு**
**இந்து³முகி²யரொட³கூ³டி³ ஜலக்ரீடெ³ய ஆ**
**நந்த³தி³ ஆடு³திப்பனு அவராபீ⁴ஷ்டவன்னு கோ³**
**விந்த³தா ஸலிஸுவனு நின்ன மக³னு ||39**

வ்ருந்தாவனத்தில் தன் புல்லாங்குழலை இசைத்து, அழகான ஸ்வரத்துடன், பெண்களுடன் கூடி ஜலக்ரீடை ஆடி, மிகவும் மகிழ்ச்சியுடன் ஆடிக் கொண்டிருப்பான். அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவான். உன் மகன்.

**வசன:**
**கேரி கேரிய பொக்கு நாரியர**
**மனெக³ளல்லி நவனீதவனுகதி³வா**
**வாரிஜமுகி²யரு தூ³ரு கொண்டு³ ப³ரலு**
**யாரூ அரியத³ந்தெ யஶோதெ³ய மனெயல்லிஹ**
**ஜார சோரரிகெ³ல்ல ஶிகா²மணியாஹனெ கேளம்மய்யா**

கிராமத்தின் அனைத்து தெருக்களிலும் சென்று, பெண்களின் வீடுகளில் நுழைந்து, வெண்ணையை திருடுவான். தாமரை முகம் கொண்ட அந்த பெண்கள், அவன் மேல் கோள் மூட்ட வருவார்கள். அப்போது யாரும் அறியாதவாறு யசோதையின் வீட்டில் இருக்கும் இந்த ஜார (பெண்களை மயக்குபவன்), திருடர்களுக்கெல்லாம் தலைவனே ஆகிறான். கேட்பாயாக.

**கொ³ல்லர ஒட³னாடு³வ நின்ன மக³னு**
**கொ³ல்லதியர கூடு³வ**
**கல்லிய கூளனும்ப³ நின்ன மக³னு**
**கல்யாண கருணவீவ ||40**

இடையர்களுடன் விளையாடும் உன் மகன், கொல்லதியர்களுடன் கூடி விளையாடுவான். மண் ஆகியவற்றை உண்பான் உன் மகன். கல்யாண மங்களங்களை அனைவருக்கும் அருள்வான்.

**சிக்கவனல்லவம்ம நின்ன மக³னு**
**சொக்க சது³ர காணெ**
**ரக்கஸரனு கெ³ல்லுவ நின்ன மக³னு**
**ருக்மிணிகொ³லிவனம்ம ||41**

உன் மகன் சிறியவன் அல்ல. மிகச்சிறந்த அறிவாளியாவான். அசுரர்களை வெல்லும் உன் மகன். ருக்மிணியை திருமணம் செய்வான் அம்மா.

**கண்டு³னெனெவ ப⁴க்தர நின்ன மக³னு**
**கண்ட³ரெ பரிவனம்ம**
**கண்டு³ நெனெயத³ ஜனர நின்ன மக³னு**
**க²ண்டி³ஸிகொம்ப³னம்ம ||42**

அவனையே எப்போதும் கண்டு, நினைக்கும் பக்தர்களை, உன் மகன், பார்த்து அருள்வானம்மா. அவனை காணாமல், நினைக்காத மக்களை, உன் மகன், கண்டிப்பான் அம்மா.

**யாத³வகுலதிலக நின்ன மக³னு**
**ராதெ⁴ய ரமண காணெ**
**வேதா³ந்த வேத்³யனு நின்ன மக³னு**
**ஆதா³னு காணெ அம்மய்ய ||43**

உன் மகன், யாதவ குல திலகன். ராதையின் ரமணன். வேதாந்தங்களால் போற்றப்படுபவன் உன் மகன். அவனைப் போல வேறு ஒருவனை நான் காணமாட்டேன் அம்மா.

**மந்த³க³மனெ நீ கேளு நின்ன மக³னு**
**மாயாவதாரனம்ம**
**மூஜக³தொ³டெ³யனம்ம நின்னமக³னு**
**முக்திதா³தனு காணெ ||44**

மெதுவாக நடப்பவளே. நீ கேட்பாயாக. உன் மகன் மாயாவதாரன் அம்மா. மூன்று உலகங்களுக்கும் தலைவன் அம்மா உன் மகன். முக்தி கொடுப்பவன் அவனே அம்மா.

**வசன:**
**அத்த களுஹித³ ப⁴டரு இத்த பா³ரத³ கண்டு³**
**வ்யர்த்தவாயிது தன்ன ஸாஹஸவெனுத**
**சித்த ப்³ராந்தனாகி³ சிந்திஸுத கம்ஸ**
**மத்தொந்து³ யோசனெய மனத³ல்லி மாட்³யானெ கேளம்மய்ய**

(கிருஷ்ணனை கொல்ல, கோகுலத்திற்கு) அனுப்பிய அசுரர்கள் யாரும் திரும்ப வரவில்லை என்பதைக் கண்டு, தன்னுடைய

முயற்சி அனைத்தும் வீண் ஆனது என்று நினைத்து, கம்சனானவன் சித்தம் கலங்கி கவலைப்பட்டவாறு, தன் மனதில் இன்னொரு யோசனையை செய்தான், அதை கேளம்மா.

**மெல்ல மெல்லனெ அக்ரூரனொட³னெ ஏகாந்தவ**
**ப³ல்ல பரியல்லி ஹேளி**
**பி³ல்லஹப்³ப³த³³ நெவதி³ந்த³³ க்ருஷ்ணன**
**இல்லிகெ³ கரெதாரெம்ப³ ||45**

மெதுவாக அக்ரூரருடன் தனிமையில், நல்ல விதமாக பேசி, வில் விழாவினை சாக்காக வைத்துக் கொண்டு, கிருஷ்ணனை இங்கு அழைத்து வாருங்கள் என்பான்.

**ஆ மாத கேளி ஹருஷதி³ந்த³³ தா ஹோகி³**
**ஸ்வாமிகெ³ பி³ன்னயிஸி**
**மாவ கம்ஸனு பி³ல்ல ஹப்³ப³க்கெ கரெஸித³³**
**தே³வ சித்தயிஸெம்ப³னு ||46**

கம்சனின் அந்த பேச்சினை கேட்டு, மிகவும் மகிழ்ச்சியுடன் அக்ரூரர் தான் சென்று, ஸ்வாமியிடம் வேண்டியவாறு, அந்த கம்சன் உங்களை வில் விழாவிற்கு அழைப்பு விடுத்திருக்கிறான், ஸ்வாமியே, நீங்கள் வரவேண்டும் என்பான்.

**பரம ப⁴க்தன மாதகேளி ஸந்தோஷதி³**
**ப³ருத மது⁴ராபுரகெ**
**கருணாகரனு தன்ன நிஜவனக்ரூரங்கெ³**
**ஶரதி⁴யொளகெ³ தோருவ ||47**

தன்னுடைய பரம பக்தனான அக்ரூரரின் பேச்சினைக் கேட்டு, மிகவும் மகிழ்ச்சியுடன் கிருஷ்ணன் மதுரா பட்டணத்திற்கு புறப்பட்டு வரும் வழியில், கருணைக்கடலான ஸ்ரீகிருஷ்ணன்,

தன் உண்மையான ரூபத்தினை அக்ரூரருக்கு, தண்ணீருக்குள் காட்டுவான் .

**மது[4]ரெ அரஸகொ[3]ய்யுவ மடி[3]ய பே[3]ட[3]**
**வெந்த[3]ரெ அஜக[1]ன கொந்து[3] மடி[3]யனுடு[3]வ**
**முத[3]தி[3]ந்த[3] மாலெகா[3]ரகொ[3]லிவ இந்த[2]**
**சது[3]ரதனதி[3] பூமாலெய முடி[3]வ ||48**

மதுரை அரசுக்கு செல்லும் நோக்கத்தை விட்டுவிடுங்கள் என்றால், அந்த ரஜகனை (துணி துவைப்பவர் – வண்ணான்) கொன்று, அவனிடமிருந்து நல்ல ஆடைகளை எடுத்துக் கொள்வான். மிகவும் மகிழ்ச்சியுடன் மாலை வழங்கியவனுக்கு அருள்வான். இத்தகைய புத்திசாலித்தனத்துடன் அவன் கொடுத்த பூமாலையை எடுத்து அணிவான்.

**ஜாணதனதி[3] கந்த[3] இடு[3]வ குப்[3]ஜெய**
**ஊனவ தித்[3]தி[3] யெளவனவனு கொடு[3]வ**
**சாணூர மல்லர கெ[3]லுவ ம**
**த்[3]தா[3]னெய கொந்து[3] தா முந்த[3]க்கெ நடெ[3]வ ||49**

குப்ஜைக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் சந்தனம் இடுவான். அவளுடைய ஊனத்தை திருத்தி மறுபடி வாலிபத்தை கொடுப்பான். சாணூர மல்லர்களை போரில் வெல்வான். குவாலயாபீட என்னும் மத யானையைக் கொன்று தான் கம்சனின் அரண்மனைக்குள் நடப்பான் ஸ்ரீகிருஷ்ணன்.

**நிமிஷமாத்ரத[3]ல்லி பி[3]ல்ல முரிவ**
**க்ருஷ்ண அவஸரதி[3]ந்த[3] உப்பரிகெ[3]யனேருவ**
**கம்ஸன ப்ராணவனளிவ இத[3]கெ**
**ஸம்ஜ்ஞய பே[3]ட[3]வெ கேளிரெ நிஜவ ||50**

நிமிட நேரத்தில், வில்லினை முறிப்பான் கிருஷ்ணன். மிகவும் விரைவாக உப்பரிகையில் ஏறுவான். கம்ஸனின் உயிரை

பறிப்பான். இதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம் அம்மா. நீ கேள் உண்மையை.

**து³ஷ்ட கம்ஸன கொந்து³ ஸ்ருஷ்டிய பா⁴ரவனிளுஹி**
**பட்டவ உக்³ரஸேனகெ³ கட்டி ரக்ஷிஸுவனு காணெ**
**கருணாகரனு நிம்ம மொரெயலாலிஸி முன்ன**
**ஸெரெய பி³டி³ஸுவனு அரிகெயிரலி நிமகெ³ ||51**

துஷ்ட கம்சனைக் கொன்று, இந்த பூமியின் பாரத்தை இறக்கி, உக்ரசேனனுக்கு பட்டத்தை கட்டி அனைவரையும் காப்பான் பார்ப்பாயாக அம்மா. கருணாகரனான கிருஷ்ணன் உங்களின் வேண்டுகோளை ஏற்று, உங்களை சிறைச்சாலையிலிருந்து விடுவிப்பான், இது உண்மை.

**பெ³ச்சபே³ட³வெ அம்ம அச்யுதனு நின்ன மன**
**தி³ச்செய ஸலிஸித³ரெ மெச்சபே³ட³வெ நின்னனு**

அவனை பாராட்டக் கூடாதா அம்மா, அச்யுதன் உன் மனதின் ஆசையை நிறைவேற்றினால், அவனை பாராட்டக் கூடாதா அம்மா.

**வசன:**
**விவரிஸி ஹேளுவனு இன்னொந்து³ ஸொல்ல கேளெ**
**ப⁴வரோக³வைத்³யனு ப⁴க்தஸுரதே⁴னு**
**கௌரவர கொல்லுவ பாண்ட³வர ப்ரதிபாலிஸுவ**
**கரவா ராக்ஷஸர ஸம்ஹரிஸி பொரெவ ரக்ஷிஸுவனெ**
**கேளம்மய்ய**

விவரித்து மேலும் சொல்வேன், இதனை கவனத்துடன் கேளம்மா. சம்சார நோயினை தீர்க்கும் வைத்யன் அவன். பக்தர்களின் காமதேனு. கௌரவர்களை கொல்கிறான். பாண்டவர்களை காக்கிறான். அனைத்து அசுரர்களையும் கொன்று, தன் பக்தர்களை அவன் காக்கிறான் கேளம்மா.

**ஹீன கம்ஸனிட்ட ஸெரெ ஹிங்கு³வதெ³ நமகெ³**
**நூனவில்லதெ³ ஹேளெ நம்பி³ஸபே³ட³வென்ன**
**காணபா³ஹத³கெ கன்னடி³ யாகெ கொரவஞ்சி**
**ஏன மாடு³வெ நீனு நம்ம ப்ராரப்³த⁴கெ ||52**

கெட்டவனான கம்சன் வைத்த சிறைச்சாலை நமக்கு விடுபடுமா? (நீங்குமா?). எதையும் மறைக்காமல் சொல். எனக்கு அவநம்பிக்கை கொடுக்க வேண்டாம். பார்க்க முடியாதவனுக்கு கண்ணாடி எதற்கு?. ஹே குறத்தியே. என்னுடைய பிறவிப்பயனுக்கு (கடனுக்கு) நீ என்னதான் செய்வாய்?

**நாவு து³ஷ்க்ருதிக³ளு நிம்முத³ரதொ³ளகெ³ தானு**
**காவ கருணி க்ருஷ்ண ஜனிஸி தானாகி³ ப³ந்து³**
**ஸாவு தப்பிஸிகொண்டு³ ஸலஹுவனெ நம்மனு ||53**

(குறத்தி) நாம் மக்களால் திட்டப்படுபவர்கள் அம்மா. உங்களில்தான், அனைவரையும் காப்பவனான ஸ்ரீகிருஷ்ணன் வந்து பிறந்து, தானாக வந்து, சாவினை தப்பித்துக் கொண்டு, அனைவரையும் காப்பான் அம்மா.

**ஆஸெய கொட³தி³ரெ இத்த ஸ்தி²திய ஹேளெ**
**தோஷகாரிய பெ³ன்ன ப³ந்த³ மேலெ நமகி³ன்னு ஸா**
**ஹஸவல்லவெ ஆஸெயல்லிப்பதெ³ந்து³**
**ஸுஸித³ளு கண்ணீர ஸரஸிஜாம்ப³கி தானு ||54**

தேவகி: ஆசையை உருவாக்காதே குறத்தி. இருக்கும் உண்மை நிலையை மட்டும் சொல்வாயாக. பாவம் செய்துவிட்டு வந்திருப்பவளான எனக்கு, இனி என்ன இருக்கிறது?. எந்த ஆசையும் எனக்கு இல்லை. என்று சொல்லி, தேவகி கண்ணீர் விட்டு அழுதாள்.

**யாகெ சிந்திபெ யம்மய்ய த்ரிஜக³வனு**
**ஸாகு¹வ மக³னாகு³வ**
**நால்கு தி³வஸ தாளு நம்பெ³ன்ன மாத**
**வ்யாகுலகொ³ளபே³ட³வெ கேளம்மய்ய ||55**

குறத்தி: ஏன் கவலைப்படுகிறாய் அம்மா?. மூன்று உலகங்களையும் காப்பவனான மகன் உனக்கு பிறப்பான். நான்கு நாட்கள் காத்திருப்பாயாக. என் பேச்சினை நம்புவாயாக. கவலைப்படாதே. கேள் அம்மா.

**ஹுஸியனாடு³வளல்லவெ என்னய மாத**
**ஹஸனாகி³ லாலிஸம்ம**
**ஹரவிஷ்ணுஸுஜனரிகெ³ எல்லாவரிகு³**
**அரிகெயுள்ளவளு நானு ||56**

நான் பொய் பேசுபவள் அல்ல. என் பேச்சினை கவனமாக கேள் அம்மா. ஹர, விஷ்ணுவை வணங்கும் அனைத்து ஸஜ்ஜனர்களுக்கும் நம்பிக்கை கொடுப்பவள் நான்.

**த⁴ரெயொளு ஜீவராஶிக³ள ப்ராரப்³த⁴வ**
**ப³ரெவந்த²² கொரவி காணெ**
**ஹுஸியனாடு³வளல்லவெ என்னய மாத**
**ஹஸனாகி³ லாலிஸம்ம ||57**

பூமியில் இருக்கும் ஜீவராசிகளின் ப்ராரப்தத்தை எழுதுபவளான குறத்தி நான். பொய் பேசுபவள் அல்ல. என் பேச்சினை கவனமாக கேள் அம்மா.

**கொரவி கேளவ்வ என்னுத³ரத³ து³க்க²வ**
**அருஹுவெனெந்த³ரெ துதி³ மொத³லில்ல**
**மருளின கைகெ³ மாணிக்ய ஸிக்கித³ந்த³தி³**
**ஸெரெயமனெகெ³ ஶோபி⁴தவாதெ³ ||58**

ஹே குறத்தியே கேள். என் துக்கத்தை உன்னிடம் சொல்லலாம் என்றால், அதற்கு துவக்கமும் இல்லை. முடிவும்

இல்லை. ஒரு பைத்தியத்தின் கையில் மாணிக்கம் கிடைத்ததைப் போல, நான் சிறைச்சாலையில் அடைபட்டிருக்கிறேன்.

**வசன:**
**ஆ மாதிகெ³ கொரவி ஏனெந்த³ளு எந்த³ரெ**

இத்தகைய தேவகியின் பேச்சிற்கு, குறத்தி என்ன கூறுகிறாள் என்றால்:

**இத்த நாட³வளல்ல நானு ஸத்யலோகதி³ந்த³ ப³ந்தெ³**
**ஹொத்தித்³த³ ஹருஷனதா³ணெ புஸியல்லவம்ம**
**சித்தஜவத³னெ கேளு சிந்திஸபே³ட³வெ அம்ம**
**ஹொத்தித்³த³ ஹருஷனதா³ணெ புஸியல்லவம்ம ||59**

நான் இந்த நாட்டை சேர்ந்தவள் அல்ல அம்மா. ஸத்ய லோகத்திலிருந்து வந்திருக்கிறேன். நான் சூடியிருக்கும் மஞ்சளின் மேல் ஆணை. இது பொய் அல்ல. மனதில் பட்டதை பேசுபவளே கேள். கவலைப்படாதே அம்மா. நான் சூடியிருக்கும் மஞ்சளின் மேல் ஆணை. இது பொய் அல்ல.

**எந்தி³னவளல்ல நானு அனாதி³காலத³ கொரவி**
**ஹிந்த³ண ஸமஸ்யெவெல்ல ஒந்த³ லாலிஸெ**
**அந்து³ ப³லி சக்ரவர்த்தி பூ⁴மியனாளுவாக³ளெ**
**ப³ந்தி³து கேளெந்து³ ஆதகெ³ பேளி ப³ந்தெ³னெ**
**ஹிந்தெ³ ராவணேஶ்வரனு லங்கெயனாளுவாக³ளெ**
**ப³ந்தி³து கேளெந்து³ ஆதகெ³ பேளி ப³ந்தெ³னு ||60**

இன்றைய காலத்தை சேர்ந்தவள் அல்ல நான். குறத்தி. அனாதி காலத்திலிருந்து இருப்பவள். அன்றைய பிரச்னைகளில் ஒன்றினை சொல்கிறேன் கேள். அன்று ஒரு நாள், பலி சக்ரவர்த்தி இந்த பூமியை ஆளும்போது, உனக்கு ஒரு பிரச்னை வரப்போகிறது என்று அவனிடம் நான் சொன்னேன். அதைப் போலவே, ராவணேஸ்வரன், இலங்கையை

ஆளும்போதே, உனக்கு ஒரு பிரச்னை வரப்போகிறது என்று அவனிடம் நான் சொன்னேன்.

**தெரளுவதி³வனபா⁴க்³ய ஸ்ரீராமசந்த்³ரதி³ந்த³லெ**
**விரளவாகி³ ஒந்து³ மாத பேளி ப³ந்தெ³னெ**
**தெரளுவதி³வன ப்ராண ஸ்ரீக்ருஷ்ணதே³வரிந்த³லெ**
**விரளவாகி³ ஒந்து³ மாத பேளிதெ³னம்மா ||61**

(ராவணனிடம்) இவனுடைய பாக்கியம் சென்றுவிடும், ஸ்ரீராமசந்திரனாலேயே. என்று என் வாக்கினை அவனிடம் சொல்லிவிட்டு வந்தேன். அதே போல, (கம்சனின்) அவனுடைய ப்ராணனும் ஸ்ரீகிருஷ்ணனாலேயே சென்றுவிடும் இந்த வாக்கினை நான் இப்போது சொல்கிறேன் அம்மா.

**ஹொட்டெ ஹஸியிது கைமுட்டி அன்னவனிக்கெ**
**கட்டாணி முத்தெ காமன ஸம்பன்னெ**
**உட்ட ஸீரெய தாரெ ஊர உம்ப³ளிக³ளனு**
**பி³ட்டவளல்ல நினகெ³ மக³னாத³ மேலெ ||62**

வயிறு பசிக்கிறது. ஒரு கைப்பிடி அளவு அன்னம் கொடுப்பாயாக. மிகச் சிறந்தவளே. அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுபவளே. நீ அணிந்த பழைய புடவையை கொடுப்பாயாக. நான் சொன்னபடி, உனக்கு மகன் (கிருஷ்ணன்) பிறந்தபின், நீ கொடுக்கும் பரிசுகளை நானே வந்து வாங்கிக் கொள்வேன். அவற்றை விடமாட்டேன்.

**குடி³தெக³ங்க³ள நீரெ கும்ப⁴குச த³ வய்யாரெ**
**ப³ட³நடு³வின ரம்பெ⁴ புத்த²ளிய பொ³ம்பெ³**

குடிப்பதற்கு கொஞ்சம் தண்ணீர் கொடுப்பாயாக; கும்பத்தைப் போல குசத்தைக் கொண்டவளே. மெலிந்த இடையினை கொண்டவளே. சிற்பத்தைப் போல அழகாக இருப்பவளே.

**ஆக³தா³க³து³யெந்து³ அனுமானகொ³ள்ளதி³ரெ**
**ஆதீ³து அம்மய்ய அப⁴யவனு கொள்ளெ**
**ஸாகி³ஸி களுஹென்ன ஸவதி ஒள்ளெவளல்ல**
**ஹோகி³ ப³ருதேனெ நினகெ³ மெச்ச ஹாரெயிஸி ||63**

(நான் சொன்ன) இதெல்லாம் நடக்காது என்று நினைக்காதே. இது கண்டிப்பாக நடக்கும் என்று தைரியம் கொள்ளம்மா; என்னை நல்லபடியாக அனுப்பி வைப்பாயாக. என்னுடைய சக்களத்தி நல்லவளல்ல. போய் வருகிறேன். உனக்கு நல்லதே நடக்கட்டும்.

**ஹிதத³வர்யாரில்ல எனகி³ந்த ஹிரியரு**
**ஸதியரு கொரமகு³ண்டு**
**மதிவந்தெ நீ என்ன மன்னிஸி களுஹவ்வ பதியாக்ஞெக³ளுண்டு**
**ப³ஹள ஹொத்தாயிது பை³தா³ளு ஸவதியு**
**ஆளுவ கொரம ஹீன**
**பா³லன நெத்திகெ³ எண்ணயனெரெயவ்வ வீள்யவ கொடு³யெனகெ³ ||64**

என்னைவிட உனக்கு நலன்களை சொல்பவர்கள் வேறு யாரும் இல்லை. ஹே தேவகியே, அறிவாளியே, நீ என்னை உபசரித்து அனுப்பி வைப்பாயாக. எனக்கு என் கணவன் இட்ட வேலைகள் இருக்கின்றன. நான் இங்கு வந்து மிகவும் நேரம் ஆகிவிட்டது. என் சக்களத்தி என்னை திட்டுவாள். அழுவதான இந்த சிறுவனின் நெற்றிக்கு எண்ணையை இடுவாய் அம்மா. எனக்கு வெற்றிலையை கொடுப்பாயாக அம்மா.

**கொரவி நின்னமாது க²ரெயாத³ரெ என்ன ஸெரெமனெ**
**ஹிங்கி³த³³ரெ**
**ஹிரிதி³ன பா⁴புரி கொடு³வெனு நினகெ³யெந்து³**
**கரதி³ வீள்யவனித்தளு**
**மித்ரெயாடி³த³³ மாது ஸத்யவாத³ரெ என்ன கஷ்டக³ள் ஹிங்கி³த³³ரெ**
**முத்தின பா⁴புரி கொடு³வேனு நினகெ³யெந்து³**
**ஹஸ்ததி³ வீள்யவனித்தளு ||65**

தேவகி: ஹே குறத்தியே, உன்னுடைய பேச்சு உண்மையானால், எனக்கு சிறைச்சாலையிலிருந்து விடுதலை கிடைத்தால், அற்புதமான ஒரு கையில் அணியும் ஆபரணத்தை உனக்கு கொடுப்பேன் என்று அவளின் கையில் வெற்றிலையை கொடுத்தாள். நீ பேசிய பேச்சு உண்மையானால், என்னுடைய கஷ்டங்கள் விலகினால், முத்து ஆபரணத்தை நான் கொடுப்பேன் உனக்கு என்று அவளின் கையில் வெற்றிலையை கொடுத்தாள்.

**வசன:**

**ஈ மாது ஹுஸியல்ல ஸ்வாமிய கருணுண்டு**
**ஸீதாபதிய கருணுண்டு நின்ன**
**காமிதார்த்த²க³³லெல்ல கைகூடி³து கேளே அம்மய்ய**
**ஆடு³வ கூஸினாணெ பே³டு³வ ஜீவனாணெ**
**கூடி³த்³த³ ஸவதிய கண்ணாணெ கேளே அம்மய்ய**

என்னுடைய பேச்சு பொய் அல்ல. ஸ்வாமியின் கருணை உனக்கு இருக்கிறது. ஸீதாபதியின் கருணை உனக்கு இருக்கிறது. உன்னுடைய விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறுகிறது. கேட்பாயாக அம்மா. இந்த குழந்தையின் மேல் ஆணை. வேண்டிக் கொள்ளும் ஜீவனின் மேல் ஆணை. கூட இருக்கும் சக்களத்தியின் மேல் ஆணை. கேட்பாயாக அம்மா.

**க்ருஷ்ணவதரிஸுவ வ்ருத்தாந்தவனெல்ல தே³வகிகு³ரஹி**
**கொட்ட வீர்யவனு மன்னிஸி தெக்கொண்டு³**
**பட்டணவனு சரிஸுத நட³து³ ஶோப⁴னவெ ||66**

கிருஷ்ணன் அவதரிக்கவிருக்கும் கதைகள் அனைத்தையும் தேவகிக்கு சொல்லி, தேவகி கொடுத்த வெற்றிலையை ஏற்றுக் கொண்டு, அந்த குறத்தி, பட்டணத்தை நோக்கி நடந்தாள். மங்களம் உண்டாகட்டும்.

**கேரி கேரியு தப்பதெ³ ப³ரலு கம்ஸாஸுரன**
**வாலக³தி³ கண்டு³**
**புடு³மிகெ³ புட்டி நின்ன கொலுவரெந்து³**
**சாருத ஸத்யலோகக்கெ நட³து³ ஶோப⁴னவெ ||67**

கம்சாசுரனின் சபைக்கு, ஊர் மக்கள் அனைவரும் வருவதைக் கண்டு, உன் சகோதரிக்குப் பிறந்து உன்னை கொல்வார்கள் என்று சொல்லியவாறு, ஸத்யலோகத்திற்கு நடந்தாள் அந்த குறத்தி. மங்களம் உண்டாகட்டும்.

**பரமெட்டிய கொரவஞ்சிய பத³க³ள**
**ஹொளவனகட்டெ வெங்கடன**
**அரிதி³ஷ்டார்த்த²க³ளெல்லவனு த⁴ரெய மேலெ ப³ல்ல**
**வரு கேளி தித்³தி³ ஶோப⁴னவெ ஶோப⁴னவெ ||68**

கம்பீரமான கொரவஞ்சியின் பதங்களை, ஹொளவனகட்டெ வெங்கடனை, அறிந்து (இந்த க்ருதியை படித்தால்) இஷ்டார்த்தங்கள் அனைத்தையும், இந்த பூமியில் அறிந்தவர்கள் கேட்டு திருந்துங்கள் (பெறுங்கள்). அனைவருக்கும் மங்களங்கள் உண்டாகட்டும்.

***

# ஸீதா கல்யாண

பத்யங்கள் : 87

ஸ்ரீஸீதாராம கல்யாணம் நடந்து முடிந்த நான்கு நாட்களில் அவர்களுக்கு மஞ்சள் மற்றும் எண்ணையை தடவும் / பூசும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதன் விவரணையே இந்தப் பாடல்.

**இந்தப் பாடலின் கதைச் சுருக்கம் இவ்வாறு:**

* ஸ்ரீராமனுக்கு மஞ்சள் எண்ணையை பூசுவதற்காக, தாய் கௌஸல்யாதேவி, மூத்த சுமங்கலிகளை அழைத்தார்.
* தாயார் மூவரும் மற்றும் பெண்கள் அனைவரும் அலங்கரித்துக் கொள்கின்றனர்.
* கருட, வர்ண, ருத்ர, ப்ரம்ம, வாயு தேவர்களின் மனைவிகள் வருகின்றனர்.
* அப்போது அந்த நகரத்தில் நடைபெறும் பல்வேறு கலை, வீர நிகழ்ச்சிகளின் விவரணை சொல்லப்படுகிறது.
* அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த தசரதரை, ஜனக மஹாராஜா மரியாதை செய்து வரவேற்கிறார்.
* ஸ்ரீராமனை மணையில் வந்து அமருமாறு அனைவரும் வேண்டினர்.
* ஸீதைக்கு அலங்காரங்களை செய்கின்றனர்.
* ஸ்ரீராமனின் பல்வேறு நற்குணங்களை பட்டியலிட்டு அனைவரும் வேண்டிக் கொள்கின்றனர்.
* இப்படியாக ஸ்ரீராமன் வந்து ஸீதையின் அருகில் மணையில் அமர்ந்தான்.
* லாஜா ஹோமம் துவங்கியது.
* அனைத்து தேவதைகளும் மலர் தூவ, ஸ்ரீராமன், ஸீதையை கைபிடித்து எழுப்பினான்.
* ஸ்ரீராமனுக்கு மஞ்சள் பூசுமாறு, கௌஸல்யாதேவி, ஸீதாதேவியிடம் கூறுகிறாள்.
* ஸீதாதேவி, ஸ்ரீராமனின் தஸாவதாரங்களை சொல்லி புகழ்கிறாள்.

* ஸ்ரீராமனின் பாத மகிமைகளை / சிறப்புகளை சொல்லி புகழ்கிறாள்.
* இவ்வாறாக, ஸீதாதேவி ஸ்ரீராமனுக்கு தேகத்தில், கால்களில் மஞ்சள் பூசினாள்.
* அடுத்து, ஸ்ரீராமன் ஸீதாதேவிக்கு மஞ்சள் கொடுக்க வேண்டும் என்கின்றனர்.
* ஸ்ரீராமனும் ஸீதாதேவிக்கு மஞ்சள் பூசுகிறான்.
* ஸீதாதேவி ஸ்ரீராமனுக்கு த்ருஷ்டி சுற்றுகிறாள்.
* அடுத்து, ஒரு பெரிய தாம்பாளத்தில் மஞ்சள் நீரினை நிரப்பி, ஸ்ரீராமன் தலை மேல் ஊற்றினாள் ஸீதாதேவி.
* ஸ்ரீராமனும், அப்படியே ஸீதைக்கு செய்தான்.
* இருவரும் மணையில் அமர, தேவதைகள் அவர்களுக்கு ஆரத்தி எடுத்தனர்.
* இவ்வாறாக, இந்த நிகழ்ச்சி முடிய அனைவரும் ஸ்ரீஸீதா ஸமேத ஸ்ரீராமனை வணங்கியவாறு தங்கள் இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றனர்.

***

**பாக ஶேஷாத்³ரி ப்³ரம்ஹகெ ஶரணு**
**லோகநாயக ஹொளவனகட்டெ வெங்கட**
**நீ கருணிஸி ஸலஹுவுதெ³னகெ³ ஜய ஜய ||ப**

இந்த்ர, ருத்ர, பிரம்மனை நான் வணங்குகிறேன். உலக நாயகனான ஹொளவனகட்டெ வெங்கடேசனே, நீ எனக்கு மங்களங்களை அளித்து, அருள்வாயாக.

**மது³வெய நால்கு தி³வஸத³ல்லி**
**மது³வணிக³னு ராம ஜானகிகெ³**
**முத³³தி³ந்த³ அரிஷிணெண்ணெய மாடோ³ ஸம்ப்³ரம(த³³)**
**பத³³ன ஹொளுவெ ஸுஜனரு கேளி ஜய ஜய ||1**

திருமணம் ஆன நான்கு நாட்களில், மாப்பிள்ளையான ஸ்ரீராமனுக்கும், ஜானகிக்கும், மிக்க மகிழ்ச்சியுடன் மஞ்சள் மற்றும் எண்ணையை செய்யும் (தடவும்/பூசும்) நிகழ்ச்சி, இதன் விவரத்தை சொல்கிறேன், ஸஜ்ஜனர்கள் இதனை கேட்கவும். அனைவருக்கும் மங்களம் உண்டாகட்டும்.

**சித்தஜனக ஸ்ரீராமனிகெ³**
**அர்த்தியிந்த³ரிஷிண்ணெய மாட்³வ**
**மித்ரெ கௌஸல்யதே³வி கேரி கேரிய கு³ண்ட**
**முத்தெயிதே³ரனு கரெஸித³³ளு ஜய ஜய ||2**

சித்தத்தின் தலைவனான ஸ்ரீராமனுக்கு மிகவும் மகிழ்ச்சியுடம் மஞ்சள் எண்ணையை செய்வதற்காக, தாய் கௌஸல்யாதேவி, அக்கம்பக்கத்திலிருந்த மூத்த சுமங்கலியர்களை அழைத்தாள்.

**பீதா³ம்ப³ரது³டு³கெ³யனுட்டு**
**ஜ்யோதியந்த³³தி³ த²³ள²³ளிஸுதலி**
**ஜாதிமாணிகதா³ப⁴³ரணவிட்டு ராமர**
**மாதெயரெல்ல ஶ்ருங்கா³ரவாகி³ ஜய ஜய ||3**

பீதாம்பர ஆடைகளை உடுத்திக்கொண்டு, ஒளிரும் ஜோதியைப் போல ஒளிர்ந்தவாறு, நல்ல ஜாதியான (உயர்ந்த) மாணிக்க ஆபரணங்களை உடுத்தி, ஸ்ரீராமனின் தாயார் அனைவரும் அலங்கரித்துக் கொள்கின்றனர்.

**சீண சீணாம்ப³ரக³ளனுட்டு**
**வேணி கஸ்தூரிய பணெகி³ட்டு**
**ஜாணெயரெல்ல ஶ்ருங்கா³ரவாகி³ மல்லிகெ³**
**பா³ணன பட்டதா³னெக³ளந்தெ ஜய ஜய ||4**

தங்கம், தங்கமயமான ஆபரணங்களை உடுத்திக் கொண்டு, சிறந்ததான கஸ்தூரியை நெற்றியில் பூசிக்கொண்டு, பெண்கள் அனைவரும் அலங்கரித்துக்கொண்டு மல்லிகை சூடிய பட்டத்து யானைகளைப் போல அனைவரும் வந்தனர்.

**பொ³ம்ப³ண்ணத³ ஹளதி³ய கலெஸி**
**தும்பி³த³ ஹரிவாணதொ³ளகெ³**
**அம்பு³ஜனாப³கெ³ அரிஷிணெண்ணெய மாட³வ**
**ஸம்ப்³ரமகெ நடெ³தந்த³ராக³ ஜய ஜய ||5**

தங்கமயமான மஞ்சளை கரைத்து, ஒரு பெரிய தாம்பாளத்தில் நிரப்பி, நாபியில் தாமரையை வைத்திருப்பவனான ஸ்ரீராமனுக்கு மஞ்சள் கலந்த எண்ணையை பூசும் நிகழ்ச்சிக்கு அனைவரும் வந்தனர்.

**க³ருட³ன்வல்லப⁴ ஸௌந்த³ரதே³வி**
**வருணன்வல்லபெ⁴ காளக³தே³வி**
**ஹரன்வல்லபெ³ பாப(னா)ஶி க³ங்கெ³ ஸஹிதலி**
**அரிஷிணெண்ணெய மாட³ப³ந்த³ராக³ ஜய ஜய ||6**

கருடனின் மனைவி ஸௌபர்ணி, வருணனின் மனைவி காளகதேவி, ருத்ரதேவரின் மனைவி கங்கை ஆகியோருடன் அனைவரும் மஞ்சள் கலந்த எண்ணையை செய்வதற்காக வந்தனர்.

**ப்³ரம்ஹவல்லபெ³ ஶாரதா³தே³வி வா**
**யு ரமணி அஞ்ஜனாதே³வி**
**ஹருஷதி³ கௌஸல்யெ கைகெஸௌமித்ரெயரு**
**அரிஷிணெண்ணெய மாட³ப³ந்த³ராக³ ஜய ஜய ||7**

பிரம்மதேவரின் மனைவி ஷாரதாதேவி, வாயுதேவரின் மனைவி அஞ்ஜனாதேவி ஆகியோர் மிகவும் மகிழ்ச்சியுடன், கௌஸல்யா, கைகேயி, ஸுமித்திரை ஆகியோருடன் இந்த மஞ்சள் எண்ணையை செய்வதற்காக வந்தனர்.

**அல்லல்லி நடெ³வ நாடகஶாலெ**
**பி³ல்லாளு பெ³த்த காடனவரு**
**ஸொல்லுஸொல்லிகெ³ ஹிடி³ஹொன்னனு த்யாக³வ**
**செல்லுத த³ஶரத² நடெத³னாக³ ஜய ஜய ||8**

அந்த நகரில் சில இடங்களில் நாடகசாலை நடந்தன. வில் வீரர்கள் தங்களின் அம்பு விடும் திறமையை காட்டினர். இவர்கள் அனைவருக்கும், அவரவர்களின் திறமைக்கு ஏற்ப, கைப்பிடி பொன்னை பரிசாக கொடுத்தவாறு, தசரத மகாராஜா அந்த நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு வந்தார்.

**ஹொடெ³வ தம்ப³டெ பே⁴ரி நிஸ்ஸாளெ**
**பி³ட³தெ³ சேருவ ஹெக்³கா³ளெக³ளு**
**ஸிடி³லு க³ர்ஜிஸுவந்தெ பஞ்சமவாத்³யதி³**
**நடெ³த³ரு ஜனகராயன மனெகெ³ ஜய ஜய ||9**

தப்பட்டை, பேரி, நிஸ்ஸாள ஆகிய வாத்தியங்கள் விடாமல் ஒலித்தன. பலமாக வீசும் காற்று, இடி ஒலிப்பதைப் போல, பஞ்ச வாத்தியங்கள் முழங்க, உடன் நடந்தனர் அனைவரும் ஜனக ராயரின் அரண்மனைக்கு.

**குஸுமபா³ண மார்ப³லத³ந்தெ**
**ஹஸுரு ப¹ஜ்ஜெய பல்லக்கிக³ளு**
**முஸுகித³ பரிமளதொ³ள(ஸ)தகெ**

**தஶரத² ப³ந்த³னெந்த³ரெ ஜனரு ஜய ஜய ||10**

ஸ்ரீராமனின் படைகளைப்போல பெரும் எண்ணிக்கையில், கரும் பச்சை நிறத்தாலான பல்லக்குகள் வந்தன. நறுமணம் சூழ்வதான அந்த சூழ்நிலையில், தசரதன் வந்தான் என்றனர் மக்கள்.

**ப⁴ரதி³ந்த³லெத்³து³ ஜனகராய**
**த¹ரிஸி நிவாளிக³ளனு ஹாகி**
**ஹருஷதி³ கைலாக³வ கொட்டயோத்⁴யத³**
**அரஸ(ன) மன்னிஸி ஒட³கொ³ண்ட³னாக³ ஜய ஜய ||11**

உடனடியாக எழுந்து, ஜனக மகாராஜா, ஆரத்திகளை செய்து, மகிழ்ச்சியுடன், அயோத்யா அரசனுக்கு மரியாதைகளை வரவேற்புகளை செய்து, அவரை உள்ளே அழைத்துச் சென்றான்.

**பே³க³தி³ க³த்³து³கெ³யனு ஹாஸி**
**பே³க³ன உபசரிஸித³ ஜனக**
**பா⁴கீ³ரதி² பார்வதி க³ங்கெ³ ஸஹிதலி**
**நாக³பூ⁴ஷணனு குளிதனாக³ ஜய ஜய ||12**

வேகமாக ஆசனங்களை போட்டு, வேகமாக ஜனகர், தசரதனை உபசரித்தார். பாகீரதி, பார்வதி, கங்கை ஆகியோருடன் நாகபூஷணனான ருத்ரதேவரும் அப்போது அங்கு வந்து அமர்ந்திருந்தார்.

**ஸுத்தண ராயராயரிகெ³ல்ல**
**ரத்னகம்ப³ளிக³ள ஹரஹித³ரு**
**அர்த்தியிந்த³லி ஸுரரெல்லரு குளிதரு**
**விஸ்தரிஸித³ மண்டபதொ³ளகெ³ ஜய ஜய ||13**

சுற்றிலும் அமர்ந்திருந்த அரசர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் சால்வைகளை போர்த்தினர் மகிழ்ச்சியுடன்.

தேவதைகள் அனைவரும் வந்து அமர்ந்தனர். அனைவரையும் ஜனகர் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் அமர்த்தினார்.

**மணிமண்டபதொ³ளு ஹஸெஹாஸி கனக**
**மணிய தந்தி³ளுஹித³ ரு**
**தி³னகரகுலராம ஹஸெகே³ளெனுதலி**
**கு³ணாவளிக³(ள) கொண்டா³டி³த³ ரு ஜய ஜய ||14**

அந்த மணி மண்டபத்தில், மணை போட்டு, தங்கமணிகளை (தங்கமயமான பொருட்களை) கொண்டு வந்து இறக்கினர். சூர்யகுல ராமனை மணையில் வந்து அமருமாறு சொல்லி, அவனுடைய குணங்களை பட்டியலிட்டு பாடியவாறு அனைவரும் கொண்டாடினர்.

**பொக்களொளஜன பெத்தவனேளு**
**அக்ரூரஜன பெத்தவனேளு**
**முக்கண்ணன ரிபுப³லவ ஸம்ஹரிஸித³**
**ப⁴க்தவத்ஸல ஹஸெகே³ளெந்த³ ரு ஜய ஜய ||15**

ஹே தசரதனே : மக்களை காப்பதற்காக வந்த ராமனை பெற்றவனே எழுந்திரு. சிறந்த மக்களை பெற்றவனே எழுந்திரு. ஹே ராமனே: ருத்ரதேவரின் எதிரிகளை கொன்றவனே, பக்தவத்ஸலனே, எழுந்து மணையில் வந்து அமர்வாயாக.

**த³ஶரத²ராஜனந்த³னனேளு**
**அஸுரஸம்ஹார காரணனேளு**
**வஸுதெ⁴கொ³டெ³ய ராம ஹஸெகே³ளெனுதலி**
**ரிஷிக³ளெல்லரு ஶ்ருதிகரெத³ராக³ ஜய ஜய ||16**

தசரத அரசனின் மகனே ஸ்ரீராமனே எழுந்திரு. அசுரர்களை கொல்வதற்கு காரணமானவனே எழுந்திரு. உலக நாயகனே ஸ்ரீராமனே எழுந்து மணைக்கு வா என்றவாறு ரிஷிகள் அனைவரும் பாடி அழைக்கின்றனர்.

**ரிஷிவால்மீகி(ய)ரெல்லரு கூடி[3]**
**குஶலத[3] பாஸிங்க[3]வ பிடி[3]து[3]**
**அஸுராரிய மஸ்தககளவடி[3]ஸோரு**
**வஸுதே[3]வனாகெ[3]ந்து[3] ஹரஸுதலி ஜய ஜய ||17**

ரிஷி வால்மிகி மற்றும் அனைவரும் சேர்ந்து, அழகான பாஸிங்கவினை பிடித்து, அசுரர்களை கொல்பவரான ஸ்ரீராமனின் தலையில் அதனை கட்டுகின்றனர். ஸ்ரீராமனே, நீ வசுதேவனாக ஆகுக என்று போற்றியவாறு.

**தண்ட[3]தண்ட[3]த[3] ரத்ன அடஸிதா[3]க[3]**
**து[3]ண்டு[3]முத்தின மணி பி[3]கி[3]தி[3]தா[3]க[3]**
**தொண்டி[3]ல முத்தெயிதே[3]ரளவடி[3]ஸோரு கோ**
**த[3]ண்ட[3] பாணிஸதிஜானகிகெ[3] ஜய ஜய ||18**

குவியல் குவியலாக ரத்னங்கள் இருப்பதைப்போல, முத்துமணிகள் சேர்ந்ததைப் போல, மூத்த சுமங்கலிகள் அனைவரும் சேர்ந்து கோதண்டபாணியான பகவந்தனின் மனைவியான ஜானகிக்கு அலங்காரங்களை செய்தனர்.

**அரளுகங்க[3]ளிகெ[3] அஞ்ஜன ஹச்சி**
**பெ[3]ரளிகெ[3] முத்[3]ரெ உங்கு[3]ரவிட்டு**
**கொரளிகெ[3] ஏகாவளியனெ ஹாகோரு**
**தரளாக்ஷியரா ஜானகிகெ[3] ஜய ஜய ||19**

மலர்ந்த கண்களுக்கு மை தடவி, விரலில் முத்திரை மோதிரங்களை அணிவித்து, கழுத்தில் சரம் மாலைகளை அணிவித்து, ஜானகியை அலங்காரம் செய்தனர் அந்த சுமங்கலிகள்.

**பொ[3]ம்பெ[3]ய தொண்டி[3]ல முடிதி[3]ர்து[3]**
**கும்பி[4]ணிஸுதெ குள்ளிரலாகி[3]**
**அம்பு[4]ஜாம்ப[3]க[3] ரகு[4]ராமன ஹருஷதி[3]**
**ரம்பெ[3]யித்தெ[3]டெ[3]கெ[3] ப[3]ந்த[3]னெ நகு[3]த ஜய ஜய ||20**

அலங்காரமான பாஸிங்க போன்றதான ஒன்றை அணிந்திருந்த பூதேவியின் மகளான ஸீதாதேவி அமர்ந்திருக்க, தாமரைக் கண்ணனான ஸ்ரீராமன் மிகவும் மகிழ்ச்சியுடன், இந்த அழகி இருந்த இடத்திற்கு வந்தான் புன்னகைத்தவாறு.

**ப³ந்த³னெ பா⁴க்³யலக்ஷ்மீரமண**
**ப³ந்த³னெ ப⁴க்தவத்ஸல ஸ்வாமி**
**ப³ந்த³னெ ஜானகியடெ³ ராமனு தா**
**ப³ந்த³னெ மணிமண்டபதெ³ஸெகெ³ ஜய ஜய ||21**

பாக்யலக்ஷ்மியின் ரமணன் வந்தான். பக்தவத்ஸல ஸ்வாமி வந்தான். ஸ்ரீராமன் ஜானகியிடம் வந்தான். தான் மணிமண்டபம் இருக்கும் திசை நோக்கி வந்தான்.

**நிர்ஜரனரனாக³ ஸ்தோத்ர ப³ந்த³**
**ஸஜ்ஜனஸந்தாபதூ³ர ப³ந்த³**
**தூ⁴ர்ஜடி ஜபிஸுவ நாமவிக³ரஹ ப³ந்த³**
**வஜ்ரமாணிகத் ஹஸெயித்தெ³டெ³கெ³ ஜய ஜய ||22**

அழிவில்லாதவன், மக்கள் தேவர்கள் என அனைவரும் போற்றுபவன் வந்தான். ஸஜ்ஜனர்களின் கஷ்டங்களை விலக்குபவன் வந்தான். தூர்ஜடியான ருத்ரதேவர் எப்போதும் ஜபிக்கும் நாமத்தை கொண்டவனான ஸ்ரீராமன் வந்தான். வஜ்ர, மாணிக்க ஆகியவற்றால் இழைக்கப்பட்ட மண்டபம் இருக்கும் இடத்திற்கு வந்தான்.

**கௌஸல்யஸுத குமார ப³ந்த³**
**ஹம்ஸவாஹனபித ராம ப³ந்த³**
**கம்ஸாரி து³க்க²தி³ (நாஶ) ரவிகுல**
**வம்ஶோத்³தா⁴ரக ப³ந்த³னாக³ ஜய ஜய ||23**

கௌஸல்யனின் மகனான ஸ்ரீராமன் வந்தான். ஹம்ஸ வாகனான பிரம்மனின் தந்தை ஸ்ரீராமன் வந்தான். கம்சனின் எதிரிகளின் துக்கங்களை அழிப்பவனான ஸ்ரீராமன் வந்தான்.

சூர்யகுலத்தின் வம்சத்தை உத்தாரம் செய்பவன் அங்கு வந்தான்.

**ப⁴க்தவத்ஸல ராக⁴வ ப³ந்த³**
**முக்திதா³யக ஸ்ரீராம ப³ந்த³**
**அர்க்கனு ஶதகோடிதேஜனு ஜக³கதி**
**ஶக்த தா ப³ந்த³னெந்த³வெ கஹளெ ஜய ஜய ||24**

பக்தவத்ஸலனான ராகவன் வந்தான். முக்தியை கொடுப்பவனான ஸ்ரீராமன் வந்தான். நூறு கோடி சூரியர்களின் ஒளியைக் கொண்டவன், உலகிற்கு அதிகமான சக்தியை கொடுப்பவன் அவன் வந்தான் என்று கஹளை வாத்தியம் ஒலித்தது.

**ஸிந்து⁴ப³ந்த⁴ன ராக⁴வ ப³ந்த³ பு**
**ரந்தரவரத³ ஸ்ரீராம ப³ந்த³**
**இந்து³வத³னெபதி ராம ப³ந்த³னு ராம**
**சந்தி³ர தா ப³ந்த³னெந்த³வெ கஹளெ ஜய ஜய ||25**

கடலில் பாலம் கட்டிய ராகவன் வந்தான். புரந்தரவரதனான (இந்த்ர, ருத்ர) ஸ்ரீராமன் வந்தான். இந்துவதனையான ஸீதையின் கணவன் ராமன் வந்தான். ஸ்ரீராமசந்திரன் தான் அங்கு வந்தான் என்று கஹளை வாத்தியம் ஒலித்தது.

**யக்ஷரக்ஷக ராக⁴வ ப³ந்த³**
**யக்ஞஶிக்ஷாமித்ர ராம ப³ந்த³**
**ஸுக்³ரீவ ரக்ஷக காரண ப³ந்த³ லக்ஷ்மண**
**ணாக்³ரஜ ப³ந்த³னெந்த³வெ கஹளெ ஜய ஜய ||26**

யக்ஞங்களை காத்தவனான ராகவன் வந்தான். யக்ஞங்களை செய்பவர்களின் நண்பனான ஸ்ரீராமன் வந்தான். சுக்ரீவனின் ரக்ஷகனான ஸ்ரீராமன் வந்தான். லக்ஷ்மணனின் அண்ணன் ஸ்ரீராமன் வந்தான் என்று கஹளை வாத்தியம் ஒலித்தது.

**யந்த்ரவாஹக ராக[4]வ ப[3]ந்த[3]**
**மந்த்ரமூருதி ராம ப[3]ந்த[3]**
**காந்தெ ஸ்ரீ ஜானகிரமண ப[3]ந்த[3]னு ராம**
**தந்த்ரி தா ப[3]ந்த[3]னெந்த[3]வெ கஹளெ ஜய ஜய ||27**

(பக்தர்களின் பக்திக்கு) கட்டுப்படுபவனான ராகவன் வந்தான். மந்த்ரமூர்த்தியான ஸ்ரீராமன் வந்தான். ஸ்ரீஜானகிரமணனான ராமன் வந்தான். வேத நாயகனான ஸ்ரீராமன் வந்தான் என்று கஹளை வாத்தியம் ஒலித்தது.

**தூ[3]ஷணக[1]ஹரண ஸ்ரீராம ப[3]ந்த[3] வி**
**பீ[4]ஷணவரத ராக[4]வ ப[3]ந்த[3]**
**பா[4]ஷெ பாலிப ராமசந்த்ர ப[3]ந்த[3]னு ஜக[3]**
**தீ[3]ஶ தா ப[3]ந்த[3]னெந்த[3]வெ கஹளெ ஜய ஜய ||28**

தூஷிப்பவர்களை அழிப்பவனான ஸ்ரீராமன் வந்தான். விபீஷணனை காத்தவனான ராகவன் வந்தான். தான் கொடுத்த வாக்கினை காப்பவனான ராமசந்திரன் வந்தான். உலகத்தின் தலைவனான ஸ்ரீராமன் வந்தான் என்று கஹளை வாத்தியம் ஒலித்தது.

**தாடகப்ராணாபஹார ப[3]ந்த[3]**
**ஜடாயுமுக்திகாரண ப[3]ந்த[3]**
**(தாடங்க) த[4]ர நாராயண கவிகுல**
**கோடி தா ப[3]ந்த[3]னெந்த[3]வெ கஹளெ ஜய ஜய ||29**

தாடகியை கொன்றவனான ஸ்ரீராமன் வந்தான். ஜடாயுவின் முக்திக்கு காரணமான ஸ்ரீராமன் வந்தான். குண்டலங்களை தரித்த நாராயணன் வந்தான். சூர்யகுல நாயகனான ஸ்ரீராமன் வந்தான் என்று கஹளை வாத்தியம் ஒலித்தது.

**வீர விக்ரம ராக[4]வ ப[3]ந்த[3]**
**மாரிச மர்தன ராம ப[3]ந்த[3]**
**நாரி ஸ்ரீ ஜானகிரமண ப[3]ந்த[3]னு**

**ஹரி ராம தா ப³ந்த³னெந்த³வெ கஹளெ ஜய ஜய ||30**

வீரனான, வெற்றியாளனான ராகவன் வந்தான். மாரீசனை கொன்றவனான ராமன் வந்தான். பெண்ணான ஜானகியின் ரமணன் வந்தான். ஹரியான ஸ்ரீராமன் தான் வந்தான் என்று கஹளை வாத்தியம் ஒலித்தது.

**தே³வகுமார ராக⁴வ ப³ந்த³**
**தே³வர தே³வனு ராம ப³ந்த³**
**பா⁴வெ ஸ்ரீ ஜானகிரமண ப³ந்த³னு**
**ராமசந்த்ர தா ப³ந்த³னெந்த³வெ கஹளெ ஜய ஜய ||31**

தேவகுமாரனான ராகவன் வந்தான். தேவர்களின் தேவனான ஸ்ரீராமன் வந்தன். ஜானகியின் ரமணன் வந்தான். ராமசந்திரன் தான் வந்தான் என்று கஹளை வாத்தியம் ஒலித்தது.

**நிருபமசரித ராக⁴வ ப³ந்த³**
**து³ரிதத³ல்லண ராமதே³வ ப³ந்த³**
**ப⁴ரதஶத்ருக்⁴னர ஸஹோதரரோத்⁴யத³**
**ஸுரபதி ப³ந்த³னெந்தவெ கஹளெ ஜய ஜய ||32**

அற்புதமான சரித்திரங்களை கொண்டவனான ராகவன் வந்தான். கஷ்டங்களை போக்குபவனான ராமதேவன் வந்தான். பரத, ஷத்ருக்னர்களின் சகோதரர், அயோத்யாவின் தலைவன் வந்தான் என்று கஹளை வாத்தியம் ஒலித்தது.

**ஹேமகசித ரத்ன பீட²த³லி**
**பூ⁴மிஜெ ஸஹித குளித ராம**
**வாம பா³க³தி³ ஒப்பிர்த³ளு ஜானகி**
**ஆ மஹாஸபெ⁴யனு பெ³ளகு³தலி ஜய ஜய ||33**

தங்கமயமான ரத்ன பீடத்தில், தன் மனைவியான பூமியின் மகளான ஸீதையுடன் ராமன் அமர்ந்தான். அவனுடைய இடது புறத்தில் அமர்ந்திருந்தாள் ஸீதை. இவர்கள் அந்த சபையினை ஒளிர்விப்பதாக அமர்ந்திருந்தனர்.

**குந்த³ண ரத்னத³ட்³டி³கெ³யொளகெ³**
**ஹொந்தி³ஸி நவரத்ன இருவந்தெ**
**இந்து³வத³னெ ஜானகி ஹருஷதி³ ராம**
**சந்த்³ரன மத்⁴யதொ³ளொப்பித³ளு ஜய ஜய ||34**

முத்துக்கள் பதிக்கப்பட்ட ரத்ன அட்டிகைகளை சுற்றி, நவரத்தினங்கள் இருப்பதைப் போல, ஒளிபொருந்திய முகத்தைக் கொண்டவளான ஜானகி, மகிழ்ச்சியுடன் ராமசந்திரனின் அருகில் அமர்ந்திருந்தாள்.

**ஹேமத்³ ஹரிவாணதொ³ளக்³னியனு**
**காமினியரு தந்தி³ளுஹித³ரு**
**ராம மன்னிஸி உடு³கோ³ரெயித்து அவரிகெ³**
**ஹேமார்ச்சனெக³ள தொட³கி³த³னு ஜய ஜய ||35**

தங்கமயமான தாம்பாளத்தில் பெண்கள் அக்னியை கொண்டு வந்து வைத்தனர். ஸ்ரீராமன் அவர்களை உபசரித்து பரிசுகளை அளித்து, பின் அர்ச்சனைகளை தொடங்கினான்.

**லாஜதொண்டி³ (தண்டு³)ல ஆஹுதிகொட்டு**
**பூஜிஸித³னெ விக்னேஶ்வரன**
**ராஜவத³னெய ஒட³கொ³ண்டு³ ராக⁴வ**
**பூஜிஸித³னெ ரிஷிமுனிவரர ஜய ஜய ||36**

லாஜா ஹோமத்திற்காக ஆஹுதிகளை கொடுத்து, விக்னேஸ்வரனை பூஜித்தான். ஸீதையுடன் கூடி ராகவன் ரிஷி முனிவர்களை பூஜித்தான்.

**இந்த்³ராதி³ முனிக³ளு கைஹொடெ³து³**
**சந்த்³ர ஸூர்யரு உகே⁴உகே⁴யனலு**
**மந்தா³ர மல்லிகெ³ மளெக³ள ஹரெத³ரு**
**அந்த³தி³ ஸுரஜனரெல்லராக³ ஜய ஜய ||37**

இந்த்ராதி முனிவர்கள் கை தட்டி, சந்த்ர சூரியர்கள் வெற்றி வெற்றி என கூவ, அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் ஸஜ்ஜனர்களும் மந்தார மல்லிகை மலர்களை தூவினர்.

**அரளுவ கெந்தா³வரெ குஸும**
**பரிமள ஸுரம்ய கண்கெ³ஸெயெ**
**எரகு³வ மரிதும்பிகளந்தெ ராக⁴வ**
**கரக³ள பிடிதெ³த்தித³ ஸதிய ஜய ஜய ||38**

மலர்வதான சிவந்த தாமரையின் நறுமணம் மிகவும் அழகாக வந்து அனைவரையும் மயக்க, பறக்கும் சிறு தும்பிகளைப் போல, ராகவன் தன் மனைவியை கைகளை பிடித்து தூக்கி எழுப்பினான்.

**இளெய ஜக³ங்க³ளனுத³ரத³லி**
**அளவடி³ஸித³ மஹாத்மகனு**
**இளெய மக³ளனு எத்தலாரதெ³ ராம**
**ப³ளித³னெந்து³ நக்கரு ஜனரு ஜய ஜய ||39**

உலகினை தன் வயிற்றில் சுமந்த மஹாத்மன். அந்த உலகின் (பூமியின்) மகளை தூக்கி எழுப்ப முடியாமல் கஷ்டப்படுகிறான் என்று அங்கிருந்த மக்கள் சிரித்தனர்.

**பாத³ எச்சரிகெ பராகு ஸ்வாமி**
**பாத³ எச்சரிகெ பராகு தே³வ**
**பாத³ எச்சரிகெ ஸீதாபதி ராமனெ**
**பாத³ எச்சரிகெ பாத³பத³ன ஜய ஜய ||40**

ஸ்வாமியின் பாதங்களை வணங்குங்கள். தேவனின் பாதங்களை வணங்குங்கள். ஸீதாபதி ஸ்ரீராமனின் பாதங்களை வணங்குங்கள். ஸ்ரீராமனின் பாதங்களை, அது காட்டும் நல்வழியை வணங்குங்கள்.

**சரண எச்சரிகெ பராகுதே³வ**
**சரண எச்சரிகெ பராகு ஸ்வாமி**
**சரண எச்சரிகெ ஜானகிபதி ராமனெ**
**சரண எச்சரிகெ க³ருடக³மன ஜய ஜய ||41**

ஸ்வாமியின் பாதங்களை வணங்குங்கள். தேவனின் பாதங்களை வணங்குங்கள். ஸீதாபதி ஸ்ரீராமனின் பாதங்களை வணங்குங்கள். கருடனில் செல்பவனான ஸ்ரீராமனின் பாதங்களை வணங்குங்கள்.

**தட்டெ பட்டலொளிர்த³ரிஷிணவ**
**பொட்டலி தெக³து³ கௌஸல்யதே³வி**
**ஸ்ருஷ்டிகொ³டெ³ய ஸ்ரீராமகெ³ தொடெ³யெந்து³**
**கொட்டளெ ஸிரிதே³வி கைலி ஜய ஜய ||42**

தட்டு, கிண்ணங்களில் இருந்த மஞ்சளை, விரலால் எடுத்து, கௌஸல்யாதேவி, ஸ்ருஷ்டிக்கு காரணமான ஸ்ரீராமனுக்கு பூசுவாயாக என்று ஸீதாதேவியின் கைகளில் கொடுத்தாள்.

**நளினனாப⁴னு ஸ்ரீ ராக⁴வன**
**இளெய மக³ளு ஜானகி தானு**
**கிளிநுடி³க³ள நுடி³ஸுவ ஸமயதி³**
**கு³ளுகு³ளிஸு(வ) க³லபெ⁴ய நிலிஸி ஜய ஜய ||43**

தாமரையை தன் வயிற்றில் வைத்திருப்பவனான ஸ்ரீராமனின், பூமியின் மகளான ஜானகிதேவி தான், இனிமையான பேச்சுகளை பேசும் சமயத்தில், படபடவென பேசும் உங்கள் சத்தத்தை நிறுத்தி (ஸ்ரீராமனை வணங்குங்கள்).

**கெ³ஜ்ஜெ காலந்து³கெ³ கி⁴லிரெனுதா**
**வஜ்ரமாணிகதோ³லெ பொளெயுதலி**
**ஹெஜ்ஜெயிந்த³ளுகெ நாசுத நிந்து பே³டி³த³³**
**ளஜனய்யன ஸிரிபத³னவனு ஜய ஜய ||44**

சலங்கை, கால் ஆபரணங்கள் சத்தம் செய்தவாறு, வஜ்ர, மாணிக்கங்களின் நகைகள் ஒளிர்ந்தவாறு, அடி மேல் அடி வைத்தவாறு, வெட்கப்பட்டவாறு நின்று அஜனின் தந்தையான ஸ்ரீராமனை வேண்டினாள்.

**அச்யுதானந்த[3] ஸ்ரீ ஹரி ராம**
**ரஜ்ஜெகி[3]க்கித[3]லென்னலி பே[3]ட[3]**
**ஹெச்சின தமனெம்ப[3] தை[3]த்யன கெ[3]லிதந்த[3]**
**மத்ஸ்யரூபத[3] முக[2] தாரெந்த[3]ரு ஜய ஜய ||45**

அச்யுதானந்த ஸ்ரீஹரி ராமனே, என்னிடம் எதையும் மறைக்காதே. முன்னர், தமஸ்ஸை சேர்ந்த தைத்யனை வென்றவனான மத்ஸ்ய ரூபத்தினாலான உன் முகத்தை கொண்டு வந்து காட்டு என்றாள் ஸீதை.

**நிர்மளாத்மக நித்ய ராம நிம்ம**
**பூர்வவனெத்தித[3]லென்ன பே[3]ட[3]**
**கூர்பு[1]பகாரதி[3] ஸுரரிகெ[3] அம்ருதவ**
**வர்மதி[3]ம் தந்த[3] முக[2] தாரெந்த[3]ரு ஜய ஜய ||46**

நிர்மளாத்மகனே, நித்யனே. ராமனே, உன்னுடைய முன் அவதாரங்களை சொல்கிறேன் என்று என்னை சொல்லாதே. கூர்ம ரூபத்தினை எடுத்து, சுரர்களை அமிர்தம் எடுக்க உதவி செய்த உன்னுடைய முகத்தை கொண்டு வந்து காட்டு என்றாள் ஸீதை.

**ஸர்வதே[3]வோத்தம ராம நிம்ம**
**பூர்வவனெத்தித[3]லென்ன பே[3]ட[3]**
**உர்விய கத்[3]த[3] (தை[3]த்ய)னஸு கெ[3]லிதந்த[3]**
**தே[3]வ நிம்மய முக[2] தாரெந்த[3]ரு ஜய ஜய ||47**

ஸர்வதேவோத்தமனே ஸ்ரீராமனே. உன்னுடைய முன் அவதாரங்களைப் பற்றி சொல்கிறேன் என்று என்னை சொல்லாதே. பூமியை திருடிய தைத்யனை வென்றவனான

தேவனே (வராகனே) உன்னுடைய அந்த முகத்தை கொண்டு வந்து எனக்கு காட்டு என்றாள் ஸீதை.

**ஹக³லு இருளு நிம்ம த்⁴யானதொ³ளு**
**மகு³வு ஸ்மரிஸெ நீவு மருளாகி³**
**ஜக³வரியலு கம்பதி³ ப³ந்த³ மானஸ**
**ம்ருக³த³ முக²வனொம்மெ தாரெந்த³ளு ஜய ஜய ||48**

இரவும் பகலுமாக உன்னுடைய தியானத்திலேயே குழந்தை பிரகலாதன் உன்னை வணங்க, நீங்கள் கருணை கொண்டு, உலகம் அறியுமாறு, கம்பத்திலிருந்து வந்த அந்த சிம்ம மிருகத்தின் முகத்தை ஒரு முறை கொண்டு வந்து எனக்குக் காட்டு என்றாள் ஸீதை.

**மங்க³ளாத்மக நித்ய ராம நிம்ம தி³**
**வ்யங்க³ள மரெஸி குபு³ஜனாகி³**
**பங்கனாமவ ஸிரினொஸலிகெ³ த⁴ரிஸித³**
**ப³ங்கா³ரத³ முக² தாரெந்த³ளு ஜய ஜய ||49**

மங்களாத்மகனே, நித்ய ராமனே. உங்களுடைய ரூபத்தை மறைத்து, வாமனனாக, நாமங்களை தரித்து வந்த உன்னுடைய தங்கமயமான முகத்தை கொண்டு வந்து எனக்கு காட்டு என்றாள் ஸீதை.

**தந்தெ³ய மாதனு கேளுதலி**
**கொந்தெ³ தாயனு பா⁴ர்க³வனாகி³**
**நிந்து³ கோட³லியனு பிடி³து³ சரிஸுவ**
**ப³ங்கா³ரத³ முக² தாரெந்த³ளு ஜய ஜய ||50**

தந்தையின் பேச்சை கேட்டவாறு, பார்க்கவனாக வந்த நீ, தாயினை கொன்றாய். பின்பு, கோடாலியுடன் சுற்றிவரும் உன்னுடைய தங்கமயமான முகத்தை கொண்டு வந்து எனக்குக் காட்டு என்றாள் ஸீதை.

**நகெ³நுடி³ மாதனாட³லு இஷ்டு**
**து³கு³ட³வ்யாதகெ தே³வோத்தமனெ**
**ஜக³வனெல்லவ நிம்ம ஹ்ருத³யதொ³ளிம்பி³ட்ட**
**ஸுகு³ண ஸ்ரீராம முக² தாரெந்த³ஸு ஜய ஜய ||51**

புன்னகைத்தவாறு சிரிப்பாயாக, இவ்வளவு கவலை எதற்கு? தேவோத்தமனே உலங்கள் அனைத்தையும் உங்களின் இதயத்தில் வைத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீராமனே உங்கள் முகத்தை எனக்குக் காட்டுவாயாக என்றாள் ஸீதை.

**நீலவர்ணனெ நித்யகல்யாணனெ**
**பா³லபா⁴ஸ்கர அனந்ததேஜ**
**தோளிகெ³ ஸாஸிர கோ³பியராளித³**
**லோலக்ருஷ்ணனெ முக² தாரெந்த³ஸு ஜய ஜய ||52**

நீல வர்ணனே, நித்ய கல்யாணனே, உதயசூரியனே. தேஜஸ் கொண்டவனே. ஆயிரக்கணக்கான கோபிகளுடன் விளையாடிய கிருஷ்ணனே, உன்னுடைய முகத்தை எனக்குக் காட்டுவாயாக என்றாள் ஸீதை.

**ஸுந்த³ர ரூபினிந்த³லி ப³ந்து³**
**கந்த³ர்ப்பன கேளிகொ³ளிகா³கி³**
**இந்து³முகி²யர வ்ரதக³ளனளித³ ஆ**
**நந்த³ முக²னொம்மெ தாரெந்த³ஸு ஜய ஜய ||53**

மிகவும் அழகான ரூபத்தினால் வந்து, மன்மதனைப் போல இருந்து, பெண்கள் அனைவரின் பதிவிரதத்தினை பங்கம் செய்து இருந்தவனான பௌத்தனே உன்னுடைய முகத்தை ஒரு முறை கொண்டு வந்து எனக்கு காட்டுவாயாக என்றாள் ஸீதை.

**காயஜகோடி லாவண்யரூப**
**ஹயவாஹன மூர்லோகதொ³டெ³ய**
**ராய ராக⁴வ ராஜீவலோசன என்ன**

**ஜீய பாலிஸி முக[2] தாரெந்த[3]ஞ ஜய ஜய ||54**

பற்பல ரூபங்களை கொண்டவனே, அழகான ரூபனே, குதிரையில் ஏறி வந்தவனே, மூன்று உலகங்களையும் வென்றவனே, ராம ராகவ ராஜீவ லோசனனே என் தலைவனே. உன்னுடைய கல்கி ரூபத்து முகத்தினை கொண்டு வந்து எனக்கு காட்டவும் என்றாள் ஸீதை.

**ஸுகு[3]ணெ ஆடி[3]த[3] நுடிகேளி மெச்சி**
**மிகெ[3] ஹருஷதி[3] ஸ்ரீ ராக[4]வனு**
**முகு[3]ளு நகெ[3]யனு நகு[3]தலி**
**நெக[3]ஹித[3] முக[2]பத்[3]மவ ஸதி ஜானகிகெ[3] ஜய ஜய ||55**

இவ்வாறு ஸீதை பேசிய பேச்சினைக் கேட்டு மெச்சி, மிகவும் மகிழ்ச்சியுடன் ஸ்ரீராகவன் புன்னகையுடன் சிரித்தவாறு தன்னுடைய முகத்தை ஸீதைக்கு காட்டினான்.

**நீடி[3]த[3] நிடி[3] தோள்க[3]ள ராம**
**தீடி[3]த[3]ளரிஷிணவனு ஸீதெ**
**காட[3]தெ[3] சரணவ கொட[3]பே[3]கெனுதலி**
**பே[3]டி[3]கொண்ட[3]ளு தன்ன ஸதியொட[3]னெ ஜய ஜய ||56**

தன்னுடைய நீண்ட தோள்களை காட்டினான். அதில் ஸீதை மஞ்சளை தடவினாள். தாமதிக்காமல் கால்களை காட்ட வேண்டும் என்று, ஸீதை தன் கணவனிடம் கேட்டுக் கொண்டாள்.

**கல்லோளு காந்தெ(ய) மாடி[3]த [3]சரண**
**ப[3]ல்லித[3] ப[3]லிய ஒத்தித[3] பாத[3]**
**மல்லர மர்த்[3]தி[3]ஸி மத[3]னாரிய ப[3]ல**
**அல்லி முரித[3] பாத[3] தாரெந்த[3]ஞ ஜய ஜய ||57**

கல்லை பெண்ணாக்கிய அந்த பாதம்; வல்லவனான பலியை மிதித்த அந்த பாதம்; மல்லர்களை மிதித்து அவர்களின்

வீரத்தை அங்கு வீழ்த்திய பாதம் அதனை காட்டுங்கள் என்றாள் ஸீதை.

**தாவரெ எஸள போலுவ சரண**
**ஹாவின ஹெட³யலாடு³வ சரண**
**ஆவாக³லு ராமனு ப⁴க்தர**
**ஜீவ சரணவ தாரெந்த³ளு ஜய ஜய ||58**

தாமரை இதழ்களைப் போன்ற பாதம்; பாம்பின் தலைமேல் ஆடிய பாதம்; எப்போதும் ஸ்ரீராமனின் பக்தர்களின் ஜீவ சரணத்தினை காட்டுங்கள் என்றாள் ஸீதை.

**ஶங்க²சக்ரத³ ரேகி²ன சரண**
**குங்குமராக³ரஞ்ஜித சரண**
**ஶங்கெயில்லதெ³ ஶகடன மர்த்தி³ஸித³ மீ**
**நாங்கன சரணவ தாரெந்த³ளு ஜய ஜய ||59**

சங்கு சக்ர ரேகை கொண்ட பாதம்; குங்குமம் போன்று சிவந்திருக்கும் பாதம்; எவ்வித தயக்கமும் இன்றி ஷகடாசுரனை கொன்ற பகவந்தனின் பாதத்தை காட்டுங்கள் என்றாள் ஸீதை

**பிடி³த³ரிஷிணவ ஜானகிதே³வி த**
**ந்னொடெ³யன முக² சரணகெ தொடெ³து³**
**தட³வு மாட³தெ³ ஸ்வாமி கோத³ண்ட³பாணிய நீவு**
**கொட³பே³கெந்த³ளு பதியொட³னெ ஜய ஜய ||60**

ஜானகிதேவி, மஞ்சளை எடுத்து, தன் தலைவனின் முகம், கால்களை துடைக்க வேண்டும், ஸ்வாமி, கோதண்டபாணியே, தடை செய்யாமல் உங்களுடைய கால்களை காட்ட வேண்டும் என்றாள் ஸீதை.

**முத்³து³ முக²த³ ஸ்ரீ ஜானகிகெ³**
**தித்³தி³ திலகவ நொஸலிகி³ட்டு**
**ஹொத்தித³ ஹொதி³கெய நிவாரிஸி குஶலதி³**

**ப⁴த்³ர க³ஜக³மனெயரெல்ல ஜய ஜய ||61**

அழகான முகம் கொண்ட ஸ்ரீஜானகிக்கு, அவளுடைய திலகத்தை திருத்தி, நெற்றியில் வைத்து, புடவைத் தலைப்பினை சரிப்படுத்தி, யானை போல கம்பீரமாக நடந்து வருபவளான ஸீதையை அலங்காரம் செய்தனர் அனைவரும்.

**ராமன சரணகெ ஸிரிதே³வி**
**ஹூவினக்ஷதெயிட்டெரகி³த³³ளு**
**ப்ரேமதி³ என்னனு அக³லதெ³ன்னுரதொ³ளு**
**ஸ்வாமியாகி³ரு எந்து³ ஹரஸித³³ளு ஜய ஜய ||62**

பூ, மந்த்ராக்ஷதைகளை வைத்து ஸ்ரீதேவி, ஸ்ரீராமனின் சரணத்தில் வணங்கினாள். மிகவும் அன்புடன், என்னைவிட விலகாமல், எனக்கு எப்போதும் ஸ்வாமியாக இரு என்று வேண்டிக் கொண்டாள் ஸீதாதேவி.

**ஹரிவாணதொ³ளிர்த்த³ரிஷிணவ**
**பெ³ரளலி தெகெ³து³ பார்வதிதே³வி**
**ஹருஷதி³ ராமன கையலி கொட்டளு**
**ஸிரிதே³விகெ³ நீனு தொடெ³யெனுத ஜய ஜய ||63**

மஞ்சளை ஒரு பெரிய தாம்பாளத்தில் வைத்தனர். அதனை விரலில் எடுத்து பார்வதிதேவி மிகவும் மகிழ்ச்சியுடன் ஸ்ரீராமனின் கையில் கொடுத்தார். நீ இதனை ஸ்ரீதேவிக்குக் கொடு என்றவாறு.

**ப³ல்லெவோ தே³வோத்தம நின்ன**
**புல்லலோசனெ ஜானகியொட³னெ**
**ஸல்லது³ ஸலிகெயு ராக⁴வனீ**
**நில்லபே³கெனுத பார்வதி நுடி³தோ³ரெ ஜய ஜய ||64**

(நாங்கள் இவ்வாறு கூறுகிறோம்) தேவோத்தமனே, உன்னுடைய, மீன் போன்ற கண்களைக் கொண்ட ஜானகிக்கு

சிறிது அன்பு காட்டவும். ராகவனே நீ நிற்க வேண்டும் என்றவாறு, பார்வதிதேவி கூறுகிறார்.

**எத்து நிந்த³னு அக³ஜெய நுடி³கெ³**
**ஹொத்தித³ பீதாம்ப³ரவ ராம**
**மத்⁴யதொ³ளவடி³ஸுத பிடி³த³னு**
**ஶுத்³த⁴ பதிவ்ரதெ ஜானகிய ஜய ஜய ||65**

பார்வதிதேவியின் பேச்சிற்கு ஸ்ரீராமன் எழுந்து நின்றான். ஸ்ரீராமன், தான் போர்த்திக் கொண்டிருந்த பீதாம்பரத்தை, சுத்தமான பதிவ்ரதையான ஸீதாதேவிக்கு நடுவில் பிடித்தான்.

**ஸருவ வேத³த³ தத்வத³ ஸாரெ**
**த⁴ரெஸுதெ ஜனகராயன தனுஜெ**
**அரஸி நின்னய முக²கமலத³ தாரெந்து³**
**அரிஷிணக³ள திகு³ரி ஸதிகெ³ ஜய ஜய ||66**

அனைத்து வேதங்களின் தத்வங்களின் ஸாரமானவளே, பூமியின் மகளே, ஜனகராஜனின் மகளே, அரசியே, உன்னுடைய முககமலத்தை காட்டுவாயாக என்று மஞ்சளை தன் மனைவிக்கு தடவுகிறான் ஸ்ரீராமன்.

**லோகதொ³ளகெ³ணெகா³ணெ நினகெ³ந்து³**
**ஏகபதிவ்ரதெ கைகொண்டெ³**
**நீ கருணிஸி முக²கமலவ தாரெந்து³**
**காகுத்ஸ்த²தி⁴ராம நுடி³ஸித³ ஸதிய ஜய ஜய ||67**

இந்த உலகில் உனக்கு இணையே நான் பார்க்கவில்லை. ஏகபதிவிரதத்தை நீ கைகொண்டிருக்கிறாய். நீ கருணையுடன், உன் முககமலத்தை காட்டுவாயாக என்று மிகவும் அன்புடன் ஸ்ரீராமன் கூறினான் மனைவியிடம்.

**பருஷத³ கணியெ புத்த²ளிகொ³ம்பெ³**
**ஸரஸஸத்கு³ணிக¹ன்னெ ஸமகா³த்ரெ**
**அரஸி நின்னய முக²கமலவ**

**தாரெந்து[3] அரிஷிணக[3]ள திகு[3]ரி[3]த ஸதிகெ[3] ஜய ஜய ||68**

கூர்மையாக பேசுபவளே, பொம்மை போல இருப்பவளே, நற்குணங்களை கொண்டவளே, அழகான தேகம் கொண்டவளே, அரசியே, உன்னுடைய முக கமலத்தை காட்டுவாயாக, என்று சொல்லியவாறு, ஸ்ரீராமன் ஸீதைக்கு மஞ்சள் பூசச் சென்றான்.

**ஸதியள முக[2] மைக[3]ரிஷிணவ**
**அதி ஹருஷதி[3] ராமனு திகு[3]ரி**
**க்ஷிதியொளு ராமன ஸதியாகி[3] ஜக[3]தொ[3]ளு**
**ஶ்ருதிவந்தளாகெ[3]ந்து[3] ஹரஸித[3]னு ஜய ஜய ||69**

மனைவியின் முகத்திற்கு, தேகத்திற்கு மஞ்சளை மிகவும் மகிழ்ச்சியுடன் ஸ்ரீராமன் பூசியவாறு, இந்த பூமியில் நீ ராமனின் மனைவியாகி, உலகில் அனைவராலும் போற்றப்படுபவளாக இரு என்று ஆசிர்வாதம் செய்தான்.

**கபட நாடக காருண்யஸிந்து[4]**
**ஸுவர்ண க[3]மன ஶேஷாதி[3]ப[3]ந்து[4] எ**
**ந்னபராத[4]வ க்ஷமிஸெந்து[3] எரகி[3]தொ[3] (த[3]ளு)**
**சபலாக்ஷி ரகு[4]பதிகெ[3] ஜய ஜய ||70**

அனைவரையும் மயக்குபவனே, கருணைக்கடலே, கருட வாகனனே, சேஷாதி தேவர்களின் நண்பனே, என்னுடைய தவறுகளை மன்னிப்பாயாக என்று வேண்டினாள் – படபடக்கும் கண்களைக் கொண்ட ஸீதாதேவி ஸ்ரீரகுபதியிடம்.

**ஜாரித[3] பா[3]ஸிங்க[3]வ பிடி[3]து[3]**
**ஸேரிஸி மஸ்தககளவடி[3]ஸி**
**நாரியரு குள்ளிரிஸோரு பே[3]க[3]தி[3]**
**வாரிஜாம்ப[3]க ஸ்ரீ ரகு[4]வன ஜய ஜய ||71**

அசைந்தாடிய பாஸிங்கத்தை பிடித்து சேர்த்து தலையில் கட்டி பெண்கள், ஸ்ரீராமனை வேகமாக அமரச் செய்தனர்.

**ஒந்து³ கையல்லி முத்தனெ பிடி³து³ ம**
**த்தொந்து³ கையல்லி ரத்னவ பிடி³து³**
**க³ந்த⁴ஸுக³ந்தி⁴ ஜானகி தே³வி ஹருஷதி³**
**சந்த³தி³ நிவாளிஸிதொ³ (த³ளு) பதிகெ³ ஜய ஜய ||72**

ஒரு கையில் முத்தினை பிடித்து, இன்னொரு கையில் ரத்னத்தை பிடித்து, நறுமணம் மிக்கவளான ஜானகி தேவி, மிகவும் மகிழ்ச்சியுடன் ஸ்ரீராமனுக்கு, த்ருஷ்டி சுற்றினாள்.

**ஸரிஸகலாக³ம ஸன்னுதனு ந**
**வரத்னவ கையலி பிடி³து³**
**யுவதி ஜானகிகெ³ நிவாளிய தெகெ³த³³னு**
**ரவிகுலோத்ப⁴வ ஸ்ரீ ராக⁴வனு ஜய ஜய ||73**

அனைத்து வேதங்களாலும் போற்றப்படுபவனான ஸ்ரீராமன், நவரத்தினங்களை கையில் பிடித்து, பெண்ணான ஜானகிக்கு த்ருஷ்டி எடுத்தான், ரவிகுலோத்பவனான ஸ்ரீராகவன்.

**ஒள்ளெய குங்குமதோ³குளிய**
**பெ³ள்ளிய ப³ட்டலொளகெ³ தும்பி³**
**வீள்யத³ எலெய தெகெ³து³ ஜானகிதே³வி**
**செள்ளுகு³ர்கோ³னெயிந்த³ சிம்மித³ளு ஜய ஜய ||74**

சிறந்ததான குங்குமம் மற்றும் தண்ணீர் கலந்த நீரினை, நல்ல வெள்ளி கிண்ணத்தில் நிரப்பி, வெற்றிலையை எடுத்து, ஜானகிதேவி, தன்னுடைய விரல் நக நுனியினால் அதனை கிள்ளி எறிந்தாள்.

**மங்க³ளாகா³த்ரெ ஸ்ரீ ஜானகியு ஆ**
**யங்க³தொ³ளோகு¹ளியனு தும்பி³**
**ரங்க³ராயன மண்டெ³ மேலெ தா செல்லித³ளு**
**ஶ்ருங்கா³ரனாப⁴ நாப⁴யெனுத ஜய ஜய ||75**

மங்கள ஸ்வரூபத்தைக் கொண்டவளான ஸ்ரீஜானகி, ஒரு பெரிய தாம்பாளத்தில் மஞ்சள் நீரினை நிரப்பி, ரங்கராயனின்

தலை மேல் தான் அதனை ஊற்றினாள், ஸ்ரீராம ஸ்ரீராம என்றவாறு.

**எஸெவ குங்குமதோ³குளியன்னு**
**மிஸுனிய பட்டலொளகெ³ தும்பி³**
**தஶரத²ராயன கையலி கொட்டரு**
**குஸுமக³ந்தி³கெ³ நீனு தொடெ³யெனுத ஜய ஜய ||76**

சிறந்ததான குங்குமம் கலந்த நீரினை, தங்கமயமான கிண்ணத்தில் நிரப்பி, தசரத ராமனின் கையில் கொடுத்தனர், ஸீதாதேவிக்கு நீ அதனை கொடு என்றவாறு.

**சென்னிக³ராம ஸந்தோஷதி³ந்த³**
**தன்ன வல்லபெ⁴ கொப்பிரிகெயனு**
**பின்னாணதி³ ஸடிலிஸி ஓகு³ளியன்னு**
**பெ³ன்னிகெ³ லேபிஸித³னெ ஸதிய ஜய ஜய ||77**

அழகான ஸ்ரீராமன் மிகவும் மகிழ்ச்சியுடன், தன் மனைவிக்கு, பெரிய பாத்திரத்தில் இருந்ததை, விளையாட்டாக கலந்து, அந்த மஞ்சள் தண்ணீரை ஸீதாதேவியின் முதுகில் தடவினான் ஸ்ரீராமன்.

**ஸம்பிகெ³ ஸுரகி³ ஶாவந்திகெ³ய**
**இம்பு புஷ்பங்க³ள முடி³து³**
**த³ம்பதிக³ளு ஹஸெமேலெ குள்ளிர்த³ரு**
**ஸம்பத்தின கஹளெ ஹிடித³வாக³ ஜய ஜய ||78**

நறுமணம் மிக்க சம்பிகை, நறுமணம் மிக்க சாமந்தி ஆகிய மலர்களை தொடுத்து தம்பதிகள் மணை மேல் அமர்ந்தனர். பலமாக கஹளை அப்போது ஒலித்தது.

**ஹொடெ³வ தம்ப³டெ பே⁴ரி நிஸ்ஸாளெ**
**ஸிடி³லு கத³டு³வந்தார்ப்ப⁴டதி³**
**பிடி³து³ தந்த³ரு ரிஷிஸதியரு**
**பாடு³த வைடூ³ர்யத³ ஆரதிக³ளனு ஜய ஜய ||79**

அதிர்வதான தம்பட்டை, பேரி, நிஸ்ஸாளெ, இடி மின்னல் தாக்கியதைப் போல ஒலித்தது. ரிஷிபத்னியர் பிடித்துக் கொண்டு வந்தனர், வைடூர்ய ஆரத்திகளை.

**லக்ஷ்மீகாந்த ஸ்ரீ ராக[4]வகெ[3]**
**முக்திதா[3]யகி ஸ்ரீ ஜானகிகெ[3]**
**ப[4]க்தர ஸலஹெந்து[3] பா[3]ள ஸந்தோஷதி[3]**
**அக்ஷதெயிட்டரெ ஜதெ[3]யரு ஜய ஜய ||80**

லக்ஷ்மிகாந்தனான ஸ்ரீராகவனுக்கு, முக்தியை கொடுப்பவளான ஸ்ரீஜானகிக்கு, பக்தர்களை காக்க வேண்டும் என்று மிகவும் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு அக்ஷதைகளை இட்டனர் சுமங்கலியர்கள்.

**அம்பு[3]ஜனாப[4] ஸ்ரீ ராக[4]வகெ[3]**
**கும்பி[3]ணிஸுதெ ஸ்ரீ ஜானகிகெ[3]**
**நம்பி[3]த[3] ப[4]க்தர ஸலஹெந்து[3] ஹரஸுத**
**தாம்பூ[3]ல இத்தரெ ஜதெ[3]யரு ஜய ஜய ||81**

தாமரையை வயிற்றில் கொண்ட ஸ்ரீராகவனுக்கு, பூமி புத்ரியான ஸ்ரீஜானகிக்கு, உங்களை நம்பிய பக்தர்களை காக்க வேண்டும் என்று வேண்டியவாறு, தாம்பூலத்தை கொடுத்தனர் சுமங்கலிகள்.

**நளினனாப[4]னு ஸ்ரீ ராக[4]வகெ[3]**
**இளெய மக[3]ளு ஜானகிதே[3]வி (கெ[3])**
**த[2]ள த[2]ளிஸுத ஆரதிக[3]ளனெ(த்தித[3])ரு**
**ஹொளெயுத ஜனகராயன ஸுதியரு || 82**

தாமரையை வயிற்றில் கொண்ட ஸ்ரீராகவனுக்கு, பூமி புத்ரியான ஸ்ரீஜானகிக்கு, பளபளக்கும் ஆரத்திகளை எடுத்தனர். ஒளிர்பவரான ஜனகராயரின் பெண்கள்.

**ஸுரபத்னியரெல்ல பாடு³தலி**
**பரிபரி ஆரதிக³ள பிடி³து³**
**ஹரஸி க்ருஷ்ணகெ³ ஹரஸுத யெ(த்தித³)ரு**
**தரளாக்ஷியரெல்ல பாடுத³லி ஜய ஜய ||83**

தேவதைகளின் மனைவிகள் பாடியவாறு, பற்பல விதமான ஆரத்திகளை பிடித்து எடுத்து, ஸ்ரீராமனுக்கு எடுத்தனர். படபடக்கும் கண்களைக் கொண்ட பெண்கள் அனைவரும் பாடினர்.

**ப³கெ³ப³கெ³ ரத்னதா³ரதிக³ளனு**
**ஜக³தோ³த்³தா⁴ரகெ³ எத்துதலி**
**உகே⁴ உகே⁴யெனுதலி ஸுமனஸரெல்லரு**
**மிகெ³ பூ¹மளெக³ள கரெத³ராக³ ஜய ஜய ||84**

பற்பல ரத்னங்களின் ஆரத்திகளை, உலகத்தை தன் வயிற்றில் வைத்துக் கொண்டவனுக்கு எடுத்தவாறு, வெற்றி வெற்றி என்று கூறியவாறு, தேவதைகள் அனைவரும் பூமழைகளை பொழிந்தனர்.

**ஸந்தததி³ந்த³ ப⁴க்தர மனத³**
**சிந்தெ பரிஹரிஸுவ ஸ்வாமி**
**யந்த்ரவாஹக ராம ஸலஹெந்து³ ஸுரஜன**
**மந்த்ராக்ஷதெக³ள ஸுரித³ரு ஜய ஜய ||85**

மிகவும் கருணையுடன், பக்தர்களின் மனதின் கவலைகளை பரிகரிக்கும் ஸ்வாமி, வேதங்கள் போற்றும் ஸ்ரீராமன், காக்க வேண்டும் என்று தேவதைகள் மந்த்ராக்ஷதைகளை தூவினர்.

**கமலஜஸுத ஸந்தோஷதி³ந்த³**
**நமோ நமோ நாராயணயெனுத**
**விமலகீ³தி³ வீணெய ஶ்ருதிகெ³ய்யுத**
**அமரநக³ரிகெ³ய்தி³த³னாக³ ஜய ஜய ||86**

கமலஜஸுதரான நாரதர், மிகவும் மகிழ்ச்சியுடன், நமோ நமோ நாராயணா என்றவாறு, மிகவும் இனிமையான பாடல்களை, வீணையை மீட்டியவாறு, புறப்பட்டு, இந்த்ர லோகத்திற்கு சென்றார்.

**துங்க[3]விக்ரம ராமஜானகியர**
**மங்க[3]ளுத்ஸவ(து[3]) ருட[1]ணைய பத[3]வ**
**ஸங்கீ[3]தது[3] ஹேளி கேளித[3] ஜனரிகெ[3] ஹொளவனகட்டெ**
**ரங்க[3]ய்யனொலிதி[3]ஹனு ஜய ஜய || 87**

அபாரமான வெற்றியாளரான ராமஜானகியரின் மங்கள உத்ஸவமான உருட்டாணியின் பதத்தினை, ஸங்கீத ரூபமாக கேட்கும், பாடும் மக்களுக்கு ஹொளவனகட்டெ ரங்கய்யன் அருள்வான்.

****

# உத்தாளிகன கதெ

## நடைபெறும் காலகட்டம்:

* ரகு வம்சம் இவ்வாறு இருக்கிறது. ரகு அரசன் -> அஜன் -> தசரதன் - ஸ்ரீராமசந்த்ர மூர்த்தி.
* இந்த வம்சத்தில் வரும் ரகுவின் மகளான & அஜனின் சகோதரியான சந்த்ராவதியை திருமணம் செய்து கொள்பவனே உத்தாளிக. இவர்களுக்கு பிறந்தவரே நாஷிகேதன்.

## கதைச் சுருக்கம்:

* உத்தாளிகன் பிறப்பு, அவனது பெற்றோர் இறத்தல்
* உத்தாளிகன் தவம் செய்ய புறப்படுதல்
* அயோத்தியைப் பற்றி வர்ணனை
* அரசன் - ரகு, அஜ, தசரதன், ராமன் - இதுவே பரம்பரை
* அரசனுக்கு சந்த்ராவதி பிறந்து வளர்கிறாள். (ரகுவின் மகள், அஜனின் சகோதரி).
* கௌஷிக முனிவர் யம லோகத்தில் கஷ்டப்படுபவர்களை பார்த்து பேசுகிறார்.
* அவர்களின் வாரிசான உத்தாளிகனிடம் வருகிறார், பேசுகிறார்.
* அவர் கூறியபடி, உத்தாளிகன் பிரம்மதேவரிடம் சென்று பேசுகிறார்.
* பிரம்மன் அவருக்கு திருமணம் செய்ய கூறுகிறார்.
* சந்திராவதி நதியில் ஸ்னானம் செய்ய புறப்படுகிறார்
* தந்தையிடம் அனுமதி பெறுகிறார்.
* சந்திராவதியின் அலங்கார வர்ணனைகள்.
* ஜலக்ரீடைக்கு உடன் வருபவர்களின் வர்ணனைகள்
* உத்தாளிகனின் வீர்யம் தாமரை மலரில்.
* அந்த மலரை வாசனை பார்த்ததால் சந்த்ராவதி கர்ப்பம் அடைதல்
* சந்த்ராவதியின் கர்ப்ப நிலைமை

* தாய் வந்து சந்த்ராவதியை பார்க்கிறார். விஷயம் தெரிகிறது.
* தாய் புலம்பத் துவங்குகிறார்
* அரசனுக்கு விவரம் தெரிகிறது.
* அவர் மந்திரியிடம் சொல்கிறார்.
* மந்திரி அரசனை சமாதானம் செய்கிறார்.
* அரசன் வந்து பெண்ணை பார்க்கிறார்.
* (அவமானத்திலிருந்து தப்பிக்க) அரசர், மந்திரியிடம், பெண்ணை ஏதாவது ஒரு காட்டில் விட்டுவிடும்படி சொல்கிறார்.
* அவ்வாறே சேவகர்கள், சந்திராவதியை ஒரு அடர்ந்த காட்டில் கொண்டு வந்து விட்டுவிடுகின்றனர்.
* இங்கு அரசன் மிகவும் கவலைப்பட்டு அழுகிறான்.
* சந்த்ராவதி காட்டில் பகவந்தனை வேண்டிக் கொள்கிறாள்.
* அங்கு ஒரு முனிவர் சந்த்ராவதியை பார்க்கிறார்.
* சந்த்ராவதி முனிவரிடம் தன் நிலையை கூறுகிறார்.
* முனிவர் அவளை தன் ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்கிறார். மனைவியிடம் மகள் என்று ஒப்படைக்கிறார்.
* முனிவரின் மனைவி சந்த்ராவதியை பார்த்துக் கொள்கின்றனர்.
* குழந்தை மூக்கிலிருந்து பிறக்கிறது. பெயர் நாஷிகேதன்.
* குழந்தையை சந்திராவதி ஆற்றில் விடுகிறாள்.
* அவள் காட்டில் சுற்றித் திரிகிறாள்.
* குழந்தை உத்தாளிகனிடம் வந்து சேர்கிறது.
* குழந்தையின் பெயர் நாஷிகேத என்று அசரீரி சொல்கிறது.
* குழந்தை நாஷிகேதனின் பால லீலை
* குழந்தைக்கு அக்ஷராப்யாசம் செய்தார். பார்த்துக் கொண்டார்.
* 7+ ஆண்டுகள் கழித்து சந்த்ராவதி முனிவரின் ஆசிரமத்திற்கு வந்தாள்.
* உத்தாளிக ஆசிரமத்திற்கு வந்து, சந்த்ராவதியை பார்த்து, தன் முன் கதையை சொல்கிறார்.
* சந்த்ராவதியும் தன் கதையை முனிவரிடம் சொல்கிறாள்.
* இதைக் கேட்ட முனிவர், அந்த வீர்யம் என்னுடையதே, நாம் திருமணம் செய்துகொள்வோம் என்றார்.

* சந்த்ராவதியின் பெற்றோரிடம் அனுமதி பெற, இருவரும் அயோத்யைக்கு புறப்பட்டனர்.
* அயோத்தியில் அரசன், இந்த முனிவர்கள் கூட்டத்தை வரவேற்று உபசரித்தான்.
* முனிவர்கள் அனைவரும் அந்த முனிவருக்கு அரசனின் பெண்ணை கேட்டார்கள்.
* அரசன் சேவகர்களை கூப்பிட்டு கேட்க, அவர்கள் பெண்ணினை கொல்லவில்லை என்றனர்.
* அரசன் சேவகர்களுக்கு பரிசளித்து கௌரவித்தான்.
* அரசன், அரசி மற்றும் அனைவரும் சந்த்ராவதியை பார்க்கின்றனர்.
* ஸ்ரீஹரி, பிரம்ம, ருத்ரர்கள் உத்தாளிகனுக்கு வரம் அளிக்கின்றனர்.
* உத்தாளிக, சந்த்ராவதியின் திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன.
* சம்பந்திகளின் விருந்து உபசாரங்கள்
* திருமண மண்டப அலங்காரங்கள்
* மணமகன், மணமகள் அலங்காரங்கள்
* நாந்தி, காசி யாத்திரை, மதுபர்க்க பூஜை முடிந்தது.
* மாங்கல்ய தாரணம் முடிந்தது.
* பிறகு நடக்கவேண்டிய லாஜா ஹோமம் ஆகியவை நடந்து முடிந்தன.
* அனைவரும் உண்டனர். ஓய்வெடுத்தனர்.
* திருமணம் ஆகி நான்கு நாட்களில், நாகவல்லி நிகழ்ச்சிகள் முடிந்தன.
* பின்னர், உத்தாளிக மற்றும் சந்த்ராவதி இருவரும் தங்கள் மகனுடன் தங்களின் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

***

**கிருடொ³ள்ளிகெ³ உரக³ன ஸுத்திதா³தனெ மெரெவ**
**பாஶாங்குஶ த⁴⁴ரனெ**
**கி³ரிஜெய வரபுத்ர கரிமுக²கொ³ந்தி³(பெ) த்⁴ருட⁴⁴வாகி³**
**கரிணிஸோ மதிய ||1**

வயிற்றில் சிறு பாம்பினை கட்டியிருப்பவனே. பாஷ, அங்குஷ ஆகிய ஆயுதங்களை தரித்து சஞ்சரிப்பவனே. பார்வதிதேவியின் வரபுத்திரனே. யானை முகத்தோனே. உன்னை திடமாக வணங்குகிறேன். எனக்கு நல்புத்தியை அருள்வாயாக.

**வாணி ப்³ரம்ஹன ராணி வீணெ புஸ்தகபாணி**
**மானினிகுலகெ கட்டாணி**
**மாணதெ³ ப⁴க்தர பொரெவ ஶ்ருங்கே³ரிய ஶாரதெ³**
**கருணிஸெ மதிய ||2**

வாணிதேவியே. பிரம்மனின் ராணியே. புத்தகத்தை தரித்திருப்பவளே. வணங்கத்தக்கவளே. குலம் தழைப்பதற்கு முக்கியமானவளே. பக்தர்களின் வேண்டுதல்களை, ஹே ஷ்ருங்கேரியின் ஷாரதையே, அருள்வாயாக. நற்புத்தியை அருள்வாயாக.

**மங்க³ளாங்க³னெ மல்லஸுர மர்தி⁴ஸித³னெ க³ங்கெ³ (மௌளி)**
**மனோஹரனே**
**ஹிங்க³தெ³ ப⁴க்தர பொரெவ நீலாப்³தி⁴ய லிங்க³ கருணிஸு**
**நிஜமதிய ||3**

மங்கள தேகத்தைக் கொண்டவனே. கொடும் அசுரர்களை கொன்றவனே. கங்கையை கொண்டு வந்தவனே. பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றுபவனே. பாற்கடலில் படுத்திருப்பவனே. நற்புத்தியை அருள்வாயாக.

**பூ⁴மி அம்ப³ர ரவி தாரெ சந்த்³ராவளி**
**மேலாத³ஷ்டதி³க்பாலகரு**
**ஸாது⁴ ஸஜ்ஜன கு³ருஹிரியரிகொ³ந்தி³ஸி ஹொளுவெ ஈ**

**புண்யகதெ²ய ||4**

பூமி, ஆகாஷ, சூர்ய, நட்சத்திரங்கள், சந்திரன், அஷ்ட திக் பாலகர்கள், ஸாது ஸஜ்ஜனர்கள், குரு, மூத்தவர்கள் என அனைவரையும் வணங்கி, இந்த புண்ய கதையினை சொல்கிறேன்.

**ஓண்யொளு செல்லித³ அணி முத்தாரிஸி நூலிகெ³**
**போணிஸித³ந்தெ**
**யோகி³க³ளரஸுத்³தா³ளிகன கதெ²யனு**
**ஹேளுவெ சரிதெய மாடி³ ||5**

பூமியில் விழுந்த முத்துக்களை எடுத்து நூலில் கோர்ப்பது போல, யோகிகளின் அரசனான உத்தாளிகனின் கதையை, அவருடைய சரிதையை நான் சொல்கிறேன்.

**பூ⁴வளியொளகெ³ உத்தமனெம்போ³ பூ⁴ஸுர**
**வேத³வேதா³ந்த பாரக³னு**
**ஸாது⁴ ஸஜ்ஜன ஸதியர குலரத்னவு அனுகூல்யாதன**
**த⁴ர்ம பத்னி ||6**

பூமியில் மிகவும் உத்தமன் என்று போற்றப்படுபவன். அரசன். வேத வேதாந்தங்களை கற்றுத் தேர்ந்தவன். ஸாது, ஸஜ்ஜன, பெண்களை காப்பவன். அவனுக்கு மிகவும் உதவியாக அவனுடைய மனைவி இருந்தாள்.

**ஸதி புருஷரு ஸந்தோஷத³லிருதிரெ**
**ஸுதஜனிஸித³ உத்³தா³ளிக**
**அதி ஹருஷதி³ ஜாதகர்ம நாமகரண ஸுதகெ³**
**மாடி³த³³ க்ரமதி³ந்த³ ||7**

இவ்வாறாக கணவன் மனைவியர் இருவரும் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். உத்தாளிகன். அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன், ஜாதகர்ம, நாமகரண ஆகியவற்றை விதிப்படி பெற்றோர் செய்தனர்.

**அன்னப்ராஷன, சௌல கர்மங்க³ள மாடி³ சிண்ணகெ³**
**மௌஞ்ஜிய கட்டி**
**ப்³ரம்ஹசர்யாஶ்ரம நடெ³ஸி தாயி தந்தெ³ முன்னெ**
**நடெ³த³³ரு பரக³திகெ³ ||8**

அன்னப்ராஷன, சௌல கர்ம ஆகியவற்றை செய்து, அவனுக்கு மௌஞ்சியை கொடுத்து உபநயன கர்மமும் செய்து முடித்து, அடுத்து பெற்றோர் இருவரும் பரகதியை அடைந்தனர்.

**கு³ருகுலவாஸவ மாடி³ உத்³தா³ளிக கலிதனெ**
**நால்கு வேத³க³ள**
**அஜ ஹரஹரிய மெச்சிஸுவெ (என்)தெ³னுதலெ**
**க⁴னதப வனகாகி³ நடெ³த³ ||9**

உத்தாளிகன் தனது குருகுல வாசத்தை முடித்தான். நான்கு வேதங்களையும் கற்றான். பிரம்ம வாயு, ருத்ர, ஹரி ஆகியோரை திருப்திப்படுத்துவேன் என்று சொல்லி, கடும் தவம் செய்ய புறப்பட்டான்.

**மிந்து³ மடி³யனுட்டு ஸந்தே³ஹவ பி³ட்டு**
**நிந்து³ பெ³ளகு³வ ஜ்யோதியந்தெ**
**ஒந்தே³மனத³லி மாடி³த³³ தபவனு (வருஷ)**
**ஸந்த³வருவத்து ஸாவிரவு ||10**

காட்டுக்குச் செல்வதற்காக நார்மடி உடுத்தி, எவ்வித சந்தேகமும் இன்றி (திடமான மனதுடன்), ஒளிர்வதான ஜ்யோதியைப் போல, ஒரே மனதுடன் தவம் செய்தான். 60,000 ஆண்டுகள் இவ்வாறாக தவம் செய்தான்.

**த⁴ரெயொளகு³த்தம கௌஸல்யதே³ஶி³ அயோத்⁴யவெம்ப³**
**பட்டணதி³**
**ரகு⁴குலத³ல்லி உத்பன்னனு ரகு⁴ராம ஸ்திரவாகி³**
**ராஜ்யவாளுவனு ||11**

பூமியில் மிகவும் உத்தமமான கௌஸல்ய நாட்டில், அயோத்யா என்னும் பட்டணத்தில், ரகுகுலத்தில் சிறந்தவனான ரகுராமன் மிகவும் அற்புதமாக நாட்டை ஆண்டு கொண்டிருந்தான்.

**எல்லெல்லி நோடித³ரு கெரெபா³வி தே³வாலய**
**கன்யாதா³னவு பூ⁴தா³ன**
**அன்னசத்ரவு அரவட்டிகெ³யனிக்கிஸி மன்னிஸி**
**ராஜ்யவாளுவனு ||12**

எங்கு பார்த்தாலும், கிணறு, ஏரி, கோவில்கள் இருந்தன. கன்யா தானம், பூமி தானம், அன்ன சத்திரங்கள், தண்ணீர் பந்தல்கள் ஆகியவை இருந்தன. அனைவரையும் காத்தவாறு இவ்வாறு அவன் நாட்டை ஆண்டு வந்தான்.

**ஹெத்த தாயி மக்களக³லரெந்தெ³தி³கு³ ப³த்ததெ³ கரெவ**
**தே⁴னுக³ளு**
**ஸத்யவல்லதெ³ அஸத்யவ நுடியரு உத்தமரா தே³ஶதொ³ளகெ³**
**||13**

பெற்ற தாய் தன் குழந்தைகளை காப்பது போல, என்றும் வற்றாத மடி கொண்ட பசுக்கள் அங்கு இருந்தன. உண்மையைத் தவிர என்றும்கூட பொய் பேசாத மக்களைக் கொண்டிருந்த நாடு அது.

**த⁴ர்மவல்லதெ³ அன்யாயவ மாட³ரு**
**புண்யஸாத⁴னரு ஸஜ்ஜனரு**
**உன்னந்த ஹரிய ப⁴க்தியலி கொண்டா³டு³வ**
**த⁴ர்மக³ளா தே³ஶதொ³ளகெ³ ||14**

தர்மத்தை விட்டு அநியாயத்தை என்றும் செய்யாதவர்கள் அந்த மக்கள். ஸஜ்ஜனர்கள் புண்ய காரியங்களில் ஈடுபட்டிருந்தனர். ஸ்ரீஹரியின் பக்தியில் ஈடுபட்டு, சிறந்த தர்மங்களை அனைவரும் செய்து கொண்டிருந்தனர்.

**கொடு³வவருண்டு கொம்ப³வரில்ல த⁴ரெமேலெ**
**ப³ட³வரில்லி சாரருண்டு**
**கடு³தீ⁴ரருண்டு ஹகெ³க³ளில்ல பிஸுணரகொ³டு³வெயில்லா**
**தே³ஶதொ³ளகெ³ ||15**

அங்கு கொடுப்பவர்கள் உண்டு, பெற்றுக் கொள்பவர்கள் இல்லை. பூமியில் ஏழைகள் இருந்தாலும் அவர்களில் வேலைக்காரர்கள் இருந்தார்கள், வீரர்கள் இருந்தார்கள். ஆனால், அவர்களில் போட்டி, பொறாமைகள் இருந்திருக்கவில்லை, அந்த நாட்டில்.

**ஸுத்தணராயர கெ³லிது³ கப்பவகொண்டு³ க்ஷத்ரிய**
**த⁴ர்மவ நடெ³ஸி**
**ப⁴க்தியிந்த³ தே³வ பி³ராம்ஹர மன்னிஸுதலெ ஸத்யதி³**
**ராஜ்யவாளுவனு ||16**

சுற்றிலும் இருந்த அரசர்களை வென்று, அவர்களிடமிருந்து கப்ப காணிக்கைகளை பெற்றுக் கொண்டு, தர்மத்தின் வழியில் நடந்து, பக்தியுடன் தேவ பிராமணர்களை வணங்கி, காத்து, இவ்வாறாக ஸத்யமான வழியில் ராஜ்யத்தை ஆண்டு வந்தான் அரசன்.

**கொட்ட வாக்யங்க³ள தப்பனு பூ⁴பால மஸ்தக**
**மகுடவெந்தெ³னிஸி**
**பட்டத³ரஸியல்லத³ன்யத்ர நோடே³க பத்னிய வ்ரதவ நடெஸித³னு**
**||17**

அந்த அரசன், கொடுத்த வாக்குகளை தவற மாட்டான். தன் கிரீடத்தை தாங்கியவாறு, தன் பட்டத்து அரசியைத் தவிர வேறு எந்த பெண்களையும் ஏறெடுத்துப் பார்க்காதவன். இவ்வாறாக ஏகபத்னி விரதத்தை நடத்தினான்.

**பட்டத3ரஸியொள் குமாரனு அஜபூ4ப ஹுட்டி**
**ஸந்தோஷதோ³ரலு**

**சிப்பினொளகெ³ முத்துமாடு³வ தெரனந்தெ புத்ரி**
**ஹுட்டித³ள் சந்த்³ராவதியு ||18**

அந்த அரசிக்கு அஜ என்னும் மகன் பிறந்தான். பெற்றோருக்கு மகிழ்ச்சி அளித்தான். சிப்பிக்குள் முத்து பிறந்ததைப் போல, அவர்களுக்கு சந்த்ராவதி என்னும் மகளும் பிறந்தாள்.

**ஹொன்னின ராஸி ஸுவர்ணத³ பெ³ட்டவு கன்யாதா³னத³**
**ஹெப்³பெ³ளஸு**
**புண்யத³ புஞ்ஜ பூர்ணவித்தெயொனகொ³ந்து³ ஹொண்ணு**
**மாணிகவெ ஸந்தான ||19**

ரத்னங்களின் குவியல். தங்கத்தின் மலை. கன்யா தானத்தினால் வம்ச அபிவ்ருத்தி. புண்ணியங்கள் பெருகுதல். ஆகியவை நமக்கு கிடைக்கும் என்று சிந்தித்தவாறு இருந்தான் அரசன். அதனால் பெண்ணை மாணிக்கமாக நினைத்தான்.

**ஹொடெ³ மக்³கு³லிக்கோளு இட³வளம்பெ³கா³ல**
**நடெ³யோளு தட்டடி³யிடு³த**
**நுடி³வோளு தொத³ல்லுடி³யலி அரகி³ணியந்தெ**
**கடு³லாலிகெ பா³லலீலெ ||20**

குழந்தை வளர்ந்தது. அம்பேகால் வைத்து நடந்தாள். மெல்ல அடிமேல் அடி வைத்து நடந்தாள். பேசினாள். தன் சிறிய உதட்டினால், கிளிகள் பேசுவதைப் போல பேசினாள். பால லீலைகளை செய்தாள்.

**நடெ³த³ரெ தி³ட்ட தாகீதெந்து³ குமாரிகெ³ நுடி³த³ரெ**
**ப³ட³வாதாளெந்து³**
**முடி³ய பா⁴ரகெ ஸெளெ நடு³வு நொந்தீ³தெந்து³**
**கடு³ஹருஷத³லி ஹிக்³கி³த³ரு ||21**

குழந்தை நடந்தால், திருஷ்டி தாக்கிவிடும் என்றும், பேசினால் மெலிந்து விடுவாள் என்றும் அவளை பார்த்துக் கொண்டனர்.

தலைமுடியின் பாரத்திற்கு, மெலிதான இடுப்பு வளைந்து விடும் என்று நினைத்து பெருமையுடன் பேசிக் கொண்டனர்.

**அக்ஷராப்4யாஸவ மாடி3ஸி குமாரிகெ3 நர்தன கீ3தவ கலிஸி**
**உத்தமவாத3 நாடக கவிஶாஸ்த்ரவ புத்ரிக3ப்4யாஸ மாடி3ஸித3 ||22**

குமாரி சந்த்ராவதிக்கு அக்ஷராப்யாஸம் செய்து, நர்த்தனம், சங்கீதம் ஆகியவற்றை கற்றுக் கொடுத்து, உத்தமமான நாடகம், கவிதை இயற்றும் சாஸ்திரம் ஆகியவற்றை தன் பெண்ணிற்கு பெற்றோர் கற்றுக் கொடுத்தனர்.

**பா3லத்வதி3ந்த3 களெத3வு குமாரிகெ3 மேலெ யௌவனவு தோரித3வு**
**நீலமாணிக நவரத்ன முத்தட3சித3 ஆலயவனெ கட்டிஸித3 ||23**

சிறுமியாக இருந்தவள் யௌவனத்தை அடைந்தாள். நீல, மாணிக்க, நவரத்ன, முத்துக்களால் இழைத்த அரண்மனையை அரசன் கட்டுவித்தான்.

**புத்ரிய ஸேவெகெ3 இட்டனெ பூ4பால ஹத்துஸாவிர கெ1ளதி3ய**
**ஸுத்தலு ப்ராகார எஸெத3வு ரக்ஷெகெ3 இட்டனெ த்3வாரபாலகர**
**||24**

மகளின் சேவைக்காக அரசன், 10,000 தோழிகளை நியமித்தான். அந்த அரண்மனையை சுற்றிலும் பாதுகாப்பிற்காக பிரகாரங்களை கட்டுவித்தான். அங்கு த்வார பாலகர்களை நியமித்தான்.

**இத்த(லீ) ராய ஸம்பத்தினொளிருதிரெ அத்த(லா)**
**முனிகௌஷிகனு**
**ப்ருத2வியன்னெல்லா ஸுத்தலு ப3ந்த3(னு) ஸப்த த்3வீப க3ள**
**நோடு3த3லி ||25**

இங்கு இவ்வாறு அரசன் செல்வச் செழிப்பில் இருக்கையில், அங்கு, அந்த கௌஷிக முனிவர், பூமியில் அனைத்து

இடங்களிலும் சஞ்சாரம் செய்து, சப்த த்வீபங்களையும் சுற்றி வந்தார்.

**ஸத்யலோக தபோலோகவ சரிஸுத்த ஹொக்க(னெ)**
**யம லோகவனு**
**சிக்கினபா³ய மூஷகத³ந்தெ மிடு³கு(த)லிப்ப**
**ஜீவிக³ள தாகண்ட³ ||26**

ஸத்ய லோக, தபோ லோகங்களை சுற்றியவாறு, யம லோகத்தை அடைந்தார். பூனையில் வாயில் சிக்கிக் கொண்ட எலிகளைப் போல அங்கு தவித்துக் கொண்டிருந்த ஜீவிகளை முனிவர் கண்டார்.

**த்ருணத³ மூலாக்³ரதி³ நடுகு³திப்பர கண்டு³ ப³(ளி)**
**யல்லி நிந்து மாதாடி³**
**நிமகெ³ ஈ லோக ப்ராப்தியாகெ ஆயிது**
**திளிது³ ஹேளுவுது³ என்னொட³னெ ||27**

ஒரு புல் நுனியில் நின்று நடுங்கிக் கொண்டிருப்பவர்களைக் கண்டு, முனிவர் நின்று பேசினார். உங்களுக்கு இந்த உலகம் ஏன் ப்ராப்தி ஆயிற்று என்று என்னிடம் கூறுங்கள் என்றார்.

**ஸுதரில்லதெ³ ஸத்க³தியில்லவெனுதலெ ஶ்ருதி³ ஸாருதிதெ³**
**ஜக³தொ³ளகெ³ எமகெ³**
**ஸததியில்ல உத்தம க³திய காணிஸுவோரெ**
**பதனக்கெ பி³த்³தெ³வெந்தெ³னலு ||28**

ஆண் வாரிசு இல்லாமல் ஸத்கதி இல்லை என்று ஸ்ருதி சொல்கிறது. உலகில் எங்களுக்கு வாரிசு இருந்திருக்கவில்லை. ஆகவே, உத்தம கதியை அடையாமல், நாங்கள் இந்த நிலைக்கு வந்து விழுந்திருக்கிறோம் என்றனர்.

**புத்ரபௌத்ரரில்லவெ நிம்ம வம்ஶதி³ உத்தமக³திய**
**காணிஸுவ தெள³ஹித்ரரு**
**த⁴ர்ம ஸந்தானிக³ளில்லவெ(என்)து³ மத்தாக³**

**முனிய கேளித³னு ||29**

உங்கள் வம்சத்தில் புத்ர, பௌத்ரர்கள் இல்லையா? உத்தம கதியை உங்களுக்குக் கொடுக்கும் பேரன் (பெண்ணின் மகன்), தர்மத்தை பின்பற்றுபவன் யாரும் இல்லையா? என்று மறுபடி கௌஷிக முனிவர் அவர்களை கேட்டார்.

**ஹெண்ணனொல்லதெ³ அரண்யவ சரிஸுவ உன்னந்த**
**தபஸ்வித்³த³**
**நம்ம ஸந்ததி உத்³தா³ளிகனொப்³ப³னிருவனு மன்னிஸி**
**திளிது³ ஹேளுவுது³ ||30**

பெண்களை விரும்பாமல், காட்டில் சுற்றிக் கொண்டிருக்கும், உன்னதமான தபஸ்வியாக இருக்கும் நம் சந்ததியான உத்தாளிகன் என ஒருவன் இருக்கிறான். அவனைப் பற்றி நீங்கள் தயவு செய்து கேட்டு, அறிந்து எங்களுக்கு சொல்லுங்கள்.

**உத்தமளாகி³ப்ப ஸதியனொளகொ³ண்டு³**
**புத்ரஸந்தானவ படெ³து³**
**ஹெத்தவரிகெ³ ஸத்க³தி³ய காணிஸுவுதெ³ந்து³**
**விஸ்தாரவாகி³ ஹேளுவுது³ ||31**

ஒரு உத்தமமான பெண்ணை மனைவியாக ஆக்கிக் கொண்டு, புத்ர ஸந்தானத்தை பெற்று, அதன் மூலம் பெற்றவர்களை (முன்னோர்களை) ஸத்கதிக்கு அனுப்ப வேண்டும் என்று நீங்கள் அவனிடம் சென்று கூற வேண்டும்.

**போ⁴ரனல்லிந்த³ தெரளிதனாக³லெ முனி அரண்யவ சரிஸுதலெ**
**தூ³ரதி³ந்த³லெ கண்ட³னு உத்³தா³ளிகன ஸாரித³னா**
**தபோவனவ ||32**

முற்றும் துறந்த துறவியான கௌஷிகர் அங்கிருந்து உடனே புறப்பட்டு, காட்டிற்கு வந்தார். தூரத்திலிருந்தே உத்தாளிகனை கண்டார். உடனடியாக அந்த வனத்திற்கு, அவனிடம் சென்றார்.

**இதி³ரெத்³து³ உத்³தா³ளிகனு கண்டு³ முனிபன**
**கரவிடி³து³ கரெ தந்த³னாக³**
**த்ருணதா³ஸனவித்து அதிதி² பூஜெய மாடி³**
**ப³ரவேனெந்து³ கேளித³னு ||33**

தன் எதிரில் வந்த கௌஷிக முனிவரைக் கண்ட உத்தாளிகன், அவரின் கைகளைப் பிடித்து, அழைத்து வந்து, அவருக்கு தர்ப்பை ஆசனத்தை அளித்து, அதிதி உபசாரங்களை செய்து, அவருடைய நலன்களை விசாரித்தான்.

**ஸத்யலோக தபோ லோகவ சரிஸுத்த ஹொக்கெனு**
**யம லோகவனு**
**நிம்ஹெத்த தாயி தந்தெ³ பித்ருபிதாமஹரு**
**அத்யந்த நரகக்கெய்து³வரு ||34**

ஸத்ய லோக, தபோ லோகத்தை சுற்றியவாறு, நான் யம லோகத்தை சென்று அடைந்தேன். உன்னைப் பெற்ற தாய், தந்தை, பித்ரு பிதாமஹர்கள் ஆகிய அனைவரும் அத்யந்த நரகத்தில் இருக்கிறார்கள்.

**ஆலஸ்யவில்லதெ³ பீ³ள்வரு பதனக்கெ ஹோள ப³ந்தெ³னு நின்ன கூடெ³**
**பா³லர பெத்து ஸத்க³தி³ய காணிஸித³ரெ அஹுது**
**முக்தி ஸாத⁴னவு ||35**

அவர்கள் எவ்வித சோர்வும் இன்றி (முயற்சியும் இன்றி) நல்வழிக்கு திரும்பலாம் என்பதை உன்னிடம் கூற வந்தேன். வாரிசுகளைப் பெற்று, அவர்களுக்கு ஸத்கதியை கொடுத்தால், அப்போது அதுவே அவர்களின் முக்தி ஸாதனம் ஆகும்.

**அரவத்து ஸாவிர வருஷ தபஸ்ஸு நாமாடி³தெ³**
**சித்த சஞ்சலவாக³த்ஹாங்கெ³**
**மார்த்தாண்ட ஸுதன லோகதொ³ளென்ன பித்ருக³ளு இட்ட**
**காரணவேனெந்த³ ||36**

என் சித்தம், சஞ்சலம் ஆகாமல், நான் 60,000 ஆண்டுகள் தவம் செய்தேன். சூரியனின் மகனான யமனின் லோகத்தில் என் பித்ருகளை (பகவந்தன்) வைத்த காரணம் என்ன என்று தயவு செய்து எனக்கு சொல்லுங்கள்.

**ஹொன்ன ஹெண்ணு மண்ணினாஸெயு எனகி³ல்ல உன்னந்த**
**தபவ மாடு³வெனு**
**எம்மவரிகெ³ யமலோகவேதகெயெந்து³ மன்னிஸி**
**முனிய கேளித³னு ||37**

எனக்கு பொன், பெண், மண் ஆசை இல்லை. சிறந்த தவத்தையே செய்தேன். இவ்வாறு இருக்கையில், என் முன்னோர்களுக்கு ஏன் யமலோகம் கிடைத்தது என்று உத்தாளிகன், கௌஷிக முனிவரிடம் கேட்டான்.

**த⁴ரெமேலெ த்விஜனாகி³ உத்ப⁴விஸித³ மேலெ நடெ³ஸோது³**
**நால்கு ஆஶ்ரமவு**
**கடு³தபவனெ மாடி³ ப³ளலி பா³யாருத்த**
**அட³வியலித³தே³னு ப²லவு ||38**

பூமியில் பிராமணனாக பிறந்த பின், ஒருவனுக்கு இருப்பது நான்கு ஆசிரமம் ஆகும். அவற்றை அவன் பின்பற்ற வேண்டும். கடும் தவத்தினை செய்து, வாடி, தாகத்துடன் காட்டில் இருப்பதால் என்ன பலன் கிடைக்கும்?

**ப்³ரம்ஹசர்யாஶ்ரம நடெ³ஸி கெலகால கன்யார்த்தி²யாகி³**
**நீ ஹோகி³**
**முன்ன ப்³ராம்ஹர ஸாக்ஷிலி ஸத்³கு³ணவுள்ள கன்யா**
**பாணிக்³ரஹண மாடு³ ||39**

பிரம்மசர்ய ஆசிரமத்தை நடத்தி, சில காலம் ஆனபின், கன்யார்த்தி (மாப்பிள்ளை) ஆகி, நீ சென்று, பிராமணர்களை சாட்சியாக வைத்துக் கொண்டு, நற்குணங்களைக் கொண்ட ஒரு பெண்ணை, பாணிக்ரஹணம் செய்து கொள்.

**உத்தமளாகி³ர்ப ஸதியளனொளகொ³ண்டு³ புத்ர**
**ஸந்தானவ படெ³து³**
**களத்ரியனொடெ³கொ³ண்டு³ யக்³ஞவ மாடி³த³³ரெ ஸத்ய**
**அவரிகெ³ ஸ்வர்க்க³லோக ||40**

உத்தம குணங்களைக் கொண்ட அந்த பெண்ணை மனைவியாகக் கொண்டு, புத்ர ஸந்தானத்தைப் பெற்று, தம்பதி சமேதராக இருந்து, யக்ஞங்களை செய்தால், அவர்களுக்கு ஸ்வர்க்க லோகம் கிடைக்கும். இது உண்மையான பேச்சு.

**ஹஸிது³ ப³ந்த³வரிகெ³ அம்ருதான்னவனிக்குத**
**க்³ருஹஸ்த த⁴ர்மக³ள நடெ³ஸுத்த**
**உத்தம வாரணாஸி க³யெ தீர்த்த²தி³ ஹெத்தவரனு**
**த்ருப்தி ப³டி³ஸு ||41**

பசியுடன் வந்தவர்களுக்கு அமிர்தான்னத்தை அளித்து, க்ருஹஸ்தாஸிரமத்தை நல்லபடியாக நடத்தி, உத்தமமான வாரணாசி, கயை ஆகிய தீர்த்தங்களில் ஸ்னானம், விதிகளை செய்து, பெற்றவர்களை திருப்தி அடையச் செய்வாயாக.

**இஷ்டு பரியிந்த³லெ விவரிஸி ஹேளுவெ**
**க்³ருஹஸ்த²த⁴ர்மத³ நீதிக³ளனு**
**ஒப்பாத³ரெ கேளு ஒல்லதி³த்³த³ரெ பி³டு³ அப்பணெ கொடு³**
**தனகெ³ந்த³ ||42**

இவ்வளவு விதமாக நான் உனக்கு விளக்கி சொல்கிறேன், க்ருஹஸ்தாஸ்ரமத்தின் தர்மங்களின் நீதிகளை. உனக்கு சம்மதம் என்றால் கேள். இல்லையென்றால் விட்டுவிடு. இனி எனக்கு விடை கொடு, நான் செல்கிறேன் என்றார் முனிவர்.

**ஆ முனிக³ப்பணெ கொட்டு உத்³தா³ளிக ஆலோசிஸி தன்ன மனதி³**
**ப்ராரப்³த³ ப³ரெத³ந்த² விதி⁴ய கேளுவெனெந்து³ ஸாரித³**
**ஸத்யலோகவனு ||43**

அந்த முனிவருக்கு விடை கொடுத்து அனுப்பிய உத்தாளிகன், தன் மனதில் அவர் கூறியதைப் பற்றி சிந்தித்தான். தன் ப்ராரப்தம் எழுதிய விதியை நான் கேட்பேன் என்று கூறினான். ஸத்ய லோகத்தை சென்று அடைந்தான்.

**கடெ³க³ண்ணு கெஞ்சேரி கிடி³க³ளு உது³ருத கு⁴டுகு⁴டி³ஸுத**
**கோபதி³ந்த³**
**ஸுடு³வெனு மூரு லோகவனெம்ப³ ப⁴ரதி³ந்த³**
**கெடு³வக³னியிந்த³ தாப³ந்த³ ||44**

கடைக்கண் சிவந்து, அதிலிருந்து நெருப்புப் பொறி பறந்தவாறு, கர்ஜிக்கும் கோபத்துடன், மூன்று உலகங்களையும் நான் சுட்டுவிடுவேன் என்ற ஆவேசத்துடன், அத்தகைய நெருப்பு போன்ற கோபத்தினால் அவன் வந்தான்.

**முனிய ப³ரவனு கண்டு³ கமலஜ**
**கரவிடி³து³ கரெதந்த³னாக³**
**நவரத்னமயத³ கத்³து³கெ³ மேலெ குள்ளிரிஸி**
**மது⁴ரவாக்யத³லி கேளித³னு ||45**

உத்தாளிக முனிவரின் கோபத்தைக் கண்டு, பிரம்மதேவர் அவரின் கை பிடித்து அழைத்து வந்தார். நவரத்னமயமான இருக்கையில் அவரை அமரச் செய்து, இனிமையான வாக்கியங்களில் இவ்வாறு கேட்டார்.

**ஏனு காரண நீவு இத்த பி³ஜயங்கை³தி³ரத்யந்தர**
**தபவன்னெ பி³ட்டு**
**உத்தமர த³ருஶனவாயிது புண்ய ஹத்து**
**கோடி லாப⁴வெந்த³ ||46**

நீங்கள் இங்கு விஜயம் செய்ததற்கு என்ன காரணம்?. உங்களுடைய கடுமையான தவத்தை விட்டு, வந்திருக்கிறீர்கள். உங்களைப் போன்ற உத்தமர்களின் தரிசனம்

ஆயிற்று புண்ணியகரமான செயல் ஆகும். பத்து கோடி லாபம் ஆனதைப் போல ஆயிற்று எனக்கு.

**ஸுதரில்லதெ[3] ஸத்க[3]தியில்லவெனுதலி ப்ரத்யக்ஷதி[3]ந்த[3]**
**கேளிதெ[3]னு**
**பத்னியெல்லிஹரெனகெ[3] புத்ரனெந்தா[1]கு[3]வ**
**விஸ்தாரவாகி[3] ஹேளெந்த[3] ||47**

வாரிசு இல்லாமல், (முன்னோர்களுக்கு) ஸத்கதி இல்லை என்பதை நான் இன்னொருவர் கூற கேட்டேன். எனக்கு மனைவியே இல்லை. அப்படியிருக்கையில் எப்படி மகன் பிறப்பான்? சற்று விளக்கமாக கூறவும் என்றார்.

**ஸத்யவீமாது தப்பது[3] நின்ன லிகி[2]தவு**
**புத்ரனஹனு நினகொ[3]ப்[3]ப[3]**
**லக்ஷ்மீபதிய ஸாரூப்ய(த[3])ல்லி நிம்மவரு**
**மோக்ஷத[3] பத[3]வி ஹொந்து[3]வரு ||48**

நீங்கள் கேட்ட செய்தி உண்மையே. என்னுடைய எழுத்து (விதி) எப்போதும் மாறாது. உனக்கு ஒரு மகன் இருக்கிறான். ஆகையால், ஸ்ரீஹரியின் ஸாரூபத்தில் உன் முன்னோர்கள் அனைவரும் மோட்சத்தை சென்று அடைவார்கள்.

**ஜரெ அட[3](ரி) நெரெபரிக[3]ளு ப[3]ந்த[3]வு ஸட[3]லித[3]வு த[3]ந்தபங்க்தி**
**கொடு[3]வவராரு கர்னிகெயெந்து[3] முனிபனு கமலப[4]வன**
**பெஸகொண்ட[3] ||49**

எனக்கு வயது ஆகிவிட்டது. மரணம் சமீபத்தில் வந்துவிட்டது. பல்வரிசை விழுந்துவிட்டது. இனி எனக்கு யார் பெண் கொடுப்பார்கள்? என்று முனிவர் பிரம்மனிடம் கேட்டுக் கொண்டார்.

**உத்தம ரகு[4]குல ரகு[4]ராயனாத்மஜெ இப்பளு கர்னிகெயாகி[3]**
**புத்ர ஹுட்டித[3] ஏளு வருஷக்கெ பத்னியு**
**த்[3]ருஷ்டிகோ[3]சரகெ பீ[3]ளுவளு ||50**

ரகுகுலத்தில் சிறந்தவனான ரகுராமன். அவனின் மகளே உன் மனைவியாக இருப்பாள். உனக்கு மகன் பிறந்து ஏழு ஆண்டில், உன் மனைவி உன் கண்ணிற்கு தெரிவாள்.

**நிந்த்³ய ஹோருவளாருந்த்³யாத³லிடு³வரு**
**கந்த³ஹூட்டுவ நாஶிகேது**
**அந்தே³ நிம்ம பித்ருக³ளிகொ³ய்கண்ட²வஹூது³**
**ஸந்தே³ஹபே³ட³ ஹோகெ³ந்த³ ||51**

உன்னை திட்டுபவர்கள் (புறக்கணிப்பவர்கள்) யார்? உன்னை மரியாதையான இடத்தில் வைப்பார்கள். உனக்கு நாஷிகேது என்னும் மகன் பிறப்பான். அன்றே உன்னுடைய பித்ருகளுக்கு வைகுண்டம் கிடைக்கும். இதில் சந்தேகமே வேண்டாம். போ என்றார் பிரம்ம தேவர்.

**அம்பு³ஜோத்³ப⁴வன அப்பணெகொ³ண்டு³ முனிபனு**
**ப³ந்த³னெ தன்னாஶ்ரமகெ**
**சந்த³னக³ந்தி⁴ சந்த்³ராவதி நெனெத³ளு அந்தா³க³³**
**நீராடவனு ||52**

பிரம்மதேவரின் ஆணைப்படி, உத்தாளிகன் தன் ஆசிரமத்திற்கு திரும்பி வருகிறான். அதே சமயம், அங்கு, சந்த்ராவதி, தன் இடத்தில் நீராட்டம் செய்ய வேண்டும் என்று நினைத்தாள்.

**மாவு பல்லவிஸி கோகி³லெ த்⁴வனிகொ³ண்ட³வு கேளி**
**தம்மய்யனப்பணெய**
**நாளெ உத³யக்கெ ஶரதி⁴ய நதி³யலி**
**ஆட³பே³கெந்து³ நீராட ||53**

மா பூக்கள் பூத்தன. குயில் கூவியது. இதைக் கேட்டு (தக்க காலம் வந்தது என்று எண்ணி) தன் தந்தையின் அனுமதியைப் பெற்று, அடுத்த நாள் உதயத்தில் பாயும் நதியில் விளையாட வேண்டும் நீராட்டம் என்று நினைத்தாள்.

**தந்தெ³தாயி அப்பணெகொ³ண்டு³ ப³ருவெனெந்து³ மந்த³க³மனெ ஹருஷதி³ந்த³**
**கும்ப⁴குச த³ கோமலாங்கி³ தா ஹொரடளு ப³ங்கா³ரதெ³ள**
**ரவியந்தெ ||54**

தன் பெற்றோரின் அனுமதியைப் பெற்று வருவேன் என்று, மெதுவாக நடக்கும் சந்த்ராவதி மிக்க மகிழ்ச்சியுடன், கும்பத்தைப் போன்ற மார்புகள், தளர்ந்த நடை கொண்ட அந்தப் பெண், தங்கமயமான சூரியக் கதிர்களைப் போல புறப்பட்டாள்.

**ஹுவின செண்டு³ புத்த²ளி ராஜஹம்ஸெயொ மாரன**
**மந்த்ரதே³வதெயோ**
**ஸோகெ³ நவிலு ப³ள்ளிமிஞ்சுவந்துத³³யத³ மூடு³வ பா³லபா⁴ஸ்கரனு ||55**

பூச்செண்டு, பொம்மைகள், ராஜ அன்னப்பறவையோ, மன்மதனின் தேவதையான ரதியோ, மயிலோ, இருள் விலகி விடியலில் வெளிச்சத்தை பரப்பும் உதயசூரியனோ?

**மலயஜ க³ந்தி⁴ மேலுத³வ ஸரிஸுத்த**
**கட³க³கங்கண ஹொளெயுதலி**
**ஸடி³லித³ முடி³த³ மல்லிகெ³ ஹுவ்வுது³ருத**
**நடெ³தந்த³ள ராஜபீ³தி³யலி ||56**

சந்தனத் தென்றல் போன்றவளான சந்திராவதி, தன் மேலாடையை சரி செய்தவாறு, தன் வளையல்கள் ஒளிர்வதுடன், தன் கூந்தலில் முடிந்த மல்லிகை மலர்களுடன், ராஜவீதிகளில் நடந்தாள்.

**ஸிங்க³ன மரியந்தெ ஸெளெநடு³ ப³ளுகுத அங்க³னெயர கரபிடி³து³**
**அந்து³கெ³ கிருகெ³ஜ்ஜெ கு⁴ம்மக⁴லிரென்னுத ப³ந்த³ள**
**ராயமந்தி³ரக்கெ ||57**

சிங்கக் குட்டியைப் போல, மெலிந்த இடுப்பு, பெரிதான பின்புறம் ஆகியவற்றுடன், தன் தோழிகளின் கைகளை

பிடித்தவாறு, அலங்காரங்களை செய்து கொண்டு, கொலுசு சலங்கைகள் கலகலவென சத்தம் செய்தவாறு, தன் தந்தையின் அரண்மனைக்கு வந்தாள்.

**நடெ³கெ³ நவிலு நாசி தலெய தக்³கி³ஸித³வு**
**நுடி³க³ரகி³ணியு நாசித³வு**
**மட³தி³ய கடெ³க³ண்ணிகெ³ மிஞ்சு நாசியெ**
**அட³கி³த³வம்ப³ரத³ல்லி ||58**

சந்த்ராவதியின் நடைக்கு மயில்களும் வெட்கப்பட்டு தலை குனிந்தன. அவளுடைய பேச்சிற்கு கிளிகள் வெட்கப்பட்டன. அவளுடைய கடைக்கண் பார்வைக்கு மின்னல் வெட்கப்பட்டது. அது வானிலேயே மறைந்துவிட்டது.

**மக³ள ப³ரவனெ கண்டு³ தாயி ஸம்ப்⁴ரமதி³ந்த³**
**நடெ³தந்து³ மக³ள பி³கி³த³ப்பி**
**முடி³ய நேவரிஸி முத்³தி³ஸி தொடெ³யொளகி³ட்டு**
**ப³ரவேனெந்து³ கேளித³ளு ||59**

தன் மகள் வருவதைக் கண்டு, தாயானவர் மிகவும் சம்ப்ரமத்துடன் அவளை எதிர்கொண்டு, கட்டி அணைத்துக் கொண்டு, தலை தடவி, முத்தமிட்டு, தன் துடை மேல் அமர்த்திக் கொண்டு, என்ன விஷயம் என்று கேட்டார்.

**இவள நோடகெ ஸோலத³வராரு ஜக³த³லி**
**ஸுர நர நாக³லோகத³லி**
**ஹரிஹரனரஸி ஸரஸ்வதிய லாவண்யக்கெ**
**மிகி³லாத³வவள செல்விகெயு ||60**

இவளுடைய பார்வையின் திறனுக்கு தோற்காதவர்கள் யார் இருக்கிறார்கள் இந்த உலகில்?. பூமியில், தேவலோகத்தில், நாகலோகத்தில்?. லட்சுமி, பார்வதி, சரஸ்வதி ஆகியோரின் அழகிற்கு ஈடானவள் இந்த அழகி.

**குஞ்ஜரக³மனெ கோகில ஸ்வரகா³னெய தந்தெ³**
**கரெது³ தொடெ³யொளிட்டு**
**ப³ந்த³ ப³ரவேனு நின்ன மனதொ³ளு ஸந்தே³ஹ**
**பே³ட³ ஹேளெந்த³ ||61**

யானை போன்ற நடை கொண்டவள். குயிலைப் போன்ற குரல் உடைய சந்த்ராவதியை தந்தை அழைத்து, தன் துடையில் மேல் அமர்த்திக் கொண்டு, வந்த விஷயம் என்ன என்று கேட்டார். உன் மனதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம். எதுவாக இருந்தாலும் கேள் என்றார்.

**பே³ஸிகெ³ய பி³ஸிலு தோரிது ஶரதி⁴ நதி³யலி**
**காந்தெயர நொட³கொ³ண்டு³**
**பாதே²யனுண்டு³ ஶீக்⁴ரதி³ந்த³ ப³ருவெனு**
**தாதனிரூப கொடெ³ந்து³ ||62**

வியர்வை வருவதான வெயிலால் புரிந்தது, பாயும் நதியில் என் தோழிகளுடன், கட்டுச்சாதம் உண்டு, சீக்கிரத்தில் திரும்பி வருவேன், தந்தையே நீ அனுமதி கொடுக்க வேண்டும் என்றாள்.

**மக³ள மாதனெ கேளி பி³கி³ ஹருஷவ**
**தாளி கரெஸிதொ³ஸிஷ்ட மஹாமுனிய**
**தரிஸிகொட்டனு பே³காத³ வஸ்த்ரங்க³ள பரிபரி (ஆ)**
**ப⁴ரண பூ⁴ஷணவ ||63**

மகளின் பேச்சினைக் கேட்டு, மிகவும் மகிழ்ச்சி கொண்டு, தந்தை, வசிஷ்ட மஹாமுனிவரை அழைத்தார். மேலும் அவளுக்கு தேவையான வஸ்திரங்களை, பற்பல ஆபரண, பூஷணங்களை வரவழைத்துக் கொடுத்தார்.

**மனகி³ந்த³ நீவு இம்மிகி³லு குமாரிகெ³**
**வரவல்ல பரமகு³ருக³ளு**
**ஜலக்ரீடெ³யாடி³ அந்தரதி³ந்த³ குமாரிய ஒட³கொ³ண்டு³**

**ப³ஹுʼது³ ஶீக்⁴ரத³லி ||64**

என்னைவிட இனிமேல் என் மகளுக்கு நீங்களே பரமகுருகள். ஜலக்ரீடை ஆடிவிட்டு வரும் மகளை பத்திரமாக அழைத்து வர வேண்டும் நீங்கள் – என்றான்.

**நீராடவாட³பே³கெந்து³ குமாரிகெ³**
**ப்ரேமதோ³ரிது மனதொ³ளகெ³**
**நாளெ உத³யக்கெ ஒட³கொ³ண்டு³ ஹோகெ³ந்து³ ஹேளித³**
**முனிகெ³ பூ⁴பால ||65**

என் பெண்ணிற்கு நீராட்டம் ஆடவேண்டும் என்று மனதில் ஆசை தோன்றியிருக்கிறது. நாளை விடியலில் அவளை நீங்கள் அழைத்துச் செல்ல வேண்டும் என்று அரசன் முனிவரிடம் கூறினார்.

**ஹேளித³ முனிகெ³ பூ⁴பால குமாரிய ப³ஹள**
**பரியிந்த³ குத்தரிஸி**
**பே³டி³த³ வஸ்த்ரங்க³ள தரிஸிகொட்டனு ஆலயவனு பீ³ளுகொ³ட்ட**
**||66**

இவ்வாறு அரசன் முனிவரிடம் கூறி, மகள் வேண்டிய பற்பல ஆடை, ஆபரணங்களை வரவழைத்து கொடுத்தான். பின் அரணமனையிலிருந்து விடை கொடுத்தான்.

**தந்தெ³தாயி அப்பணெகொ³ண்டு³ ப³ந்த³ளு மந்த³க³மனெ**
**ஹருஷதி³ந்த³**
**தண்ட³ தண்ட³த³ சித்ரான்ன ப⁴க்ஷ்யங்க³ள ப³ண்டி³**
**ப³ண்டி³யலி ஹேரிஸித³ ||67**

சந்திராவதி, தன் பெற்றோரிடம் இவ்வாறு அனுமதி பெற்று மகிழ்ச்சியுடன் திரும்பினாள். பற்பல பாத்திரங்களில் சித்ரான்ன, பக்ஷ்யங்களை செய்து, வண்டிகளில் ஏற்றினார்.

**ஸம்ப்ரமதி³ந்த³ ஸங்கா³தியர்க்³ஹேளித³ளா தந்தெ³**
**அப்பணெகொ³ண்டு³ ப³ந்தெ³**
**இந்து³முகி²யரெல்ல அருணன உத³யகெ**
**ஶ்ருங்கா³ரவாகி³ ப³ன்னியெந்து³ ||68**

மிகவும் மகிழ்ச்சியுடன், தன் தந்தையிடம் அனுமதி வாங்கிவிட்டேன் என்று தன் தோழிகளிடம் கூறினாள். ஆகவே நீங்கள் அனைவரும் நாளை விடியலில் தயாராக வரவேண்டும் என்று கூறினாள்.

**ஒட³ நாரீக³ப்பணெ கொட்டு ஸுகுமாரி**
**மலகி³த³ளொளகெ³ மஞ்சத³லி**
**கட³லுப்³பி³த³ந்தெ உல்லாஸதி³ ராத்ரிய களெத³ளு**
**உத³ய காலவனு ||69**

பிறகு, தன் தோழிகளுக்கு விடை கொடுத்து, சந்த்ராவதி, தன் படுக்கையில் படுத்தாள். கடல் பொங்கியதைப் போல மகிழ்ச்சி கொண்டு, அந்த இரவை கழித்தாள். அடுத்த நாள் காலையும் வந்தது.

**கஸ்தூரிக³ந்த⁴ கத³ம்ப³த³ தைலவ ஒத்தி அங்க³னெகெ³ நீரெரெது³**
**உத்தம ஸூக்ஷ்ம ஶுப்⁴ர வஸ்த்ரதி³ந்த³லெ**
**உத்தமாங்க³வனொரெஸித³ரு ||70**

கஸ்தூரி சந்தனம், கதம்ப எண்ணெய் தடவி, சந்த்ராவதிக்கு தண்ணீர் இறைத்து, மிகவும் சிறந்ததான அழகான வெண்மையான வஸ்திரங்களால் அவளை துடைத்தனர்.

**ஹொம்ப³ட்டெ நெரெது³ட்டு கஞ்சுகவனெ தொட்டு**
**சந்த³தா³ப⁴ரணவனிட்டு**
**இந்த்³ரமாணிக நவரத்னத³ தோடி³கெ³ய**
**தந்தி³ட்டு தட்டெயவொளகெ³ ||71**

ஒரு நல்ல ஆடையை உடுத்தி, மேலாடையை சுற்றி, அழகான ஆபரணங்களை சூட்டி, இந்த்ர, மாணிக்க, நவரத்னத்தின்

ஆபரணங்களை தட்டில் கொண்டு வந்து அவள் முன் வைத்தனர்.

**தும்பெ³கு³ருள ஓஸரிஸெண்ணெக³ண்டிக்கெ து³ண்டு³மல்லிகெ³**
**முடி³ஸித³ரு**
**டா⁴(ளோ)ஜ்ரத³ கொப்பு ஹரளோலெ ஹொன்ஹூவு ரம்பெ⁴ய**
**கர்ணகொப்பித³வு ||72**

சுருளான மூலிகைச் செடிகள், கொடிகள், மல்லிகை ஆகியவற்றை அவளுக்கு சூட்டினர். வைர கொண்டை. இலை வடிவிலான தங்க தோடுகள், ரம்பையின் காதுகளை அலங்கரித்தது.

**ஹரெனொஸலிகொ³ப்பிது முத்தின ப³ட்டு மூகு³தி**
**ஹெடெ³ய மணிய செந்தாகு¹**
**முரிகெ³ய நலிகெ¹ அட்டிகெ¹ முத்து தாயித**
**தரதரவரிது கட்டித³ரு ||73**

அழகான மூக்கில் முத்து மூக்குத்தி அலங்கரித்தது. இடையில் மணிகள் கட்டிய ஒட்டியாணம். கைகளில் அழ்கான அட்டிகைகள். முத்துக்களால் ஆன விதம்விதமான ஆபரணங்களை கட்டினர்.

**கும்ப⁴குசத³ நடு³மத்⁴யத³லொப்பிது**
**கொம்பா³ளெஸர பெ³ல்லெஸரவு**
**கு³ண்டி³ன ஸர ஏகாவளி பத³கவ**
**தண்ட³தண்ட³ரிது கட்டித³ரு ||74**

கும்பம் போன்ற மார்புகளின் நடுவில் சர மாலை, குண்டு குண்டான சரங்களைக் கொண்ட மாலை. பதக்க மாலை. ஆகியவை கட்டினர்.

**நளிதோ¹ளிகொ³ப்பிது பு⁴ஜகீர்த்தி பா³புரி**
**கட³க³கங்கண சளகெகெ³யு**
**ஹெடெ³ய முங்க³ய்ய ஸலிகெ³ ஹொன்னஸொட³க³**

**பெ³ரளிகு³ங்கு³ரவனிடு³வரு ||75**

நளினமான தோள்களில், தோள் ஆபரணங்கள் ஒளிர்ந்தன. பளபளக்கும் கங்கணங்கள், வளையல்கள். கைகளில் தங்க வளையல்கள். விரல்களில் மோதிரங்கள் ஆகியவை அலங்கரித்தன.

**ஸிரிமுடி³ வரகுச தொடி³கெ³ பா⁴ரக்கெ**
**முரியதி³ஹுது³ ஶஸ்த்ரகடியு**
**நவரத்னகசிதவாகி³த்³த³ ஒட்³யாணவ நடு³விகெ³ கட்டினிக்கித³ரு ||76**

தலையில் அழகான ஆபரணங்கள். தோடுகள். அவற்றின் பாரத்திற்கு அவளது இடையான முறிவது போல இருந்தது. நவரத்னங்களால் இழைக்கப்பட்ட ஒட்டியாணம் அவளது இடுப்பில் கட்டப்பட்டது.

**கத³ளிய பா⁴வதி³ ஹோலுவ தொடெ³**
**கணகாலுக³ளஸுவ பா⁴வகிகெ³**
**ஸாலு க⁴ண்டெ கெ³ஜ்ஜெ கி³லிகெம்ப³ ஸரபணி**
**காலந்தி³கெ³யனிடு³வரு ||77**

வாழைத் தண்டு போன்றதான துடை. கணுக்கால்களில் அசைந்தாடும் கொலுசு. மணிகள் கட்டப்பட்ட சலங்கை. சரம் சரமாக கட்டப்பட்ட கால் ஆபரணங்கள் அவளது கால்களை அலங்கரித்தன.

**காலுங்கு³ர வீரமுத்³ரெ மெண்டி¹கி¹ பி¹ல்லி**
**த²ள²ளிஸுவ பாயவட்ட**
**ஹலவு மாணிக்யத³ ஹாவிகெ³ய தந்தி³டு³வரு**
**கெ¹ளதி³யரித்தண்ட³த³ல்லி ||78**

கால் விரல்களில் மோதிரம். மெட்டிகள். பளபளக்கும் ஆபரணங்கள். ஒளிரும் மாணிக்கத்தின் ஆபரணங்கள்.

மாணிக்கங்கள் பதிக்கப்பட்ட செருப்பு என அனைத்தையும் தோழிகள் கொண்டு வந்து அங்கு வைத்தனர்.

**காடி³கெ³ஹச்சி கஸ்தூரி ப³ட்டிட்டளு நோடி³த³³ளாக³ த³ர்பணவ**
**மூடு³வ பா³லபா³ஸ்கரனந்தெ கர்னிகெ மாட³தி³ந்தி³ளிது³**
**நடெ³த³³ளு ||79**

கண்ணுக்கு மை தடவி, கஸ்தூரி பொட்டு இட்டனர். அப்போது சந்திராவதி கண்ணாடியை பார்த்தாள். ஒளிரும் உதய சூரியனைப் போல, அந்தப் பெண் மாடத்திலிருந்து இறங்கி வந்து நடந்தாள்

**சந்த³ணவதி ஹொன்னந்த³ணவேரலு து³ந்து³பி⁴ பே⁴ரி ப³டி³த³³வு**
**கி³ண்டி³ காளாஞ்ஜி சாமரக³ள பீ³ஸோரு ரம்பெ³யரித்தண்ட³த³ல்லி**
**||80**

சந்த்ராவதி, தன் பல்லக்கில் ஏற, அப்போது துந்துபி, பேரி ஆகியவை முழங்கின. பதாகைகள், சாமரங்கள் ஆகியவை வீசும் பெண்களும் கூட வந்தனர்.

**ஹரிணலோசனெனயரு ஹம்ஸக³மனெயரு**
**மரிது³ம்பி³கு³³ருள பா³லெயரு**
**அரளுமல்லிகெ³ பா³யிதெ³ரெமல்லித³ந்தத³ தருணியரு**
**நடெ³த³³ரு நதி³கெ³ ||81**

ஒளிரும் கண்களைக் கொண்டவர்கள், அன்ன நடை கொண்டவர்கள். தும்பிகள் மொய்க்கும் சுருள் முடிகளைக் கொண்ட பெண்கள், மல்லிகை போன்ற பற்களைக் கொண்ட பெண்கள் ஆகியோரும் அவளுடன் நதிக்கு நடந்தனர்.

**ஆரடி³கு³³ருளரு ஆனெமெல்லடி³யரு தோரகுசத³ பா³லெயரு**
**மாரன மனகெ¹ அரெதூ¹க¹ ஹோகு³வந்தெ நாரீரு**
**நடெ³த³³ரு நதி³கெ³ ||82**

ஆறடி கூந்தல்களை கொண்டவர்கள், யானை போல மெதுவாக நடப்பவர்கள், பெரிய மார்பு கொண்ட பெண்கள், மன்மதனின் மனதை மயக்கச் செல்பவர்கள் போல, அனைத்து பெண்களும் நதிக்கு நடந்தனர்.

**கும்ப[4]குசதோ[3]ரு குடி[3]தெக[3]ங்க[3]ளோரு**
**பி[3]ம்பா[3]த[4]ர காந்தெயரு**
**ஹொம்பா[3]ளெயெஸலின ஸுளிகாந்தெயரு ரம்பே[4]ரு**
**நடெ[3]த[3]ரு நதி[3]கெ[3] ||83**

கும்பத்தை போன்ற மார்பு கொண்டவர்கள், மெதுவாக நடப்பவர்கள், சிவந்த இதழ்களை கொண்டவர்கள், வாழைப்பூ போன்ற மென்மையான பெண்கள், ரம்பை போல அழகானவர்கள் ஆகியோர் நதிக்கு உடன் நடந்தனர்.

**குடிலகுந்தளெயரு கோமலாங்கி[3]யரு**
**செந்து[3]டிய செல்வின சபளெயரு**
**ப[3]டுவு பொம்பு[3]குரிகுசத[3] பா[4]வகியரு**
**நட[1]ணெயிந்தெ[3]ல்ல நடெ[3]த[3]ரு ||84**

சிறு கூந்தல் கொண்டவர்கள், மென்மையான உடல் கொண்டவர்கள், செம்மையான உதடுகளைக் கொண்ட பெண்கள், வட்டமான, வாழைப்பூ போன்ற மார்புகளைக் கொண்ட பெண்கள், ஆகியோர் நடனமாடியவாறு நதிக்கு நடந்தனர்.

**சஞ்சலாக்ஷியரு சாருவத[3]னெயரு மிஞ்சுவ**
**ஸுளிப[1]ல்லினவரு**
**பஞ்சபா[3]ண மும்மொனெய ஸோலிஸுவந்த[2]**
**அஞ்ஜெகா[3]தியரு நடெ[3]த[3]ரு ||85**

படபடக்கும் கண்களைக் கொண்டவர்கள், அழகான முகம் கொண்டவர்கள், ஒளிரும் பற்களைக் கொண்டவர்கள்,

மன்மதனின் சூலத்தை வெல்வதைப் போன்ற அழகான பெண்கள் உடன் நதிக்கு நடந்தனர்.

**நாரியரந்தண போ⁴ரனெ நடெ³த³வு ராஜகுமாரிய கூடெ³**
**தூ³ரதி³ந்த³லெ கண்ட³ரு ஆ நதி³யனு கார்முகி³லந்தெ ரஞ்ஜிஸிது**
**||86**

பெண்களின் கூட்டம் மெதுவாக நடந்தது. அந்த ராஜகுமாரியுடன். அந்த ஆற்றினை தூரத்திலிருந்தே கண்டனர். அது, கார்முகிலைப் போல அழகாக பாய்ந்திருந்தது.

**ஹொளெவ மீன்க³ளு முத்தின சிப்புத³ந்தஹவு**
**அள்ளெக³ளு ஆணிமுத்துக³ளு**
**பி³ளிதா³வரெய ஶாரதெ³ முக²கமலதொ³ள்**
**அளிக³ளு ஜக்கவக்கிக³ளு ||87**

ஒளிரும் மீன்கள், முத்துச் சிப்பி போல இருந்தன. நண்டுகள். முத்துக்கள் வெண் தாமரையில் அமர்ந்திருக்கும் சரஸ்வதி தேவியின் முக கமலத்தைப் போன்ற அன்னங்கள் அங்கு இருந்தன.

**நளினமுகி²யரு ஹொன்னந்த³ண இளித³ரு**
**தளிதமாவின தம்பஸேரி**
**மளலகொ³ட்டு விஸ்தாரத³ல்லி நீரதடி³யல்லி**
**கு³டா³ரனொய்த³ரு ||88**

அழகான முகம் கொண்டவர்கள் தங்கள் பல்லக்கிலிருந்து இறங்கினர். பாயும் நதியின் கரைக்கு வந்து, அந்த மணலில் மிகவும் விஸ்தாரமாக கரையில், கூடாரங்களை அமைத்தனர்.

**ஸெளெமஞ்சத³ மேலெ ஶ்ரமவ தம்பி¹ஸித³ரு**
**ரவியு மத்³யான்ஹக்கெ ப³ரலு**
**ரமணியரெல்லரு கரக³ள பிடி³த³ரு இளித³ரு**
**ஶரதி⁴ய ஒளகெ³ ||89**

படுக்கைகளில் படுத்து தங்களை சோர்வை நீக்கிக் கொண்டனர். சூரியன் மதிய நேரத்தில் மேலே வர, பெண்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் கைகளை பிடித்துக் கொண்டு, ஆற்றில் இறங்கினர்.

**இட்டாப[4]ரணவ நடி[3]லிஸி கடெ[3]கி[3]ட்டு உட்டரெ ஸுக்**
**ஷ்மதொஸ்த்ரவனு**
**மத்தவாரண கத[3]ளீவன பொக்கந்தெ ஹொக்கரெ ஶரதி[4]ய ஒளகெ[3]**
**||90**

அணிந்திருந்த ஆபரணங்களை பத்திரமாக கழற்றி வைத்து, வேறு ஆடைகளை அணிந்தனர். மத யானையானது வாழைத் தோட்டத்தில் நுழைந்ததைப் போல, நதிக்குள் அவர்கள் இறங்கினர்.

**ஸிரிமுடி[3] பி[3]ட்டரு ஶரதிய நதி[3]யல்லி சமரிய ம்ருக[3] பொக்கந்தெ**
**கரதொ[3]ளகு[3]தகவ தும்பி[3] செல்லுதலிரெ அரளுமல்லிகெ[3]**
**உது[3]ருவந்தெ ||91**

தங்களின் கூந்தலை அவிழ்த்து நதியில் பரப்பினர். அது கவரிமா என்னும் ( நீண்ட முடிகளைக் கொண்ட) மாட்டு இனத்தைப் போல இருந்தது. கைகளில் தண்ணீர் நிரப்பி இறைத்தனர். அது மலர்ந்த மல்லிகை மலரை உதிர்ப்பதைப் போல இருந்தது.

**இத்தலெ ஸ்த்ரீயருன்மத்தத[3]லாட[3]லு பக்வவாயிது ப[2]லகால**
**(அம்ப[3]ரத[3]லி) ஸுரகன்னிகெ ஸுளியலு ஆ க்ஷண பி[3]ந்து[3]**
**ஸடி[3]லித[3]வு ||92**

இவ்வாறு பெண்கள் அனைவரும் தண்ணீரில் விளையாடிக் கொண்டிருக்க, தக்க காலம் கனிந்தது. வானில் தேவதைகள் அவர்களின் அருளால், அந்த நொடியில் (உத்தாளிகனின்) வீரியம் இறங்கியது.

**முகு³(ளம்பு³) முனிபன ஹ்ருத³யதி³ நெட்டவு ஸடி³லித³வு பி³ந்து³ ஶீக்⁴ர**
**கமலத³ ஹுவினொளிட்டு ப³ந்தி⁴ஸி பா³ளெ ஸுளியல்லி**
**தந்த³ட³கித³னு ||93**

தவம் செய்யும் முனிவர் உத்தாளிகனின் இதயத்தில் அன்பு பெருகி, வீரியம் விரைவில் இறங்கியது. அதனை ஒரு தாமரைப் பூவில் வைத்து கட்டி, வாழை மட்டையில் வைத்து கட்டினான்.

**ஈரேளு கா³வுத³ முனியிப்ப ஆஶ்ரம மேலுபா⁴க³த³லிருதிஹுது³**
**நீரிடி³யொள் தேலி முளுகு³த ப³ந்தி³து வாரிஜக³ந்தி⁴யித்³தெ³டெ³கெ³ ||94**

முனிவரின் ஆசிரமம், ஈரேழு மைல்கள் மேலே இருந்ததால், அந்த தாமரைப்பூ தண்ணீரில் நீந்தி, மூழ்காமல், சந்த்ராவதி இருந்த இடத்திற்கு வந்தது.

**மீரபா³ரது³ ஹரியகுமாரன லிகி²தவ நாரி தானாக்⁴ராணிஸித³ளு**
**ஏரிது உத்தமாங்க³த³லி ஆ க³ர்ப்ப⁴வு நாபி⁴ய கமலகி¹ளித³வு ||95**

ஸ்ரீஹரியின் மகனான மன்மதனின் விருப்பத்தை யாராலும் மாற்ற முடியாது. சந்த்ராவதி, அந்த பூவை எடுத்து முகர்ந்து பார்த்தாள். அதிலிருந்து வந்த கர்ப்பமானது, அந்தப் பெண்ணில் ஏறியது, நாபிக் கமலத்தில் சென்று சேர்ந்தது.

**ஜலக்ரீடெ³யாடி³ ப³ளலி பெ³ண்டா³த³ரு தருணீரு**
**தடி³கெ³ ஸேரித³ரு**
**அளவடி³ஸித³ரு ஸடி³லித³ பூ⁴ஷணக³ள ஸிரிமுடி³**
**பிடி³து³ கட்டித³ரு ||96**

ஜலக்ரீடை ஆடி, அனைத்து பெண்களும் மிகவும் சோர்ந்தனர். கரைக்கு வந்தனர். அவிழ்ந்திருந்த ஆடை, ஆபரணங்களை சரி செய்தனர். கூந்தல்களை கட்டி முடிந்தனர்.

**ஆரடி³கு³ருளிகெ³ ஊதி³ன ஹொகெ³தோ³ரி**
**நாரீரு மடி³தெ³ண்ணெக³ண்டு**
**வே(ணெய) கஸ்தூரிய லலாடத³லிட்டரு**
**பாவன்னக³ந்த⁴ பூஸித³ரு ||97**

ஆறடி நீளமாக இருந்த அந்தப் பெண்னின் கூந்தலுக்கு சாம்ப்ராணி புகை போட்டு, அதை நன்றாக முடிச்சு போட்டு கட்டினர். பின்னர், கஸ்தூரியை அவளது நெற்றியில் வைத்து பூசினர். சிறந்ததான சந்தனத்தை அவளுக்கு பூசினர்.

**உத்தம நதி³யலி மிந்து³ வஸிஷ்டகெ³ கொட்டரெ தா³னத³க்**
**ஷிணெய**
**முத்தைதே³ரிகெ³ மரத³ பா³கி³ன கொட்டு**
**ம்ருஷ்டான்னவனுணிஸித³ரு ||98**

உத்தமமான நதியில் நீந்தி, பின்னர், வஸிஷ்டருக்கு சிறந்த தான தக்ஷிணைகளை கொடுத்தனர். சுமங்கலிப் பெண்களுக்கு முறதபாகிண கொடுத்து, சுவையான உணவுகளை செய்து பரிமாறினர்.

**உண்டு³ கை தொளெத³ரு கொண்டு³ தாம்பூ³லவ**
**ரம்பே⁴ரு விஸ்ரமிஸித³ரு**
**அம்பு³ஜமித்ர மத்³யான்ஹ தா³ரிய மீரெ**
**அந்த³ணக³ளனேரித³ரு ||99**

அனைவரும் உண்டு கை கழுவினர். தாம்பூலம் தரித்தனர். அனைத்து பெண்களும் ஓய்வு எடுத்தனர். தாமரையின் நண்பனான சூரியன் மதிய நேரத்தில் தன் வழியில் சென்று கொண்டிருக்க (மறையத் தொடங்க) பெண்கள் தங்களின் பல்லக்குகளில் ஏறினர்.

**நாரியரந்த³ண போ⁴ரனெ நடெ³த³³வு**
**ஊரஹொரகெ³ உளியத³ந்தெ**
**வாரிஜமித்ர பஸ்சிம தி³க்கி³கிளியலு**

**தாராபதி உதி³ஸித³னு ||100**

பெண்களின் பல்லக்குகளின் வரிசை நடந்து, ஊருக்கு வெளியே வந்து நின்றது. சூரியன் மேற்கு திசையில் இறங்கத் தொடங்க, அப்போது சந்திரன் உதயமாகிறான்.

**நக³ரவ ஹொக்கரு ராஜகன்னிகெயரு ப³கெ³ ப³கெ³ வாத்³யக³ளிந்த³ ம்ரு(க³)மத³³க³ந்தி⁴ உப்பரிகெ³யனேரித³ள் ஸுத³³தீர கரக³ள பிடி³து³ ||101**

ராஜ பெண்கள் அருகில் இருந்த நகரத்திற்கு சென்றனர். பற்பல வாத்திய இசைகளுடன் அவர்கள் நடந்தனர். யானை போல நடை கொண்ட சந்த்ராவதி, தன் தோழிகளின் கைகளை பிடித்துக் கொண்டு உப்பரிகை மேல் ஏறிச் சென்றாள்.

**அச்சமல்லிகெ³ய ஹாஸுவரு பரியங்கக்கெ இட்டரெ தீ³பரத்னவனு கஸ்தூரிக³ந்த⁴ தாம்பூ³ல சாமரதி³ந்த³ மித்ரெயனுபசரிஸித³ரு ||102**

படுக்கைக்கு செண்டு மல்லிகையை கொண்டு அலங்கரிக்கின்றனர். தீபங்களை கொண்டு வந்து வைத்தனர். சந்த்ராவதிக்கு கஸ்தூரி சந்தனம், தாம்பூலம் ஆகியவற்றை கொடுத்து, சாமரங்களால் அவளை (தங்களின் தோழியை) உபசாரம் செய்தனர்.

**திங்க³ளு தும்பி³து கங்க³ளு ப³ளெபி³ட்டு ஸர்வாங்க³ ப³ட³வாகி³ தோரித³வு**
**ஹொம்பண்ணவேரிது ஹொளெவ தே³வாங்க³வு தும்பி³த³ கொள ஸுஸுவந்தெ ||103**

மாதங்கள் உருண்டன. கண்களில் வளையங்கள் வந்தன. மொத்த உடலும் உலர்ந்து காணப்பட்டது. தேகம் தங்கமயம் ஆனது. நிரம்பிய குளம் பளபளப்பதைப் போல உடல் ஆனது.

**மாஸவெரட³ரலி மஞ்சதி³ந்தி³ளியளு பூ¹ஸளு க³ந்த⁴கஸ்தூரிய**
**லேஸாத³ பஞ்ச பரமான்ன ம்ருஷ்டான்னத³ வாஸனெ**
**ஸேரத³ங்க³னெகெ³ ||104**

இரண்டாம் மாதத்தில் மஞ்சத்திலிருந்து அவள் இறங்கவில்லை. சந்தன, கஸ்தூரிகளை அவள் பூசிக் கொள்ளவில்லை. பஞ்ச பரமான்ன, ம்ருஷ்டான்ன ஆகியவற்றின் லேசான வாசனைகூட அவளுக்கு சேரவில்லை.

**மஞ்சதி³ந்தி³ளியளு மண்டெ³ய கட்டளு து³ண்டு³மல்லிகெ³ய**
**முடி³யளு**
**க²ண்ட³ஸக்கரெ நொரெஹாலு பரமான்னவ கண்ட³ரெ**
**முக²தி³ருஹுவளு ||105**

மஞ்சத்திலிருந்து அவள் இறங்கவில்லை. தலையில் கூந்தலை அள்ளி முடிவதில்லை. துண்டு மல்லிகையை சூடுவதில்லை. கல்கண்டு போட்ட, பால் கலந்த பரமான்னத்தை பார்த்தாலே முகத்தை திருப்பிக் கொள்கிறாள்.

**முச்சித³ கண்ண தெரெது³ மாதாட³ளு பஜ்ஜெமஞ்சத³லோரகி³ஹளு**
**புத்ரிகெ³ து³கு³ட³விமடி³ஸிதெந்து³ அவர ஹெத்தாய**
**ஒட³னருஹித³ரு ||106**

மூடிய கண் திறந்து அவள் பேசுவதில்லை. அவளுடைய படுக்கையிலிருந்து அவள் இறங்குவதில்லை. சந்த்ராவதிக்கு ஜ்வரம் அதிகரித்துவிட்டது என்று பெண்கள், அவளுடைய தாயிடம் சென்று கூறினர்.

**நுடி³த³ மாதனு கேளி கடு³ ஶீக்⁴ரதி³ந்த³லி நடெ³தந்து³ மக³ள**
**பி³கி³த³ப்பி**
**முடி³ய நேவரிஸி முத்³தி³ஸி தொடெ³யொளகி³ட்டு**
**து³கு³ட³வேனெந்து³ கேளித³ளு||107**

தோழிகள் கூறிய வார்த்தைகளை கேட்டு, மிகவும் விரைவாக, அந்த தாய், சந்த்ராவதியிடம் வந்து, அவளை கட்டியணைத்து,

தலை கோதி, முத்தம் கொடுத்து, அவளை தன் துடையில் வைத்து, ஏன் ஜ்ரம் ? என்ன பிரச்னை? என்று கேட்டார்.

**பெ³ச்சித³ ஜலதீ³லி குமாரியு த்³ருஷ்டிதாகிதோ ப³ஹுஜனர**
**இட்டளெ ப⁴ஸிதவ பஞ்சாக்ஷரியிந்த³ கட்டித³ள் யந்த்ரக்**
**ஷெயனு||108**

தண்ணீரில் (ஆற்றில்) குளித்ததால் ஜ்ரம் வந்ததோ? பல பேரின் த்ருஷ்டி தாக்கியதோ?. நமசிவாய என்னும் பஞ்சாக் ஷரத்தினை ஜெபித்து, மருந்து கொடுத்தாள். யந்த்ர, அக் ஷதையை அவளுக்கு கட்டினாள்.

**மக³ள மன்னிஸி மந்தி³ரகாகி³ ப³ந்த³ ஸ்ரு குலத³ தெ³ய்வக்கெ**
**பே³டி³கொண்டு³**
**தனுஜெகெ³ ஒள்ளிதாத³ரெ ஸஹஸ்ரஜனகெ போ⁴ஜனவனு**
**மாடி³ஸுவெ ||109**

மகளிடம் விடை பெற்றுக்கொண்டு தன் இடத்திற்குத் தாய் திரும்பினாள். குலதெய்வத்தை வேண்டிக் கொண்டாள். தன் மகளுக்கு உடல் நிலை சரியாகிவிட்டால், ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்கிறேன் என்று வேண்டிக் கொண்டாள்.

**நளினத³ளாக்ஷிகெ³ திளித³வு ப³யகெயு எளெஹுளி**
**மது⁴ரவாகி³த்³த³³**
**களித க²ர்ஜுர கித்தளெ ஜம்பு³னேரளெ ப²லக³ளபேக்ஷெ**
**மாடு³வளு||110**

தனக்கு இந்த பொருட்களெல்லாம் பிடிக்கிறது என்று சந்த்ராவதிக்கு தெரிந்தது. புளிப்பான பொருட்கள், சுவையான பழமான கர்ஜுர, எலுமிச்சை, நாவல் பழம், ஆகிய பழங்களை அவள் விரும்பினாள்.

**அம்பு³ஜனயனெ அபேக்ஷெய மாடி³த³³ள் நந்த³தி³**
**ரிஷிபத்னியரொட³னெ**
**கந்த³மூலப²லவ திந்து³ ஸைரிஸிகொண்டு³ கெந்த³ளிர**
**லொரக³பே³கெந்து³||111**

அங்கிருந்த ரிஷிபத்னிகளிடம், தாமரைக் கண்களைக் கொண்டவளான சந்த்ராவதி இவ்வாறான தன் விருப்பத்தை கூறினாள். மூலிகை, பழம் ஆகியவற்றை தின்று, இலை, தளிர்களை உண்ண வேண்டும் என்று கூறினாள்.

**துரிகா³யி கடு³பு³ கப்பள பெ³ல்ல மண்டி³கெ³ எரெயப்ப**
**அதிரஸக³ளனு**
**ஹுரிக³ட³லெ ஸுஸலட³ஸித³ ஸக்கரெ பு³ருடெ³ பேணிக³ள**
**ப³யஸுவளு||112**

பழுக்காத காய்கள், கடுபு, அப்பள, வெல்லம், மண்டிகெ, அப்பம், அதிரசம், கொண்டைக் கடலை, சக்கரை கலந்த இனிப்பு வகைகள், பேணி ஆகியவற்றை அவள் விரும்பினாள்

**ஹா தாங்கு³ பே³ தாங்கு³ எள்ளு மண்டி³கெ³**
**க்⁴ருதவளிய பெ³ண்ணெ சக்குலியு**
**ஸண்ண சஜ்ஜிகெ³ ஶேவிகெ³ பரமான்னவ உண்ணபே³கெந்து³**
**ப³யஸித³ளு||113**

(இந்த பொருட்களை) மேலும் மேலும் (வேண்டும் என்று விரும்பினாள்). எள், மண்டிகை, தயிர், வெண்ணெய் தடவிய முறுக்கு, ஸஜ்ஜிகெ, சேமியா ஆகிய பாயசங்கள், ஆகியவற்றை உண்ண வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

**நவனாரி குஞ்சர பஞ்ச துரங்க³வு**
**நவபரியிந்த³ ரஞ்ஜிஸுவ**
**பி³டு³ ஹுலிகெ³ பு⁴ஜத³ ஹஸுர குப்பஸவ**
**தொட³பே³கெந்து³ ப³யஸித³ளு||114**

நவ நாரி குஞ்ஜர, பஞ்ச நாரி துரங்க ஆகிய (விளையாட்டுகளை) விரும்பினாள். பற்பல விதமாக விளங்கும் ஆடைகள், தோள் அணிகலன்கள், ரவிக்கைகளை அணிய வேண்டும் என்று விரும்பினாள்.

**நால்கு திங்க³ளிகெ³ நிடி³கே³ஶ கவலொடெ³த³³வு**
**பா³ஸெ கப்ஹத்தி தோரித³³வு**
**காந்தெகெ³ க³ர்ப்ப⁴ உன்னதவாகி³ பெ³ளெயிது பூ⁴தளகெ**
**ரவியிளித³³ந்தெ||115**

நான்கு மாதங்கள் வயிறு பெரியதாக ஆகத் தொடங்கியது. கண்கள் கறுப்பாக ஆகத் தொடங்கியது. பெண்ணிற்கு அந்த கர்ப்பம், சிறப்பாக வளர்ந்தது. பூமிக்கு சூரியன் இறங்கி வந்ததைப் போல இருந்தது.

**ரம்பெ⁴ய குசத³³லி தும்பி³³து க்ஷீரவு**
**இம்பு³கொண்ட³³வெ ஸுளினாபி⁴**
**ஹொம்ப³ண்ணவேரிது ஹொளெவ தே³³வாங்க³³வு தும்பி³³த³³**
**கொள ஸுஸுவந்தெ||116**

பெண்ணின் மார்பில் பால் கட்டியது. அவளுடைய நாபி தங்கமயமாகியது. உடல் ஒளிர்ந்தது. நிறைந்த குளம் வழிவதைப் போல.

**மத்ஸ்ய மாணிக நுங்கி³³ இப்ப தெரனந்தெ**
**ஸுப்பணிய முத்தினந்தெ**
**கப்புகொண்ட³³வெ குச கொனெயல்லி நகெ³முக²**
**த³³ர்ப்பணத³³ந்தெ ராஜிஸிது||117**

மீன் ஒரு மாணிக்கத்தை முழுங்கியதைப் போல, கிரீடத்தில் இருக்கும் முத்தினைப் போல, மார்பு கருப்பானது. அவளது முகம் கண்ணாடியைப் போல பளபளத்தது.

**இருதொந்து³ தி³வஸ கரெஸித³ள் குமாரிய**
**விவரிஸி நோடி³ க³ர்ப்ப⁴வனு**
**எதெ³யொளலகு³ நெட்டந்த³தி³ பி³த்³த³ஞ மக³ள**
**காணுத த⁴ரெ மேலே||118**

இவ்வாறாக ஒரு நாள், தாயானவள், மகளை அழைத்து, அவளை விசாரித்துப் பார்த்து, கர்ப்பத்தைப் பற்றி அறிந்து, மயக்கமடைந்து விழுந்தாள் தாய்.

**இக்கெலத³ ஸதியரு எத்தி ஸந்தெயிஸோரு**
**பட்டெமஞ்சத³லிரிஸுவரு**
**ஒத்துவரு ஸெரக³ தந்து³ நயனக்கெ**
**மித்ரெயனுபசரிஸுவரு ||119**

அங்கிருந்த பெண்கள் அவளை தூக்கி சமாதானம் செய்தனர். நல்ல படுக்கையில் படுக்க வைத்தனர். புடவைத் தலைப்பைக் கொண்டு கண்களை துடைத்தனர். இவ்வாறாக தோழிகள் உதவி செய்தனர்.

**மனதொ³ளக்³யோசிஸி மைமுரிதெ³த்³த³ஞ**
**க³த³ரிஸித³ஞ கெ¹ளதி³யர**
**மரெமாசபே³டி³ என்னொட³னெ குமாரிகெ³**
**வரனாரெந்து³ கேளித³ஞ||120**

பின், அரசி, மனதில் நன்றாக யோசித்து, சோம்பல் முறித்தவாறு எழுந்தாள். தோழிகளை பயமுறுத்தினாள். என்னிடம் எதையும் மறைக்காதீர்கள். பெண்ணுக்கு வரன் யார் என்று சொல்லுங்கள் – என்று கேட்டாள்.

**கரெஸித³ளாத்மஜெ காபினி ஸதியர க³த³ரி க³ர்ஜிஸி கேளித³ஞ**
**த⁴ரணீஷ கேளித³ரெ கிவி மூக³ கோயிஸுவ**
**துருப³கொய்த³ட்டுவ நிம்ம||121**

பெண்ணுக்கு புதிய ஆடைகளை தருவித்தாள். தோழிகளை பயமுறுத்தி, கர்ஜித்து கேட்டாள். இந்த செய்தியை அரசன்

கேட்டால், உங்கள் காது மூக்கு ஆகியவற்றை பிய்த்து விடுவான். உங்களுக்கு கடும் தண்டனையை கொடுப்பான்.

**தண்ட³ தண்ட³த³ த்³வாரத³ல்லி காதி³த்³தி³ரி (த³ண்ட³வ**
**ஹிடி³து³ ரக்ஷிபிரி**
**கண்டு³னொணவு இத்த ஸுளியலாரது³ இல்லி**
**ப³ந்த³வராரெ மந்தி³ரகெ||122**

அனைத்து வாயில்களிலும் கூட்டம் கூட்டமாக நின்று காக்கிறீர்கள். தண்டத்தை பிடித்து காக்கிறீர்கள். ஒரு பூச்சி கூட இங்கே பறக்கமுடியாது. அப்படியிருக்கையில், இங்கு வந்தவர் யார்? என்று சொல்லுங்கள் என்றாள்.

**தப்பனாடெ³வு தாயி நிம்ம குமாரிகெ³**
**ஸ்வப்னத³ல்லி காணெ புருஷன**
**லக்ஷ்மிய பதி ப³ல்ல உத்பத்தி ஸ்திதி²க³ள மிக்க**
**மானவரிகி³ன்னளவெ||123**

நாங்கள் பொய் சொல்லவில்லை தாயே. உங்கள் பெண், தன் கனவில் கூட ஆண்களை காண்பதில்லை. இதனை ஸ்ரீஹரியே அறிவார். படைத்தல், அழித்தல் ஆகியவற்றை அவரே அறிவார், மற்றவர்களுக்கு எப்படி தெரியும்?

**முட்டுவுதெ³ மரிது³ம்பி³ ஸம்பிகெ³யன்னு கப்பெ**
**முட்டுவுதெ³ உரக³ன**
**மத்ஸ்யக்கெ உரி ஸோகுவுது³ண்டெ குமாரிய**
**முட்டலம்மனெ பரபுருஷ||124**

சிறிய தும்பி சென்று ஸம்பிகையை தொடுமா?. தவளை தானாக சென்று பாம்பினை தொடுமா?. மீன், பூனையை நட்பு கொள்ளுமா? அதைப் போல, குமாரியும் வேறு எந்த புருஷனையும் தொடவில்லை.

**கேளிதரரஸு குமாரியகஸுவனு**
**ஹீரிபி³டு³வ க்ஷணதொ³ளகெ³**
**பா³ளுவ தெரனில்ல மரணகு¹பாயவ**
**காணெனெனுத மருகி³த³ளு||125**

அரசி தன் மகளின் நிலைமையை கேட்டாள். இவ்வாறான நிலைமையில், வாழும் திறன் தனக்கு இல்லை. மரணத்திற்கான உபாயமும் தனக்கு தெரியவில்லை என்று மருகினாள்.

**க³ளவ கொட்டு மக³ள கொலுவெனெ ஸ்த்ரீஹத்யா**
**களெவெனெ ஆத்மகா⁴தகியு**
**மடு³வ து⁴முகித³ரு உத்தம க³தியில்லவு**
**மரணகு³பாயவேனெந்து³||126**

விஷத்தைக் கொடுத்து மகளை கொல்லுவேன். ஸ்த்ரீ ஹத்யா தோஷத்தை எப்படி போக்குவேன்?. குலத்தை கெடுத்தவளே? குளத்தில் குதித்து இறந்தாலும், உத்தம கதி இனி எனக்கு இல்லை. என் மரணத்திற்கு என்ன உபாயம் என்று அழுதாள்.

**பரபரி து³:க்க²தி³ ஹொரளுவ தாயிய கண்டு³**
**நடெ³த³ளெ தன்னரமனெகெ³**
**தொடி³கெ³ ஆப⁴ரணவ ஸடி³லிஸி கடெ³கி³ட்டு முடி³ய**
**பி³ட்டு ஹொரளித³ளு||127**

இவ்வாறு பற்பல விதமாக அழுது புலம்பும் தாயைக் கண்டு, மகள் தன் இடத்திற்கு திரும்பினாள். தன் அனைத்து ஆபரணங்களையும் அவிழ்த்து, தன் கூந்தலை அவிழ்த்து, படுக்கையில் புரண்டாள்.

**இட்டாப⁴ரணவ ஸடி³லிஸி கடெ³கி³ட்டு உட்டளெ**
**மலினதொ³ஸ்த்ரவனு**
**ஹொத்தபனிந்த்யக்கெ க³தியேனெனுதலி ஹொட்டெய**
**ப³டி³த்ஹொரளித³ளு||128**

அனைத்து ஆபரணங்களையும் அவிழ்த்து வைத்து, மெலிதான வஸ்திரங்களை அணிந்தாள். தனக்கு வந்த அவமானத்திற்கு என்ன கதி என்று கூறியவாறு, வயிற்றில் அடித்துக் கொண்டு உருண்டாள்.

**லிங்க³ பூஜெய மாடி³த³³வர நிந்தி³ஸிதெ³னோ**
**நிந்தி³ஸிதெ³னோ ஸாது⁴ஜனர**
**வந்தி³ஸத்³³ஹோதே³னோ கு³ருஹிரியர சரணக்கெ**
**ப³ந்தி³தெனகெ³ அபனிந்த³³ய||129**

சிவனின் பூஜையை செய்த பக்தர்களை நான் திட்டினேனா?. ஸாது ஸஜ்ஜனர்களை நான் திட்டினேனா?. குரு, மூத்தவர்களை, அவர்களின் கால்களில் விழுந்து நான் வணங்காமல் விட்டேனோ?. வந்ததே எனக்கு கெட்ட பெயர்.

**கொட்டெனெம்போ³ர நுடி³ கொடி³ஸதெ³ ஹோதே³னோ கஷ்டக்கெ**
**ஒளகு³ மாடி³தெ³னோ**
**விஷ்ணு பூஜெய மாடி³த³³வர நிந்தி³ஸிதெ³னோ**
**ஹொத்திதெனெகெ³ அபனிந்த³³ய||130**

கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டு கொடுக்காமல் போனேனோ, பிறரை கஷ்டத்தில் ஆழ்த்தினேனோ, விஷ்ணுபூஜையை செய்தவர்களை திட்டினேனோ, இவ்வாறு வந்ததே எனக்கு கெட்ட பெயர்.

**மாடு³வ பூஜெய நோட³தெ³ ஹோதெ³னோ நோய**
**நுடி³தெ³னோ ஸாது⁴ ஜனர**
**தாயிதந்தெ³ மாத மீறி நா நடெ³தெ³னோ**
**ஆயிதெனகெ³ அபனிந்த³³ய||131**

பிறர் செய்யும் பூஜையை பார்க்காமல் போனேனோ, ஸாது ஸஜ்ஜனர்களிடம் கெட்டவற்றை பேசினேனோ, தாய் தந்தையரின் பேச்சினை மீறி நான் நடந்தேனோ, இவ்வாறு வந்ததே எனக்கு கெட்ட பெயர்.

**இத்³தா³க³ உண்ணதெ³ ஒட³ல த³ண்டி³ஸிதெ³னோ**
**க்ஷுத்³ரதனவ மாடி³தெ³னோ**
**வித்³யார்த்தி²க³ளிக³ன்னவனிக்கத்ஹோதே³னோ**
**ஹொத்திதெனகெ³ அபனிந்த்³ய||132**

உணவு இருந்தபோது, அதனை உண்ணாமல் உடலை தண்டித்தேனோ?. கஞ்சனாக இருந்தேனோ?. வித்யார்த்திகளுக்கு அன்னம் கொடுக்காமல் போனேனோ?. இவ்வாறு வந்ததே எனக்கு கெட்ட பெயர்.

**பரிபரி து³க்க²தி³ஹொரளித³ளங்க³னெ ஹரித³வு**
**இருளினோலக³வு**
**பரிவாரக்கெ அப்பணெகொ³ட்டு ராயனு நடெ³த³னெ**
**தன்னரமனெகெ³||133**

இவ்வாறு பற்பல விஷயங்களை நினைத்து துக்கத்தில் விழுந்தாள் அந்தத் தாய். இவ்வாறு அன்று இரவும் வந்தது. பிறகு தன் குடும்பத்தைவிட்டு அரசன் தன் அரண்மனைக்கு திரும்பினான்.

**ஓலக³ ஹரிது³ பூ⁴பால தா ப³ருதிரெ மார்ஜால**
**அட்³ட³க³ட்டித³வு**
**வாயஸங்க³ளு எட³னாத³வு கெள³ளியு ராவின**
**மேலெ சேரித³வு||134**

தன் அரண்மனைக்கு அரசன் திரும்பி வந்து கொண்டிருக்கையில், அப்போது அவனுக்கு பூனை குறுக்கிட்டது. காக்கைகள் கத்தின. பல்லி இரவின் அமைதியை மீறி கத்தியது.

**தாரெக³ளுது³ரித³வு ராயன எது³ரலி**
**தூ⁴மகேதுக³ளுதி³ஸித³வு**
**ஏனிது³ அபஜயவெனுதலெ ராயனு த்⁴யானிஸி**
**முந்தெ³ நடெ³த³னு||135**

நட்சத்திரங்கள் விழுந்தன (மறைந்தான்). எதிரில் சூரியன் போன்றதான நட்சத்திரம் உதித்தது. என்ன இது, தொடர்ந்து அபசகுனங்களாக இருக்கிறதே என்று நினைத்து அரசன் நடந்தான்.

**எளெஹுல்லனொல்லவு எரளெய மரிக³ளு**
**த³னிதோ³ரதி³ஹவு கோகி³லெயு**
**க³ரிய பி³ட்டாட³லொல்லவு மயூரவு**
**நுடி³யலொல்லவு அரகி³ணியு||136**

சிறுத்தைக் குட்டிகள் புல்லை தின்னாது. குயிலின் குரல் என்றும் குறையாது. தோகையை விரிக்காமல் மயில் ஆடாது. கிளி பேசாமல் இருக்காது.

**அரமனெ ஹொக்கனு நெரெதி³த்³த³ ஸதியரு**
**கரவிட்டு கத³பின மேலெ**
**தரதரத³ல்லி நிந்தித்³த³ரு சித்ரத³ல்லரெத³**
**புத்த²ளியந்த³த³லி||137**

இவ்வாறெல்லாம் சிந்தித்தவாறு அரசன் தன் அரண்மனைக்கு திரும்பினான். அங்கிருந்த பெண்கள் அனைவரும் கவலையில் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு காத்திருந்தனர். வரைபடத்தில் இருக்கும் பொம்மைகளைப் போல நின்றிருந்தனர்.

**ஒளகெ³ ஹொக்கனு கெலப³லவனீக்ஷிஸுதலெ ஸுளிவ**
**காணதெ³ தன்ன ஸதிய**
**ஸுளிபா³ளெயு பி³ருகா³ளிகெ³ பி³த்³த³ந்தெ மலகி³த்³த³**
**ஸதியள கண்டு³||138**

தன் மனைவியை தேடியவாறு வந்தவர், அவளைக் காணாமல் தேடினார். பின்னர், மனைவியைக் கண்டவுடன், சூறாவளிக்கு வாழை மரம் விழுந்து சாய்ந்ததைப் போல விழுந்தார்.

**ಸರಳ ತಾಕಿತ[3] ಹ್ರುಲ್ಲೆಯಂತ[3]ತಿ[3] ಪೆ[3]ಟ[3]ನ ಪ[3]ಲೆಕೆ[3]**
**ಸಿಕ್ಕಿತ[3] ಪಕ್ಷಿಯಂತೆ**
**ಅರಕಾ[3]ಯ ಹೊಂತ್ತಿ[3]ತ[3] ನಾಕ[3]ರಮರಿಯಂತ[3]ತಿ[3]**
**ಹೊರಳ್ತುತ್ತಿತ[3]ತ[3]ಳೆ ತ[4]ರೆಮೇಲೆ||139**

ನೆರುಪ್ಪು ತಾಕ್ಕಿಯ ಪುಲ್ಲಿನೆಪ್ ಪೋಲ, ವೇಟನಿನ್ ವಲೆಯಿಲ್ ಸಿಕ್ಕಿಯ ಪಱವೈಯೈಪ್ ಪೋಲ, ಕಾಯಂ ಪಟ್ಟ ಪಾಂಪಿನೈಪ್ ಪೋಲ, ಅರಸನ್/ ಅರಸಿ ಪೂಮಿಯಿಲ್ ವಿೞುನ್ತು ಪುಲಂಪಿನಾನ್.

**ಏರಿತ ರಾಯ ಮಂಚವ ತನ್ನ ಅರಸಿಯ ಮೇಲ್**
**ಪಾ[4]ಷೆಯಿಂತ[3] ಕುಳ್ಳಿರಿಸಿ**
**(ಏಣ) ಲೋಚನೆ ನಿನ್ನ ಮನಸೆರಟಾ[3]ತ[3]**
**ಆ ಕಾರಣವೇನು ಹೇಳೆಂತ[3]||140**

ಅರಸನ್ ತನ್ ಪಡುಕ್ಕೈಯಿಲ್ ಅಮರ್ನ್ತು, ಪಡುತ್ತಿರುನ್ತ ಅರಸಿಯೈಪ್ ಪಾರ್ತ್ತು, ಅವಳೈ ಅಮರ್ತ್ತಿ ಇವ್ವಾಱು ಕೇಟ್ಟಾನ್. ಹೇ ಪೆಣ್ಣೇ, ಉನ್ ಮನಂ ಇರಂಡಾನತನ್ ಕಾರಣಂ ಎನ್ನ ಎನ್ಱು ಸೊಲ್? ಎನ್ಱಾನ್.

**ವಿಕಸಿತನಯನೆ ಎನ್ನೊಳ್ಳು ಕೋಪವೇತಕೆ**
**ಸತಿಶಿರೋಮಣಿ ಶ್ಯಾಮಕಾ[3]ತ್ರೆ**
**ಮತಿವಂತೆ ಮಾತನಾಡ[3]ತೆ[3] ಸುಮ್ಮನಿರುವರೆ**
**ಅಪರಾತ[4]ವೇನೆ ಎನ್ನಿಂತ[3]||141**

ಅೞಗಾನ ಕಣ್ಗಳೈಕ್ ಕೊಂಡವಳೇ, ಏನ್ ಮೇಲ್ ಕೋಪಂ ಕೊಳ್ಗಿಱಾಯ್?. ಪೆಣ್ಗಳಿಲ್ ಸಿಱನ್ತವಳೇ. ಷ್ಯಾಮ ವರ್ಣಮೇ. ಪುತ್ತಿಸಾಲಿಯೇ. ಪೇಸಾಮಲ್ ಇವ್ವಾಱು ಅಮೈತಿಯಾಗ ಇರುಕ್ಕಲಾಮಾ?. ನಾನ್ ಏತಾವತು ತವಱು ಸೆಯ್ತುವಿಟ್ಟೇನಾ?

**ಜೇನಿನೊಳಕೆ[3] ವಿಷ ಕುಡಿ[3]ತ[3]ನ್ತಾಯಿತು ಯಾರು**
**ಹೇಳಿತ[3]ರೆ ಕೊಂಡೆ[3]ಯವ**
**(ಏಣ) ಲೋಚನೆ ನಿನ್ನ ಮನಸೆರಟಾ[3]ತ[3]**
**ಆ ಕಾರಣವೇನು ಹೇಳೆಂತ[3]||142**

தேனில் விஷம் கலந்தது போல ஆயிற்று. யாரிடமாவது சொன்னால் திட்டுவார்கள். பெண்ணே. உன்னுடைய மனம் இரண்டானது என்ன காரணம் என்று சொல் என்றான்.

**தொடெ³ய மேலிரிஸி முங்கு³ருள நேவரிஸுத்த**
**தொடெ³த³³னெ ஸுரிவ கம்ப³னிய**
**நுடி³யலேகொல்லெ என்னொளு கம்பு⁴கந்த⁴ரெ**
**கொடு³வெனு பே³டி³தொ³ஸ்துவனு||143**

அரசியை தன் துடை மேல் அமர்த்தி, முன் விழுந்த தலைமுடிகளை நகர்த்தியவாறு, அவளின் கண்ணீரினை துடைத்தான். ஏன் என்னிடம் சொல்லலாமே?. ஹே பெண்ணே. நீ கேட்கும் பொருட்களை நான் தருவேன் என்றான்.

**பரிமள (ப⁴ரித) பன்னீரலி தொளெத³னு**
**நளினத³ளாக்ஷிய முக²வ**
**அளவடி³ஸித³னு ஸடி³லித³ பூ⁴ஷணக³ள ஸிரிமுடி³**
**பிடி³து³ கட்டித³னு||144**

அரசியின் முகத்தை நறுமணம் மிக்க பன்னீரில் அரசன் துடைத்தான். அவிழ்ந்திருந்த ஆபரணங்களை மறுபடி அணிவித்தான். அவிழ்திருந்த கூந்தலை இழுத்து கட்டினான்.

**கிருபே³ரிடு³தலெ மருமாதனாடி³த³ள் பிரிது**
**பி³க்குத பதியொட³னெ**
**வரனில்ல கன்யெ குமாரி க³ர்ப்பி⁴ணியெந்து³**
**பரிஹாஸ்யவாயிது லோகத³லி||145**

பிறகு மெதுவாக அந்த அரசி பேசத் துவங்கினாள். தம் மகள் கர்ப்பிணி ஆகியிருக்கிறாள். யார் காரணம் என்று தெரியவில்லை. உலகில் அனைவரும் கேலி பேசப் போகிறார்கள் என்றாள்.

**கேளித³ கர்ணதி³ ஶூலவேரிஸித³ந்தெ ராஹு**
**துடு³கித³ சந்த்ரனந்தெ**

**நீகு³வெ ஹரணவ எனுத கையலக³னு நீடி³த³**
**தன்ன மஸ்தககெ||146**

காதில் சூலத்தால் குத்தியதைப் போல இந்த விஷயத்தை அரசன் கேட்டான். ராஹுவால் பிடிக்கப்பட்ட சந்திரனைப் போல துடித்தான். இந்த உலகத்தை விட்டு உடனே நீங்குவேன் என்று தலையை பிடித்துக் கொண்டு அழுதான்.

**ராணிவாஸத³ல்லித்³த³ ஸதியரு ராயன**
**ஆயுத⁴வனெ ஸெளகொ³ண்டு³**
**கோ³ளிட்டு தல்லணிஸுத ப்ரதா⁴னிய ஶீக்⁴ரதி³**
**கரெயலட்டித³ரு||147**

அங்கிருந்த அரசியின் தோழிகள், அரசனின் ஆயுதங்களை அவனிடமிருந்து அப்புறப்படுத்தினர். பின்னர் முக்கிய அமைச்சரை உடனடியாக அங்கு வருமாறு அழைத்தனர்.

**ஓலக³ ஹரிது³ ப³ந்த³னு அர்த்த⁴ராத்ரீலி ஏனு**
**காரண கரெஸித³ரோ**
**த்⁴யானிஸி ஹலவு ஹம்ப³லிஸுத்த மந்த்ரியு**
**ராயனித்³த³ல்லிகெ³ ப³ந்த³||148**

இந்த அர்த்த ராத்திரியில் தன்னை ஏன் அழைத்தாரோ அரசன் என்று சிந்தித்தவாறு, பற்பல யோசனைகளை செய்தவாறு, மந்திரி, அரசன் இருந்த இடத்திற்கு வந்தார்.

**சாரகரனு ஹொரகி³ட்டு ஏகாங்கீ³லி ஸாரித³னேகாந்தக்³ருஹவ**
**பா³கி³ஸி தலெய தக்³கி³த³ ஸலியந்த³தி³ ராயன**
**கண்டா³னா மந்த்ரி||149**

வேலைக்காரர்களை வெளியே நிறுத்தி, தான் மட்டும் தனியாக, அந்தப்புரத்தில் நுழைந்தான் மந்திரி. தலை கவிழ்ந்த ஒரு மரத்தை போல அரசன் அமர்ந்திருப்பதை கண்டான்.

**ஜீய சித்தயிஸு ஸாவதா⁴னவீராத்ரீலி ஏனு காரண கரெஸிதி³ரி**
**ஹேளிதூ³ளிக³வன்னு மாடு³வெ க்ஷணத³லி ஆலஸ்ய பே³ட³**
**ஹேளெந்த³||150**

அரசனே, சொல்லுங்கள். என்ன காரணமாக இந்த இரவு நேரத்தில் என்னை அழைத்தீர்கள்?. நீங்கள் சொல்லும் வேலையை ஒரே நொடியில் நான் செய்வேன். தயங்காமல் விஷயத்தை சொல்லுங்கள் என்றான்.

**பா³லகெ³ பட்டக³ட்டிஸு பரிவாரவ பா³ளிஸு முன்னினந்த³த³லி**
**தே³வ ப்³ராம்ஹர மன்னிஸுதலெ ராஜ்யவ ஆளு நீ**
**ஸுதன முந்தி³ட்டு||151**

அரசன் கூறுகிறான் - என் மகனுக்கு பட்டம் கட்டு. குடும்பத்தை முன்னர் இருந்ததைப் போலவே காப்பாற்று. தேவ, பிராமணர்களை வணங்கு, ஆதரவு அளி. ராஜ்ஜியத்தை ஆள்வாயாக. நீ என் மகனை முன்னே வைத்து.

**இக்ஷ்வாகு குலதிலகனெ நின்ன ராஜ்யவ**
**ஒப்பிஸிகொளலெனக³ளவெ**
**புத்ரிகெ³ பட்டவ கட்டுவுதே³னு காரண**
**விஸ்தாரவாகி³ ஹேளெந்த³||152**

அமைச்சர் சொல்வது - இக்ஷ்வாகு குல திலகனே. உன்னுடைய ஆட்சியை நான் ஏற்க முடியுமா? ஏன் இவ்வாறு உன் மகனுக்கு பட்டம் கட்ட வேண்டும் என்று சொல்கிறாய்? விவரமாக சொல் என்றான்.

**கேளிதெ³ கர்ணதி³ ஹீனத³ வாக்யவ ஜாரத்வ ப³ந்தி³தாத்மஜெகெ³**
**நானு அஞ்ஜெ மானவரபவாத³க்கெ தேஹ³த்யாக³வனெ**
**மாடு³வேனு||153**

அரசன் சொல்கிறார். நான் என் காதால் கேட்கக்கூடாத கெட்ட சொற்களை கேட்டேன். மகள் கர்ப்பவதி ஆகியிருக்கிறார்.

மனிதர்களின் கெட்ட அவமானத்திற்கு நான் பயப்படுகிறேன். தற்கொலையே செய்து கொள்வேன்.

**ரணதொ³ளு பி³த்³த³ரெ ஜக³தொ³ளு கீர்த்தியு**
**அமரலோகக்கெ வஜவஹரு**
**ப³ரிது³ ஸாயுவரெ நின்னந்த² பராக்ரமி யமன**
**பா⁴தெ⁴கெ³ கு³ரியாகி³||154**

போர்க்களத்தில் வீழ்ந்தால் உலகில் புகழ் கிடைக்கும். அமரலோகத்தில் இடம் கிடைக்கும். அப்படியிருக்கையில் உன்னைப் போன்ற வீரர்கள் இவ்வாறு எமனின் தொந்தரவுக்கு ஈடாகி இவ்வாறு இறக்கலாமா?

**ப்ருது²வீஜரொளு தலெ தக்³கி³ஸித³ந்தாயிது**
**வ்யர்த்த²வாயிது என்ன ப³து³கு**
**ஹொத்திரலாரெ தே³ஹவ நீக்ஷணத³லி ஹத்யெ**
**மாடி³கொம்பெ³னெந்த³||155**

அரசன் : அரசர்களில் அவமானப்பட்டு தலை குனிந்தவன் நானாகவே இருப்பேன். என் வாழ்க்கையே வீண் ஆகிவிட்டது. இந்த தேகத்தை நான் உடனே விடப்போகிறேன். தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன்.

**நிந்த³யகெ அஞ்ஜி நீகு³வரெ ஶரீரவ ஹிந்த³ண**
**கதெ²ய கேளரியா**
**இந்த³ராதி³ முனிக³ளிகெ³ ப³ந்தி³து அபவாத³**
**குந்த³னொத்³த³வராரு ஜக³தி³||156**

அவமானத்திற்கு கவலைப்பட்டு இறப்பார்களா?. தேகத்தை விடுவார்களா?. முன்னர் நடந்த கதைகளை நீ அறிவாயல்லவா?. இந்திராதி முனிவர்களுக்கும் கூட அவமானம் வந்ததே? இந்த உலகில் யாருக்குதான் அவமானம் வராமல் இருக்கிறது.

**தானெ புட்டிஸித³ வாக்தே³விய கமலஜ**
**லாவண்ய கண்டு³ ஸைரிஸதெ³**
**மூஜக³வரிது பாணிக்³ரஹண மாடி³த³**
**மீரித³ராரு கல்பனெய||157**

தானே படைத்த (பிறக்கச் செய்த) சரஸ்வதியை, பிரம்மன் அவளுடைய அழகினைக் கண்டு தாளமுடியாமல், மூன்று உலகங்களும் அறியுமாறு திருமணம் செய்துகொண்டான் என்னும் கற்பனையை யாராவது மீற முடியுமா?

**முனிஸதியெனதெ³ தே³வேந்த்³ர தானளுகி¹த³**
**ஸர்வாங்க³தி³ந்த³ ஸுந்த³ரியு**
**ஶிலெயாகி³ பி³த்³த³ளாதன ஸதி த⁴ரெ மேலெ ம்ருக³த³**
**லாஞ்சனெய தாளித³னு||158**

முனிவரின் மனைவி என்றும் பாராமல், தேவேந்திரன் அவளை கவர்ந்தான். முழு அழகியான அவள் ஒரு கல்லாக பூமியில் கிடந்தான். அப்போது தேவேந்திரன் ஒரு மிருகத்தைப் போல கருதப்பட்டானே.

**கு³ருஸதியெனதெ³ அம்பு³ஜமித்ர அளுபித³**
**ஸெரெதந்த³ தாராதே³வியனு**
**முனிக³ளு அமரரொட³னெ காதி³கெ³லித³ரு நரர**
**பாடே³னு பூ⁴பால||159**

குரு பத்னி என்றும் பாராமல், தாமரையின் நண்பனான சந்திரன் அவளை விரும்பினான். அந்த முனிவர் ப்ருஹஸ்பதி, தேவர்களுடனேயே சண்டையிட்டு வெல்பவர், அப்படியிருக்கையில் நரர்களின் பாடு என்ன, அரசனே?

**யமன தா³டே³லிப்ப தெரனந்தெ காவலு நின்ன**
**குமாரதிய மந்தி³ரகெ**
**மருளகொ³ண்ட³யோ மானவெந்து³ ஈ ஸுத³தி³ய**
**அருஹித³ராரு நின்னொட³னெ||160**

யமனின் படைகள் இருப்பதைப் போல, நான் உன் குமாரியின் அரண்மனைக்கு காவல் இருப்பேன். மானம் என்று கவலைப்படாதே. இந்த செய்தியை உனக்கு யார் கூறியது? என்று கூறுங்கள்.

**பரிபரி து³க்க²தி³ ஹொரளுவ ராயன மனவ**
**நில்லிஸித³ ப்ரதா⁴னி**
**திளிது³ ப³ஹெனு குமாரியனெந்தெ³னுதலெ**
**நடெ³தந்த³ ஸெஜ்ஜெவாஹரிகெ³||161**

பற்பல விதமாக துக்கத்தில் மூழ்கிய அரசனின் மனதினை மந்திரி சமாதானம் செய்தார். இதனை நம் மகளிடம் கேட்டு அறிந்து கொள்வோம் என்று சொல்லியவாறு, மகளின் இடத்திற்கு அரசன் விரைந்தான்.

**உரி ஸோங்கித³ கெந்த³ளிரந்தெ முக²பா³டி³**
**மலினவனுட்ட மானினிய**
**களெகு³ந்தி³ நெலத³ல்லி பி³த்³த³ குமாரிய**
**ஸெளெவிடி³தெ³த்தித³ ராய||162**

எரிந்த ஒரு சிறு செடியைப் போல, முகம் வாடி, மெலிந்த ஆடையை உடுத்தியிருக்கும் பெண்ணை, களையிழந்து நிலத்தில் விழுந்திருக்கும் பெண்ணை, தோள்களை பற்றி எழுப்பினான் அரசன்.

**ஏளவ்வ தாயி சிந்திஸலேகெ வரன்யாரு**
**மாஜுவதே³கெ என்னொட³னெ**
**தா⁴ரெயனெரெது³ கொடு³வெ கன்யாசோரகெ³ தே³வ**
**ப்³ராம்ஹரு மெச்சுவந்தெ||163**

ஹே பெண்ணே எழுந்திரு. ஏன் கவலைப்படுகிறாய். அவன் யார்?. ஏன் என்னிடம் மறைக்கிறாய்?. அவனுக்கே உன்னை திருமணம் செய்து கொடுக்கிறேன். தேவ பிராமணர்கள் மெச்சுமாறு உனக்கு திருமணம் செய்து வைக்கிறேன்.

**மரெது மலகி³த்³தா³க³ ஸுரரட்டஸுளித³ரு**
**ஸுரரோ நரரோ கின்னரரோ**
**த⁴⁴ரணீஷக்³ஹேளி மாடு³வெ நின்ன மது⁴வெய**
**கி⁴⁴ரிஜேஶனாணெ ஹேளெந்த³||164**

மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்தபோது தேவதைகள் உன்னை மயக்கினார்களோ?. ஸுரரோ? மனிதர்களோ? கின்னரர்களோ?. அரசனிடம் கூறி, உன் திருமணத்தை நான் செய்து வைக்கிறேன். இது ருத்ரதேவர் மேல் ஆணை. சொல் என்றார் மந்திரி.

**எத்தண மது³வெ மாடு³வெரென்ன தே³ஹவ**
**இத்தெ நா ஹவ்யவாஹனகெ³**
**மத்தொப்³ப³ புருஷன கூடி³ பா³ளுவளல்ல**
**விஶ்வலோசனனங்க்⁴⁴ரியாணெ||165**

என்னை எங்கு திருமணம் செய்து கொடுப்பீர்கள்? நான் இங்கு என் தேகத்தை நெருப்புக் கொடுக்கிறேன். நான் இன்னொரு புருஷனை கூடி வாழ்பவள் அல்ல. இது ஸ்ரீஹரியின் மேல் ஆணை.

**ஹக³ரணவாயிது ஜக³மூரரொளகெ³ல்ல நகு³வரு**
**ஸரிய நாரியரு**
**ஸொக³ஸவு நிம்ம வாக்யவு என்ன கர்ணக்கெ ஹோகு³வெனு**
**உரிவ பாவகன||166**

ஒரு பெரிய பிரச்னை ஆகியிருக்கிறது. மூன்று உலகங்களிலும் அனைவரும் சிரிப்பார்கள். உங்கள் வாக்கியம் என் காதுகளுக்கு இனிமையாக இருக்கிறது. நான் உடனடியாக நெருப்பிடம் செல்கிறேன்.

**ஶ்வான முட்டித³ பா⁴ண்ட³ பா³ஹதெ³ நிளயக்கெ தே³வ**
**ப்ராம்ஹரிக்யோக்³யவஹுதெ³**
**மானினியெந்து³ ஸ்னேஹத³லென்னனுளுஹலு ஹானி**

**ப³ருவுது³ நிம்ம குலகெ||167**

நாய் தொட்ட பாத்திரத்தை (சமையலை) பயன்படுத்த முடியுமா? அது தேவ, ப்ராம்ஹணருக்கு தக்க சமையலாக இருக்க முடியுமா?. என்னை உங்கள் பெண் என்று நீங்கள் கூறினால், அது உங்கள் குலத்திற்கே கெட்ட பெயரை கொண்டு வரும்.

**புத்ரியெந்து³ ஸ்னேஹித³லென்ன உளுஹதெ³ கெட்ட**
**பாதகியெந்து³ திளிது³**
**எத்தி கொண்ட்ஹோகி³ தும்பி³த³ நதி³யொளகெ³ பி³ட்டு**
**ப³ருவுதெ³ உசிதவு||168**

என்னை உங்களின் பெண் என்று அன்புடன் கொள்ளாமல், கெட்ட பாதகி என்று அறிந்து, என்னை எடுத்துச் சென்று, நிரம்பி வழியும் ஆற்றில் விட்டு வருவதே, சரியான செயலாக இருக்கும்.

**மது³வெய மாட³லில்லவெந்து³ என்னொளு**
**முனிது³ அரண்யக் ஹோகு³வரெ**
**வரிஸு நினகெ³ உத்தமவுள்ள புருஷகெ³**
**தா⁴ரெயனெரெவெனு||169**

அரசன்: திருமணம் செய்யவில்லை என்று என்னிடம் கோவித்துக் கொண்டு, காட்டிற்கு செல்வார்களா? சொல் என்னிடம். உத்தமமான ஆணை நான் உனக்கு திருமணம் செய்து கொடுக்கிறேன்.

**பக்வவாயிது என்ன பாதக இந்தி³கெ³ ஹொத்தேனு**
**ப³ரிதெ³ நிந்த்³யவனு (அ)**
**ஸத்யவாக³து³ என்ன ஆடி³த³ வாக்யவு ம்ருத்யு**
**ப³ந்தொ³த³கி³த³ மேலெ||170**

அரசன்: என்னுடைய கெட்ட காலம் தற்போது வந்திருக்கிறது. உலகத்தின் அவமானத்தை தற்போது நான் சுமந்திருக்கிறேன்.

என்னை மரணம் வந்து அடைந்தபின், நான் சொல்வது எதுவும் பலிக்காது. (ஆகவே, இப்போதே நான் சொல்வதை கேள்).

**த்³ருஷ்டிஸி நோட³லு த்ருஷ்டி தாகீதெந்து³ எத்தி**
**தூபிரிது³ மந்தரிஸி**
**இஷ்டு பரியிந்தலெ ஸலஹித மக³ளனு இத்தெ நா**
**கோ⁴ர கானனகெ||171**

உற்றுப் பார்த்தால் த்ருஷ்டி தாக்கிவிடும் என்று நினைத்து, மந்திரித்து என இவ்வளவு விதமாக பார்த்து காத்த மகளை, நான் இத்தகைய பாவத்திற்கு கொடுத்தேனே.

**காருண்யதி³ந்த³லெ ஸலஹித³ மக³ளனு அரண்யகெ**
**கு³ரிமாடி³ நாரி**
**நின்னனக³லி நானெந்து³ ஜீவிபெனெந்து³ தாயி**
**கம்ப³னிதும்பி³த³³ளு||172**

மிகவும் அன்புடன் காத்த மகளை காட்டிற்கு அனுப்பிவிட்டு, பெண்ணான உன்னைவிட்டு பிரிந்து, நான் எப்படி வாழ்வேன் என்று தாய் கண்ணீர் விட்டு அழுதாள்.

**மிஸுனிய அலகெ³ந்து³ ப³ஸிரொளகி³டு³வரெ**
**வஜ்ரவல்லவந்த² மூகு³தியு**
**ஹஸனாயிதெந்து³ இட்டரெ நாஸிக் ஹரிவோது³**
**பி³ஸுஸுய்வதே³தகெ தாயி||173**

பெண்: தங்கக் கத்தி என்று அதனை யாரும் வயிற்றில் வைப்பார்களா?. சரியில்லாத மூக்குத்தி, அழகாக இருக்கிறது என்று அணிந்தால், மூக்கு அரிக்கும். இதனால் ஏன் கவலைப்படுகிறீர்கள் தாயே.

**ஏளுத்தலொம்மெ பி³ம்மனெ தா மருகி³த³³ளு**
**குமாரிய மேலெ ஸ்னேஹத³லி**
**ஆலோசனெ மாடு³வ ஹிரியர காணெனு ஹா**
**விதியெந்த்³ ஹொரளித³³ளு||174**

எழுந்துகொண்டு ஒரு முறை சோம்பல்பட்டு தான் கவலைப்பட்டாள். என் மகள் உள்ள அன்பில் நான் இவ்வாறு இருக்கிறேன். இதைப் பற்றி பேசக்கூடிய ஒரு பெரியவரையும் நான் காணேன். ஹா. விதி இவ்வாறு ஆயிற்றே.

**உலுஹ கேளித³ரெ எச்சர 'வஹரு' ஜனரெல்ல**
**அளுவுதே³தகெ தாயெ நீனு**
**அருணன உத³யவாக³த³³ முன்ன களுஹிஸு**
**கல்மாடு³ நின்ன தே³ஹவனு||175**

உன் புலம்பலை கேட்டால், மக்களுக்கு விஷயம் தெரிந்துவிடும். நீ ஏன் அழுகிறாய் தாயே? சூரியோதயம் ஆகும் முன்னர் என்னை அனுப்பிவிடு. உன் மனதினை கல் ஆக்கிக் கொள்.

**ராயனு கரெஸித³ தன்ன ஊளிக³த³வரனு**
**ஹேளித³னேகாந்தத³லி**
**பா³லெயனொய்து³ அரண்யதி³ ஶிரவரித³னாளெ**
**உத³யகெ ப³ன்னிரெந்த³||176**

அரசன் தன் வேலையாட்களை அழைத்தான். அவர்களிடம் தனிமையில் இவ்வாறு கூறினான். தன் பெண்ணை அழைத்துப் போய், காட்டிற்கு கூட்டிச் சென்று, அவள் தலையை வெட்டிவிட்டு விடிவதற்குள் வந்துவிடுங்கள் – என்றான்.

**கரெஸித³னாக³ கிங்கரர ப்ரதா⁴னியு தரிஸித³னொஜ்ரத³ந்த³ணவ**
**அரஸன மக³ளனு அரண்யதொ³ளகி³ட்டு மரெஸி**
**ப³ன்னிரி ஶீக்ரதி³ந்த³||177**

மந்த்ரி அப்போது தன் வேலைக்காரர்களை அழைத்தான். வஜ்ரத்தினால் ஆன பல்லக்கினை வரவழைத்தான். அரசனின் மகளை காட்டில் வைத்து, கொன்று விட்டு வாருங்கள் சீக்கிரமாக என்றான்.

**ராயன மக³ளனு அரண்யதொ³ளகி³ட்டு**
**மாடி³ரிமனகெ¹ ப³ந்து³த³னு**
**பா³லெய முத்³ரெயுங்கு³ர தன்னி கு³ருதிகெ³**
**நானிடு³வெ ராயன முந்தெ³||178**

அரசனின் மகளை காட்டிற்கு கூட்டிச் சென்று, என்ன செய்ய வேண்டுமோ செய்துவிடுங்கள். அவளின் கையில் இருக்கும் முத்திரையை மட்டும் அடையாளத்திற்காக கொண்டு வாருங்கள். நான் அதனை அரசனின் முன் வைப்பேன் என்றான்.

**ஏரித³ளொஜ்ரத³ந்த³ணவ குமாரியு**
**மேலெ பன்னங்க³ கவித³வு**
**வ்யாக்⁴ர ப³ந்து³ ஹரிணன கச்சி ஒயித³ந்தெ**
**ஶீக்⁴ரதி³ பொத்து நடெ³த³ரு||179**

சந்திராவதி அந்த வஜ்ர பல்லக்கில் ஏறினாள். பல்லக்கினை திரை போட்டு மூடினார்கள். புலியானது, மானைப் பிடிக்க ஓடுவதைப் போல, இவர்கள் வேகமாக அவளை தூக்கிக் கொண்டு நடந்தனர்.

**ஶஶிமுகி² மனத³லி நஸுபெ³து³³ரிடு³தலெ**
**ப³ஸவளித³ளு ஸ்ரீ ஹரிய**
**அஸுரமர்த³ன கோ³விந்த³னெ ஸலஹெந்து³**
**ஸ்துதிஸுதிர்த்த³ளெ தன்ன மனதி³||180**

சந்திரனைப் போன்ற முகத்தைக் கொண்டவள், மனதில் கவலைப்பட்டவாறே, ஸ்ரீஹரியை வணங்கினாள். அசுரர்களை கொன்றவனே, கோவிந்தனே, என்னை காப்பாற்று என்று தன் மனதில் வணங்கினாள்.

**நோட³தெ³ என்னவகு³ணவ பாதகியெந்து³**
**காலன வஶகெ ஒப்பிஸதெ³**
**க்ஷீராப்³தி⁴ஶயன நாராயண ஹரி நிம்ம**

**பாதா³ரவிந்தொ³ளிரிஸு||181**

நான் ஒரு பாதகி (கெட்டவள்) என்னும் என் கெட்ட குணங்களை கவனிக்காமல், என்னை காலனிடம் ஒப்படைத்துவிடாமல், பாற்கடலில் படுத்திருப்பவனே, நாராயணனே, ஹரியே, என்னை உன் பாதாரவிந்தங்களிலேயே வைத்திருப்பாயாக.

**பா⁴ரவன்ஹொத்து ப³ளலி பா³யாருத்த ஏருத்த க⁴ட்ட பெ³ட்டக³ள**
**ஹாதி³ தப்பி கள்ளகொள்ள கானனதொ³ளு**
**பா³லெய தந்தி³ளுஹித³ரு||182**

சேவகர்கள், சந்திரமதியை தூக்கிக் கொண்டு வந்து, கஷ்டப்பட்டு மலை, குன்றுகளை ஏறி, தாண்டி வந்து, வழி தவறி, கடும் காட்டிற்குள் சென்று, அந்தப் பெண்ணை கொண்டு வந்து இறக்கினர்.

**அந்த³ண இளுஹி கெந்த³ளிர் ஹாஸித³ராக³ தங்கி³**
**பா³ ப³ளலிதெ³யெனுத**
**குந்த³ணகி³ண்டி³லி தும்பி³ட்டருத³கவ**
**ரம்பெ⁴யனுபசரிஸித³ரு||183**

அங்கு (காட்டில்), பல்லக்கினை இறக்கி வைத்து, சேவகர்கள், தரையில் ஒரு துணியை விரித்தனர். சந்திரமதியிடம், தங்கையே வா, மிகவும் சோர்வடைந்திருக்கிறாய் என்று கூறி, ஒரு பெரிய பாத்திரத்தில் நிரப்பி வைத்திருக்கும் தண்ணீரை, அந்தப் பெண்ணுக்கு குடிக்கக் குடுத்தனர்.

**புஷ்ட ஸோகித³ரெ பா³டு³வ கோமலாங்க³வ**
**தொப்பல மேல்ஹரஹித³ரு**
**அச்யுதானந்த ஶ்ரீ கிருஷ்ணனெ க³தியெந்து³**
**கத்திகெ³ மய்யனிக்கித³ளு||184**

ஒரு பூ பட்டாலே வாடிப் போகும் அளவிற்கு இருக்கும் மெல்லிய உடலாளை, இலைகள் பரப்பிய இடத்தில் அமரச்

செய்தனர். அச்யுதானந்த ஸ்ரீகிருஷ்ணனே கதி என்று சொல்லியவாறு, தங்களின் கத்தியை அவள் உடம்பில் வைக்கத் தயாராயினர்.

**கம்பு³சக்ரதா⁴ரி வைகுண்டவாஸகெ³ வந்தி³ஸித³ ஸ்ரு தன்ன மனதி³**
**அம்பு⁴ஜமித்ர கோ³விந்த³னெ க³தியெந்து³ ரம்பெ⁴ தா**
**ஸ்துதிய மாடி³த³³ஸ்ரு||185**

சங்கு, சக்ரங்களை தரித்தவனே, வைகுண்ட வாசியை, தன் மனதில் வணங்கினாள். பாற்கடலில் படுத்திருப்பவனான கோவிந்தனே கதி என்று இந்தப் பெண் தான் வணங்கினாள்.

**அரண்யத³ல்லி தன்ன நெனெவ குமாரிகெ³**
**காருண்யதி³ந்தொ³த³³கி³த³³னு**
**ப்ரஹ்லாத³வரத³³ பாலிஸித³³னு ஹஸுளெகெ³ மாயத³³ நித்³ரெ**
**கவித³³வு||186**

காட்டில் தன்னை நினைத்து வணங்கிய அந்தப் பெண்ணை, கருணைக் கடலான பகவந்தன், பிரகலாத வரதன் காத்தான். அந்தப் பெண்ணிற்கு மாயமயமான தூக்கம் வந்தது.

**காமதே⁴னு கல்பவ்ருக்ஷ சிந்தாமணி ப⁴க்தரிகொ³ஜ்ரபஞ்ஜரனெ**
**நித்ய நிர்மள அச்யுதானந்த நரஹரி பொக்கனெ**
**து³³தர மனவ||187**

காமதேனு, கல்பவ்ருக்ஷ, சிந்தாமணி, பக்தர்களை எப்போதும் காப்பவன். நித்ய நிர்மளனான அச்யுதானந்த நரஹரியானவன், தூதர்களின் மனதை அடைந்தான் (மாற்றினான்).

**எத்தித³³ரு கொலெக⁴டிகராயுத⁴வன்னு மத்தெ**
**யோசிஸி தம்ம மனதி³**
**புத்ரிய கொந்த³³ பாதக தமகெ³னுதலெ**
**எத்திதா³யுத⁴வனிளுஹித³³ரு||188**

கொலை செய்வதற்காக தூக்கிய ஆயுதத்தை, மறுபடி தம் மனதில் நன்றாக சிந்தித்து – அதாவது, இந்தப் பெண்ணை கொன்ற பாவம் தமக்கு எதற்கு என்று நினைத்து – அந்த தூக்கிய ஆயுதத்தை மறுபடி உறைக்குள் வைத்தனர்.

**க³ர்ப்பா⁴ங்கி³ய கொந்த³ரெ பாப தமகெ³ந்து³**
**ஒப்³ப³கொ³ப்³ப³ரு மாதனாடி³**
**கொப்³பி³த³ ம்ருக³வ கடி³து³ ஶோணிதவன்னு**
**உர்வீஶகொ³ய்து³ ஒப்பிஸுவ||189**

கர்ப்பிணி பெண்ணை கொன்றால், தமக்கு பாவம் வரும் என்று சேவகர்கள் அவர்களுக்குள்ளேயே பேசிக் கொண்டு, இறந்து கிடந்த ஒரு மிருகத்தை குத்தி, அதன் இரத்தத்தை, அரசனிடம் சென்று ஒப்படைப்போம் என்று பேசிக் கொண்டனர்.

**வ்யாக்⁴ர காடு³ கோண ம்ருக³வித்³த³யடெ³யல்லி**
**வாரிஜக³ந்தி⁴ய பி³ட்டு**
**ஜீவக³ளிது³ அயோத்⁴யக்கெ ப³ந்த³ரு**
**ராயகெ³ கு³ருத தோரித³ரு||190**

புலி, காட்டெருமை ஆகிய காட்டு விலங்குகள் இருந்த இடத்தில், தாமரைக் கண்ணைக் கொண்ட சந்திராவதியை விட்டு, சேவகர்கள் மறுபடி அயோத்திக்கு வந்து, அரசனிடம் ரத்தம் படிந்த கத்தியை காட்டினர்.

**கப்போட³லின புளிந்த³ரு ப³ந்த³ரு**
**தப்பதெ³ ராயனோலக³கெ**
**ஹத்யமாடி³ ப³ந்தெ³வு நின்ன குமாரிய**
**சித்தயிஸு ஜீயவதா⁴ன||191**

கருப்பு உடல் கொண்ட அந்த சேவகர்கள் வந்தனர், அரசனின் அரசவைக்கு. உன் மகளை கொன்று வந்திருக்கிறோம், அரசரே, கேள் செய்தியை என்றனர்.

**கொந்து³ ப³ந்தெ³வு நின்ன ஆத்மஸம்ப⁴வெயன்னு**
**தந்தெ³வு முத்³ரெயுங்கு³ரவ**
**கொண்டி³ ரூஹித³³ரு நித்யரு பூஸித³³லக³³னு கண்டு³**
**மனத³³லி மருகி³³த³³னு||192**

உன்னுடைய மகளை கொன்றுவிட்டு வந்திருக்கிறோம். அவளிடமிருந்து முத்திரை மோதிரத்தை கொண்டு வந்திருக்கிறோம். சேவகர்கள் அந்த ரத்தம் படிந்த கத்தியை அரசனிடம் கொடுத்தனர். அதனைக் கண்ட அரசன் மனதில் மருகினான்.

**குஞ்(ஜவ)கி³ணியனு பஞ்ஜரதொ³ளகி³ட்டு**
**அஞ்ஜர கொய்து³ கொட்டந்தெ**
**குஞ்ஜரக³மனெய கையிந்த³ கொலிஸிதெ³**
**பெ³ந்தொ³ட³லனெந்து³ பொரெயலி||193**

கிளியை கூண்டில் அடைத்து, அதற்கு அத்திப்பழம் சாப்பிட கொடுத்ததைப் போல, மெல்ல நடப்பவளான என் மகளை, என் கையால் கொல்ல வைத்தேனே. வெந்திருக்கும் என் உடலை (மனதை) எப்படி தாங்குவேன்?

**தும்பூ³ரகொ³ள்ளிய ஒலெயொளகி³ட்டந்தெ**
**கெண்ட³தொ³ளாஜ்ய பி³த்³த³ந்தெ**
**தந்தெ³ தாயி ப்ரதா⁴னிபரிவாரவு**
**பெ³ந்த³ரு ஶோகாக்³னியிந்த³||194**

காய்ந்த சருகுகளை உலைக்குள் வைத்ததைப் போல, கங்கில் நெய் ஊற்றியதைப் போல, தாய் தந்தையர் மந்திரி என அனைவரும் சோக அக்னியின் வெந்தனர்.

**இத்தலாராய ஹம்ப³லிஸி தானளுதிரெ புத்ரிய**
**மேலெ ஸ்னேஹத³லி**
**ஹக்கி பக்ஷியு நலித³வு மூட³ராத்ரீலி**
**தலெயெத்தித³வப்ஜ ப³ந்து⁴க³ளு||195**

இங்கு இவர்கள் அனைவரும் மகளின் மேல் உள்ள பாசத்தினால் அழுது கொண்டிருக்க, அங்கு காட்டில், பறவைகள் பறந்தன, இருளில் இரவில், சந்திரனின் தோழர்கள் தலை தூக்கினர் (இரவு விலங்குகள்).

**எச்செத்து நோடி³த³ளாக³ சந்த்ராவதி ஸுத்தல**
**ம்ருக³த³ ஸஞ்சரவ**
**பி³ட்டுஹோத³ரு பாதகரென்ன அட³வீலி துத்தாதெ³**
**ஹஸித³ ஹெப்³பு³லிகெ³||196**

தூக்கத்திலிருந்து (மயக்கத்திலிருந்து) சந்த்ராவதி எழுந்து பார்க்கிறாள். சுற்றிலும் மிருகங்கள் சஞ்சரிக்கின்றன. கெட்டவர்கள் என்னை இங்கு விட்டுச் சென்றுவிட்டார்கள். காட்டில். பசித்த புலிக்கு நான் இரையாகிறேன் – என்று நினைக்கிறாள்.

**கு⁴டு³கு⁴டி³ஸுத ஸிம்ஹ நாத³க்கெ அஞ்ஜுவளு**
**பெ³தருவளு வ்யாக்⁴ரத³ட்டுளிகெ³**
**மொரெவ ஸர்பவ கண்டு³ நயனவ முச்சுவளு**
**மரளி தை⁴ர்யவனெ மாடு³வளு||197**

கர்ஜிக்கும் சிம்ம நாதத்திற்கு பயப்படுகிறாள். நடுங்குகிறாள். புலியின் உறுமலுக்கு சீறும் பாம்பைக் கண்டு, கண்களை பயத்தில் மூடிக் கொள்கிறாள். மறுபடி தைரியம் கொண்டு கண்களை திறக்கிறாள்.

**நான்யாரூ தாயி தந்த்³யாரூ பா⁴விஸித³ரெ**
**மாயபாஶகெ கு³ரிமாடி³**
**மாரஜனக தா³னவாரிய நெனெத³ரெ அஹுது³**
**முக்தி ஸாத⁴னவு||198**

நான் யார்? என் தாய் தந்தை யார்? என்று நினைத்தால், மாய பாஷத்தில் சிக்கிக் கொள்ளாமல், மாரஜனகனான பகவந்தனை நினைத்தால், முக்தி ஸாதனம் ஆகிறது.

**ஜலவ பொக்கு தை³த்யன ஸம்ஹரிஸிதெ³ அஜகெ³**
**வேத³வனெ தந்தி³த்தெ**
**த⁴ரெ குஸியலு கூர்மனாகி³ ஜனிஸிதெ³**
**பரப்³ரம்ஹ ஸலஹபே³கென்ன||199**

தண்ணீரில் மூழ்கி தைத்யனை கொன்று, பிரம்மனுக்கு வேதத்தினை கொண்டு வந்து கொடுத்தாய் (மத்ஸ்ய); பூமியை காப்பாற்றுவதற்காக கூர்மனாக வந்தாய். ஹே பரப்ரம்மனே என்னை அருள்வாயாக.

**தா⁴ருணி கத்தொய்து³ தை³த்யன ஸீளிதெ³ மேலெ**
**ஹரவிதெ³ முன்னினந்தெ**
**பா³தெ⁴ படு³வ ப்ரஹ்லாத³கெ³ வரவித்தெ**
**காருண்ய நிதி⁴ ஸலஹென்ன ||200**

பூமியை திருடிச் சென்ற தைத்யனை கொன்று, முன்னர் இருந்ததைப் போலவே அதனை வைத்தாய் (வராஹ); கஷ்டப்படும் பிரகலாதனுக்கு வரம் அளித்தவனே, கருணைக்கடலே (நரசிம்ம) என்னை அருள்வாயாக.

**க³ர்வத³ ப³லிய பாதாளலோகத³லிட்டெ**
**ஜனனிய ஶிரவ சேதிஸிதெ³**
**மலதாய மாதிகெ³ வனவாஸ கை³தி³தெ³**
**ரகு⁴ராம நீ ஸலஹென்ன ||201**

கர்வம் கொண்ட பலியை, பாதாள உலகிற்கு அனுப்பினாய் (வாமன); தாயின் தலையை தந்தையின் ஆணைப்படி வெட்டினாய் (பரசுராம); சிற்றன்னையின் பேச்சினை கேட்டு வனவாசம் சென்றாய் (ராமன்); ஹே ரகுராமனே, என்னை காப்பாற்றுவாயாக.

**புட்ட ஶிஶுவாகி³ கோ³பிகெ முத்³து³ தோரிதெ³**
**பெ³ட்டல்லி கி³ரிய நெக³ஹிதெ³**
**மித்ரேர வ்ரதப⁴ங்க³ சரிஸிதெ³ ஜக³த³³லி**

**கர்த்ருபாவன ஸலஹென்ன ||202**

சிறிய குழந்தையாக கோபிக்கு அன்பு காட்டினாய், விரலில் மலையை தூக்கினாய், தன் பக்தர்களின் விரதத்தை பங்கம் செய்தாய். (கிருஷ்ண); உலகை படைத்து, காப்பவனே என்னை அருள்வாயாக.

**துரக³வனேரி சரிஸிதெ³ ஜக³த³³லி உளுஹிதெ³**
**த⁴ர்மபீ⁴ஜவனு**
**நெக³ள கத்தரிஸி க³ஜேந்த்ரகெ³ வரவித்தெ**
**க³ருட³வாஹன ஸலஹென்ன ||203**

குதிரையில் ஏறி சஞ்சரித்தாய் (பௌத்த); தர்ம பீஜத்தை உலகில் பரப்பினாய் (கல்கி); முதலையை கொன்று கஜேந்திரனுக்கு வரம் அளித்த, கருட வாஹனனே என்னை காப்பாற்று.

**காலெமதூ³தர கண்ட³ஜாமிள தன்ன பா³லன நாக³ரனெனலு**
**கேளி வைகுண்டவனித்த நாராயண பாலிஸு**
**என்னவாக்யக³ள ||204**

தன்னை அழைத்துச் செல்ல வந்த யம தூதர்களைக் கண்ட அஜாமிளன், தன் மகனான நாராயணனை அழைக்க, அதற்காக அவனுக்கு வைகுண்டத்தை அளித்த நாராயணனே என்னை அருள்வாயாக என்று வேண்டினாள்.

**ஸ்னான ஸந்த்யாவனெ மாடெ³ முனி ப³ந்த³**
**பா⁴னுமத்⁴யான்ஹகாலத³³லி**
**ஹோம நேம ஆதி³த்யக³ர்க்⁴யவ**
**கொட்டு அரண்யக்காகி³ சரிஸித³ ||205**

ஸ்னானம் ஸந்த்யாவந்தனம் செய்வதற்காக, முனிவர் தோட்டத்திற்கு வந்தார். ஹோம, நேம, சூர்ய அர்க்ய ஆகியவற்றை முடித்து காட்டிற்குள் சென்றார்.

**பா⁴ரவ கட்டித³ ஆ குஶ த³ர்ப்பெ⁴ய ஏரித³ஶ்வத்த² வ்ருக்ஷவனு**
**நாராயணன த்⁴யானத³லி ரோதி³ஸுதிப்ப ஆ மானினி த்⁴வனிய**
**கேளித³னு || 206**

தர்ப்பை, குஷ, சமித்து ஆகியவற்றை ஒரு கட்டாக கட்டி, பிறகு அஷ்வத்த மரத்தில் ஏறினான். நாராயணனின் த்யானத்தில் அப்போது அழுது கொண்டிருந்த அந்தப் பெண்ணின் குரலை அந்த முனிவர் கேட்டார்.

**தர்க்க வேதா³ந்த புராணக்கெ ஸிலுகத³**
**அச்யுதானந்த மூருதியெ**
**இத்த ப³ந்த³ரெ என்ன ஸலஹுபே³கெனுதலெ பி³ட்டளெ**
**மனத³ பீ⁴தியனு ||207**

தர்க்க, வேதாந்த, புராணத்திற்கு சிக்காத அச்யுதானந்த மூர்த்தியே, இங்கு வந்து, என்னை காக்க வேண்டும் என்று வேண்டியவாறு, தன் மனதின் பயத்தினை சந்த்ராவதி விட்டாள்.

**இஷ்டு பரியிந்த சந்த்³ராவதி ஸ்துதிஸலு**
**ஆகெய த³னிக³ள கேளி**
**ஸுத்தி ப³ந்த³னெ க⁴னவிபினதொ³ளா முனி**
**மித்ரெய கண்ட³ தூ³ரத³லி ||208**

இவ்வளவு விதமாக சந்த்ராவதி பகவந்தனை வேண்ட, அவளுடைய குரல்களை கேட்டு, கவலைப்பட்டவாறு அந்த முனிவர் காட்டினை சுற்றி வந்தார். தூரத்திலிருந்து அவளை கண்டார்.

**நித்யதா⁴ரித்³ரினி த⁴னவ கண்ட³ந்தெ த்³ருஷ்டி ப³ந்த³ந்தெ**
**அந்த⁴கெ³**
**ஹுட்டுப³ஞ்ஜெ குமாரன படெ³த³ந்தெ**
**உக்கித³ள் ஹருஷாப்⁴தி³யலி ||209**

எப்போதும் ஏழையாக இருப்பவர், செல்வத்தை கண்டது போல, குருடனுக்கு கண் தெரிந்ததைப் போல, மலடியாக இருந்தவர் குழந்தையை பெற்றது போல, அவள் மிகவும் மகிழ்ச்சி கொண்டாள்.

**ஹஸிது³ ப³ந்த³வரு ம்ருஷ்டான்னவ கண்ட³ந்தெ ஶிஶுவிகெ³**
**தாயி ப³ந்த³ந்தெ**
**த்ருஷ்ணவினிந்த³லி ப³ந்து³ ஸுர நதி⁴ கண்ட³ந்தெ ஶஶிமுகி²**
**கண்ட³ளா முனிய ||210**

பசியுடன் இருப்பவர் ம்ருஷ்டான்னத்தை பார்த்தது போல, குழந்தைக்கு தாய் கிடைத்ததைப் போல, தாகத்தில் இருப்பவனுக்கு ஒரு சுவையான ஆறு கிடைத்ததைப் போல, சந்த்ராவதி அந்த முனிவரை கண்டாள்.

**மத்த க³ஜக³மனெ மெல்லடி³க³ள இடு³தலெ**
**ஒத்துத்த கங்க³ள ஜலவ**
**உத்தம முனிய சரணவ மேலிட்டளு**
**முத்தினபட்டின பணெய ||211**

சந்த்ராவதி மெதுவாக அடிகளை வைத்தவாறு, கண்களில் நீர் சொறிந்தவாறு, தன் தலையை முனிவரின் கால்களில் வைத்து வணங்கினாள்.

**முத்தயிதெ³ ஆகு³ புத்ரன படெ³ நினகொ³ப்³ப³**
**உத்தமபதியாக³லெந்து³**
**அஷ்டஸௌபா⁴க்³யவந்தெ ஆகெ³ந்து³ ஹரஸுத எத்தித³ ப³லத³**
**ஹஸ்தத³லி ||212**

தீர்க்க சுமங்கலி பவ, மகன் பிறக்கட்டும், உனக்கு ஒரு நல்ல கணவன் கிடைக்கட்டும், அஷ்ட ஸௌபாக்யவந்தளாக ஆகு என்று ஆசிர்வாதம் செய்தவாறு அந்த முனிவர் சந்த்ராவதியை எழுப்பினார்.

**இக்கித³ யஜ்ஞோபவீத துளஸித³ண்டெ³ ஒப்புவ**
**ஜபத³ மாலிகெயு**
**ஒப்புவ ஸுளிபல்லு தளிலகா³வியனுட்டு**
**ஒப்பித³ ம்ருட³ஹரனந்தெ ||213**

யக்ஞோபவீதம் அணிந்து, கையில் துளசிதண்ட, ஜப மாலை, வரிசையான பற்கள் கொண்டு, காவி உடை உடுத்தி, ருத்ரதேவரைப் போல அந்த முனிவர் ஒளிர்ந்தார்.

**இந்து³த⁴ரனெம்பெ³னெ நந்தி³வாஹனவில்ல**
**அம்பு⁴ஜோத்³ப⁴வ நீனல்ல**
**கோ³விந்த³னெம்பெ³னெ ஶங்கசக்ர க³ருட³வில்ல தந்தெ³**
**நீனாரு ஹேளெந்து³ ||214**

ருத்ரர் என்று சொல்லலாமா? ஆனால் நந்தி வாகனம் இல்லை. பிரம்மன் நீ இல்லை. கோவிந்தன் எனலாமா? சங்கு, சக்ர, கருடன் இல்லை. தந்தையே, நீ யார் என்று சந்த்ராவதி கேட்டாள்.

**பரிபரி வித⁴த³லி வந்த³னெக³ள மாடி³ பா³லெயு**
**பெ³ஸகொ³ண்ட³ளாக³**
**பா³லெயு பெ³ஸகொ³ளெ மனதி³ ஹருஷ தாளி ஹேளதொட³கி³த³³**
**முனிபால ||215**

பற்பல விதமாக முனிவரை வணங்கி, அந்தப் பெண் மிகவும் மகிழ்ந்தாள். பெண்ணின் மகிழ்ச்சியை கண்டு, முனிவரும் மகிழ்ந்து, முனிவர் இவ்வாறு கூறத் தொடங்கினார்.

**முனிக³ளு நானிப்ப ஸ்த²ளவு காந்தாரவு**
**ஸமிதிகோ³ஸ்கர இத்த ப³ந்தெ³**
**அட³வியொளகெ³ ஒப்³ப³ளேதக்கெ சரிஸுவெ நுடி³ நின்ன**
**மனத³ ஸந்தே³ஹ ||216**

நாம் ஒரு முனிவர். இருக்கும் இடம் காந்தார. ஸமித்துக்களுக்காக நான் இங்கு வந்தேன். இந்த காட்டில்

தனியாக ஏன் சுற்றுகிறாய்?. சொல் உன் கேள்விகளை / சந்தேகங்களை கேள் – என்றார்.

**நாரி நீனாரொப்[3]ப[3]ளு ஸ்த்ரீயொ ஸாரங்க[3]வோ**
**மானினிஸ்த்ரீயோ ராக்ஷஸியோ**
**அரண்யதொ[3]ளகொ[3]ப்[3]ப[3]ளேதக்கெ சரிஸுவெ**
**மாஜபே[3]ட[3]தெ[3] சபளாங்கி[3] ||217**

முனிவர் கேட்கிறார். பெண்ணே, நீ யார்? பெண்ணோ? மானோ? பெரிய இடத்துப் பெண்ணோ? ராக்ஷஸியோ? இந்த காட்டில் தனியாக ஏன் சஞ்சரிக்கிறாய்?. தயக்கமின்றி சொல்வாயாக – என்றார்.

**ரக்கஸி நானல்ல ரகு[4]மஹராயன**
**பட்டத[3]ரஸிய குமாரி**
**ஒப்பிஸிகொட்டனு கொலெக[4]டிகரிகெ[3]ன்னனு பி[3]ட்டு**
**ஹோத[3]ரு ப்ராணவனு ||218**

நான் ராக்ஷஸி அல்ல. ரகுராம அரசனின் பட்டத்து அரசியின் மகள். அவன் என்னை எமனிடம் ஒப்படைத்து விட்டான். என்னை இந்த காட்டில் தனியாக விட்டுச் சென்றுவிட்டார்கள்.

**புத்ரிய கொலுவரெ க்ஷத்ரியமதத[3]லி**
**ஹத்யெமாடு[3]வரெ ஸ்த்ரீயரனு**
**ஹெத்த மக்கள கொல்லுவருண்டெ த[4]ரெ மேலெ**
**தப்பேனாய்து நின்னிந்த[3] ||219**

க்ஷத்ரிய மதத்தில் மகளை கொல்வார்களோ?. பெண்களை கொல்வார்களோ?. பெற்ற பெண்ணை கொல்பவர்கள் இருக்கிறார்களா?. இந்த பூமியில் நீ செய்த தவறுதான் என்ன?

**நடெ[3]வல்லி நுடி[3]யல்லி ஸ்வப்னஜாக[3]ரத[3]ல்லி**
**நுடி[3]த[3]ல்லி உத[3]கபானத[3]லி**
**மக[3]ளெ நினகெ[3] ஸந்தே[3]ஹவேனாய்தெந்து[3] முனி**
**கெள[3]தமரு கேளித[3]ரு ||220**

நடக்கையில், பேசுகையில், கனவில், விழிப்பில், பேச்சில், தண்ணீர் குடிக்கையில், மகளே உனக்கு என்ன சந்தேகம் ஆனது – என்று கௌதம முனிவர் கேட்டார்.

**மது³வெய மாட³லில்லவு நம்மய்யனு**
**கொட³கொ³ஸாகி³த்³தெ³ ஆலயதி³**
**விதி³வஶதி³ந்த³ உத்³ப⁴விஸிது க³ர்ப்ப⁴வு அட³விகீ³டா³கி³**
**அட்டித³ரு ||221**

எனக்கு என் தந்தை திருமணம் செய்யவில்லை. விளையாட்டுப் பெண்ணாக என் அரண்மனையில் இருந்தேன். விதிவசத்தினால் எனக்கு கர்ப்பம் உண்டானது. ஆகவே, என்னை காட்டில் விட்டுச் சென்றனர்.

**ஏளுனெலெய மணிமாட³லித்³தெ³னு கா³ளி**
**பீ³ஸலு ஸோங்க¹த்³ஹாகெ³**
**நானொந்தி³வஸ நீராடகெ நடெ³தெ³னு நாரீரனெ**
**ஒட³கொ³ண்டு³ ||222**

ஏழு நிலைகள் கொண்ட மணிமாடத்தில் இருந்தேன். மெலிதான தென்றல் காற்று வர (தக்க காலம் வர), நீராட்டத்திற்காக ஆற்றிற்கு வந்தேன். என் தோழிகளுடன்.

**க³ங்கே³லி நீராடவாடு³வஸமயதி³ ஹிந்த³ண**
**பூர்வகல்பனெயு**
**கெந்தா³வரெயாகி³ ப³ந்தெ³ன்ன ஸோங்க¹லு நிந்த³வு க³ர்ப்ப⁴**
**ஸ்தி²ரவாகி³ ||223**

கங்கையில் நீராட்டம் ஆடும் சமயத்தில், என்னுடைய பூர்வ கர்மபலன்கள் ஒரு தாமரை மலராக வந்து என்னை அடைய, அந்த கர்ப்பம் நிரந்தரமாக நின்றது.

**அந்தெ³ ஆக³லெ மனகெ ஸந்தே³ஹதோரிது**
**நிந்த³வு க³ர்ப்ப⁴ ஸ்தி²ரவாகி³**

**தந்தெ³ தாயி நிந்த்³யவனிட்டு என்னமேலெ**
**கொந்து³பா³ரெந்து³ அட்டித³ரு ||224**

அன்றே அப்போதே மனதிற்கு சந்தேகம் தோன்றியது. அந்த கர்ப்பம் நிரந்தரமாக நின்றது. அதனால் தந்தை தாய் என் மேல் கோபம் கொண்டு, என்னை கொன்று வருமாறு சேவகர்களை அனுப்பினர்.

**கேளி ஸைரிஸலாரதெ³ நம்மய்யனு ஊளிக³த³வர கரெஸித³னு**
**ஸீளி ப³ன்னிவளனு எனுதலெ களுஹித³**
**கூ²ளரு என்னுளுஹித³ரு ||225**

இந்த செய்தியை கேட்டு தாங்க முடியாமல் என் தந்தை, சேவகர்களை அழைத்தார். இவளை கொன்றுவிட்டு வாருங்கள் என்று சொல்லி அனுப்பிய அந்த சேவகர்கள், என்னை கொல்லாமல் விட்டுவிட்டனர்.

**எச்செத்து பெ³ச்சி தல்லணிஸிதெ³ பங்கஜபத்ரதொ³ளிப்ப நீரந்தெ**
**லக்ஷ்மிய பதிய த்⁴யானத³லித்³தெ³ நிம்மந்த² உத்தமரனு**
**கண்டெ³னெந்து³ ||226**

இங்கு மூர்ச்சையாகி விழுந்து, பின் எழுந்து, தாமரைமலரில் இருக்கும் தண்ணீரைப் போல, லட்சுமிபதியை தியானம் செய்து கொண்டிருந்தேன். அப்போதே உங்களைப் போன்ற உத்தமரை கண்டேன்.

**த்⁴யானிஸி நோடி³த³ பா³லெய முக²வனு ஊனக³ளில்ல ஈகெயலி**
**ஆரெய்து³ ஸலஹுவெ நம்மாஶ்ரமத³லி**
**பூர்ணக³ர்ப்பி⁴ணியெந்து³ திளித³ ||227**

இவ்வாறு கூறிய பெண்ணின் முகத்தை முனிவர் பார்த்தார். இவளில் எவ்வித ஊனமும் இல்லை. இவளை என் ஆசிரமத்தில் வைத்து காப்பேன். இவள் பூர்ண கர்ப்பிணியாக இருக்கிறாள் என்று அறிந்தார்.

**விவரிஸி நோடி³த³ அப³லெய முக²வனு**
**முனியிட்ட க³ர்ப்ப⁴வெந்தெ³னுத**
**கரெதொ³ய்து³ ஸலஹுவெ நம்மாஶ்ரமத³லி ஹெக³ல**
**மேலிட்ட நா முனியு ||228**

இவ்வாறு விவரித்து கூறிய பெண்ணை முன்வைத்து, இவள் கர்ப்பிணி என்று சொல்லி, இவளை காப்பேன் என் ஆசிரமத்தில், என் முதுகில் தாங்குவேன் என் முனிவர் முடிவு செய்தார்.

**நாரிய ஹெக³ல மேலிட்டனு த³ர்ப்பெ⁴ய**
**பா⁴ரவ ப³க³லெளஞ்சித³னு**
**தூ³ரதி³ந்த³லெ கண்ட³னு தன்ன ஸதியள**
**பா⁴ரவனிளுஹு பா³ரெந்த³ ||229**

பெண்ணின் முதுகின் மேல் தன் தர்ப்பை பாரத்தை வைத்தார். புறப்படு என்றார். அதற்குள் தூரத்தில் தன் மனைவியை பார்த்தார். பாரத்தை இறக்கி வைத்துவிட்டு வா என்றார்.

**நவனாரிகுஞ்ஜர பஞ்சதுரங்க³வு நவபரியாத³ கர்னிகெய**
**ஹெக³ல மேலிட்டு ப³ந்தா³முனிய கண்ட³ளு பெ³ரகா³கி³**
**நிந்து நோடி³த³³ளு ||230**

நவ நாரி குஞ்சர, பஞ்ச நாரி துரக போலான அழகான பெண்ணை அழைத்துக் கொண்டு வரும் அந்த முனிவரை அவருடைய மனைவி நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

**எத்தணிந்த³லெ தந்தி³ரி கோமலாங்கி³ய**
**கக்கஸகுசத³ பா³லெயனு**
**ஸொக்குஜவ்வனெயனித்தவராரு எனுதலெ**
**பெக்கஸபெரகா³கி³ நிந்து ||231**

இந்தப் பெண்ணை எங்கிருந்து கொண்டு வந்தீர்கள்?. கொடுமையாக இருக்கும் இவளை. யௌவன வயதில்

இருக்கும் இவள் யார்? என்று சொல்லியவாறு கோபத்துடன் அந்த முனிவரின் மனைவி நின்றிருந்தாள்.

**ஹுலிசர்மத் ஹாஸிகெ³ தரகெலெமந்தி³ர**
**உடு³வது³ நாரினொஸ்த்ரவனு**
**இடுவாப⁴ரண விபூ⁴தி ருத்ராக்ஷிகெ³ மட³தி³ரிப்³ப³ரு யாதகெந்து³**
**||232**

புலித்தோலில் படுக்கை, சருகுகள் கொண்ட வீடு, உடுப்பது நார் மடி, வைத்துக் கொள்ளும் ஆபரணம் விபூதி & ருத்ராக்ஷை. இப்படி இருக்கும் ஒருவருக்கு (முனிவருக்கு) எதற்கு இரு பெண்கள் என்று முனிவரின் மனைவி கேட்டார்.

**விவரிஸி திளியதெ³ அனிருத்³த³ நுடி³வரெ மக³ள**
**தந்தே³னு நினகொப்³ப³ள**
**ஸ்ரீஹரி கருணிஸித³ அரண்யத³ குமாரிய**
**ப்³ரமரகுந்தளெய நிளுஹெந்த³ ||233**

விசாரித்துப் பார்க்காமல் இப்படி பேசலாமா? நம் மகளை கொண்டு வந்திருக்கிறேன். ஸ்ரீஹரி அளித்திருக்கிறான். காட்டில் கண்டேன். தும்பி மொய்க்கும் தலைமுடி கொண்ட இந்த பெண்ணை பார்த்துக் கொள் என்றார் முனிவர்.

**மக³ளெம்ப³ மாதிகெ³ மிகெ³ ஹருஷவ தாளி**
**கரவிடி³து³ கரெதந்த³ளாக³**
**ப³ளலி ப³ந்த³ளெந்து³ சரணவ தொளெத³ளு மேலுகட்டி**
**தனுவு ஹொம்ப³ண்ண ||234**

மகள் என்று அவர் கூறியவுடன் மிகவும் மகிழ்ச்சியடைந்து, சந்த்ராவதியை முனிவரின் மனைவி கை பிடித்து அழைத்து வந்தார். மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறாள் என்று பாத கமலத்தை கழுவினாள். தங்கமயமான உடலையும் கழுவினாள்.

**கம்மெண்ணெ கஸ்தூரி ஒத்தி நீரெரெத³ளு ஹொம்ப³ட்டெ**
**தே³வாங்க³வனுடி³ஸி**

**நக்ஷத்ர மத்[4]யதி[3] இப்ப சந்த்[3]ரமனந்தெ ஒப்பித[3]ளா**
**சந்த்ராவதியு ||235**

எண்ணெய், கஸ்தூரி தடவி, தண்ணீர் இறைத்து, புதிய ஆடை சந்த்ராவதிக்கு உடுத்தி, நட்சத்திரங்களுக்கு நடுவில் இருக்கும் சந்திரனைப் போல சந்த்ராவதி இருக்கிறாள் என்று ஒப்பிட்டு பேசினாள்.

**ஸுத்தலித்த[3] ரிஷிபத்னியரெல்லரு ம்ருஷ்டான்னவனுணிஸித[3]ரு**
**பட்டு பட்டாவளி உட[3]கொட்டவரெல்லரு**
**ஹொத்தவரந்தெ ஸலஹித[3]ரு ||236**

அக்கம்பக்கத்திலிருந்த முனிபத்னியர் அனைவரும் சந்த்ராவதிக்கு ம்ருஷ்டான்னங்களை உண்வித்தனர். பட்டு, ஆடை ஆகியவற்றை அனைவரும் கொடுத்து தாங்கள் பெற்ற மகளைப் போல அவளை பார்த்துக் கொண்டனர்.

**பா[3]லகி க்[3]ருஹதொ[3]ளு ஒப்[3]ப[3]ளெ இருவளு ஏனு**
**அரியத[3] ஹஸுமக[3]ளு**
**பே[3]ரொந்து[3] பர்ணஶாலெய கட்டிகொட்டரு**
**பா[3]லெயனல்லிரிஸித[3]ரு ||237**

வீட்டில் பெண் தனியாக இருப்பாள். எதுவும் அறியாப் பெண் இவள். என சொல்லி, வேறொரு பர்ணஷாலையை அவளுக்கு கட்டிக் கொடுத்தனர். பெண்ணை அங்கு தங்கச் செய்தனர்.

**ஏனு அரியத[3] பா[3]லெ ஒப்[3]ப[3]ளெ இருவளு யாரு**
**இல்லத[3] க்[3]ருஹதொ[3]ளகெ[3]**
**ஆரெய்து[3] ஸலஹி பாலனெ மாடெந்து[3] ஹேளித[3]**
**முனி தன்ன ஸதிகெ[3] ||238**

எதுவும் தெரியாத பெண் இவள். யாரும் இல்லாமல் தனியாக வீட்டில் இருப்பாள். ஆகவே இவளை நன்றாக பார்த்துக்கொள் என்று முனிவர் தன் மனைவியிடம் கூறினார்.

**இருளெத்³து³ நோடு³வளு கரெது³ மாதாடு³வளு**
**பெ³த³ரபே³டெ³ந்து³ ஹேளுவளு**
**ஶரணுரக்ஷக தன்ன நெனெவ குமாரிகெ³ மரெஸித³**
**தாயிதந்தெ³ய்ய ||239**

அடிக்கடி சென்று பார்ப்பாள். அழைத்துப் பேசுவாள். பயப்படாதே என்று கூறுவாள். முனிவரானவர், தன்னை சரணடைந்த சந்திராவதியை, அவள் பெற்றோரை அவள் மறந்து போகுமாறு பார்த்துக் கொண்டார்.

**நாரிகெ³ நடுவிருளு வேத³னெ தொடகி³து³ ஹேளதெ³**
**மக³ளு நாசுவளு**
**ஆலீலி ஜலவ தும்பு³வளு து³கு³ட³தி³ந்த³ ஆக³**
**அத்தளெ ரிஷி பத்னி ||240**

அந்தப் பெண்ணிற்கு நடு இரவில் வயிற்றுவலி வரும். அதனை சொல்லிக்கொள்ள வெட்கப்படுவாள் என்று சொல்லி, குடிப்பதற்காக நீர் நிரப்பி வைப்பார் முனி பத்னி.

**ஸுத்தலித்த ரிஷி பத்னியரெல்லருபுத்ரன படெ³வெ எந்தெ³னுத**
**அச்யுதானந்த³ ஶ்ரீ க்ருஷ்ணன நெனெயெந்து³**
**மித்ரெகு³பதேஶ மாடி³த³³ரு ||241**

சுற்றியிருந்த ரிஷி பத்னியர் அனைவரும், நீ மகனையே பெறுவாய் என்று சொல்லியவாறு, அச்யுதானந்த ஶ்ரீகிருஷ்ணனை நினைத்துக் கொள் என்று அந்தப் பெண்ணிற்கு உபதேசம் செய்தனர்.

**ஸாரெ ஷோடஶரூப ஜீவ பரமனொளு**
**கொடி³ஸி நலிதா³டு³வந்த**
**மீரித³ க³ர்ப்ப⁴வாஸவ பி³ட்டு முனிஸுத ஏரித³**
**ஹ்ருத³³ய மண்டபவ ||242**

உடலில் இருக்கும் 16 கலைகளையும் (நாடிகளையும்) பகவந்தனிடம் வைத்து (வரப்போகும்) ஜீவன் வேண்டுவதாக

இருக்கிறான். அவன் மீதம் இருக்கும் கர்ப்பவாசத்தை விட்டு, அந்த முனிவரின் மகன், வயிற்றிலிருந்து ஹ்ருதய மண்டபத்திற்கு வந்தான்.

**ஸாரெஷோட³ஶ ருபத³ளவிப்ப எடெ³யல்லி**
**கூடி³த³³ ப்³ரூமத்⁴யத³³லி**
**தருணியொளக³வதரிஸுவெ எனுதலெ**
**க்⁴ராணேந்த்³ரியதி³ந்து³தி³ஸித³³னு ||243**

உடலில் உள்ள சக்கரங்களை தியானித்து, சக்தியை புருவங்களின் நடுவில் வைப்பது போல நான் இந்தப் பெண்ணில் அவதரிப்பேன் என்று சொல்வதைப் போல, அந்தக் குழந்தை, அவளின் மூக்கிலிருந்து அவதரித்தான்.

**நெரெதி³த்³த³³ ஜனரெல்லாஹரிதோ³டி³³ ஹோத³³ரு**
**முனிக³ள கரெது³³ ஹேளித³³ரு**
**த⁴ரெயொளு ஶிஶுவல்ல அத்³பு⁴தவாகி³தெ³³ மரளி**
**நோடு³வரெ அஞ்ஜுவெவு ||244**

அங்கு சுற்றியிருந்த மக்கள் அனைவரும் இதைப் பார்த்து பயந்து ஓடிப் போயினர். முனிவரை அழைத்து வந்தனர். இது பூமியில் பிறந்த குழந்தையல்ல. அற்புதமாக இருக்கிறது. ஆனால் திரும்ப பார்க்க பயமாக இருக்கிறது.

**ஜாதி ஸுதகவில்ல ஆ தபமுனிஸுத நாஸிகதி³ந்து³தி³ஸித³³னு**
**பூ⁴தளதொ³ளகி³து³³ ஆஶ்சர்யவெனுதலெ காந்தேர்**
**விஸ்மயவாத³³ரல்லி ||245**

இந்தக் குழந்தை இவ்வாறாக பிறந்திருப்பதால், யாருக்கும் ஸுதகம் இல்லை. இவன் முனிவரின் மகன். மூக்கிலிருந்து பிறந்திருக்கிறான். பூமியில் இது மிகவும் வியப்பூட்டும் விஷயம் ஆகும். என்று அனைத்து பெண்களும் வியப்படைந்தனர்.

**மலதித்³த³ ரத்ன மாணிகவு ஶோபிஸுவந்தெ**
**கத்தலெகெ³ தீ³விகெ³யனித்தந்தெ**
**ப்ரஜ்வலிஸுவ யக்ஞபுருஷனந்தெ முனிஸுத**
**உதி³ஸித³ பா³லகனந்தெ ||246**

பட்டை தீட்டிய ரத்ன, மாணிக்கங்கள் ஒளிர்வதைப் போல, இருட்டில் விளக்கு எரிவதைப் போல, ஒளிரும் யக்ஞபுருஷனைப் போல, முனிவரின் குழந்தை, சிறுவனைப் போல தோன்றினான்.

**நால்கு வேத³க³ள ஆசரிஸுவ அஜனந்தெ**
**ஶாந்தத்வத³லி ஶிவனந்தெ**
**ரூபுலாவண்யதி³ லக்ஷ்மிய பதியந்தெ**
**நாஶிகேதவதரிஸித³னு ||247**

நான்கு வேதங்களை உச்சரிக்கும் பிரம்மனைப் போல, அமைதியின் சிவனைப் போல, அழகில் லட்சுமிபதியைப் போல, நாஷிகேதன் அவதரித்தான்.

**கு³டி³ய கட்டித³ருத்³தா³ளிகன பித்ருக³ளு**
**ஸுரித³வு புஷ்பவம்ப³ரதி³**
**ஸெரெ ஹிங்கி³த³வு யமலோகவெந்தெ³னுதலெ பரம**
**ஹருஷத³லி ஹிக்³கி³த³ரு ||248**

உத்தாளிகனின் பித்ருகள் கோயில் கட்டினர். வானிலிருந்து புஷ்பவ்ருஷ்டி ஆனது. எமலோகம் நமக்கு விட்டுப் போயிற்று என்று சொல்லியவாறு, மிகவும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

**ஹொஜ்ஜெ ஹிக்கி நலித³ரு உத்³தா³ளிகன ஹெத்த**
**தாயி பிதாமஹரு**
**புத்ர ஹுட்டித³ நம்ம குலதொ³ளகெ³னுதலெ ஹொக்கரெ**
**ஸ்வர்க்க³லோகவனு ||249**

பாதம் வைத்து ஆடினர். உத்தாளிகனைப் பெற்ற தாயின் பிதாமஹர்கள். புத்ரன் பிறந்தான். நம் குலத்தில் என்றவாறு, ஸ்வர்க்க லோகத்தை அடைந்தனர்.

**ப³ந்து³ ஹொக்களெ திளிகொ³ளன சந்த்³ராவதி**
**கந்த³கெ³ எரெத³ரு நீர**
**ஜம்பீ³ரரஸ ஜேனுதுப்பவனெ (ஊ)டி³**
**மந்தி³ரத³லி மலகி³ஸிதர் ||250**

வந்து அனைவரும் குழந்தையை சுத்தம் செய்தனர். சந்த்ராவதி மற்றும் குழந்தைக்கு ஸ்னானம் செய்வித்தனர். எலுமிச்சை ரசம், தேன் ஆகியவற்றை கொடுத்து, படுக்கச் செய்தனர்.

**கட்டித³ரு மண்டெ³ய பாவுடெ³யலி கொட்டரெ**
**கா²ர சர்வணைய**
**இட்டரெ அஷ்டதி³க்கிகெ³ எண்டு ரக்ஷெய ஹரஸி**
**ஆரதியனெத்தித³ரு ||251**

தலையில் ஒரு துணியை சுற்றினர். கடிப்பதற்கு வாயில் ஒரு பொருளை கொடுத்தனர். அஷ்ட திக்குகளில் எட்டு ரக்ஷையை வைத்து, ஆரத்தியை எடுத்தனர்.

**அந்த⁴காரவு கவித³வு சந்த்³ர முளுகித³**
**மந்தி³ய உலுஹு தக்கித³வு**
**கந்த³ன முந்தி³ட்டு நொந்த³ளெ மனத³லி முந்தே³னு**
**இத³கெ உபாய ||252**

இருள் சூழ்ந்தது. சந்திரன் மூழ்கினான். அடுத்த நாள் உதித்தது. குழந்தையை பார்த்தவாறு மனதில் நொந்தாள். அடுத்து இதற்கு என்ன உபாயம் என்று சிந்தித்தாள்.

**ஈதனாத³ரெ தன்ன தாதன தோரெம்ப³**
**லோகதொ³ளகெ³ பரிஹாஸ்ய**
**மாதாபிதரு எல்லிப்³ப³ரெந்த³ரியெனு க்ஷதியாயிது**
**என்ன பது³கு ||253**

இந்தக் குழந்தையோ தன் தந்தையை காட்டு என்பான். உலகில் அனைவரும் கேலி செய்வர். என் தாய் தந்தை எங்கிருக்கிறார்கள் என்று அறியேன். என் வாழ்க்கையே வீண் ஆயிற்று.

**புத்ரனெந்து³ ஸுஹிகொம்பெ³னெ லோக நகு³வது³**
**ஒத்திகொந்த³ரெ பாதகவு**
**எத்திகொண்ட் ஹோகி³ தும்பி³த³ நதி³யல்லி பி³ட்டு**
**ப³ருவுதே³ உசிதவு ||254**

மகன் என்று நான் பெற்றுக் கொண்டேனே, உலகம் சிரிக்கும். இவனை கொன்றுவிட்டால் எனக்கு அவச்சொல் வரும். ஆகவே, இவனை எடுத்துச்சென்று, நிரம்பி ஓடும் ஆற்றில் விட்டுவிடுவதே சரியான செயல் ஆகும் என்று நினைத்தாள் சந்த்ராவதி.

**கத்தலெயலி கந்த³ன எத்தி தா நடெ³த³³ஸு**
**மத்த³கமனெ நீர தடி³கெ³**
**கொட்டளெ ஸ்தன்யபான்யவ தன்ன கந்தகெ³ ஸ்தோத்ர**
**மாடி³த³³ளெ ஆ நதி³ய ||255**

இருட்டில் தன் குழந்தையை தூக்கிக் கொண்டு தான் நடந்தாள் சந்திராவதி, ஆற்றுக் கரைக்கு. அங்கு குழந்தைக்கு பால் கொடுத்தாள். அந்த நதிக்கு அவள் ஸ்தோத்திரம் செய்கிறாள்.

**ரக்ஷிஸவ்வா தாயெ என்ன குமாரன இத்தெ**
**நானின்ன கையொளகெ³**
**கர்த்ரு பா¹வனெய காருண்யதி³ ஸலஹெந்து³ ஸ்தோத்ர**
**மாடி³த³³ளெ ஆ நதி³ய ||256**

என்னை காப்பாயாக. தாயே. என் குமாரனை கொடுக்கிறேன் உன் கையில். அனைவரையும் காப்பவளே, கருணையுடன் காப்பாயாக என்று ஸ்தோத்திரம் செய்கிறாள் அந்த நதிக்கு.

**பாலிஸவ்வா தாயெ என்ன குமாரன மீனு**
**மொஸளெ முட்டத் ஹாங்கெ³**
**லாலிஸி கேளு அனாதெ²ய நுடி³யன்னு பாலிஸு**
**என்ன ஆத்மஜன ||257**

என்னை காப்பாயாக. தாயே. என் குமாரனை, மீன், முதலை ஆகியவை தொடாதவாறு. கவனத்துடன் இந்த அனாதையின் பேச்சினை கேள். என் குழந்தையை நீ காப்பாற்று.

**கட்டித³ளு குரும்பா³ளெ தொட்டிலவ கொட்டளெ கந்தகெ³**
**மொலெய**
**இட்டரெ மரதொட்டிலொளகெ³ குமாரன பி³ட்டளெ**
**ஹரிவ நீரொளகெ³ ||258**

செடி கொடிகளால் தொட்டிலை கட்டினாள். குழந்தைக்கு முலைப்பால் கொடுத்தாள். குழந்தை அந்த தொட்டிலில் வைத்தாள். பாயும் நதியில் விட்டாள்.

**எட³ப³லகொ¹லியதெ³ கி³ட³க³ண்டெ³ ஸோங்கதெ³ தடி³கெ³**
**ஸேரிஸு என்ன மகு³வ**
**கட³லஶயன நின்ன கையொளகி³த்தெனு 'கோலலு**
**காயலு நின்ன பா⁴ர' ||259**

இடது வலதாக ஆடி சாயாமல், மரம் செடிகளில் சிக்காமல், என் குழந்தையை கரையில் சேர்ப்பாயாக. கடலில் படுத்திருப்பவனே உன்னிடம் ஒப்படைத்தேன். இவனை கொல்லாமல் காப்பாற்றுவது இனி உன்னுடைய பாரம்.

**த்⁴ருட பு³த்³தி⁴யலி தன்ன மகு³வ நீரொளகி³ட்டு நடெத³ளெ**
**மத்தொந்து³ கானனகெ**
**தரகெ³லெ மெத்³து³ தும்பி³ஸுவளு ஹஸிவனு ம்ருக³த³ந்தெ**
**ஸஞ்சரிஸுவளு ||260**

திடமனதுடன் தனது குழந்தையை தண்ணீரில் வைத்து, சந்திராவதி இன்னொரு காட்டிற்கு சென்றாள். இலை,

தழைகளை தின்று பசியை தீர்த்துக் கொள்வாள். மிருகத்தைப் போல சஞ்சரிக்கிறாள்.

**அருணன உதயவாக³த³ முன்ன ஸதியரு**
**தெகெ³து³ பா³கி³ல நோடி³த³ரு**
**தரள ஸஹித சந்த்³ராவதியில்லவெனுதலெ முனிக³ள**
**கரெது³ ஹேளித³ரு ||261**

சூரிய உதயம் ஆகும் முன்னர், பெண்கள் கதவு திறந்து பார்த்தனர். சந்திராவதி மற்றும் குழந்தை இருவரும் இல்லை என்று அறிந்து, முனிவரை அழைத்து விவரத்தை கூறினர்.

**கந்த³ ஸஹித சந்த்³ராவதியில்லவெனுதலெ**
**ஸந்தி³கொ³ந்தி³யனரஸித³ரு**
**கந்த³ ஸஹிதவாகி³ ம்ருக³கச்சி ஒயித³வோ**
**நொந்த³ரகடா¹ விதி⁴யெனுத ||262**

குழந்தையுடன் சந்திராவதி இல்லை என்பதைக் கண்டு, அக்கம்பக்கத்தில் உள்ள சந்து பொந்துகளில் தேடினர். குழந்தையுடன் அவளும் மிருகம் கடித்து விட்டதோ, இது என்ன விதி இப்படி ஆயிற்றே என்றனர்.

**மேலுகி³ரிய துதி³யலி ஸூர்யனுதி³ஸித³**
**தாவரெகமல அரளித³வு**
**ஆ முனியெத்³து³ நதி³ய தீரகெ ப³ந்து³ நீரொளு**
**தொட்டில கண்ட³ ||263**

மலையின் மேல் சூரியன் உதித்தான். தாமரைகள் மலர்ந்தன. அந்த முனிவர் எழுந்து நதியின் தீரத்திற்கு வந்து தண்ணீரில் தொட்டிலை கண்டான்.

**ஸண்ண பெ³ரளு தன்ன பா³யொளகி³ரிஸிதெ³ கண்ண**
**முச்சுத தெரவுதலெ**
**பொன்னபுத்தளியந்தெ த²ளத²ளிஸுவ புட்ட**
**சிண்ணன தொட்டில கண்ட³ ||264**

சிறிய விரல்களை தன் வாயில் வைத்திருக்கிறது குழந்தை. கண்களை திறந்து திறந்து மூடுகின்றன. தங்கச் சிலை போல இருக்கிறது. ஒளிரும் சிறிய தங்க தொட்டிலை கண்டான்.

**போ⁴ர்க³ரெயுத ப³ருவ நீர ஸௌவினலி**
**ஆனந்த³தி³ந்தெ³லெ கண்ட³**
**தாவரெஸுதன கட்டளெ மீரப³ல்லதெ³ ஸேரிது**
**முனிய கையொளகெ³ ||265**

ஓடிவரும் தண்ணீரின் நடுவில் இதனை மகிழ்ச்சியுடன் கண்டான். பிரம்மனின் கட்டளையை மீற முடியாமல், அந்த குழந்தை முனிவரின் கையில் வந்து சேர்ந்தது.

**உப்³பி³த³ ஶிஶுவ காணுத உத்³தா³ளிகனு**
**துப்³பி³த³ தன்ன ஆத்மஜன**
**உத்³தா³ரவாத³ரிந்தி³கெ³ என்ன பித்ருக³ளு**
**பத்³மனாப⁴ன க்ருபெயிந்த³ ||266**

இவ்வாறு அழகாக இருந்த குழந்தையை பார்த்தவாறு, உத்தாளிகன், தன்னுடைய குழந்தையை, இன்று என்னுடைய பித்ருக்கள் உத்தாரம் ஆயினர். இது அனைத்தும் பத்மனாபனின் கருணையால் என்றான்.

**இந்து³ என்னவரிகா³யிது ஸ்வர்க்க³லோகவு**
**ஹொந்தி³ ஹோத³ரு புண்யக³திகெ³**
**சந்த³தி³ ஜாதகர்மவ மாடி³ மது⁴விட்டு**
**கந்த³கெ³ மைதொளஸித³னு ||267**

இன்று என் முன்னோர்களுக்கு ஸ்வர்க்க லோகம் ஆயிற்று. அவர்கள் அனைவரும் புண்யகதிக்கு சென்றனர். சிறப்பாக ஜாதகர்மத்தை செய்து, வாயில் தேன் தடவி, குழந்தையை ஸ்னானம் செய்வித்தார்.

**த³ஷராத்ரி களெத³வு ரிஷிய குமாரகெ³**
**ஶிஶுவின நாமவெந்தெ³னுத**

**ಅಶರೀರ ವಾಕ್ಯವು ಆತ³ವಂಬ³ರತ³ಲಿ**
**ಹೊಸರಿಡು³ ನಾಶಿಕೇತೆನುತ ||268**

10 ನಾಟ್ಕಳ್ ಆಯಿನ, ರಿಷಿಯಿನ್ ಕುಮಾರನುಕ್ಕು ಎನ್ನ ಪೆಯರ್ ವೈಪ್ಪದು ಎನ್ರು ಸಿನ್ದಿಕ್ಕೈಯಿಲ್ ಸಿಶುವಿನ್ ಪೆಯರ್ ಎನ್ರವಾರು, ಅಸರೀರಿ ವಾಕ್ಕಿಯಂ ವಾನಿಲ್ ಕೂರಿಯದು – ನಾಷಿಕೇತ – ಎನ್ರು.

**ಕಟ್ಟಿತ³ ಪರ್ಣಶಾಲೆಯಲಿ ಕಂದಕೆ³ ಕ್ರುಷ್ಣಾಜಿನತ³ ತೊಟ್ಟಿಲನು**
**ಎತ್ತಿಕೊಂಡು³ ಹೋಕಿ³ ಮಲಕಿ³ಸಿ ಹೊಸರನು**
**ಇಟ್ಟನು ನಾಶಿಕೇತೆನುತ ||269**

ಕಟ್ಟಿಯ ಪರ್ಣಸಾಲೆಯಿಲ್ ಕುೞನ್ದೈಕ್ಕು ಕ್ರುಷ್ಣಾಜಿನ ತೊಟ್ಟಿಲೈ ಕಟ್ಟಿನಾನ್. ಕುೞನ್ದೈಯೈ ಅದಿಲ್ ಪಡುಕ್ಕ ವೈತ್ತು, ಪೆಯರ್ ವೈತ್ತಾರ್ ನಾಷಿಕೇತ ಎನ್ರು.

**ಅತ್ತರೆ ಜೇನುತ್ತುಪವ ತಂದು³ ಉಣಿಸೂವ ತೊಟ್ಟಿಲ**
**ಹಿಡಿ³ದು³ ತೂಕು³ವನು**
**ಅತ್ತಿತ್ತ ನೋಡ³ದೆ³ ಆಲಂಬ³ದಿ³ನ್ದ³ಲೆ ಹೊತ್ತು**
**ಕ³ಳೆಯುತಲಿತ್ತ³ ಮುನಿಯು ||270**

ಕುೞನ್ದೈ ಅೞುತಾಲ್ ತೇನ್ ಕೊಣ್ಡು ವನ್ದು ಕೊಡುಪ್ಪಾರ್. ತೊಟ್ಟಿಲೈ ಆಟ್ಟಿ ತೂಂಗಚ್ ಚೆಯ್ವಾರ್. ಅಂಗಿಂಗು ಪಾರ್ಕ್ಕಾಮಲ್, ಮಗಿೞ್ಚ್ಚಿಯುಡನ್, ಕುೞನ್ದೈಯುಡನೇ ಕಾಲತ್ತೈ ಕೞಿತ್ತು ವನ್ದಾರ್ ಮುನಿವರ್.

**ಪಿ³ಚ್ಚಿ ಆಡು³ವ ಕೈಕಾಲಳ್ತ ತಾನಕು³ತಲೆ ಮತ್ತೊಂಮೆ**
**ಹೊಡೆ³ ಮಕು³ಸುವನು**
**ಹೊಟ್ಟೆಯಲೆಳೆದು³ ತಲೆಯೆತ್ತುವ ಪು⁴ಜಂಗ³ನಂತಿಕ್ಕುವ**
**ಅಂಪೆ³ಕಾಲುಕ³ಳ ||271**

ಕೈ, ಕಾಲ್ಕಳೈ ಉದರಿ ಆಡುವಾನ್. ಅೞುದವಾರು ಸಿರಿತ್ತವಾರು ಇರುಪ್ಪಾನ್. ಇನ್ನೊರು ಮುರೈ ತಲೈಯೈ ಆಟ್ಟುವಾನ್. ವಯಿಟ್ರಿಲ್ ಪಡುತ್ತು, ತಲೈ ತೂಕ್ಕುವಾನ್. ಪಾಂಬಿನೈಪ್ ಪೋಲ ತಲೈ ತೂಕ್ಕಿ ಕಾಲೈ ನಕ್ಕುವಾನ್.

**பி³ம்பா³த⁴ர மொளெஹல்லு ஸுரிவ ஜொல்லு கங்க³ளு**
**குடி³னோட¹வெளெயெ**
**உங்கு³ உக்குயெம்ப ஸுதன லாவண்யவ கண்டு³**
**ஹிக்³கு³தலித்³த³ முனியு ||272**

சிவப்பு உதடுகள். முளைப் பற்கள். ஜொல்லு பொழிந்தவாறு. கண்கள் மது குடித்ததைப் போல சிறிதாக. எதையோ யோசிப்பவனாக, சிரித்தவனாக இருக்கும் மகனின் அழகினைப் பார்த்து முனிவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தார்.

**குள்ளிரிஸொம்மெ அல்லல்லெ ஸாகி³ஸுவனு**
**நில்லிரிஸொம்மெ**
**நோடு³வெனு**
**மெல்லனெ தோத³ல் நுடி³க³ள கேளி ஹிக்³கு³வ**
**க³ல்லக்கெ முத்தனிடு³வனு ||273**

அமர்வான். சில முறை அங்கங்கே நகர்வான். நின்று பார்ப்பான். மெதுவாக மழலைச் சொற்களை கேட்டு மகிழ்ந்தார் முனிவர். அவன் கன்னத்தில் முத்தமிடுவார்.

**ஆடு³வ ம்ருக³த பெ³ன்னட்டி தீவ்ரதி³ந்த³ ஓடு³வ**
**ஹரிணவ கூடெ³**
**ஓரெக³ண்ணலி நோடு³வ தம்மய்யன கா³டு³வ**
**கை பி³ட³த³ந்தெ ||274**

மிருகங்களை துரத்திச் சென்று விளையாடுவான். வேகமாக ஓடுவான் மானுடன். ஓரக்கண்களால் பார்ப்பான் தன் தந்தையை. கை விடாமல் பின்னே சென்று தொந்தரவு செய்வான்.

**நதி³ய தீரகெ கந்த³னொட³கொ³ண்டு³ ஹோகு³வ**
**ஆ ப³தி³யலி குள்ளிரிஸுவனு**
**அட³வியலித்³த³ ப²லங்க³ள கொய்தந்து³ ஓட³னெ**
**போ⁴ஜனவ மாடு³வனு ||275**

குழந்தையுடன் நதிக்கரைக்கு வந்து, அங்கு முனிவர் அமர்ந்திருப்பார். காட்டில் இருக்கும் பழம், காய்களை பறித்து வந்து உடனே உணவு சமைத்து கொடுப்பார்.

**மக்³கு³லொளகெ³ இட்டு மலகி³த்³த³ தருளன**
**எப்³பி³ஸி மைத³டு³ஹுவனு**
**உக்³ரதபகளெத்த ஹோத³வோ முனிபன ஹொத்³தி³த³**
**மாயபாஶத³லி ||276**

தொட்டிலில் வைத்து குழந்தையை படுக்க வைப்பார். முதுகு தடவிக் கொடுப்பார். உக்ரமான தவங்கள் எங்கு போயிற்றோ, அந்த முனிவர் பாச வலையில் சிக்கிக் கொண்டார்.

**மக³னெம்ப³ மமதெயிந்த³லெ ஹொத்தக³ளெத³னு**
**ஐது³ வருஷத³ பரியந்த**
**ஜடி³து³ ஜோங்கரிஸி அஞ்ஜிஸி ப⁴ய படி³ஸுவ**
**ப³டி³து³ பு³த்³தி³ய கலிஸுவனு ||277**

மகன் என்னும் பெருமையிலேயே காலத்தை கழித்தான். 5 வயது வரை. கத்தி, பயமுறுத்தி, பயம் ஏற்படுத்துவான். அடுத்து புத்தி கற்பிப்பான்.

**அக்ஷராப்⁴யாஸவ மாட³பே³கெந்து³ க³ந்தா⁴க்ஷதெ ப²லபுஷ்பதி³ந்த³**
**இக்ஷுத³ண்ட³வு கத³ளி ப³க்ஷ்ய மோத³க சிகு³ளி ஸாக்ஷாத்**
**க³ணபகொ³ந்திஸித³ ||278**

அக்ஷராப்யாஸம் செய்ய வேண்டும் என்று கந்த அக்ஷதை, பழ, புஷ்ப, கரும்பு, வாழை, பக்ஷ்ய, மோதகம், சிகுளி என்னும் இனிப்பு ஆகியவற்றை செய்து, கணபதிக்கு வந்தனை செய்தார் முனிவர் உத்தாளிக.

**ஸரஸ்வதி க³ணபகெ³ரகி³ தானு (தண்டு³ல) ஹரவித³**
**ஹலகெ³ய மேலெ**
**ஓம் நமோ நாராயணனெனுதலெ ப³ரெத³னு**
**தனயனகையிலி ஓதி³ஸித³ ||279**

சரஸ்வதி மற்றும் கணபதியை வணங்கி, தான் அரிசியை பரப்பி, ஒரு பலகையின் மேல், 'ஓம் நமோ நாராயணா' என்று கூறியவாறு எழுதினான். குழந்தை மூலமாக அதனை படிக்க வைத்தான்.

**தப்பித³ரெ (தா)ட³னெயன்னு ஹாகுவ கட்டுவ தோள்தெக்கெக³ள**
**பி³ச்சுவ கருணதி³ந்த³லெ பி³கி³யப்புவ**
**அக்ஷராப்⁴யாஸவ மாடி³ஸித³ ||280**

ஓடிப் போக பார்த்தால், தடைகளை போட்டு தடுப்பார். கை கால்களை கட்டி வைப்பார். கருணையுடன் அதனை அவிழ்ப்பார். கட்டி அணைத்துக் கொள்வார். அக் ஷராப்யாஸத்தை செய்தார்.

**நூதனவாகி³ ப³ந்தி³து த³ந்தபங்க்தியு காந்தி**
**ஹெச்சிது குமாரககெ³**
**அந்தரங்க³தி³ கு³டி³க³ட்டித³ முனிபனு**
**ஸந்தோஷகட³லலுப்³பி³த³னு ||281**

புதிதாக குழந்தைக்கு பல் முளைத்தது. ஒளி பெருகியது. மனதில் மகிழ்ச்சி கொண்டார் முனிவர். மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்.

**உத³யத³லெத்³து³ ஆஶ்ரமவன்னெ ஹுடு³குவ சளெயவ**
**கொட்டு ஸாரிஸுவ**
**அட³வியலித்³த³ புஷ்பபங்க³ள கொய்தந்து³**
**கு³ருபா⁴வதி³ந்த³ வந்தி³ஸுவ ||282**

உதயத்தில் எழுந்து ஆசிரமத்தை நன்றாக சுத்தம் செய்வார். காட்டில் இருக்கும் புஷ்பங்களை பறித்து வந்து குருபாவத்துடன் வந்தனை செய்வார்.

**கி³ரிக³ஹ்வரென்னதெ³ கு³ட்³ட³கானனதொ³ளு பி³ட³தெ³**
**ஏளோருஷ ஸஞ்சரிஸி**
**அருணன உத³யவாக³த³ முன்ன ப³ந்த³ளு**

**முனியித்³த³ காந்தாரகாகி³ ||283**

மலை, குகைகளில், காடு, குன்றுகளில் விடாமல் 7 ஆண்டுகள் வரை சஞ்சரித்து, ஒரு நாள் விடியலில் முனிவர் இருந்த காந்தார தேசத்திற்கு வந்தாள் சந்திரமதி.

**ப³த்திக³ட்டித³ மண்டெ³ பா³டி³த³ நயனவு**
**உட்டித³ மலினதோஸ்த்ரக³ளு**
**அஸ்திசர்மவு நெரெ ப³த்தித³ காயவு**
**ஹொக்களெ முனியாஶ்ரமவ ||284**

தூக்கிக் கட்டிய கொண்டை. வாடிய கண்கள். ஏழ்மையான ஆடைகள் உடுத்தியவாறு. யானைத் தோல் ஆடைகள். ஆகியவற்றை அணிந்து, முனிவரின் ஆசிரமத்திற்கு வந்தாள்.

**எத்³து³ ஹோத³னெ முனியு நதி³ய ஸ்னானவ**
**மாட³லித்³த³னெ நாஶிகேதொப்³ப³**
**முத்³து³ பா³லகன காணுதலெ மொலெதொ³ரெத³வு**
**ஹொத்³தி³னிந்த³ளெ ராஜவத³னெ ||285**

ஆற்றங்கரைக்கு ஸ்னானம் செய்வதற்காக முனிவர் எழுந்து சென்றார். ஆசிரமத்தில் நாஷிகேதன் இருந்தான். அழகான சிறுவனை பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள் சந்திராவதி.

**நானாரூ இவன காணுத மொலெதொரெத³வு**
**நீரினொளிட்ட பா³லகனோ**
**தேலிஸி கடெ³கெ³ தந்தி³ட்டளோ நதியீக³ பாலிஸித³ரோ**
**முனீஶ்வரரு ||286**

நான் யார்? இவனை பார்த்த உடனேயே ஏன் மகிழ்ச்சி அடைய வேண்டும்?. நான் தண்ணீரில் விட்ட பாலகன் இவனோ?. தண்ணீரில் மிதந்து நதியில் இங்கு வந்தானோ? முனீஸ்வரர் இவனை பாதுகாத்தாரோ?

**பெ³ன்ன தட³வி தன்ன சிண்ணன நுடி³ஸித³ள் கண்ணலி**
**ஜலவ தும்பி³த³ளு**
**நின்ன ஸந்தெயிஸுவரில்லவெந்தெ³னுதலெ கன்னெ தா**
**ஶிரவ பா³கி³த³ளு ||287**

அவன் முதுகை தடவி, அந்த சிறுவனை கேட்டாள். கண்களில் கண்ணீர் நிரப்பினாள். உன்னை காப்பவர்கள் (தாய்) யாரும் இல்லையா? என்று கூறியவாறு, தலை கவிழ்ந்தாள்.

**பெ³ம்ப³லவாகி³ ஸங்கா³தலெ திருகு³வளு**
**ரங்க³வாலெக³ளனிக்குவளு**
**பே³ட³ நம்மய்ய கண்ட³ரெ நின்ன பை³தா³னு ஹோகு³**
**மத்தொந்து³ கானனகெ ||288**

கவலையுடன் அங்கிங்கு சுற்றுவாள். ரங்கோலி இடுவாள். அதற்கு அந்த குழந்தை சொல்லும் – வேண்டாம். நம் தந்தை பார்த்தால் உன்னை திட்டுவார். வேறொரு காட்டிற்கு சென்றுவிடு.

**ஸாரிஸி ரங்க³வாலெயனிக்கி முனிபகெ³**
**பூஜெகனுகூலவ மாடு³வளு**
**ஈக³ நம்மய்ய கண்ட³ரெ நின்ன பெ³ய்தானு ஹோகு³**
**மத்தொந்து கானனகெ ||289**

தரையை துடைத்து, ரங்கோலி இட்டு, முனிவருக்கு பூஜைக்கு அனுகூலம் செய்து கொடுப்பாள். இதனை நம் தந்தை பார்த்தால், உன்னை திட்டுவார். வேறொரு காட்டிற்கு சென்றுவிடு என்று குழந்தை சொல்லும்.

**முந்த³க்கெ ஹொஜ்ஜெனிடு³வரெ காலேளவு நிந்து³**
**நிந்தொ³ம்மெ நோடு³வளு**
**ப³ந்த³ளெ மத்தொந்து³ வ்ருக்ஷத³ நெளலிகெ³ நிந்த³ளெ**
**நீர தடி³யலி ||290**

அவளும் வெளியே செல்வதற்காக கால் வைப்பாள். நின்று திரும்பி பார்ப்பாள். இன்னொரு மரத்தின் நிழலுக்கு வந்தாள். நின்றாள் ஆற்றங்கரையில்.

**ஸ்னான ஜபவ மாடி³ ஆமுனீஶ்வர ப³ந்த³ பா⁴னு**
**மத்⁴யான்ஹ காலத³லி**
**பா³லன கைவாட³வல்ல நூதனவாத³ நாரிய கைவாட³வெந்த³ ||291**

ஸ்னான ஜபங்களை செய்து, அந்த முனீஸ்வரன் மதிய காலத்தில் ஆசிரமத்திற்கு வந்தான். இந்த வேலைகள் அனைத்தும் சிறுவனின் வேலை அல்ல, ஒரு புதிய பெண்ணின் கைவண்ணம் என்று அறிந்தான்.

**பெ³ச்சித³ முனிய மாதிகெ³ நாஶிகேதாக³**
**முச்சித³னெரடு³ கண்க³ளனு**
**இத்த பா³ரை நாஶிகேது அஞ்ஜுவத்³யாகெ**
**தப்பதெ³ ஹேளென்ன கூடெ³ ||292**

முனிவர் என்ன சொல்வாரோ என்று பயந்து, நாஷிகேதன் கண்களை மூடினான். இங்கு வா நாஷிகேதனே, ஏன் பயப்படுகிறாய்?. என்ன நடந்தது என்று தவறாமல் கூறுவாயாக என்றான்.

**ஶிரத³ மேலண ஜடெ³ ஹுளெசர்ம உடி³கெ³யு**
**கருளில்ல அஸ்திபஞ்ஜரவு**
**கடு³ தபஸி ப³ந்தெ³ன்ன நுடி³ஸலாக³ மொலெ தொரெது³**
**சிம்மித³வென்ன மேலெ ||293**

தலை மேல் கொண்டை. பழைய விலங்குத் தோல் ஆடை. தோளில் யானைத் தோல் ஆடை. இவ்வாறான அந்தப் பெண் வந்து என்னை கேட்டாள். கட்டியணைத்தாள்.

**கந்த³ன தந்து³ இந்தி³கெ³ ஏளோருஷவு ரம்பெ⁴**
**ப³ந்த³ளெ நம்ம மட¹கெ¹**
**அம்பு³ஜனாப⁴னு ஹேளித³ வாக்யவு கந்த³**

**நீனொட³கொ³ண்டு³ பா³ரை ||294**

குழந்தை இங்கு வந்து 7+ ஆண்டுக்கு மேல் ஆகிறது. ரம்பை வந்தாளா நம் இடத்திற்கு?. பத்மனாபன் கூறிய வார்த்தை உண்மையானதோ?. கந்தா, நீ சென்று அவளை அழைத்து வா.

**ஹெத்த தாய அரஸுத்தலாக³ வடுக³ள**
**மத்தெல்லரொட³கூ³டி³கொண்டு³**
**மத்ஸ்யலோசனெயிப்ப ஆ வனகெ ப³ந்த³னு புத்ரன**
**கண்டு³ தூ³ரத³லி ||295**

பெற்ற தாயை தேடியவாறு, குழந்தை எல்லா இடங்களிலும் தேடியவாறு, மத்ஸ்யலோசனையான சந்த்ராவதி இருக்கும் அந்த காட்டிற்கு வந்தான். குழந்தையை தாய் தூரத்திலிருந்து கண்டாள்.

**நடெ³யவ்வ தாயெ நானின்ன குமாரனு**
**அடவியல்ஹொத்த களெவரெ**
**ஒட³கொ³ண்டு³ பா³ரெந்து³ களுஹித³ நம்மய்ய**
**தட³மாட³தே³ளு ஆஶ்ரமகெ ||296**

வீட்டிற்கு வா தாயே. நான் உன்னுடைய மகன். காட்டில் இவ்வாறு நேரத்தை கழிக்கலாமா?. உன்னை அழைத்து வரவேண்டும் என்று என் தந்தை அனுப்பினார். தாமதம் செய்யாமல் புறப்படு என்னுடன் ஆசிரமத்திற்கு.

**நீன்யாரு நினகெ³ நிம்மய்யனெந்தா³கு³வ கூடி³**
**கொட்டவர்யார தனகெ³**
**பாணிக்³ரஹணவ மாடி³கொண்டெ³னெ நிம்மய்ய பா³ரெந்து³**
**மனெகெ³ கரெவரெ ||297**

நீ யார்?. அவர் உன் தந்தை என எப்படி ஆவார்?. அவருக்கு என்னை திருமணம் செய்து கொடுத்தவர் யார்? வா என்று அவர் அழைத்தால் நான் வந்துவிடுவேனா?

**யதிக³ளாகி³ பரஸதிகெ³ கண்ணிடு³வரெ பதியு**
**தானெந்தாத³ (ந)னகெ³**
**மதவெ உத்தமரிகெ³ எனுத க³ர்ஜிஸுதலெ ஸுதன**
**நோடி³த³ள் கோபதி³ந்த³ ||298**

யதிகளாக இருந்து, பிற பெண்ணிற்கு கண் வைப்பாரோ?. அவர் எனக்கு எப்படி கணவர் என்று ஆவார்?. இது உத்தமருக்கு சரியாகுமோ?. என்றவாறு கர்ஜித்தவாறு தன் மகனை சந்த்ராவதி கோபத்துடன் பார்த்தாள்.

**யாரெந்து³ திளிது³ விசாரவ மாட³தெ³**
**பா³ரெந்து³ மனெகெ³ கரெவரெ**
**ஏரிது தபத³ விகாரவு தனகெ³ந்து³ நாரி தா**
**கு⁴டு³கு⁴டி³ஸித³ளு ||299**

யாரென்று தெரிந்து யோசிக்காமல் வீட்டிற்கு வா என்று அழைத்தால், தவத்தை கலைத்த பாவம் தனக்கு வந்ததே என்று அந்தப் பெண் கர்ஜித்தாள்.

**அப்ப சித்தயிஸோ ஒப்³ப³ளு என்ன மாதிகெ³ இப்பளு**
**மரத³ பொட¹ரினொள்**
**சச்சரதிந்த் ஹோகி³ ஒட³கொ³ண்டு³ பா³ரெந்து³ புத்ர**
**ஹேளித³னெ ஆ முனிகெ³ ||300**

அப்பா தயவு செய்து கேள். என் பேச்சிற்கு இணங்கி வந்திருக்கிறாள். மரத்தின் அடியில் அமர்ந்திருக்கிறாள். உடனடியாக சென்று, அவளை அழைத்து வா என்று மகன் முனிவரிடம் கூறினான்.

**அத்ரி பா⁴ரத்³வாஜ அங்கி³ரஸ கௌ³தம**
**கஷ்யபக³ஸ்த்ய மஹாமுனியு**
**இர்ப¹யெடெ³கா³கி³ ப³ந்த³னு முனிபனு**
**விஸ்தரிஸித³னீ கதெ²ய||301**

அத்ரி, பரத்வாஜ, அங்கீரஸ, கௌதம, கஷ்யப, அகஸ்த்ய ஆகிய மஹா முனிவர்கள் பயணத்தில் இருக்க, இங்கு வந்தார் கௌஷிக முனிவர் இந்த கதையை எனக்கு கூறினார்.

**ஹிந்த³கெ வனத³ல்லி தபவ மாடு³தலித்³தெ³ ப³ந்தொ³ப்³ப³**
**முனியு ஹேளித³னு**
**தந்தெ³தாயிக³ளெமலோகதொ³ளிஹரெந்து³ ப³ந்து³**
**ஹேளித³னெ ஸுத்³தி³யனு||302**

முன்னர் வனத்தில் நான் தவம் செய்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு முனிவர் வந்து இவ்வாறு கூறினார். தந்தை, தாய், முன்னோர்கள் எம லோகத்தில் இருக்கின்றனர் என்னும் செய்தியை அவர் என்னிடம் கூறினார்.

**ஆதன வாக்யவ கேளி நா வனத³ல்லி ஆசரிஸிதெ³ தபக³ளனு**
**கே²சரத³லி ஸுரகன்னிகெ³ ஸுளியலு ஆக்ஷண**
**பி³ந்து³ ஸடி³லித³வு||303**

அவனுடைய வாக்கியங்களை கேட்டு நான் வனத்தில் தவங்களை செய்திருந்தேன். வானில் தேவதைகள் வந்து நிற்க, அந்த நொடியில் என் வீரியம் இறங்கியது.

**தாவரெ கமலதொ³ளிட்டு நீரொளு பி³ட்டெ**
**ஏனாயிதெந்து³ நானரியெ**
**காலாந்தரத³லி தேலி ப³ந்த³னு கந்த³**
**பாலிஸிகொண்டெ³னு தந்து³||304**

அதனை ஒரு தாமரை மலரில் வைத்து, தண்ணீரில் விட்டேன். பிறகு, அது என்ன ஆயிற்று என்பதை நான் அறியேன். பிறகு சில காலம் கழித்து, இந்த குழந்தை தண்ணீரில் நீந்தி வந்தது. நான் கொண்டு வந்து அவனை வளர்த்து வந்தேன்.

**கந்த³ன தந்து³ இந்தி³கெ³ ஏளோருஷவு ரம்பெ⁴**
**ப³ந்த³ளு நம்ம மட¹கெ¹**
**ஹேள ப³ந்தெ³னு நிம்ம கூடெ³ ஈ வார்தெய**

**மாடி[3] நிம்மனகெ[3] ப[3]ந்து[3]த[3]னு||305**

இந்த குழந்தையை கொண்டு வந்து இன்றுடன் 7 ஆண்டுகள் ஆயின. பிறகு ரம்பை வந்திருக்கிறாள் நம் மடத்திற்கு. இந்த விஷயத்தையே நான் உங்களிடம் சொல்ல வந்தேன். இனி உங்கள் மனதிற்கு வந்த விஷயத்தை செய்யுங்கள் – என்றார்.

**உத்தமவெனுதலெ ப[3]ந்த[3]ரு முனிக[3]ளு**
**மத்ஸ்யலோசனெ இப்பயெடெ[3]கெ[3]**
**மத்தொப்[3]ப[3] முனிக[3]ளு அரஸுத்தலித்த ப[3]ந்த[3]ரு**
**அக்கட விதி[4]யெந்த[3]ளாகெ||306**

சந்த்ராவதி இருந்த இடத்திற்கு வந்த முனிவர் – இது மிகவும் நல்ல விஷயம் என்றார். இன்னொரு முனிவர் அருகில் இருந்தவர் வந்து – இது அனைத்தும் விதியின் விளையாட்டே என்றார்.

